தலைமேசைச் சிறை

ரா.இளங்குமரன்

அரசு...

குண்டலகேசி

[நீலகேசியின் பழைய உரை கூறும்
குண்டலகேசியின் மூலக் கதையைத்
தழுவிப் படைக்கப்பெற்ற புதுக் காவியம்]

★

ஆக்கியோன்:

கழக இலக்கியச் செம்மல்

புலவர் இரா. இளங்குமரன்

★

கிடைக்குமிடம்:

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

79, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை-108.

1984

© இரா. இளங்குமரன் (1930)

KUNDALAKESI

விலை ரூ. 20—00

அப்பர் அச்சகம், சென்னை-108. (1/2)



குண்டலகேசி நூல் வெளியீட்டிற்குப் பொருளுதவிய பெருந்தகை, சிங்கப்பூர் வணிகவியற் கல்லூரி முதல்வர் தமிழ்த்திரு. வெ. கோவலங்கண்ணன் அவர்கள்

நூல் வருமுறையும் நன்றியுரையும்

1954 ஆம் ஆண்டு, தளவாய்புரம் உயர்பள்ளியில் யான் பணியாற்றி வந்த காலம். பத்தாம் வகுப்பில் 'கம்பன் கவியே கவி' என்ற ஆர்வலர் உரையை, எடுத்துக் காட்டுடன் விளக்கிக்கொண்டு வந்தேன். அப்பொழுதில், தன் வல்லியல் உருவைமாற்றி மெல் லியல் உருவாக்கிப், பொன்னஞ் சிலம்பு புலம்ப நன்னயமாய் நடை பயின்று வரும் சூர்ப்பநகையை,

''பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம னுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்''

என்று வண்ணிக்கும் பாடலை இசைத்து,

''தந்தனன தந்தனன தந்தனன தான''

என்று வண்ணமமைத்துக் காட்ட மாணவர் அனைவரும் சொல்லரிய இன்பச் சுவைக்கு ஆட்பட்டனர். மீண்டும் பாடிக் கேட்க விரும் பினர்.

ஒரு மாணவன் எழுந்தான். அவன் இலக்கியச் சுவைஞன்; நல்ல ஈடுபாட்டாளன்; பயிலுங் காலத்திலேயே கதை புனையும் திறம் பெற்றவன்; உரிமையோடு உறவாடுபவன்; மலைப்பழம் என்னும் பெயராளன் அவன், ''ஐயா, இப் பாடலின் சந்தம் இனிக்கிறது; கேட்கக் கேட்க ஆர்வத்தைக் கிளரச் செய்கின்றது; தாங்கள் இச் சந்தத்தில் ஒரு பாடல் இயற்றித் தரவேண்டும்; அதனையும் நாளை வகுப்பில் கேட்கும் வாய்ப்புத் தரவேண்டும்'' என்றான். அவன் ஆர்வம் என்னுள் புகுந்தது! ''உள்ளங் கொள்ளை கொள்ளும் கம்பன் பாடல் கையில் இருந்தாலும், தங்கள் ஆசிரியர் பாடலில் அம் மாணவன் கொண்டுள்ள ஆர்வத்தைத் தட்டிக் கழித்தல் தகவன்று'' என்று எண்ணிய யான், அவன் வேண்டுதலை ஏற்றுக்கொண்டேன்.

மாலையில் உலாவச் செல்லுதல் என் நாள்வழி வழக்கம். அவ் வழக்கப்படி செல்லும்போது 'மாணவன் வேண்டுதல்' நினைவில் அழுந்தி நின்றது. ''ஐம்பெருங்காவியங்களைக் கொண்டோம் என்று பெருமை பேசிக்கொள்ளும் நம் கையில், கிடைத்துள்ளவையோ மூப் பெருங்காவியங்களே! குண்டலகேசியோ வளையாபதியோ இனிக்

கிட்டும் என்பதற்குரிய தடமும் இல்லை. இவற்றுள் குண்டலகேசி பற்றிக் கிடைத்துள்ள கதைச் சுருக்கத்தை மையமாகக் கொண்டாவது ஒரு புது நூலைப் படைக்கலாம். பொன்னை வைக்கும் இடத்தில் பூவை வைத்தல் என்பதொரு பழமொழி. நறும்பூவாக இல்லாது போனாலும் வெறும் பூவாகவாவது பேராளில் இருந்துவிட்டுப் போகட்டுமே'' என நினைத்தேன். குண்டலகேசியை இயற்றுவ தெனத் திட்டப்படுத்தினேன்.

கம்பன் பாடிய சந்தப் பாடலன்றோ முதற்கண் வகுப்புக்கு வேண்டுவது! அதற்குரிய களத்தை அமைத்துக் கொள்ளவேணுமே! குண்டலகேசி பந்தடிப்பதாகக் களத்தை அமைத்துக் கொண்டேன்.

காவியத் தலைவி குண்டலகேசி வளப்பேறுகள் எல்லாம் ஒருங்கே வாய்ந்த வணிகமணியின் செல்வி! அவளை மண் களத்தில் ஆடவிட விரும்பினேன் அல்லேன், மாடிக் களத்திலே ஆடவிடுக்க நினைந்தேன். அவளை மட்டுமா பந்தாட விடுவது? அவள் தோழியருடன் ஆடவிட்டேன்.

முகில் தவழும் மாடம்; கலை நலம் கொழிக்கும் மாடம்; சூழலெல்லாம் பூஞ்செடியும் கொடியும் செறிந்த மாடம்! சுற்றி வளைந்த மதிலகத்து மாடம்! அங்கே வருகின்றாள் அன்னமாம் கேசி! பந்தடிக்கின்றாள்:

> ''மஞ்சுதவழ் விஞ்சைசெறி கொந்தவிழு மாடத்
> திஞ்சிவளர் நந்தனத்தில் சொந்தமொடு கூடிச்
> செஞ்செலென செஞ்செலென மென்சிலம்பு பாட
> அஞ்செவிய குண்டலத்துக் கேசியவள் வந்தாள்''

> ''நன்னயமாய்ப் பந்தெடுத்து நங்கையரின் முன்னே
> அன்னநடை இன்னதென மென்னடையிற் சென்று
> மின்னலினை மன்னுமெனப் பின்னமறப் பாய்ந்து
> கன்னியவள் பந்தடித்தல் விந்தையினும் விந்தை.''

இவ்வாறு நான்கு பாடல்களை இயற்றினேன். மறுநாள் வகுப்பில் இப் பாடல்கள் ஒலித்தன (நூல் 38-41).

குண்டலகேசி பந்தடிப்பால் களைத்துவிட்டாளோ என்னவோ? நான்கு ஆண்டுகள் அயர்ந்து கிடந்தாள். மீண்டும் ஒரு மின்னல்! ''ஆடிய கேசியைப் பாடிய வகையில்லையே'' என்பது! ஒவ்வொரு நாள் இரவும் குண்டலகேசி என்னுள் உருவாகி வந்தாள்; உணர்வாகி வந்தாள்!

அவள் என்னை மகிழவைத்தது மட்டுமோ? அழ வைத்தாள்; அரற்ற வைத்தாள்; அறமுணர வைத்தாள்; துறவுணர வைத்தாள்; ஏருத மேட்டுக்கு ஏற்றினுள்; வீழாத பள்ளத்தில் வீழ்த்தினுள்; இயற்கை எழிலுக்கு அழைத்தாள்; இடை இடையே எரி நெருப்பில் தள்ளினுள்; நீராட்டுக்கு இழுத்தாள்; போராட்டுக்குப் புகுத்தினுள்; எனக்கு, நனவானுள்; கனவானுள்; கலையானுள்; களிப்பானுள்; காண வொண்ணாக் கலக்கமும் ஆனுள்; இளங்கோவை, மணிவாசகரை அருணகிரியை ஆண்டானை முன்னிறுத்தினுள்! கம்பரை வில்லியைத் திருத்தக்கதேவரை என்னுள் படியவைத்தாள்! வள்ளுவரை வயப்படுத்திச் செறிய யாக்தாள். நூற்றுக்குத் தொண்ணூறு மேனி இருளிலே ஒளி செய்தாள்! எப்படி?

தலையணைக்குக் கீழே தாளும் எழுதுகோலும் கிடக்கும். உணர்வு உந்தும்போது விளக்குப் போடாமல் அப்படியே எழுதி விடுவது; விடிந்தபின் படிஎடுப்பது! இவை வழக்கமாய்ப்போயின, ஆகலின் இருளில் கிளர்ந்த ஒளிமுகம் குண்டலகேசியாம்!

குண்டலகேசி தளவையில் அரும்பினுள்! மதுரைத்திருநகரில் மலர்ந்தாள்! அவளுக்கு அரங்கேற்றம் மதுரை அங்கயற்கண்ணம்மை திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்து ஒளவை மன்றம் ஆண்டு 1959. அதன் செயற்பொறுப்பாளர் மருத்துவர் திரு. சு. கன்னையா, தலைவர் முனைவர் திரு. மா. இராசமாணிக்கனார்.

1984 வரை - நூல் இயற்றி வெள்ளிவிழாக் கொள்ளும் காலம் எல்லைவரை - நிலைப்பேழைக்குள் அடங்கி ஒடுங்கிக் கிடந்தாள். ஆனால், என்னுள் கிளர்ந்தும் நடந்தும் களிசெய்தாள். இடையே கோயிற்பட்டி, திருவள்ளுவர் மன்றத்தார் குண்டலகேசி நடையிட்டுக் காட்ட நயந்தனர். 1980இல் நான்கு மணிப்பொழுது உணர் வொத்த உள்ளார்ந்த அன்பு பொங்கிவழியும் அறிவறிந்த கூட்டத்திடையே நடம்புரிந்தாள். நடம்புரிய இடமருளிய பெருமையர் போரா. அ. சங்கரவள்ளி நாயகர்! கேசி மீண்டும் என்னுள் ஒடுங்கினுள்.

பின்னே, ஒருநாள் - திருநாள்! குண்டலகேசி தமிழ்ச் செல்வ மாகத் தழைக்கும் வண்ணம் திருவருள் கூட்டுவித்தநாள்! எப்படி வியப்பாக, ஒருமாணவர் தூண்டலால் குண்டலகேசி துலக்க மானாளோ, அப்படி வியப்பாக, நூலுருக்கொள்ள வாய்த்த அருமையும் பெருமையும் வாய்ந்த நாள! சிங்கபுரி வணிகவியற் கல்லூரி முதல்வர் தமிழ்த் திரு. வெ. கோவலங்கண்ணர் பாவாணர் ஆராய்ச்சி நூலகத்திற்கு வந்து அளவளாவிய நாள்!

'அகல்' என்னும் என் சொல்லாய்வு நூல்வழியாகக் கேண்மை கொண்ட பெருந்தகை கோவலங்கண்ணர். அதனை முன்னிட்டே என்னைக் காணவந்த ஏந்தல்! அகலுக்குத், தாம் புரவாண்மை பூண்ட தமிழ்வளர்ச்சிப் பண்ணையின் சார்பிலே பரிசு வழங்குவதற்கு முன்னின்ற முனைவர்! அகல் போலவே அகலும் அன்பை வளர்த்துத் தனித்தமிழ் வாழ்வாளரைப் போற்றுதலும் புரத்தலும் விழுமிய கடப்பாடென ஏற்றுக்கொண்ட கண்ணோட்டக் கழிபெருங்காரிகையர்! கன்னித் தமிழ்மட்டுமே கற்றுரும் புரிந்துகொள்ளுமாறு கணினியைக் கலைமணங்கமழக் கவின் நூலாக்கிவரும் படைப்பாளர்! அவரொடும் யான் உரையாடிய போழ்தில் 'குண்டலகேசி எடுத்துக் காட்டாய் முகங்காட்டினள். பருகுவன் அன்ன ஆர்வத்துக் கோவலங்கண்ணர் அப் பாடலில் வயப்பட்டார்! வரிப்பாடல்கள் சில மேலும் வயங்கின! நூல் இதுகாறும் அச்சூர்தி ஏறுமையை வினவி அறிந்தார். 'கட்டாயம் அச்சேறவேண்டும்' என்றார். 'காலம்வரும்' என்றேன்.

இரந்துவேண்டுவார் போல இயம்பினர் கோவலங் கண்ணர். "தன்னலம் என்று கூட வைத்துக் கொள்க; குண்டலகேசியின் கால மெல்லாம் யானும் பொதுளி நிற்க விழைகின்றேன்; அச்சீட்டுப் பொறுப்பை யான் எடுத்துக் கொள்கின்றேன்" என்றார். யான் எள்ளத்தனையும் எதிர்பாராத ஒரு கருத்தை உணர்வின் அடித் தளத்தில் இருந்து உரைத்தார். அவர் உணர்விலே சொக்கிப் போனேன். 'எனக்கு எனக்கு' என்றே வாழும் உலகில் மொழிக்கு இனத்துக்கு-உலகுக்கு என விரிந்து விரிந்து செல்லுங் கோவலங் கண்ணர் போல்வாரும் உள்ளனர் என விம்மித முற்றேன். "உண் டால் அம்ம இவ்வுலகம்" என்ற பாண்டியன் பாடலை உள்ளுள் உள்ளி உருகி, அவ் வுருக்கத்தால் கோவலங்கண்ணரை நோக் கினேன். 'பின்னே பார்க்கலாம்' என்று பின்னும் கூறினேன். 'அச்சுக்கு அணியப்படுத்துக' என ஆணையிட்டார். அவர்தம் ஆண வழி நின்றேன். கழகம் அச்சீட்டுப் பொறுப்பை ஏற்றது, கோவலங் கண்ணர் அச்சீட்டுச் செலவை ஏற்றார்.

வெளியீட்டுச் செலவை ஏற்றுக்கொண்ட பெருமகனர், விற்று வரும் தொகையில் அதனை எடுத்துக்கொள்ளல் சால்பு என்பது என் உட்கிடை. அதனை வெளிப்பட உரைத்தேன். ஆனால் கோவலங் கண்ணரோ வியப்பின்மேல் வியப்புக்கு ஆட்படுத்தினர்.

"விற்பனையால் கிட்டும் தொகை எவ்வளவு ஆயினும் ஆக. அத் தொகை நுங்களுக்கும் வேண்டா! எனக்கும் வேண்டா! மொழி நூல் ஞாயிறு பாவாணர் பெயரால் விளங்கும் இவ்வாய்வு நூலக வளர்ச்சிக்கு ஆகட்டும்" என்றார். தோற்றப் பொலிவு போலவே ஏற்றப்பொலிவும் மாற்றுக்குறையா மாற்றப்பொலிவும் வாய்ந்த

கோவலங்கண்ணர்க்கு எளியேன் என்ன செய்யமுடியும்? குண்டல கேசியால் தமிழுலகம் எனைத்தானும் பயன்பெறுமானால் அதற்கு மூலவர் கோவலங்கண்ணரே எனக் குன்றத்தின் மீதில் ஏறியன்று; கொடுமுடிமீதில் ஏறியும் கூறுவேன், 25 ஆண்டுகள் நெட்டுறக்கம் கொண்ட குண்டலகேசிக்குப் பள்ளி எழுச்சி பாடி விழிப்புறச் செய்து திருவோலக்கம் கொள்ளவைத்த பண்பின் கொள்கலம் அவரே யல்லரோ !

நூல் பாடிவருங் காலத்திலேயே என் அன்புச் செல்வர் மாணவர் நீ. குருசாமியின் வழியே சில பகுதிகளைப் பார்த்த அளவில் நயந்துரைத்த நல்லோர் இருவர். ஒருவர் பேரா. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்; மற்றொருவர் பேரா. தாம. வெள்ளை வாரணர் அவர்கள். நூல் அரங்கேற்றத்தின்போது வாழ்த்துப்பா அருளியவர் பேரா. அன்பு கருணையானந்தா அவர்கள். நேரிடையில் கண்டு வாழ்த்துப் பொழிந்தவர் பெரும்புலவர் சீனிவாசர். இவர் களுக்கெல்லாம் நன்றியுடையேன்.

தமிழ் அரிமா ச. சோமசுந்தர பாரதியார் குண்டலகேசியில் சில பகுதிகளைப் படிக்கக் கேட்டார். ஆம்! அவர் படிக்கும் நிலைமையில் அப்பொழுது இல்லை. கதையை முற்றுகக் கேட்டார். கதையின் இறுவாய்ப் பகுதியைச் சொல்லும்போது யான் அழுதேன்; அதைக்கேட்ட அவரும் அழுதார்! அந்த அரிமாவையும் அருணிலை உருக்கி விடுவதாயிற்று! எழுதுகோலை எடுத்து அதனைப் பிடிக்க அவர் பட்டபாடும் எழுதப்பட்டபாடும் அவர் தமிழ்வீறு எத்தகையது என்பதைக்காட்டி உருக்கின. அந்தத் தமிழ் நெஞ்சிற்கு எப்படி நன்றியுரைப்பது? கண்ணெஞ்ளி மழுங்கிய காலத்தும் தண்ணார் தமிழொளியால் வாழ்த்துரைத்த தகவு குண்டலகேசி உருவாகிவந்த நிலைக்கு ஏற்புடையதே போலும்!

நாவலர் பாரதியார்தம் மாணவரும், முதுபெரும் புலவரும், பெரியார் காவியப் படைப்பாளரும் ஆகிய திரு பா. நாராயணர் குண்டலகேசிக்குச் சிறப்புப்பாயிரப் பதிகம் பாடியருளினர். அவர் தம் பேரன்புப்பெருக்கு பெரிது. குண்டலகேசி பாடிவருங்காலத்துக் கொல்லிமலைக்கு அழைத்துச்சென்று உதவியவரும், நூலை முற்றுகப் பார்த்து நல்ல பல கருத்துகள் உதவியவரும் அவர் என்பவை கூட்டத்தக்கவை.

எவ்வாற்றானும் குண்டலகேசியை வெளியிட விழைந்தவர்கள் கழக மேனாள் ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையாபிள்ளை அவர்கள். அவ் விழைவு அந் நாளில் நிறைவுறுமல் போயினும் அதனை இந்நாள் நிறைவுறுத்தி வைப்பவர்கள் அவர்கள் இனிய

முருகரும் இந்நாள் கழக ஆட்சியாளரும் ஆகிய திரு. இரா. முத்துக் குமாரசாமி அவர்கள் ஆவர். அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

எளியேனை என்றும் தன்பணிக்கு ஆளாக்கி, அதிலேயே நிலைப் புறுத்திவரும் தண்ணூர் தமிழன்னையை வாழ்த்தி நன்றியுரைத்து அவள் திருவடித் தாமரையிலே இந்நூன் மலரைப் படைக்கின்றேன்.

பாவாணர் ஆராய்ச்சி நூலகம்,
தமிழ்ச் செல்வம்,
திருநகர், மதுரை-6.

தமிழ்த் தொண்டன்,
இரா. இளங்குமரன்
18—4—84.

குண்டலகேசி நூலுக்கு

நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார்

வழங்கிய வாழ்த்துரை

வித்துவான் திரு. இரா. இளங்குமரன் அவர்கள் எழுதிய குண்டலகேசி என்ற நூலிற் சில பாட்டுக்களைப் படிக்கக் கேட்டேன். எளிய இனிய நடையில் இயற்கை உவமை முதலிய அணிகளுடன் அமைந்துள்ளது. பல வரிப் பாடல்களும் பாடிச் சேர்த்துள்ள ஆசிரியர் தமிழ்த் தொண்டு பாராட்டத்தக்கது. இன்னும் பல இத் தகைய நூல்களியற்றிச் செல்வமும் புகழும் பெருகப் பெறுமாறு வாழ்த்துகிறேன்.

பசுமலை,
21—12—58.

(ஒப்பம்) ச. சோ. பாரதி.

பண்டித வித்துவான் சைவப் புலவர்

திருமிகு கே. சுந்தரமூர்த்தி அவர்கள், எம்.ஏ.,

(தமிழ் விரிவுரையாளர் செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்)

வழங்கிய

அன்புரை

பேரன்பு வாய்ந்த உயர்திருவாளர் ஐயா அவர்கட்கு, வணக்கம், நலம். நலமறிய விரும்புகின்றேன். தாங்கள் திரு. குருசாமி மூலம் கொடுத்தனுப்பிய கடிதத்தையும் தாங்களியற்றிய செஞ்சொல் காப்பியத்தின் ஒரு பகுதியையும் மனங்குளிரக் கண்டேன். காப்பியத்தின் சுவையனைத்தும் எழுத வல்லேன் அல்லேன். இரண்டொன்றையே குறிப்பிடுகின்றேன். கவிதையின் நடையழகு ஆற்றொழுக்காக அமைந்துள்ளது. அவ்வவ் விடத்திற்கேற்பச் சந்தநடை கொண்டு தவழ்ந்து செல்கின்றது. சேக்கிழார், இளங்கோ, வில்லிபுத்தூரர் இவர்தம் நடையினை ஒத்து விளங்குகின்றன. பாடல்களில் பெரும்பாலன தலையாகெதுகை கொண்டு தவழ்வதும் குறட்பாக்களை அங்கங்கே வயிரமணியென அமைத்துச் செல்வதும் மிகவும் சுவையாக இருக்கின்றது. தாங்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியைப் பாராட்டுவதுடன் முற்றிலும் நிறைவேற்றித் தமிழுலகிற்கும் பயன்படச் செய்யுமாறு தங்களைப் பேரன்புடன் வேண்டிக்கொள்கின்றேன். தங்கட்கு எனது நன்றி என்றும் உரியது.

திருப்பனந்தாள்,
19—2—58.

(ஒப்பம்) அன்பன் கே. சுந்தரமூர்த்தி

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித்
தமிழ்ப் பேராசிரியர்

தாம. வெள்ளைவாரணர் வழங்கிய

நல்லுரை

குண்டலகேசியின் முன் பின் வரலாறுகளை நான் படிக்காவிட்டாலும்—மூன்றும் நான்காம் படலங்களை மட்டிலும் படித்துப் பார்த்தேனுனாலும்—பாளை சோற்றுக்கு ஒன்று பதம் என்றாற்போல்—நூல் சரியான பக்குவமாகத் திகழ்கிறது.

செய்யுட்கள் இனிய—சந்த—ஓசைகளுடன் உள்ளன. சிறந்த பொருட் சிறப்புடையன.

சிலம்புச் செல்வத்தின் செய்யுள் அமைப்பு—கந்துகவரி, அம்மானை முரிவரி மிக அழகாக அமைந்துள்ளன.

வரிப்பாடல்கள்போல இசைத் தமிழ்ப் பாடல்கள் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கிப் பாடுவதுதான் சிறக்கும். 93 முதல் 101 வரை உள்ள செய்யுட்கள் சிறந்த ஓசை இனிமை உடையவாயினும் ஒன்பது பாடல்கள் இருப்பதால் சிறிது அலுப்புத் தட்டுகின்றது.

செய்யுட்கள் பெரும்பாலும் தலையாகு எதுகை உடையனவாக இருத்தல் போற்றத்தக்கனவாகும்.

69ஆவது செய்யுளில் குறட் கருத்து—ஏன் குறளே—எடுத்தாளப்படுவது போற்றத்தக்கது.

105ஆம் பாட்டில் மீனெறி தூண்டில் என்ற உவமை மகிழ்தற் குரியது.

திருப்பனந்தாள்
2—3—58

(ஒப்பம்) தாம. வெள்ளைவாரணம்

குண்டலகேசி அரங்கேற்றுவிழா

மதுரை அங்கயற்கண்ணி கோயில் ஆயிரக்கால் மண்டபத்து அமைந்த ஔவை மன்றத்தில் 1959 ஏப்ரல் 22, 29, மே 2, ஆகிய நாட்களில் குண்டலகேசி அரங்கேற்றுவிழா நிகழ்ந்தது.

டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் மெ. சுந்தரனார், டாக்டர் திருமதி தே. தியாகராசன், திருமிகு வை. சங்கரனார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

விழாவின்போது டாக்டர் மெ. சுந்தரனார் வழங்கிய உரைச் சுருக்கம் வருமாறு :

''இரண்டாம் நூற்றாண்டிலே வளர்ந்த இலக்கியம் இயற்கையொடு பின்னிப் பிணைந்து மக்களைத் தழுவிநின்றது. காலம் வளர வளரச் சமய இலக்கியங்களே தலைமை ஏற்றன. சமயத்தோடு கலையை இணைத்துக் கம்பரும் சேக்கிழாரும் பெருமைபெற்றனர். பின்னர் மக்கள் இலக்கியம் தடைப்பட்டு நின்றாலும் இருபதாம் நூற்றாண்டிலே கிளர்ந்து எழலாயிற்று.

''எதிர்கால இலக்கிய உலகு ஒப்பியல் இலக்கண ஆய்வாளர்களுக்கும் புத்தம்புதுக் காவியங்களைப் படைப்பவர்களுக்கும் கடமைப் பட்டுள்ளது. இவ்விருபதாம் நூற்றாண்டுத் தமிழ்த் தொண்டிலே புலவர் இரா. இளங்குமரன் இயற்றிய குண்டலகேசி முதன்மையிடம் பெறுவதாக உள்ளது.

''குண்டலகேசி இலக்கியச் சுவை கனியாக்கப்பெற்ற நூல். காலத்துக்கேற்ற இத் தொண்டுக்குத் தமிழுலகம் புலவர் இளங்குமரனுக்குப் பெரிதுங் கடப்பாடுடையது.''

[1959 மே 4.—தமிழ்நாடு]

பாராட்டுப் பா

பெரும் பேராசிரியர் திருமிகு
அன்பு கருணையானந்தா அவர்கள்
குண்டலகேசி அரங்கேற்று விழாவில் பாடியது

குண்டல கேசிநூல் கூறும் பொருளனைத்தும்
எண்டிசையும் போற்றும் இசையமுதத்—தண்டமிழாற்
சுந்தரனும் காணும் சுவடியெனத் தந்திட்டான்
எந்தமிழ்இ ளங்குமர னே.

இராமநாதபுரம் பெரும்புலவர்
வி. கே. சீனிவாசர் அவர்கள் பாடியனவை

மண்டலத்தோர் என்று மகிழ்ந்து புகழ்ந்தோதும்
குண்டல கேசியெனும் கோதற்ற—தண்டமிழ்நூல்
இங்குணரத் தந்த இளங்குமர வள்ளலது
தங்கருணை வாழ்க தழைத்து.

பூமணக்குந் தண்டார் புரளும் எழிற்புயத்துப்
பாமணக்குஞ் சீர்த்தி படைத்துலக—மேமணக்க
மன்னு மிளங்குமர மாலே யுளமகிழ்ந்து
இன்னுமொரு நூருண்டி ரு.

சிறப்புப் பாயிரம்

பெரும்புலவர் பா. நாராயணன், ஆத்தூர்

செந்தமிழ்த் தாயின் மைந்தர் தீந்தமிழ் வாழ்வுக் கென்றே
தந்தனர் வாழ்வு மூற்றும்; தண்ணமிழ் தாய கல்வி
வந்தளி குரவோ னன்றி, வண்டமி ழுளப்பாங் காலே
சிந்தையு னூன்றிக் கற்றார்; சீர்த்தநற் புலமை மிக்கார். 1

வாழ்வெலாந் தமிழே யாக மணத்தலின், வாழ்வி லென்றும்
தாழ்விலா நெறியிற் செல்லுந் தக்கவர்; தக்கோர் பாலே
ஆழ்வுறு மன்பின் மிக்கார்; அளவில நூல்கள் பல்ல
ஊழ்முறை இயற்றித் தந்தார்; ஒண்புகழ்க் கொருவ ராவார். 2

மற்றிலக் கியங்கள் தம்மை வகைப்படுத் தாய்த லாலே,
சிற்றிலக் கியங்க ளெண்ணித் தொகுத்தவர் தொகுத்த மேலும்
உற்றுள பல்ல வெண்ணி உரைத்ததன் தொகையும் சொல்வார்;
மற்றிது கேட்கும் நெஞ்ச மகிழ்வினுக் கெல்லை யுண்டோ? 3

இலக்கிய மெண்ணிக் கற்றார்; இலக்கண வரம்பு கண்டார்;
புலக்குறும் பறுத்த நீரார் போற்றுவர் பொற்பி தென்றே;
நலக்குறு மதுரை வையம் நற்றமிழ்க் குரிய தன்றே?
சொலற்கரு மிவர்பால் வந்து சூழ்ந்தது விளக்கும் போலும். 4

சிற்றிலக் கியங்கள் பல்ல சிற்றுரை நூல்கள் பல்ல
மற்றிவ ரெழுத்தின் மேன்மை வழுத்துமால்; உரையின் மேன்மை
மூற்றயாப் பருங்க லத்தின் விருத்தியே மொழியு மன்றே?
இற்றிலை தாமோ? மற்றிங் கியற்றிய தியம்பற் காமோ? 5

உரைவரைந் திட்ட மேலோர் உரையிடை மேற்கோ ளாகக்
கரிசறக் காட்டிப் போந்த காக்கைபா டினிய நூற்பா
வரன்முறை எடுத்துக் கோத்துச் சிதைந்தன மற்றங் காக்கி
உரைவரைந் தளித்திட் டாரால் தமிழுல குவப்ப வம்மா!' 6

குண்டல கேசி யென்னுங் காப்பியக் குறையைப் போக்கக்
கண்டன எடுத்துக் கொண்டு காப்பிய முழுது மாக்கி
வண்டணி மாதர் மைந்தர் வாழ்வியல் முற்றும் வாய்ப்பக்
கூண்டென இனிக்கு மாறக் காப்பியக் கதைதந் தாரால். 7

ஈவலசித் தாந்தத் தோடு தமிழ்மொழி தழைப்ப வாழ்நீத
கைதவ மில்லா ஆட்சிக் காவலர் சூப்பை யாவின்
பொய்யறு மூளத்தில் நின்ற புகழிளங் குமர ரென்ருல்,
செய்தவம் வேறு முண்டோ ? தீந்தமிழ்ச் செம்மற் கம்மா ! 8

மொழித்தக வாய்ந்த மேலோர் ; மொழியெதிர் மொழிவோ ரில்லா
விழுத்தக வுளபா வாணர்; வியன்மொழி யாய்வின் மே ம்
எழுத்திளங் குமர னென்றன் பரம்பரை என்ப ராயின்,
பழுத்தநற் புலமை வேறு யாவரே பகர வல்லார் ? 9

ஈங்கிவர் தம்பா லுள்ள கேண்மையா லியம்பு கின்றேன் ;
ஓங்குயர் நண்பர் அன்பா லேங்கிளங் குமர னென்பார்
ஈங்கினி வாழ்வின் கண்ணே எஞ்சிய நாட்க ளெல்லாம்
பாங்குயர் மொழிநூல் செய்து பைந்தமிழ் போல வாழி! 10

நீலகேசியின்

உரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவர் வழியாக அறிய வரும் குண்டலகேசியின் மூலக்கதை

''குண்டலகேசி யென்பாளொரு வைசிய கன்னிகை. இவள் ஒருநாள் பிரசாதத் தலத்து விளையாடுகின்றுளாக ஒரு கிதபவ வைசிய புத்திரன் காளன் என்பான், இவன் பௌத்த தரிசனங்கொண்டு பல வழியும் சோர விருத்திபண்ணிச் செல்வானே முன்சொன்ன குண்டல கேசி கண்டு காமப் பரவசையாக, அதனை அறிந்து அவளுடைய பிதா ராசாவைக் கண்டு யாதானுமோ ருபாயத்தால் மீட்டு இவனுக்குக் குண்டலகேசி என்னும் கன்னிகையினை விவாக விதியாற் கொடுத்தினிது செல்கின்ற காலத்து ஒருநாள் பிரணய கலகத்து நர்மோக்தி காலத்து, 'நீ கள்வனன்றே' என்று குண்டலகேசி சொல்லக் காளனும் தன்னுள்ளத்தே சினங்கொண்டு பின்பொருநாள் வித்தியா சாதன வியாசத்தால் இவளைத் தனிக்கொண்டு ஒரு பர்வதத் தேறி, 'நீ என்னை இவ்வாறு சொல்லுதலில் யானுன்னைக் கொல்லத் துணிந்தேன்' என்னக் குண்டலகேசியும் 'தற்கொல்லியை முற்கொல்லிய' என்பதன்றே, இவனை யான் கொல்வனென நினைந்து, 'யான் சாகிறேனுகில் உம்மை வலங்கொண்டு சாவல்' என அதற்கியைந்த காளனை வலங்கொள்கின்றுள், வரையினின்றும் வீழ நூக்கினள். நூக்கக் காளனும் புத்த ஸ்மரணத்தால் மோக்ஷித்தான். குண்டலகேசியும் பர்த்ரு விரஹ துக்கிதையாகித் துறப்பேனென நினைத்துப் பரசமயங்களெல்லாம் நாவல் நட்டுச் சயித்துப் பௌத்த தரிசனம் கொண்டு முத்தி பெற்றனள்'' என்பதாம்.

கனத்த சுருக்கம்

காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு சோழன் கரிகாலன் ஆட்சிபுரிந்த காலம். அவன் குடிகளுள் செல்வத்தால் சிறந்த ஒருவன் வணிகமணி. அவன் மகள் குண்டலகேசி. அன்னம் பத்திரை என்பனவும் அவள் பெயர்களே. அவள் இளமையிலேயே தாயை இழந்தவள். ஆகலின், தாயும் தந்தையுமாக வணிகமணி விளங்கினன். அவளுக்கு வேண்டும் நலங்களெல்லாம் அருளி, உரிமைவாழ்விலும் தலைப்படுத்தினன்.

குண்டலகேசி தன் தோழியருடன் வளமனையின் மாடியில் பந்தடித்து விளையாடினள். அவள் ஆட்டத் திறனுக்கு ஈடுதர இயலாத தோழி ஒருத்தி, ''உன் பந்தடிப்பை வந்தொருவன் கண்டால், உன் அழகில் ஈடுபட்டு இளைத்தேபோவான்'' என்று நகைத்தாள்! அவள் நகைப்புக்கு நாணிய கேசி, பந்தை ஓங்கி அவள் மேல் எறிந்தாள். எறிந்த பந்து, சுவரெல்லை தாண்டி வீதியில் வீழ்ந்தது. வீழ்ந்த இடத்தைக் காண ஓடிவந்தாள் கேசி. முன்னும் பின்னும் காவலர் செல்ல இடையே சிறையுற்றுச் செல்லும் கண்கவர் கட்டிளங்காளை காளன் என்பானின் ''சுந்தரத் தோளின்மீது சொம் மெனப்'' பந்து வீழ்தல் கண்டாள்! பந்து வந்த இடத்தை நோக்கிக் காளன் மேலே பார்த்தான்; பந்து வீழ்ந்த இடத்தை நாடிக் கேசி கீழே பார்த்தாள்! இருவர் நோக்கும் ஒன்றுபட்டன! காதல் மின்னொளி செய்தது! என்றும் காணு உணர்வு இருவர் நெஞ்சத்தும் புகுந்தது. அவன் அவளானான்! அவள் அவனானாள்! இருவரும் மாறிப் புகுந்தனர்!

காளன் வீதியைக் கடந்தான். கேசியை, அவன் காட்சி அலைத்தது. 'காவலர் இடையே செல்லும் அவன் கள்வனே!' என ஏங்கினள். அவன் கள்வன் என்பதை அவள் உள்ளம் ஏற்கவில்லை. காதலன் அவனே எனக் கொண்டாள்! மயக்கமுற்றாள்! தோழியர் குலைந்தனர்; செவிலித்தாய் வந்து மயக்கம் போக்கினள். மயங்கிய சூழலை அறிந்த தோழிவழியே உண்மை அறிந்தாள் அவள். அன்னம் காதல் தீயில் கனன்றாள்.

காவலர்கள் காளனை அரண்மனைக்குக் கொண்டுபோயினர். வேந்தனும் அமைச்சர் முதலியோரும் அவையில் இருந்தனர். அமைச்சர் கருணைவேள் மகனே காளன். அவர் ஆணையால்

சிறைப்படுத்தப்பட்டவனே அவன். நேர்மைத்திறம் அறிந்த அவர், அறத்தின் காவலர்! முறைமையின் நிறைவாளர்! ஆனால், அப்பொழுது அரசன் பிறந்தநாள் 'பெருமங்கல விழா' நிகழ்ந்து கொண்டிருந்தது. அத்தகுபொழுதில் எவருக்கும் தண்டனை தருவ தில்லை. விழா நிறையும்வரை எத்தண்டனையும் நிறுத்திவைக்கப் படும். அம் முறையே முறையாய், அவையோர் தீர்த்தனர். அரசனும் பிறரும் ''விழா நிறைவின்பின் ஆயலாம்; இப்பொழுது விடுதலை தருக'' என்றனர். அமைச்சர் ஏற்கவில்லை. ''சிறைக் கண்ணே சேர்க்க'' என ஆணையிட்டார். அரசனும் 'முறைமை இருக்கும்' என ஏற்றான். காளன் காவலில் வைக்கப்பட்டான்.

நகரில் பெருமங்கலவிழா நிகழ்ந்தது. பல்வேறு வகைகளில் மைந்தரும் மகளிரும் மகிழ்ந்தனர்; ஆடினர்; பாடினர்; குளமுங் காவும் குறுகினர்; ஆறும் கடலும் அடைந்தனர். எங்கும் மகிழ்ச்சிக் கொள்ளை! எங்கும் இன்பத்தின் எல்லை! ஆனால் காளனும் அன்னமுமோ துன்பத்தின் எல்லையில் துடித்து நின்றனர்! இருவரும் ஒருவரை நினைந்து ஒருவர் கலங்கினர்; கரைந்தனர்; கண்ணீர் வார்ந்தனர்! இரவும் பகலும் ,யரே வடிவாய்த் துடித்தனர்.

வணிகமணிக்கு உண்மை புரிந்தது. கேசியின் அவலம் தீர்க்கத் துடித்தான். கருணைவேனைக் கண்டான்; விடுதலைக்கு வேண்டினான். ''விடுதலை அருள்வது கெடுதலை; வேந்தன் அருள் செய்தாலும் விலக்கத்தக்கதே'' என்று உறுதியாய் நின்றார் அமைச்சர். தீமையை அரவணைக்க முடியாது என மறுத்தார்! ''பையலாக இருக்கும்போது அவனைப் பண்படுத்தி வளர்க்கத் தவறிய நீவிர், அவன் வளர்ந்து தீமைபுரியத் தலைப்பட்டபோது தண்டிக்க முந்துநிற்கும் இம் முறைமை தகவன்று! பெற்றவர் கடமையைத் தட்டிக்கழித்த நீவிர் அமைச்சுக் கடனுற்ற அருகர் அல்லர்'' எனச் சினந்தான் வணிகமணி. அமைச்சர் தம் நிலையிலேயே நின்றார். வணிகமணி அரசனைக் கண்டான்; அவையங் கூடிற்று. ''கொலைத்தண்டனைக்குரிய காளனை விடுக்க வேண்டுமாயின் நம் முந்தையோர் முறைமைப்படி, தண்டனைக்குரியவன் தன்னிறையளவு பொன்னும், எண்பத்தொரு யானையும் அரசுக்கு வழங்குதல்வேண்டும்'' என்று அவையோர் கூறினர்.

''முகனெதிர் பாராத் தந்தையோ மகனென எண்ணி இவற்றை யருள்வார்?'' எனக் காளன் நைந்தான். ஆனால் வணிகமணி முன்னின்றான்! காளனைப் பொன்னால் நிறுத்தான்! களிறுகளை எண்ணி விடுத்தான்! காளன் விடுதலை பெற்றான்! காதல்தந்த விடுதலையில் சொக்கிப்போனான்! கடிமண ஏற்பாடு நிகழ்ந்தது.

அமைச்சர் மகனுக்கும் வணிகருள் தலைப்பட்ட வணிகனின் ஒரே ஒரு மகளுக்கும் மன்னன் திருமுன்னர் நிகழும் திருமணச் சீர்த்தி எத்தகையதாக இருக்கும்!

நாடும் நகரும் விழாக்கோலமுற்றன! வீடும் வீதியும் மங்கல மாட்சியுற்றன! இளையரும் முதியரும் மகிழ்வுக் கூத்தாடினர் எனின், காளையர் கன்னியரைக் கேட்கவும் வேண்டுமோ?

இளமணமக்கள் இனிய இல்லறம் நடாத்தத் தனிமாளிகை அமைத்தான் வணிகமணி. வேண்டும் வாய்ப்புகளையெல்லாம் விரும்பி விரும்பிச் செய்தான்! புதுமணமக்கள்! புதிய மாளிகை! புதிய வாழ்வு! பூரிப்புமிக்க நிகழ்வுகள்! புதியபுதிய இன்பக் கோலங்கள்! இறைமையும் இயற்கையும் ஒன்றித்திளைக்கும் உலா நிலைகள்! உவகையின் நிலைக்களங்கள்: எல்லாம் இன்பச் சுரப்புகள்! இன்புறுதல் ஒன்றற்கே இப் பிறவி வாய்த்ததென எண்ணிக் களித்தனர்!

காளன், வேந்தன் அருளை நினைந்தான். அவன் தந்த வாழ்வை அவனுக்குச் செய்யும் பணியிலே செலவிடல் தகவென்த் துணிந்தான், படையில் சேர்ந்தான். அவன் வீறும் விழுப்பமும், படிப்படியே உயர்த்திப் படைத்தலைமைக்குக் கொண்டு சேர்த்தன. இந்நிலையில், சேரனை வெண்ணிப்போர்க்களத்தில் எதிரிடும் நிலைமை கரிகால் வளவனுக்கு நேர்ந்தது.

கரிகாலன், கரிப்படைத் தலைமையேற்றான். காளன், பரிப் படைத் தலைமை கொண்டான். இருவரும் அவரவர் நிலையில் பகைப் படையை நிலைகலக்கினர். எதிரிட்ட படைகள் பிறகிட்ட நிலையிலும், சேரலாதன் கரிகாலனுடன் வீரப்போராற்றினன். அவன் விடுத்த வேல், கரிகாலன் ஏறியிருந்த கரியினைத்துளைத்து வீழ்த்தியது. கரிகாலன் விடுத்த வேல், சேரன் மார்பில்பட்டுப் புறத்தே உருவிச் சென்றது; புறத்துத் துளைத்த புண்ணைப் 'புறப்புண்' எனக் கருதக் கூடுமே எனும் நாணம் விஞ்ச, வடக்கிருந்தான் சேரலாதன்! கரிகாலனே தன்னெத்த வீரனுக்குத் தான் காலனுக அமைந்தமைக்கு வருந்தினன். ''ஒரு களத்தில் ஒருவரே வெல்வர்; இருவரும் வென்ற அருமை இக்களத்து நேர்ந்தது'' எனப் புலவர்கள் இரங்கினர்! போர் முடிந்தது; வீரர்கள் வீடு திரும்பினர்.

காவிரியில் வெள்ளம் பெருகியது; புனலாட்டு நிகழ்த்தப் புகார் நகர் புறப்பட்டது. அவரவர் நிலைக்கு ஏற்ற ஊர்திகளில் சென்றனர். புனலாட்டத்திற்குச் செல்லும் விருப்பால் அன்னம் தன்னை அழ குறுத்தினுள். ஒப்பனையைக் கண்டு களித்து உடனின்ற காளன்,

குங்குமச் செப்பை அன்னம் அறியாமல் கையகத்து எடுத்து மறைத் துக் கொண்டான். செப்பைத் தேடிக் காணுத கேசி, அதனைத் தேடு தற்குத் தோழியை அழைத்தாள். காளன் கையில் மறைத்து வைத் திருந்த செப்பை நீட்டினன். நகைத்துக்கொண்டு, ''கள்வரே நீவிர்'' என்றுள், அதனை நகைச் சொல்லாய் நயவாமல் பகைச் சொல்லாய்க் கொண்டான் காளன். முந்தை நிலையை மறவாமல், 'பழித்தாள்' என உட்கொண்டான்! அவன் முகக் குறிப்பறிந்த அன்னம், தன் குற்றத்தை உணர்ந்து பொறுக்கவேண்டினுள்! 'மறக்க' என மாற் றினன்! ஆனல், உள்ளே கனன்றான். அதனைக் காட்டிக் கொள்ளா மல் புனலாட்டுக்கு அழைத்துச் சென்றான்.

புனலாட்டு பூரிப்பாக நிகழ்ந்தது. மைந்தரும் மகளிரும் ஊடலும் கூடலும் அளித்து உவகையின் எல்லே கண்டனர். புது நீர்க் கலக்கத்தை மேலும் கலக்கினர். ஆனல் காளனும் அன்னமும் தனித்தனியே கலங்கியறியாக் கலக்கத்தின் வடிவாகினர். காளன் குறிப்பை வெளிப்படுத்தாமல் தேற்றுவித்து, அன்னத்தை நகருக்கு அழைத்துச் சென்றான்.

காளன் – அன்னம் உறவு, ஒட்டா உறவாயிற்று, ஆனல், ஒட்டுறவாகக் காட்டினன் காளன். பாடிக் களிப்புறுத்தினன்; பரவிக் களிப்புறுத்தினன்; கூடிக் களிப்புறுத்தினன்; குளிர்ப்ப உரைத்துக் களிப்புறுத்தினன்; தளிர்ப்பத் தழுவிக் களிப்புறுத்தினன்; அவற்றை வாய்மை எனக்கொண்டு வாழ்ந்தாள் அன்னம்! காலம் உருண்டது!

மகள் விரும்பிய வண்ணம், மனையறம்படுத்திய வணிகமணி, தான் விரும்பிய வண்ணம் துறவுகொண்டான். அடுத்து அமைச்சர் கருணைவேளும் துறவு கொண்டார். தந்தை துறவால் அன்னம் துடித்த துடிப்புப் பெரிதாம். காளன் நிலையிலோ அது களிப்பாம். முன்னையினும் பன்மடங்கு அன்பு செலுத்தினன் காளன். அன்னத் தின் தந்தையார் கொல்லிமலையில் வாழ்வதாகக் கூறி ஆங்கு அழைத்துச்சென்று காட்டுவதாக மகிழ்வித்தான்.

தந்தையைக் காணத் துடித்த அன்னம், அப்பொழுதே கொல்லி மலை செல்லுதற்கு ஆர்வம் மீதூரப்பெற்றுள். தேரேறிக் காவிரிக் கரை வழியே மேற்கு நோக்கித் திருவரங்கம் சேர்ந்தனர். மருதவளங் களைக் காட்டிக் காட்டி மகிழ்வித்தான் காளன். அரங்கத்தைக் கடந்து முல்லைவளம் குறிஞ்சி வளங்களைச் சொல்லிச் சொல்லி அழைத்துச் சென்றான். கொல்லிமலைச் சாரலை அடைந்ததும் தேரினைப் போக விடுத்து, அன்னத்தை நடக்கவைத்து அழைத்துக்கொண்டு மலை

உச்சிக்குச் சென்றான் காளன். கடை தளர்ந்தபோது தாங்கினான்; தழுவினன்! மென்மெல அழைத்து அரவணைத்துச் சென்றான்.

''இக் கொடுமுடி மீதோ எந்தையார் உள்ளார்?'' என்று ஏக்கத் தால் கேட்டாள் அன்னம். ''காளன் கூறிய உரையில் பொய்ம்மை வந்ததோ?'' என்று நகைத்தான் காளன். ''அன்னமே, உன் அன்புக் காளன் அழிந்தனன் முன்னே; இக் காளன் கள்வன் பொய்யன் மட்டுமல்லன்; கொலைஞனும் ஆவன்; மண்ணவர் எல் லாம் கூடி நிற்பினும் எண்ணத்தை மாற்றான் இவன்; கூற்றுவனே வந்து நிற்பினும் மாற்றிவிட மாட்டான் இக் காளனே! உன்னை இக் கொடுமுடியில் இருந்து உருட்டிக் கொல்ல வந்துள்ள காளன் இவன்; மாற்றமும் சொல்லேன்: மனத்திடை அனலை வித்தும் கூற்ற மும் சொல்லே என்பதை அறிக. என் மனையான ஒன்றை உன்னை ஒன்று கேட்பேன். நீ சாவுமுன் வேண்டுவதொன்றுண்டாயின் வேண்டுக'' என்றான்.

மெல்லியல் அன்னம் துணுக்குற்றாள் அல்லள்; துய்ருற்றாள் அல்லள்; துணிந்து நின்றாள்; ''எனக்குப் பேறென இதனினும் வேறென்றுண்டோ? என் காதல் தெய்வமே என்னைக் கொல்லத் துணியுமாயின் துயரென ஒன்றும் உண்டோ? 'காதலால் கண்ட நாளும் கடுவரை ஏறிவந்து சாதலே குறித்த நாளும் சமனிலை உற்ற நாளாம்; வீதலுக்கு அஞ்சேன்; விதிவழி ஆக;' ''தங்கள் மாதவத் தானை வலம் வந்து வழிபட அருளவேண்டும்'' என்றாள்.

மென்னகையோடு அன்னம் சொல்லிய சொல்லைக் கேட்ட காளன் மெய்ம்மறந்துபோனான். இருமுறை அவனைச் சுற்றிவந்த அன்னம், மூன்றாம்முறை சுற்றும்போது ''தன்னைக் கொல்லவந்ததை முன்னைக் கொல்க'' என்பதன்படி இவனைக் கொல்வேன் என எண்ணினளாய்க் காளனை விழத் தள்ளினாள். அவன் அரற்றிக் கொண்டே வீழ்ந்து அழிந்தான். வெற்றிக்களிப்பில் வெறி கொண்டாள் அன்னம்! சிறிதுபொழுதே வெறி அகன்றது; பழி வாங்கும் உணர்வு நிலைத்தது. அவை விடுதலைபெற்ற அளவில் தான்செய்த தவற்றை உணர்ந்தாள். ''கொண்ட கொழுநனைக் கொன்று களிப்புறும் பெண்டிரும் உண்டுகொல்'' எனத் தவித்தாள். தானும் அப் பாறையினின்று வீழ்ந்து உயிர் துறக்கத் துணிந்தாள். அவள் வீழ்ந்துருளுமுன் அவனை வீழாமல் தடுத்து நிறுத்தினாள் வேட்டுவப்பெண்ணொருத்தி. வீழத் துள்ளித் துடித்தும், புள்ளிமானைத் தூக்கி அள்ளிச் செல்வதுபோலத் தன் வீட்டுக்குக் கொண்டு சென்றாள் அவ்வேட்டுவமங்கை. இரவெல்லாம் அழுகையிலும் அரற்றலிலும் கழிந்தது; பொழுது விடிந்தது. வேட்டுவமங்கையும் அவள் கணவனும்

கேசியை மலையடிவாரத்தில் இருந்த துறவோர் சாலைக்கு அழைத்துச் சென்றனர்.

துறவோர் சாலைத் தலைவி 'தாய்' என்பார். அவர் கேசியின் வரலாற்றை அறிந்தார். ஆக்கரிய உயிரைப் போக்குவதன் அறியாமையை விளக்கினர். அதற்கொரு நிகழ்வையும் சுட்டினர்.

காஞ்சியைச்சார்ந்த கெண்டைவிழி என்பாள் துறையூரைச் சார்ந்த இன்சொலனே மணந்தாள். மணந்த சின்னாளில் அன்னைக்கு உடல்நலமில்லை என்ற செய்தியறிந்து அவளைப் பார்க்கச் சென்றாள். தாய்நிலை நலப்பட்டது. ஆனால், ஆங்கிருந்து அவள் திரும்புமுன், கரும்புத்தோட்டம் சென்ற கணவரைப் பாம்புதீண்டி இறந்த செய்தி வந்து சேர்ந்தது. துறையூர்க்கு வந்த அவள், சொல்லரிய கவலைக்கு ஆட்பட்டு வாழமனமின்றி யாரும் அறியா நள்ளிருளில் பாழுங் கிணறொன்றில் வீழச் சென்றாள்.

அவள் சென்ற கிணற்றருகே தட்டுத்தடுமாறி ஒருருவம் நடந்து வரக் கண்டாள். சுவரற்ற பாழுங்கிணறு என்பதை அறியாமல் வருவதறிந்து பார்வையற்றவன் எனத் தெளிந்தாள். அவன் கிணற்றின் எல்லையில் கால்வைக்குங்கால் ஓடிப்போய்த் தடுத்தாள். அடுத்திருந்த மடத்திற்கு அழைத்துச்சென்று விடுத்தாள். அவன் 'நெடிதுவாழ்க' என வாழ்த்தினன். அவ் வாழ்த்துதலைக் கேட்டதும் அழுதுவிட்டாள் கெண்டைவிழி. பார்வையற்ற அவன் அழுவதன் காரணங்கேட்டு அறிந்தான். வருந்தினன். ஒரு நொடிப்பொழுதுக்கு முன்னே நீ வீழ்ந்திருந்தால் நானும் வீழ்ந்து இறந்திருப்பேன். நீ வாழ்ந்த ஒரு நொடிப்பொழுதே ஒருவனைக் காத்து வாழவைக்கு மானால் நெடுங்காலம் நீ வாழும்போது எத்தனை எத்தனை பேர்களுக்கு உதவியாக இருக்கமுடியும் என்பதை எண்ணு. உன் கவலையையும் கண்ணீரையும், பிற உயிர்களுக்குச் செய்யும் தொண்டாகவும் துணையாகவும் மாற்று! உன் பிறவிப்பயன் அதுவே என்றான். அவள் தொண்டிலே தலைப்பட்டாள். அக் கெண்டைவிழியே இங்குள்ள கோதமை என்பாள் என்று சொன்னாள். குண்டலகேசி தெளிந்தாள்; அறங்கேட்டாள்; திறமாக அறமுரைத்தாள் தாய்; படிவ நோன்புப்பான்மையும் உரைத்தாள்; குண்டலகேசி துறவில் தலைப்பட்டுத் தொண்டில் நிலைப்பட்டாள். ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' என்று வாழ்ந்தாள்.

உள்ளடக்கம்

		பக்கம்
	பதிகம்	3
1.	காட்சிப் படலம்	6
2.	விழாக்கோட் படலம்	22
3.	சூழ்வுப் படலம்	33
4.	கடிமணப் படலம்	54
5.	மனையறப் படலம்	78
6.	களிப்புறு படலம்	89
7.	களம்புகு படலம்	101
8.	களப்போர்ப் படலம்	115
9.	மீட்சிப் படலம்	130
10.	ஊழ்வலிப் படலம்	136
11.	வழிக்கொள் படலம்	152
12.	வஞ்சப் படலம்	167
13.	அறநிலைப் படலம்	187

குண்டலகேசி

இறைவணக்கம்

1 செங்கட் கரும்பாய் இனிப்பானைச்
செழுந்தேன் மலராய் மணப்பானைத்
திங்கட் பிறையாய்த் திகழ்வானைத்
தெளிந்த இசையாய் அமைவானை
அங்கட் புவனம் அளிப்பானை
அறமோ டின்பம் அருள்வானை
ஙங்கட் புலத்துள் நிறைவானை
நறவார் மலர்தூய்ப் பணிவாமே.

மொழி வாழ்த்து

(வேறு)

2 அகரத்தை முடியாக் கொண்டோய்!
அரியதோர் ஒலியாம் மென்மை
னகரத்தை அடியாக் கொண்டோய்!
நற்பல நிறமாத் தோன்றும்
மகரத்தை இடமாக் கொண்ட
மாக்கடற் புவியின் தொன்மைச்
சிகரத்தைத் தனதாக் கொண்டோய்!
சீர்மிக வாழி! வாழி!

(வேறு)

3 மலையும் மாறும் கடலும் மாறும் நாள்செல
இலையும் ஆகும் இயல்பும் வீழும் ஏற்றுள
நிலையில் மாரு நிலையள் நம்தாய் ஈண்டிய
கலையின் வாழ்வு கருலும் வாழ்வுக் கன்னியே!

அவையடக்கம்

(வேறு)

4 பாகுத்தேன் மொழியே யென்னப்
பாடிய புலமை மிக்கோன்
நாகுத்தன் விரித்த நன்னூல்
நானிலம் இழைத்த தீங்கால்
ஏகத்தொன் னூலின் பேற்ருல்
இக்கதை பாட லுற்றேன்
வாகுச்சொல் வருவ தாயின்
வண்டமிழ் தந்த வாய்ப்பே !

5 மண்பக உழுது போழ்ந்து
மறிகளே அகலச் செய்யும்
திண்படை யிருந்தும் நாங்கூழ்
திடமுறக் கிளறல் போலாம்
எண்பெருங் கவியின் வல்லோர்
ஏண்திறம் அறிந்தும் யானேர்
வண்குழல் கேசி காதை
வகுப்பது குறித்த வாறே.

பதிகம்

(வேறு)

6 நற்பா லமிழ்து நனிவாய்த்துள சொல்லும் தூய
பொற்பால் புகுந்த மணியேயெனும் கூந்தற் பொற்பும்
கற்பா லமைந்த கவின்மாண்பரும் ஏற்ற கேசி
அற்பால் விரிந்த வரலாற்றினைக் கூற லுற்றேன்.

7 நண்ணுங் கதிரோன் நறுங்கால்வழி யான சோழர்
எண்ணஞ் சிறப்ப இனிதாண்டருள் பூம்பு காரில்
மண்ணின் நலத்தால் மலர்வாங்கரி கால னென்னும்
அண்ணல் அரசு தனியோச்சிய நன்மை நாளில்,

8 செல்வப் பொருளால் சிறந்தோங்கிய செல்வ ருள்ளே
செல்வன் வணிக மணியாயுளன் ; அன்னேன் தந்த
கல்விக் கொழுந்தாய்க் கலைக்கென்றமை வித்தாய் நின்ரூன்
சொல்லில் இயலாச் சுரிமாண்குழல் அன்னம் என்பாள்.

9 பைந்தா மரையில் பயிலாதநல் லன்னம் பாவை
நந்தா வளஞ்சேர் உயர்பத்திரை நங்கை பூவை
கொந்தார் குழலி செறிகுண்டல கேசி தக்கோர்
சிந்தை யுலவும் பதுமையெனும் சீர்மைப் பேராள்.

10 வெள்ளிப் பனிமால் விரிவெற்பிடை வேங்கை காட்டித்
துள்ளும் அலைசூழ் உலகாண்டநல் லாண்மைச் சோழன்
கொள்ளும் அமைச்சர் குழுவுக்கிறை கொண்ட வள்ளல்
விள்ளற் கரிய கருணைவேன் என்னும் மேலோர்.

11 அன்னர் புதல்வன் அரியேறெனத் தோற்ற முற்ரூன்
பொன்னர் உருவப் பொலிவோருளம் வாங்குஞ் சீரோன்
இன்ன வெனவொன் றுணராமையிற் றீய நோக்கில்
தன்னைப் புகுவித் துழல்வோனவன் காவன் என்பான்.

12 இவ்வர் பெயர்கள் நினைவானபின் நூலி னுள்ளே
தெவ்வர் புகழும் திருமாவளன் செங்கோல் மாண்பால்,
கொவ்வை இதழோர் குலமைந்தரோ டாடி நாளும்
பவ்வ அலைபோல் பயின்ருர்த்திடும் இன்ப வாழ்வும்,

13 இற்பா வியசீர்த் திருமாடியில் சுற்றம் சூழப்
பொற்பா ழியிடை வருமாணமு தென்னு மன்னம்
விற்பாய் வெனவே வியபந்துகை யாப்புற் றேகும்
மற்காள நம்பி மலர்தோள்மிசை வீழ்ந்த வாறும்,

14 மையல் பெருகி மனமாழ்குதல் உற்ற வாறும்,
ஐயன் அருளும் முறைவேண்டினுள் நோற்ற வாறும்,
பெய்தார் வளவன் பெருமங்கலம் உற்ற வாறும்,
தெய்வ நகராய்த் திகழ்ந்தோங்கிடக் கண்ட வாறும்,

15 நீரா யுருகி நெடுங்காதலில் காள நம்பி
ஆரா விருப்பால் அயர்ந்தோங்கிய ஆகூழ் ஆறும்,
சீரார் குழலாள் செயலற்றமை எண்ணு தந்தை
பேரா நினைவால் சிறைமீட்சியைப் பேணு மாறும்,

16 கண்ணற்ற பான்மைக் கடுங்காவலில் நீங்கு மாறும்,
பெண்ணுற்ற பெற்றி இவரேயென நின்றோர் கூடித்
தண்ணுற்ற சோலை தகையெய்துமா றன்னத் தோடு
கண்ணுற்ற வாறும் களித்தாடியின் புற்ற வாறும்,

17 மன்னர் மருளும் பெருவாழ்வுடைச் செல்வன் இல்லில்
கன்னி யனத்தின் கடிமாமணம் உற்ற வாறும்,
இன்பம் பெருகத் தனிமானிகை ஈந்த வாறும்,
பன்ன வியலாப் பரிசாயின ஏற்ற வாறும்,

18 சேரன் சிறுசொல் சினமூட்டிடச் சோழன் வெம்போர்
சார நினைந்து படையோடெழ லான வாறும்
வீரர் தலைவன் எனும்பேற்றினைக் காள னுற்றுப்
போரில் அடையார் புறந்தந்திட வென்ற வாறும்,

19 தெய்வப் புனலின் விழவாலொரு தீயூழ் பற்றி
அய்யை யுரையில் அடுக்காததோர் குற்றங் கண்டு
பொய்யாம் உரையும் கறுவேறிய புன்மைப் பாடும்
மெய்யாய்ச் செறிய மிகுகாளனுர் நின்ற வாறும்,

20 தாளால் நிறைந்த தணியாவளச் செல்வன் ஓர்பால்
மூளா நினைவால் துறவாட்சியை ஏற்ற வாறும்,
வாளால் பிளந்த உடல்போலனம் துள்ளு மாறும்,
வேளாம் அமைச்சர் துறவில்விருப் பாய வாறும்,

21 முந்தை வினையால் அறுதிங்களின் எல்லை காறும்
தந்தை நினைவால் அனம்நீள்துயர் தாங்கு மாறும்,

உந்தை உறையும் உயர்கொல்லியம் வெற்புக் கேனிச்
சிந்தை யவலம் செகுப்பாமெனச் செல்லு மாறும்,

22 கொல்லி மலையிற் குழலாள்படக் காளன் எண்ணீச்
சொல்லும் உரையால் தனக்கேயது கொண்ட வாறும்,
புல்லும் உணர்ச்சி பிடருந்தவும் வீழப் புக்கு
வல்லி யொருத்தி தடுத்தாண்டிட நின்ற வாறும்,

23 புங்கன் புனிதன் அடிப்போதிடை உள்ளம் நாட்டி
அங்கண் உலகம் உயுமாறனம் பற்று நீங்கப்
பொங்கும் அறமே புகக்கேட்டதாம் ஆறும், அண்ணல்
துங்க அடியே துணையாயின வாறும் சொல்வாம்.

(பதிகம் முற்றும்)

நூல்

1. காட்சிப் படலம்

24 நாடுபுகழ் நல்லறங்கள் நாகரிகம் மல்கும்
பீடுபுகழ் நாடுநகர்ப் பேறுசில சொல்லி
ஏடுபுகழ்ச் சோழனர சேற்றமிகு நாளில்
நீடுபுகழ் நேர்வளருங் காட்சிநிலை சொல்வாம்.

25 சோழவள நாடுபெறு சொக்குமணி யாகிக்
காழகமும் காவிரியும் கைபிணையச் செய்தோன்
சூழவரும் மேதையரைச் சூடுகரி கால
வேழமுயர் ஆட்சியிலே வெம்மையெதும் இன்றே.

26 காலமெலாம் நீர்பெருகும் காவிரியாம் நல்லாள்
கூலமெலாம் கூட்டிவரக் கோடையிலும் நற்கார்
காலமென மீவளமை காட்டுதலால் செல்லும்
சீலமதால் சிந்தையெலாம் சீர்கலையே மல்கும்.

27 சோலைமலர் சூழவரு தும்பியெனப் பள்ளிச்
சாலையுறக் கூடிடுவர் சார்ந்தகலை வாணர்
காலையொடு மாலையெலாம் கைத்திறனைக் காட்டும்
வேலையிலே மூழ்கிடுவர் வேட்கைமிக லாலே.

28 ஆடலொடும் பாடலினை ஆய்ந்திடுவோர் ஈட்டம்
கூடலொடும் ஊடலினை ஊக்கிடுவோர் கூட்டம்
தேடலொடும் நல்லறங்கள் தேர்ந்திடுவோர் நீர்மை
நாடலொடும் நேர்ந்திடுங்காண் நன்னிலையில் வாழ.

29 கொம்பனைய கோதையர்கள் கூடிநட மாடி
வம்பனைய சீறிடையும் வாடலுற ஓடி
செம்பனைய காலடியும் சேந்தகனி யாக
அம்பனைய கூர்விழியால் ஆடவரைக் கொல்வார்.

30 கச்சணிந்த கொங்கையன கந்துகச்சீர் பார்த்துத்
தச்சணிந்த தாங்கழங்கும் அம்மனையும் தாங்கிப்
பிச்சணிந்த போதுபொதி ஊசலிடைப் போவார்
நச்சணிந்த நாகமென நாட்டியஞ்சேர் நல்லார்.

31 இத்தகைய சூழலிடை ஏற்றமுறு செல்வன்
நத்திவளர் தேர்ச்சியினுல் நாட்டுநிதி பெற்றேறன்,
வைத்தபுகழ் வாணிகருள் மாமணியென் றேத்த
ஒத்தவர்கள் இல்லெனுமா ரேங்கினனே எங்கும்.

32 அன்னவற்கு வந்ததிரு வாகுமனே யாட்டி,
பொன்னனைய பத்திரையைப் பூவுலகில் வைத்து
மின்னெனவே பொன்னுலகை மேவினளாய்ச் செல்ல
இன்னலிடைத் துன்னிமிக ஏங்கினனே செல்வன்.

33 அன்புருவாய் நின்றவுயர் ஆயகன்ற பின்னர்த்
துன்புருவாய் நின்றவட்குத் தூயநிலைத் தாயாய்
இன்புருவாய்ப் பண்புருவாய் ஈடிலளாய் நின்ருள்
மன்பெருமைச் செல்வியெனும் மாண்புடையள் அம்மா!

34 பாங்கியரைத் தோழியரைப் பாணியரை வைத்தாள்
ஓங்குபெருங் குன்றமுடன் ஓவியஞ்சேர் காவும்
பாங்கிலுற ஆவனவும் பான்மையுறச் செய்தாள்
தாங்கிவரு தண்ணளியால் தாய்மறைவை வென்ருள்.

35 அப்பனைய கண்ணெளியால் ஆடவரைத் தாக்கித்
துப்பனைய சீரிதழால் ஓவியர்கை தேய்த்துச்
செப்பனைய கொங்கையினுல் சிற்பரையும் ஓட்டி
நொப்பனைய சீறடியால் நோன்மைநிலம் வென்ருள்.

36 ஆண்டகைமை கொண்டவர்கள் ஆயிழையைக் கண்டும்
மீண்டகல ஆகுமெனின் மெய்ம்மையிலை என்றே
நாண்டகைமை யோடுமுயர் நாற்குணமு மெய்திப்
பேண்டகைமை கண்டவர்கள் பேசுவரே எங்கும்.

37 வார்குழலை வண்புகையால் வாசமிடக் கண்ட
கார்மயிலும் கோலவியல் காட்டிநட மாடும்
பேர்பயிலுங் கேசிநங்கை பேசுமொரு நாட்கண்
சீர்தவழப் பந்தடிக்கும் செய்யநிலை சொல்வாம்.

38 மஞ்சுதவழ் விஞ்சைசெறி கொந்தவிழு மாடத்
திஞ்சிவளர் நந்தனத்தில் சொந்தமொடு கூடிச்
செஞ்செலெனச் செஞ்செலென மென்சிலம்பு பாட
அஞ்செவிய குண்டலத்துக் கேசியவள் வந்தாள்.

39 பங்கயத்துச் செங்கரத்து மங்கையர்கள் எல்லாம்
தங்களது விஞ்சையதே விஞ்சியதாய்க் காட்டிச்

செங்கரும்புத் தீந்தெளிவை உண்டவர்போல் பொங்கத்
திங்களொளிக் குண்டலத்தாள் பந்தெடுக்க லானுள்.

40 நன்னயமாய்ப் பந்தெடுத்து நங்கையரின் முன்னே
அன்னநடை இன்னதென மென்னடையிற் சென்று
மின்னலினே மன்னுமெனப் பின்னமறப் பாய்ந்து
கன்னியவள் பந்தடித்தல் விந்தையினும் விந்தை.

41 கொஞ்சுமிளம் அஞ்சுவண்ணப் பைங்கிளியை அன்னுள்
பஞ்சனைய மென்பதங்கள் பந்துடனே தாவி,
விஞ்சியதும் கொஞ்சமல நின்றவர்க ளெல்லாம்
பிஞ்சிதழைத் தம்விரலால் நன்கழுத்த லானுர்.

42 உண்டிடுவோம் தேனெனவே வண்டினங்கள் கூட,
கண்டிடுவோம் வென்றியெனக் கிண்கிணிகள் பாட,
கொண்டிடுவோம் தோல்வியெனக் கன்னியர்கள் வாட,
எண்ணிடுவோர் எண்ணமதை எண்ணமறச் செய்தாள்.

43 நாணமதால் சீர்குலைந்த நங்கையவ ருள்ளே,
''வாணகையாள் பந்தடிப்பை வந்தொருவன் கண்டால்
ஏணழகில் ஈடுபட்டே எய்த்திடுவான்'' என்றேருர்
பாணமதை ஏவியொரு பைந்தொடியாள் நின்ருள்.

(வேறு)

44 குண்டல கேசி கேட்டே
குறும்பினுல் நகைத்தல் நாணிக்
கொண்டனள் சிறிய சீற்றம்;
கோலமார் பந்தை ஏவித்
தண்டிட ஒசிந்து நின்று
தார்குழல் நகைத்த தாலே,
வண்டுண மலர்ந்த நீலம்
வளரெரி கதுவ லொத்தாள்.

45 மீண்டுமோர் பந்தை ஓங்கி
மேலெழு சினத்தி னுலே
தூண்டினுள் எழுந்த பந்து
துவரிதழ்த் தோழி தாக்கி
ஆண்டிருந் தெழுந்து துள்ளி
அகல்நெடுந் தெருவில் வீழக்
காண்டகும் ஆவ லோடு
கைப்பிடிச் சுவரைச் சார்ந்தே.

46 பந்துவீழ் இடத்தை நோக்கிப்
பாவையள் பார்வை செல்ல
முந்துதாய் விரைந்த பந்து
முன்னெடு பின்னும் வீரர்
வந்திட இடையில் செல்லும்
வயமுறு புலியை யன்னான்
சுந்தரத் தோளைச் சார்ந்து
'சொம்'மென வீழ்தல் கண்டாள்.

47 பொய்ச்சிறைச் சீற்றம் போக்கிப்,
''போமவன் யாவ னெதான்?
மெய்ச்சிறை செய்வ தற்கு
மேவிய செய்தி என்னே?
ஓய்ச்சிறை தகர்ப்ப உள்ளம்
ஓடுதல் எதற்கோ ஐய!
அய்ச்சிறை இல்லை யெற்''கென்
றயர்ந்தயர்ந் தவலம் கொள்வாள்.

48 மேல்விழு பந்தி னுலே
மெதுவுற மீது பார்த்துக்
கால்பொரு கொடியைப் போலக்
கடிசுவர்த் துவண்டு சோரும்
கோல்வளை நிலைமை கண்டான்;
குறுநடைச் செலவும் போக்கி
மால்கொள நோக்கி நின்றான்;
மங்கையும் நோக்கி நொந்தாள்.

49 சிறையினில் நின்ற போதும்
செயலற வாட்டும் துன்பத்
துறையினில் நின்ற போதும்
தொடர்வுறு நெருக்க மென்னும்
நிறையினில் நின்ற போதும்
நெகிழ்ந்திடும் நெஞ்சு கொல்லோ,
இறையினில் முகிழ்த்து நிற்கும்
இயல்புடைக் காத லாலே !

50 கேசியின் தோழி மார்கள்
கீழொடு மேலும் பார்த்து
வாசியின் நகைத்துக் கொண்டே
''வந்தொரு வாய்மைத் தெய்வம்

பூசியே மகிழும் வண்ணம்
புக்கதாம் அம்ம!'' வென்று
பேசினர் பெரிதும் ஆர்த்தார்
பெட்புறு காத லோரார்!

51 சூழ்ந்துள குழுவை நோக்காள்
சுற்றிய வளைவு நீங்கி
வீழ்ந்துள பந்தை நோக்காள்
விலகிய துகிலும் நோக்கான்
வாழ்ந்துள குடியின் வந்த
வண்டறை கூந்தல் நல்லாள்
ஆழ்ந்துள நோக்க மெல்லாம்
அழகனே நோக்கும் நோக்கே.

52 ''கண்பெறு பயனைத் தந்த
காளையும் கள்வ னேயோ?
எண்பெறு வனப்பு மிக்க
ஏந்தலும் இழிஞ னேயோ?
புண்பெறு மனத்த ளாகிப்
புகைந்திட வகையோ அம்மா!
திண்பெறு நெஞ்ச மின்றித்
திறம்புதல் எதற்கோ'' என்றே.

53 பெண்ணிறைக் கெடுத்துக் காட்டாய்ப்
பேசிட உலகில் வந்த
பண்ணிறை மொழியாள் உள்ளப்
பாசறை சிதைந்த தாலே
கண்ணிறை துளிகள் சோரக்
கலங்கலால் உரைக்க லாளுள்;
உண்ணிறை உயிரில் தோன்றும்
காதலைக் கடப்பார் உண்டோ?

54 புகைக்குழு எழுந்த தென்னப்
பொருந்திய கூந்தல் நல்லாள்
மிகைத்தெழு முணர்ச்சிக் காற்றுள்;
மெல்லிய கொடியென் றுடிப்
பகைத்தெழு கோடை தாக்கப்
பாரிடைப் புரள்தல் போல
நகைக்குழு விடையே வீழ்ந்தாள்;
நடுங்கினர் திகைத்துப் போனார்.

55 ''ஏடிநீ தூக்கு'' வென்பார்
''எறிந்திடு பந்தை'' என்பார்
''போடிநீ விசிறி ஒன்றைப்
பொருக்கெனக் கொணர'' என்பார்
''வாடிநீ தண்ணீர் தந்து
வகைபெறத் தெளிக்க'' என்பார்
''கூடிநீ நில்லேல்'' என்பார்
கூடுவார் செய்கை யோடார்.

56 ஒருவரை ஒருவர் மோதி ஓடியே திரிவ தல்லால்
ஒருவரை ஒருவர் நாடி ஒருபணி புரியார் செய்யும்
பெருவரை யனைய மாடப் பேரலை ஒலியைக் கேட்டுத்
திருவரை அணைத்துக் காத்த தெய்வதச் செவிலி அஞ்சி

57 மாடிமேல் விரைந்து சென்றுள்
மருங்குசூழ் ஆயம் நீக்கி
நாடிமேல் கையை வைத்தாள்
நடுங்கினுள் திகைத்துப் போனுள்
மூடிமேல் விழிக்கு முன்னர்
முறைப்படி செய்கை ஆற்ற
ஆடிமேல் குன்றி என்ன
அவள்விழி காட்சி தந்த

58 பண்மலர் அனைய கேசி,
பனிமலர் மலர்ந்த தென்னக்
கண்மலர் திறந்த காலைக்
கார்முகில் கிழித்துக் கொண்டு
விண்மலர்ந் தெழுந்த திங்கள்
விளக்கினுல் மலர்ந்து காணும்
ஒண்மலர்க் குழுவே யென்ன
ஒருங்கவர் மலர்ச்சி யுற்றார்.

59 இன்புற நெடிது நோக்கி
இயல்புடைச் செவிலி யம்மை
அன்புறத் தழுவிக் கொண்டே
ஆடிய வந்த நங்கை
கொன்பெற வீழ்ந்த தென்கொல்
கூறுவீர் எனலும் அன்னார்
முன்பெறு கனவைக் கூரு
மூங்கையர் போல நின்றார்.

60 திகைத்தனர் தெளிவொன் றில்லார் ;
திருந்திய கூற மாட்டார்
நகைத்தனர் ; நடுங்கிச் சோர்ந்தார்
நாணுதல் மிகுதி பெற்றோர் ;
மிகைத்தனர் குழுமிக் கொண்டே
மேலொடு கீழும் திக்கும்
பகைத்தனர் போலப் பார்த்தார்
பரிவினுல் சுழலுங் கண்ணூர்.

61 ''பத்திரை மயங்கி வீழப் பார்த்துநீர் இருந்த போதும்
நித்திரை யுற்றீர் போல நிகழ்ந்தது கூற மாட்டீர்;
பித்தரை வினவி னுலும் பேசுவர் அறிந்த ஒன்றை;
ஒத்துறை ஆய் மாக ஓதுதல் தவரும்'' என்றே.

62 சொல்லெனும் கடிய கூர்வேல்
சொருகிய செவிலித் தாய்க்குச்
செல்லெனும் குழலாள் முல்லை
செலுத்திய வணக்கத் தோடே
இல்லெனும் இடையும் சோர
இனிதெனும் உரையும் சோர
வில்லென வளைந்து நின்று
விளம்புவாள் நிகழ்ந்த வாற்றை.

(வேறு)

63 ''பந்தாட்டம் நனிவிரும்பும் பத்திரைதன் பாங்கியரை
வந்தாட்டம் ஆடுமென்ருள் வந்திருந்தோர் நாணமுறக்
கொந்தாட்டக் குழலார்க்கக் குய்ப்பொரியும் கடுகென்னச்
சிந்தாட்டம் கொண்டம்மா சிறுசோர்வால் சுவர்சார்ந்தாள்.

64 அக்காலை அகல்தெருவில் ஆணழகன் ஒருமகனை
இக்காலை எரியென்ன எரிகின்ற கண்ணுளர்
செக்காலை நெரிப்பென்னச் சிதைப்பதனைக் கண்டேங்கிச்
சொக்காலை வார்ப்பன்னுள் சோர்வுற்ருள் சொன்மறந்தே.''

65 என்றின்ன உரைப்பதற்குள் இடைமறித்துப் பத்திரைமேல்
துன்றின்ன மறைப்பதற்குத், ''தூய்மையோய்! துயர்க்காட்சி
ஒன்றின்ன செயுமானுல் உயிர்வாழ்க்கை எளிதோதான்
நன்றின்ன படிநடத்தல் நலமேயோ ?'' எனவுரைத்தாள்.

66 எவ்வமெதும் எட்டுணையும் வாராமல் காக்கின்ற
செவ்வழுதச் செல்வியம்மை செறிகுழலை நனிவருடி,

"இவ்வமுதம் உருகவரும் இயல்புடையான் எவனென்று
கொவ்வமுதல் கனிமுல்லை! குறிப்புண்டோ?" எனவினவ,

67 "அன்னைமீர் அறிந்துள்ளேன் ஆனலும் அஞ்சுகின்றேன்
பொன்னைநேர் பொலிவோடு பொருளாளன் எனநின்றும்,
நன்மைசேர் குணமில்லான் நயனில்லாப் பேதையவன்
தன்னையார் தடுப்பரென்ற தருக்காலே தனைமறந்தான்.

68 கற்றுய்ந்த பேரமைச்சர் கருணைவேள் குமரனெனப்
பெற்றுய்ந்த பேறிருந்தும் பெருங்கேடு புரிகின்றான்;
முற்றுய்ந்த மூதறிஞர் முனைந்தேத்தும் முதுதெய்வப்
பற்றுய்ந்த பேறில்லான் காளனென்னும் பேருடையான்.

69 கொன்றுற்றும் கொடுஞ்செயலைக் கோட்புலிபோல்
செய்கின்றான்.
"நன்றுற்றும் நயத்துள்ளும் தவறுண்டு பண்பறிந்து
சென்றுற்றும் செயலற்றுல்" என்றறநூல் கூறுகையில்
கொன்றுற்றும் குணமுள்ளோன் கொள்வானே நற்பேறே!

70 தீயோரின் தலைவனெனத் திரிகின்றான்; ஏழையராய்
ஆயோரின் குடிகேடன்; அருமுயற்சி உடையாரோர்
தூயோரின் பொருளனைத்தும் துணிவோடு சூறையிடும்
பேயோரின் துணையாலே பெரிதழித்தான்; பிழைசெய்தான்.

71 ஒறுத்திருந்தே ஓகையெய்தும் ஒழிகுணத்தைக்
கொளலில்லார்
பொறுத்திருந்தார் நெடுங்காலம்; போக்கினிலே மாற்றமில்லை
உறுத்தடர்த்தால் உயர்வெய்தா தென்றறிந்து பாசத்தை
அறுத்தெறிந்த அமைச்சரிடம் அறிவித்து முறைகேட்டார்.

72 "குற்றத்தை எவர்செயினும் குற்றந்தான்; அன்றென்று
சுற்றத்தைக் கடியாமல் சுற்றவிடின் கேடென்"னும்
பெற்றத்தைப் பெற்றிருந்த பேரமைச்சர், காளன்மேல்
கொற்றத்தைச் செலவிட்டார் கோக்காவல் நலம்தேர்ந்தே.

73 மண்காவல் வேந்தெல்லாம் மலரடியைப் பணிந்தேத்தக்
கண்காவல் இமையென்னக் கடலுலகைக் காக்கின்ற
தண்காவல் குடையாளன் தாளாளன் கரிகாலன்
ஒண்காவல் சிறப்புலகில் ஒலிசெய்யச் "சிறை"யென்றூர்.

74 சீற்றங்கொள் சிறுகாளைக் காளனந்த ஏழையர்மேல்
மாற்றங்கொள் மனத்தினனுய் மாண்பில்லாப் பலர்துணையோ

நேற்றங்கொள் துயராக்கி உயிருக்கும் உலைவைத்துக்
கூற்றங்கொள் கொடுஞ்செயற்குக் குறுகியநற் றுணையாஞன்.

75 கொலைசெய்து கொடும்பழியைக் குடங்கையிற்
கொண்டிருப்போர்
அலைசெய்து நிலங்காக்கும் அருட்கடல்சூழ் ஆருலகில்
நிலைசெய்து களிகூர்ந்து நெடுநாளை வாழ்தற்குத்
தலைசெய்து காப்பாராரார்? தருவாராரார் விடுதலையே?

76 வாக்கொன்றே வகையான வளமென்னும் அன்னையீர்!
நோக்கொன்றே தமக்கான நுண்ணறிவுப் பேரமைச்சர்,
'தூக்'கென்ருர்; துண்ணென்பார், தொடரிட்டுப்
பிணைத்தீர்த்துச்
சேர்க்கின்ருர்; செம்பவழக் கொடியன்ஞள் சோர்ந்திடவே.''

77 இன்னபல இசைக்கின்ற இளமுல்லை உரைகேட்டு
''நன்னனலன் நாம்நாடும் நயம்பெற்ருன்'' எனச்சோர்வால்
இன்னலுறும் பத்திரையின் ஈரிதழும் மழைபொழிய
அன்னநிலை ஆய்செல்வி அறவோனைப் பரவினளால்!

78 போதிநாத புவனத்துப் பொருளெல்லாம் படைத்தளிக்கும்
ஆதிநாத அகிலத்தின் ஆரிருளை அகற்றிநிற்கும்
சோதிநாத சேர்வுற்ருர் துயர்துடைத்து நலமாக்கும்
நீதிநாத நின்னருளை நினைவோர்க்கும் குறைவுண்டோ?

79 வேதத்தின் முதலான வித்தகனே விண்ணெழுந்த
நாதத்தின் முதலான நாயகனே நிறைவான
போதத்தின் முதலான புண்ணியனே பத்திரையின்
பேதத்தின் முதலான பிணிநோயைத் தணியாயோ?

80 அம்பலத்தை அடைந்தோர்க்கென் றருளறத்தை
அளித்தருள்வோய்!
வெம்பவத்தை யுற்ருர்க்கு விளக்கொளியை இனிதீவோய்!
தெம்பவிழ்ந்து திரிவோர்க்குத் திறனெல்லாம் மிகத்தருவோய்
கொம்பிவட்குக் குணமாகக் கொடைக்கையைக் காட்டாயோ?

81 உள்ளத்தைக் காட்டுவழி ஓடவிட்டால் ஓட்டையாம்
வள்ளத்துப் பால்பெய்த வகையாக ஆகாதோ?
வெள்ளத்தைக் கடத்தற்கு வேண்டியவோர் வள்ளமன்ஞய்!
பள்ளத்து வீழ்வோரைப் பார்த்திருத்தல் பரிவேயோ?

82 தாயின்றித் தவித்துழலும் தனிக்குடிக்குத் தாயன்றோய்!
நோயின்றி வாழ்ந்திருக்க நோற்றதனை அறியாயோ?
வாயின்றித் தத்தளித்து வார்க்கின்றுள் கண்ணீரை
நீயின்றி நின்குடியை நிலைநிறுத்த வல்லாரார்?

83 புண்ணியனே தாள்போற்றி பூதலத்தோர் துயர்துடைக்கும்
திண்ணியனே சீர்போற்றி தெளிவில்லாப் பேதையிவள்
எண்ணியன எளிதுணர்ந்தெம் ஏக்கத்தைப் போக்கவல
கண்ணியனே போற்றியிவட் காத்தருள்க நீயென்றுள்.

84 அன்னத்தின் மயக்கத்தை ஆண்டையாய் காக்கவெனும்
முன்னத்தின் முதிர்வாட்டி முப்பொழுது நோன்புற்றுள்,
கன்னத்தின் நீரோடக் கலங்கியவப் பத்திரையின்
பொன்னத்திற் புழைபட்டோன் புகலுற்றுன் அரண்மனையே.

(வேறு)

85 மேக பந்தி மிடைந்திடு மேல்மதில்;
காக பந்தி கரைந்தெழ லாயினும்
பாக பந்தி பயின்றிடும்; பையிலா
நாக பந்தி நளிந்திடுங் கீழரோ !

86 சூழ நீளும் மதிலகம் சுற்றிய
ஆழ நீளும் அகன்றகி டங்கினை
வாழ நீளும் வரம்பிலா வையகம்
போழ நீளும் புதையென லாகுமே.

(வேறு)

87 வெற்போ திங்கள் விரிநிலம் வாழ்பவர்
பொற்போ டாடும் புதுவன மேடையோ?
கற்போ டாண்மை கனிந்திடு மேலவர்
அற்போ வென்ப அரண்மனைக் காட்சியே!

(வேறு)

88 சீங்களுஞ் சேரும் செறிமுழை என்பதோ?
துங்க வாரி தொகுமிடம் என்பதோ?
புங்க நீதி புகுநிலம் என்பதோ?
வங்க மாளும் வளவனின் கோயிலே!

89 நன்று சூழும் நலம்பெறு நாயகன்
சென்று கூடும் செயல்நிறை சீரணை

துன்று சோதித் தொகைநிறை செங்கதிர்
ஒன்று மேரு மலையென ஓதுமால்.

90 சீல மேன்மை சிறந்திடத் தோன்றினோர்
பாலவ் வாய்மை பரப்பிடு பார்த்திபன்
நீல வானே நிறைத்துள மீனிடைக்
கோல மேவு குளிர்மதி யாவனே.

91 கொற்ற வேந்து குரைகடல் மாநிலம்
உற்ற நாளை உயர்பெரு மங்கலம்
முற்ற நாடு முயன்றுகொண் டாடிய
அற்ற மாக அமைந்ததப் போதரோ!

92 வாளை வென்ற வரிநிறை கண்ணினர்
சூளை வென்ற சுடரொளி வாளினன்
நாளை வென்று நலமுற வாழிய
பீளை வென்ற பெரியவர் வாழ்த்துவார்.

(வாழ்த்துவரி)

93 நீதி நெறியால் நிலவுலகம் தான்காத்துக்
கோதில் குலம்விளக்கும் கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர்க் காவேரி
ஊழிதோ றூட்டும் உயர்வேந்தன் தொல்குலமே.

94 செம்மை முறைசெல்லாச் செற்றுர்ச் செகுத்தருளி
வெம்மை தணிவிக்கும் வேல்வேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வளமீயும் நல்லாண்மை
மேழியர் வாழ்வை மிகச்செய்வோன் தொல்குடியே.

95 செந்நெல் மணிசிதறிச் சேதாம்பல் பூமொக்குள்
நன்னர் முகிழ்க்காத நாடாள்வோன் வாழியரோ
வாழியரோ வாழி வளப்பெருக்கால் வாழ்ஞரும்
கீழிவர எண்ணும் கிழவோன்றன் தொல்நிலமே.

96 கன்னல் மொழிகாத்துக் கற்ருர் வழிபேணி
இன்னல் எளிதோட்டும் எம்மான்நீ வாழியரோ
வாழியரோ வாழி வனப்பூ நுழையாதே
சூழிவரும் வண்டைச் சுவைசெய்வோன் தொல்குணமே.

97 நெற்றிப் பிறைப்பெருமான் நேயர் அடிபோற்றும்
பெற்றிப் பெருந்தகைப் பேரேறு வாழியரோ

வாழியரோ வாழி வரிவண்டு பாண்மிழற்றும்
பாழி வனக்கோயில் பாங்கெடுத்த பார்த்திபனே.

98 தென்னவன் என்கோ திறலாண்ட சேரனும்
மன்னவன் என்கோ மணிமார்பன் வாழியரோ
வாழியரோ வாழி வயப்படுத்தும் பேரன்புப்
பூழியர்தம் பூமான்தன் பொன்னடிப் போதுகளே.

99 கோட்டை மதிலேறிக் கோளரி போல்வந்து
கேட்டைத் தவிர்த்த கிளர்வேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வழிசூழும் தீக்கடந்த
கோழியர் கோமான் குரைகழல் கிண்கிணியே.

100 கப்பல் வணிகம் கழிபெருகப் பட்டினத்தைச்
செப்பஞ் செயும்வேந்தன் சீர்பெருக வாழியரோ
வாழியரோ வாழி வயக்களிறு போலவே
ஆழி தவழ்கின்ற அண்ணல் பெருங்கலமே.

101 பட்டினப் பாலை பரிந்தேற்றுப் பொன்னுலே
கட்டு புகழ்க்கோயில் காவலன்பேர் வாழியரோ
வாழியரோ வாழி வயலூட்டும் காவிரியைத்
தோழியாய்க் கொண்டோன் தொலைவில்லாத்
தொல்குலமே.

102 என்றே புகழ்ச்சி இனிதெடுக்கும் நேரத்தே,
''நன்றே நனிபெருக நல்வேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வளவன் புகழென்றும்
வாழியரோ வாழி'' எனவாயில் வாழ்த்தெடுத்தே,

(வேறு)

103 ''காவலர் பெரும போற்றி,
கையிடை யாப்புத் துன்ன
ஓவலர் நால்வர் கூடி
ஒருவனை ஈர்த்துக் கொண்டு
பூவலர் பொதுளும் நங்கள்
புனைமணி வாயிற் கண்ணே
ஏவலை நோக்கி யுள்ளார்
இறைஞ்சினென் தாள்கள்'' என்றுன்.

104 அயிலிடைப் பட்ட தென்ன
அணுவுயிர்த் தொகுதி கூட
வெயிலிடைத் துவளா வண்ணம்
விரிசிறை பறக்கு நாடன்

குயிலினைச் கொட்டும் போழ்தில்
குறுக்கிட உறுத்து வந்தோர்
மயிலினைச கொட்டிற் றென்ன
மயங்கினன் ; ''தருக'' என்றான்.

105 ''நூனெறி நிறுத்த பெற்றி
நுண்ணறி வமைச்ச ரேறே
மேனெறி நிறுத்த செம்மை
மிடைந்திடு செல்வ ரேறே
கோனெறி என்னும் ? நந்தம்
கொற்றமும் கோளும் என்னும் ?
'மீனெறி தூண்டி லன்னர்'
மேவிய வகையும் உண்டோ ?

106 சாற்றுவிர்'' என்னுங் காலைச்
சமனிலை அமைச்சர் நின்று,
''வேற்றவர் விளைத்த தில்லை
வேலியே பயிரை மேய்ந்த
மாற்றமாய் உள்ள தண்ணல் !
மலர்ப்பதி யிடையே நச்சுக்
காற்றுடைச் செடியு மாமோ ?
களைந்திடல் கோன்மை'' என்றார்.

107 வேலன விழியா ருள்ளம்
விழுங்கிடும் காளன் கொல்லுங்
காலனைக் காண்ப தற்கும்
கலங்கிடான் ; உலகங் காக்கும்
கோலனைக் காண்ப தற்கும்
குமைந்திடான் ; தந்தை யான
சீலனைக் காண்ப தற்கே
சிந்தையில் துணுக்கங் கொள்வான்

காவலன் முன் காளன்

108 மன்னவன் கரிகால் வேந்தன்
மண்டமர்ப் புகழி னன்முன்
கன்னவில் தோளி னனைக்
காவலர் கடிதி னுய்த்துப்
பின்னிட வேகி நின்றார்
பீடியல் நோக்கி னனே
இன்னலர்க் கொல்ல வல்லான்
ஓர்ந்திடான் அமைச்சனைப் பார்த்தனன்

109 ''வாக்கொடு மணமும் யாக்கை
வளமெலாம் நாட்டுக் காக
ஆக்கிடும் அமைச்ச ரேயும்
ஆணையோ அன்றி வேரே?
தாக்கிடுஞ் சீய மன்னன்
தாங்கிய சிறைய னுகப்
போக்கிய தென்னே?'' யென்னப்
புகன்றிடார் வேந்தன் தேர.

110 வேந்தனின் வினவல் நோக்கி,
விடையெதும் கூரு நிற்கும்
மாந்தரின் மேலாம் தூய
மதிநல அமைச்சை நோக்கிக்
காந்தநின் றெரிக்கும் கண்ணன்
காளனைத் தெரிய நோக்கி,
வாந்தனிச் செல்வர் செல்வன்
வாணிக மணியும் சொல்வான.

111 ''மங்கலம் பொலியும் இந்நாள்,
மன்னவன் பிறந்த நன்னுள்;
பொங்கலர் தூவித் தெய்வப்
புத்தனைப் போற்றும் பொன்னுள்
இங்கிவன் நிலைய தாய
இயைந்ததாய் அமைந்த தில்லை
எங்கருத் தியையக் கேட்டுத்
திருவுளத் தமைக்க'' வென்றை.

112 ''பிறந்தநாள் விழவு நேர்ந்து
பிறங்கிடும் பத்து நாளும்
சிறந்தநாள் ஆகை யாலே
செய்திடுங் கடன்க ளெல்லாம்
மறந்தநாள் ஆகப் போக;
மறித்திடும் காப்பில் வைத்துத்
திறந்தநாள் அன்று தேர்வோம்
தெளிவுற நிகழ்ந்த'' தென்ருன்.

113 ''ஆய்வுரை எனினும் ஐய,
அறைந்துள எல்லை காறும்
பாய்வரிப் புலியின் மானப்
படுத்துதல் தகுமோ? அன்றீங்

போய்வர விடுத்த லாமோ?
பொருந்துவ புகல்க'' வென்ன
''வேய்எரிப் படுத்த லாகும்
வெளிவிடல்'' எனவேள் கூறி,

114 ''பொய்யொடு வஞ்சம் சூது
பொருந்திய வாழ்வு கொண்டோன்
துய்யிடைக் கனலே என்னத்
துயரிடைப் படுத்த பேதை
கையொடு குற்றம் கண்டு
காட்டிய சான்று முண்டால்
மெய்யொடு விடுப்ப தாயின்
மேல்வரும் பழியை ஆற்றும்.

115 ''கொற்றவர்க் கெனினும் முன்னைக்
கோவிடைத் தழுவி நிற்கப்
பெற்றவர்க் கெனினும் ஆக்கைப்
பேறெலாம் துறந்து நிற்கும்
நற்றவர்க் கெனினும் கூறும்
நடுநிலை பலவாம் என்னின்
செற்றவர் சிறந்து நிற்கச்
சேர்ந்திடும் கீழ்மை அன்றே!

116 ''தயிருடை மத்து நேரத்
தாக்கிய கொடுமை வாட்ட
உயிருடை யாக்கைக் கஞ்சி
ஓடினர் பலரால் ஐயா,
செயிருடை இவனே மாட்டிச்
செகுத்தலே கொற்ற மாகும்;
மயிருடைத் தலையின் நீங்கின்
மதிப்பவர் உண்டோ கண்டீர்!

117 மானுடர் உயிரைக் கொன்றுண்
மதியிலாச் செயல்மீக் கூரி
ஊனுடற் கிளர்ச்சிக் கொப்ப
ஊக்கிய செயலில் நின்றுண்
நானுடன் படுதற் கில்லேன்
நாயகன் மறுப்ப னேனும்
கூனுடை நெறிக்கண் செல்லேன்
கூட்டுக சிறையி'' லென்றார்.

காவலுள் காளை

118 ''காள!நின் உரையும் உண்டேல்
காட்டுக''; ''இல்லை போலும்''
''வாளுறை தவழும் ஏட!
வளர்மதிற் காப்பின் கண்ணே
மீளியைச் சேர்க்க'' ''ஈண்டு
மிக்கெழும் அன்பால் சூழும்
ஆளரே! கலந்து சேர்கோம்''
''ஆக''வென் றரசன் சென்றான்.

119 அரசனை அகன்று சென்றார்
ஆய்நலம் தேர்ந்த மாந்தர்;
முரசனை முழங்க வேந்தன்
மூரிவேள் என்னச் சேர்ந்தான்;
விரைசெறி நகர மெங்கும்
வேந்துடைப் பிறந்த நன்னாள்
கரையிலாக் களிப்பி னோடு
காணுநற் காட்சி காண்பாம்.

முதலாவது காட்சிப் படலம் முற்றிற்று.

2. விழாக்கோட் படலம்

கந்துகவரி

120 மென்சி லம்பு நன்கி லங்கப் பண்கு லுங்கு வாய்ச்சியர்
இன்ப லுங்கு பொன்ச தங்கை ஓங்க ஓங்கப் பாங்கெலாம்
பொன்னி யண்ணல் வாழ்க வாழ்க வென்று பந்த டிக்குமே
—பூவை வண்ணன் வாழ்க வாழ்க வென்று பந்த டிக்குமே.

121 இன்க ரும்பு வில்லி ணைக்கண் ஈர்ங்கு வளை பூட்டுவோர்
மின்பி றங்கு மேக லைகள் ஓங்க ஓங்கப் பாங்கெலாம்
பொன்னி யண்ணல் வாழ்க வாழ்க வென்று பந்த டிக்குமே
—பூவை வண்ணன் வாழ்க வாழ்க வென்று பந்த டிக்குமே.

122 திங்க ளிங்கு வந்த தென்னும் தண்ணந் தண்மு கத்தினர்
அங்க ரஞ்சேர் ஆய்வ ளைகள் ஓங்க ஓங்கப் பாங்கெலாம்
பொன்னி யண்ணல் வாழ்க வாழ்க வென்று பந்த டிக்குமே
—பூவை வண்ணன் வாழ்க வாழ்க வென்று பந்த டிக்குமே.

அம்மானைவரி

123 புள்ளிப் புறவவலம் போக்க உடலீந்த
வள்ளல் வயவேந்தன் யாவன்காண் அம்மானை,
வள்ளல் வயவேந்தன் யாவனே யாமென்னின்
உள்ளம் ஒருப்படுத்த செம்பியன்காண் அம்மானை;
—செம்பியன் மங்கலச்சீர் செப்புவங்காண் அம்மானை.

124 வேங்கைப் புலியோடு வேற்கண் பிணைமானைப்
பாங்குநீர் ஊட்டிய பார்த்திபனர் அம்மானை
பாங்குநீர் ஊட்டிய பார்த்திபன் பேராயின்
பூங்காப் பொழுதோட்டும் பூம்புகார்மன் அம்மானை;
—பூம்புகார் மன்னன் புகழ்சொல்வாம் அம்மானை.

125 முல்லை முகைவகையும் முத்தக் குலநிறையும்
கொல்லை நிலஞ்சொரியும் கொற்றவன்யார் அம்மானை;
கொல்லை நிலஞ்சொரியும் கொற்றவன் யாரென்னுல்
செல்லைச் செகுத்தோட்டும் சீர்க்கிள்ளி அம்மானை;
—கிள்ளி நலம்பாடிக் கேடறுப்பாம் அம்மானை.

ஊசல்

126 ஓதும் உயர்தும்பி ஊசல் நனியாடும்
போது பொதிந்தோங்கும் பொன்னூசல் மேலேறி
மோது கலவூசல் மேவு கரிகால
நாதன் புகழ்பாடி ஆடாமோ ஊசல்நம்
—நம்பன் புகழ்பாடி ஆடாமோ ஊசல்.

127 வெள்ளைக் கமல விரிதோட்டில் நாரையின்
பிள்ளை, பிறங்கூசல் போலாடும் நீர்நாடன்,
உள்ளக் கமலமலர் ஓங்கு புகழூசல்
வள்ளல் புகழ்பாடி ஆடாமோ ஊசல்;
—வளவன் புகழ்பாடி ஆடாமோ ஊசல்.

128 குவளைக் கொடிமீது கொட்டும் குரல்வாய்த்
தவளை தனியூசல் மேலோங்கும் நாடன்
பவளத் திரள்கால் பணியூச லேறித்
தவளப் புகழ் பாடி ஆடாமோ ஊசல்;
—தலைவன் புகழ்பாடி ஆடாமோ ஊசல்.

வள்ளைவரி

129 கூடார் களந்தந்த கோட்டுக் களிற்றுலக்கை,
பீடார் கரந்தவழும் கோழிப் பெருநகரேம்;
போர்நெற் பொருப்போங்கிப் பொன்மலையாய்க் காட்டிதரும்
நேரியன் சீர்பாடும் வள்ளையோ வள்ளை!
—நேயன் புகழ்பாடும் வள்ளையோ வள்ளை!

130 தாயர் இசைப்பாட்டும் தாழ்குழலார் பின்பாட்டும்
ஏய வினிதோங்கும் ஏரார் உறையூரேம்,
வேங்கைக் கொடிநாட்டி வேற்றுர் திறங்கடந்த
பாங்கு பலபாடும் வள்ளையோ வள்ளை!
—பாவைக் குலநாடும் வள்ளையோ வள்ளை!

131 முத்துப் பவழம் முதிர்நெல் உலக்கையே
தத்தை தனியுறங்கத் தாலாம் புகார்நகரேம்,
நண்ணூர் பறந்தலை நண்ணு திருவளவன்
கண்ணிக் கரிகாலன் வள்ளையோ வள்ளை!
—கவிகைப் பெரியோனின் வள்ளையோ வள்ளை!

முரிவரி

132 விரைபெறு நறுமலரே வியலிடம் நனைநிறையே
அரைபெறு மணமரமே அடுபுகை முகிலுறுமே
நுரைபெறு நதியிடமே நுழைவது மதிமுகமே
உரைபெறு மியலினவே ஒளிபெறு விழுவணியே.

133 தெருவிடை வளைவழகே திசைதொறுங் கொடிநிரையே
மருவிடை நலிவுறவே மனைதொறு மணிகலையே
பொருவிடை பிடிதிறமே புடைபுடை யிசைவளமே
தருவிடை யெழிலினரே தனியவ ருறைவிடமே.

134 மூளைநிறை முதிர்கலமே முளிநுரை மதுவகையே
தூளைநிறை புனலிறைவே தொழுவரு குடையணியே
விளைநிறை பொருளவையே விதவித வகையணியே
உளைநிறை பரிமிசையே உறுபவர் மறிகுவரே.

(வேறு)

மைந்தர் மகளிர் மகிழ்வாட்டு

135 நன்னடை யன்னம் துன்னிய தென்ன நடப்பார்கள்
வின்னடை யென்ன வாம்பரி யேறி விரைவார்கள்
மின்னடை போடும் மேதகு மூர்தி மிடைவார்கள்
தன்னடை விட்டுத் தாநடை நாடும் தகையோரே.

136 காரிடை ஏறிக் காணிய நாட்டைப் பறப்பாரோ?
மேருவை யோட்டும் மேனெறி கற்ற மிடலாரோ?
பாரிடங் காணுப் பான்மையை உன்னி அகல்வானும்
போரிடப் போமோ போதகம் கொண்டே எனப்போவார்.

137 பூட்டிய ஊர்தி போகிலா நோன்பார் பொறியேறி
ஓட்டிய விந்தை, ஓவியர் தீட்டி இடந்தோறும்
காட்டிய தென்னக் கண்டவர் நின்றூர் கரைகாணூர்
மாட்டிய வல்லேன் மஞ்சுனை என்னும் மறங்கொண்டார்.

138 மாமயில் கூட்டம் மாறெடு மோடும் மயல்கொண்டே
ஏமயில் வேலார் ஏங்கிய செல்வார் அயல்கண்டே
காமயில் என்றே காளையர் நண்ணும் கடிசோலை
ஏமவில் லாகும் ஏப்புழை ஞாயில் எனலாமே!

139 கண்ணிணை பற்கள் கையொடு கன்னம் முகத்தோற்றம்
பெண்மையைக் காட்டும் பெட்புடைக் கொங்கைக்

[குவையென்றே

எண்ணிய வெல்லாம் ஏர்பெறு போதாய் இணைபேசும்
உண்மையைச் சாய்ப்பான் கண்ணின மென்னக்
[கயஞ்சூழ்வார்.

140 அன்னிய ராய ஆட்படு சுற்றம் அருகாகக்
கன்னியர் காஞ்ஞ காவிடந் தோறும் உறைவார்கள்
இன்னியல் வீணை ஈந்திடு வெள்ளம் திளைத்தாங்கு
பொன்னியின் வெள்ளம் போர்ப்படத் தாக்கிக் குடைவார்கள்.

141 நீத்தடித் தேகி நீர்ச்சுழி மாழ்கும் நயத்தாஞ்ஞ
வாய்த்ததோர் பொன்னும் போதென எண்ணும் வலியாளன்
பாய்த்தலில் தாவிப் பையர வென்ன மிகுவூடற்
காய்ச்சலை வெல்வான் காமனும் ஓவ்வான் கடிதம்மா!

142 கோழரை வாஞ்ஞ கொட்டிய மார்பு வடுவோர்ந்து
'தோழமை யாட்டி தோய்ந்துளீர் வாரேல்' எனவூடி
வேழம டக்கும் வீரர டக்கும் வழிதேர்வாள்;
ஆழநீர்ப் பொய்கை ஆக்கிய பொய்கை அறியாரால்.

143 கண்மணி சேந்த காதலன் நோக்கை அறிந்தா''னோர்
பெண்மணி கூடும் பெற்றிய ரானீர் அறியேனே?
விண்மணி கட்டும் வேட்கையை என்றும் விடமாட்டீர்!
ஒண்மணி ஓர்வாள் கண்மணி தேராள் எனல்''என்பாள்.

144 கூடிய மாதர் ஊடிய கண்ட மதவேளர்,
ஊடிய தன்மை ஊடறுத் தோட்ட அடிதாழ்ந்தே
ஆடிய நிற்பார் பாடிய வாயோ டணிப்பூணர்
கோடிய நெஞ்சைக் கோண்முறை காட்டிக் குளிர்விப்பார்.

145 காமரம் ஏறிக் காவியங் கள்ளார் கனிவாயார்
காமரம் பாடுங் காதலில் நின்ற மரநீழல்
காமரம் பெய்த காஞ்ஞயர் வாயிற் கவிதேஞக்
காமரம் தேனே கன்னியர் தேனே அறியாரால்.

146 போதக மூர்த்தி புண்ணியன் புத்தன் எனப்பாடிப்
போதக மாட்டும் பூவையர் கேள்வர் புயநின்று
போதகம் போர்த்த பூங்கிஞ நோக்கும் இயல்போர்ந்தால்
போதக மேனில் தோகையைக் காட்டும் வனப்பாமால்.

147 ஆரஞல சூழும் ஆர்கலி சூழும் மணல்மீதில்
சீரஞல காட்டும் செம்மைய கூந்தல் செறிமாதர்
வாரஞல கொங்கை வாக்கிய பள்ளக் குழிநாடி
நீரஞல் யாமை நேடிய கூடும் இணையோடே.

148 பெண்ணினிடைத் தெய்வப் பேறியல் உற்றோர் குழவினின்று
பண்ணிடை வாழ்ந்த பைம்மலர் காற்றில் உதிர்வாதல்
நுண்ணிடை நோவா நூனெறி யன்றும் இறைநாதன்
மண்ணிடைப் பாவ மாலையைப் போக்கும் நெறியாமால்.

149 மாகடற் கானல் மண்டிய நாவற் கனியேந்தி
நாகுடற் பேடை நண்டொடு முண்டு வளைசேரும்
பாகடர் நண்பு கண்டவர் பால்தேன் மொழிபேசிப்
போகநல் லூரார் போந்துற வென்ன மனைபுக்கார்.

(வேறு)

மாநகர் மாட்சி

150 வெண்ப ளிங்கிடை வீறு மின்மினி
எண்பெ ருங்கிளை என்று பேசுறத்
தண்பெ ருஞ்சுடர் தாழு மாடியில்
ஒண்பெ ரும்மகல் ஓங்கி நீளுமால்.

151 ஆற்றெ ழுக்கென லாகும் வீதியில்
நாற்றெ ழுக்கென நந்து தாமரைக்
கூற்றெ ழுக்கெனக் கூற லாமரோ
பாற்றெ ழுக்குறு பால்வி ளக்கமே.

152 கோயி லேகுறு கொட்புக் கார்க்களி
றேவி நிற்பவர் ஏங்கி நிற்பரால்,
நாவி னூற்றுறு சோற்று ருண்டையாய்ப்
பூவி ளக்கெலாம் போர்க்கும் காட்சியான்.

153 தண்க திர்வரு போழ்தில் தாதுகு
வண்க யம்மலர் ஆரும் வண்டெனப்,
பண்க விக்குதல் பால ரிற்கடை
உண்க ரத்தொடு முன்பின் ஓடுவார்.

154 இன்ன தன்மைய வாகத் தொன்னகர்
துன்னு மங்கலத் தூய நாளிடை
மன்னு வெஞ்சிறைக் காளன் மாழ்கிய
இன்னல் வாழ்வினைப் பன்னு வாமரோ

(வேறு)

காளன் கவல்வு

155 கொடுவிலங்கன வெண்ணிப் பல்கால்
குணக்குறைச் செயல்மீக் கூருங்
புலையுளக் கருமைக் கேற்பப்
புனைபயிருட் காப்பின் கண்ணனை

அலையுளக் காளன் நின்றனன்!
அனைத்துணை யளவும் வெம்பான்.
நிலையுளம் மாறித் தீயுள்
நிற்பவன் போன்று சாம்பும்.

156 சிலையுதை பகழி கண்டேன்;
செங்களத் தெய்து கண்டேன்;
அலையுதை மீனங் கண்டேன்;
அருங்கடிக் காவி கண்டேன்;
குலபதை இரலை கண்டேன்;
கொன்னுனை வாளுங் கண்டேன்;
நிலையதை மாற்றுங் கண்ணுள்
நேரிழை போலக் காணேன்.

157 மதமிகு வேழங் கண்டேன்;
மற்றதன் நகிலுங் கண்டேன்;
பதமிகு கோங்கு கண்டேன்;
பாங்குறு முகையுங் கண்டேன்;
அதமிகு சூதுங் கண்டேன்;
ஆங்குருள் வட்டுங் கண்டேன்;
வதமிகு தன்மை காணேன்
வாய்நலாள் கொம்மை போன்றே.

158 கயல்புடை சுரித்துச் செல்லும்
கயமலர்க் கமலங் கண்டேன்;
புயல்புடை மறைந்து செல்லும்
புனைகதிர் மதியங் கண்டேன்;
அயல்புடை கடிதிற் செல்வோர்
அகங்கவர் சிலையுங் கண்டேன்
மயல்புடை மனத்த ளாக்கும்
மலர்முகம் போலக் காணேன்.

159 கார்மழை வருத்தக் காணேன்
கண்மழை வருத்தல் போல;
போர்மழை நலிக்கக் காணேன்
பூங்கொடி நலித்தல் போல;
ஏர்மழை வில்லில் இல்லை
எல்வளைக் குழைவுத் தன்மை;
கீர்முழை வெள்ளம் ஈடோ
நித்திலக் கண்ணீர்க் கும்மா!

160 கண்டதை அன்றி வேரூர்
கலந்துரை யாட லில்லை ;
பெண்டகைப் பேதை யாட்டி
பிழைப்பருஞ் சிறையி னுள்ளே ;
கொண்டெனைச் செறித்து விட்டாள் ;
கொற்றவன் சிறையின் மீள
உண்டெனக் காற்ற லேனும்
உட்சிறை கடத்தற் காமோ ?

161 வாழ்வினை வெறுத்து நின்றேன்
வையகத் திருக்குங் காறும்
ஊழ்வினைப் படியே ஆகும்
உலைந்திடேன் என்ன வாழ்ந்தேன்
சூழ்வினை இதுவோ அம்மா !
சுரிகுழ லாட்டிக் காக
மூழ்வினை அறுக்க வேட்கை
மூட்டுமால் என்செய் வேனுல்.

162 அறநெறி விழைவால் ஆரும்
ஆவலை அறுக்கச் சொல்வோர்
புறநெறிப் போவா ரென்று
புடைத்தவென் உள்ளம், இன்று
துறநெறி யோரும் வெ:.கும்
தோகையைக் கண்ட பேற்றுல்
மறநெறிச் சென்றுய் என்று
மாறுமா றலைக்கு மந்தோ !

163 உற்றவர் யாரென் ரேன் !
உறுமுறை எதுவென் ருயேன் ;
பெற்றவர் அறிய கில்லேன் !
பெயரதும் தெரியே னேனும்,
செற்றவர் செருக்கை யோட்டும்
செறிகழல் வேந்தன் என்னக்
கற்றைவார் குழலாள் ஏனே
கண்ணற வருத்து கின்ருள்.

164 முட்பழம் உறுத்த துன்பம்
முடிந்திடும் எடுத்த போதே ;
கொட்பெழத் தாக்கிற் றேனும்
கூடிய விரைவில் நீங்கும் ;

கட்பழம் நெருங்காத் தாக்கல்
கடிதிடைப் படுத்த தேனும்
எட்பழம் ஆகப் போமோ
என்னுளம் அம்ம தேரேன்.

165 ''சிறைவதை தவிர்க்க இன்றேல்
சிரத்தினைக் கொய்க'' என்றே
அறைவதை அன்றி வேரும்
அமைவுடை நெறியொன் றில்லை ;
இறைவதை சிறையே என்னின்
என்னுடல் உயிரைத் தாங்கி
உறைவதைக் காண மாட்டார்
உறுவதைத் தடுப்பா ருண்டோ ?

166 மகனென நில்லாப் பேதை
மடிவதே முறைமை யென்று
முகனெதிர் நோக்காத் தந்தை
முயற்சியோ செய்வர் ? காவல்
அகனிற வகைமை இல்லை ;
அழிவதே அமையும் நெஞ்சே !
பகனிலா வந்த போலும்
படிமையள் அந்தோ ! என்றே.

167 கலங்கினன்; கண்ணீர் வார்த்துக்
கரைந்தன்ன ; காதல் தீயால்
மலங்கினன் ; வெதும்ப லோடு
மருண்டனன் ; கைகால் சோர
அலங்கின்ன ; அரற்றல் நோயால்
அசைந்தெழும் துருத்தி போல
இலங்கினன் ; இனியென் சொல்கேம் ;
ஏந்திழை நிலைமை காண்பாம்.

(வேறு)

அன்னத்தின் அவலம்

168 பிள்ளைக் களியாட்டம் பேதைப் பெரியோர்க்குக்
கொள்ளைக் கொலையாட்டைச் செய்த குறிபோல
வெள்ளைக் களியாட்டம் வேய்த்தோள் அரிவைக்குக்
கொள்ளைச் சமராட்டக் கோலத்தைக் காட்டிற்றுல்.

169 ஆடு களத்தே அரிவை உளச்செய்யில்
பீடு நடையான் பிறங்க விதைத்திட்ட

கோடு கினைக்காக் கொழுமைப் பழவித்துத்
தோடு மலர்காலை தோன்றும் அரும்பாமால்.

170 கச்சிக் கடமா தொலைக்கக் கடுவேங்கை
நச்சி யெழும்பும் நடைபோல் கதிர்வெய்யோன்
முச்சி இழையாளை மூட்டும் கொடியோனுய்
உச்சிக் கெழும்ப அரும்போங்கிப் போதாமால்.

171 மாலையோ அல்லை மணிவிளக் கேற்றித்தம்
பாலையேய் பல்காட்டிப் பூவோடு தாள்வீழ்த்தும்
காலையாம் காந்தன் பிரியின் கனல்பாய்ச்சும்
வேலையாம் அவ்வேளை போது மலராமால்.

172 காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலர்ந்து மருவார் உளைநைய
வேலைச் செலுத்தி வெடிப்புண் விளைக்கின்ற
மாலை பொழுதாமோ ? மாய்க்கும் கழுவாமே !

173 துள்ளும் இளங்கன்று தூண்டும் விருப்பாலான்
அள்ளும் தூளியும் அமையாப் பெரும்போக்கும்,
எள்ளும் குழலோன் இசையும் இணையாகக்
கள்ளும் இணையாகாக் காதல் வெறியாமே!

174 மன்றல் மலர்வாய் மகிழ்ந்து வரவேற்றுத்
துன்று சுவைத்தேன் விருந்தூட்டித் தேன்தும்பி
நின்று முரல நெகிழ்ந்தாடும் இன்பான
தென்றல் துணையாமோ ? தீமைக்குத் தூதாமே ?

175 தொள்ளை யுணர்வோர் தொடுக்கும் கணைபோல
வள்ளைக் கொடியாளை வாட்டும் வகைதேடி
வெள்ளை மதியம் விளங்குமால் விண்மீது,
கொள்ளை விழிக்கொரு நோன்புண்ணும் வந்தாற்போல்.

176 எல்லாப் பகையும் இழைத்த துயரோடு
பொல்லாப் பகையாய்ப் புகுந்ததே செங்கோலால்
நில்லா உடலால் நிலைத்த புகழாளன்
வல்லான் விழாக்கோள் வகுத்த களிநோயே.

177 பொய்கைக் கடிநீலம் போந்த அளியன்ன
தெய்வத் திருநோக்கக் கண்பாவை எப்போதும்
அய்மைத் திரையின்றி ஆள்வோன் விழுவாளே
மெய்மைத் திருக்கூத்து மேவும் நனிசேர்ந்தே.

178 அன்னப் பறவை அவள்நோக்காள்! யாரேனும்
அன்னம் எனவும் பொருஅள்; அணிக்காக
அன்னம் எனச் சொல் பனுவல் அகங்கொள்ளாள்;
அன்னம் இழைக்கும் அவலம் அழகம்மா!

179 கோதைக் குலங்காக்கும் வண்ண மகளோய்ந்தாள்;
காதைக் கனிவாய் மொழியாளர் கையற்றார்;
பேதைப் பெருங்குழாம் சோர்ந்து புகைந்தேங்கும்:
மூதைத் திருச்செல்வி மூழ்கு துயரத்தே.

180 என்று மணிமே கலைபாரார், ஏராரர்கைக்
கொன்று மணியென் றணிதல்போல், அன்பாளர்
குன்று புரைசெல்வன் கோதில் குலமுத்தம்
துன்று கரந்தோள் தொடியோட நின்றேங்குவார்.

181 ஏந்து புகழ்க்கேசி எய்து சிறுநோவும்
போந்து துயரூட்டப் போக்கு நிலைகொள்ளா
வேந்து விழைமேன்மை வேய்ந்த மணிப்பேரான்
காந்து கனலானுன் உள்ளங் கசிவுற்றே.

182 துன்ப இருளோட்டும் தூய ஒளிக்கற்றை
என்ப திருஞ்சிறையிற் சிக்கிற் றெனவெண்ணி
இன்ப மிறைவன் கரத்தில் உளதோர்ந்தான்;
முன்ப ருளபேர்கள் நோவ அனஞ்சொல்வாள்.

அன்னம் அரற்று

183 ''தோழிநீர் தோன்றல் தெருவூடு செல்லுங்கால்
சூழநீர் நில்லீரோ? சொத்தை விழியீரோ?
ஆழநீர் நெஞ்சும் அரும்பேறும் இல்லையோ?
வாழிநீர் துன்ப வழியேகல் இன்றேயோ?

184 ''பார்த்தார் பலராயும் அன்னர் பரிவின்றி
ஆர்த்தார் அயின்றுர் அணைங்கார் விழாக்கொண்டு
வேர்த்தார் ஒருநாளுய் வைகறைப் போழ்தத்தும்
நீர்த்தார் விழியோடு நீள விதியேயோ?

185 ''போகும் பொழுதத்துப் போய விழிகவ்வி
நோகும் வழிக்கென னே வைத்த குறும்போடு
நோகும் பொழுதும் நொடிதோறும் சோர்ந்துள்ளுன்
வேகும் இதுதான் எனக்காம் விதியேயோ?

186 ''வேலி எனச்சொல்லும் நாணம் விளையாடிக்
கேலி விளைக்கும் கிளைமுன்னர் ஓடிற்றே;

ஆலி அருட்பாரில் கெட்டோர்க்கு நட்டோராய்க்
கோலி வருவார் உளரோ, இலை''யென்றே.

187 பன்னி யுரைத்தாள்; பதைப்புற்றுள்; பல்காலே
முன்னி அழுதாள்; முகம்பொத்திக் கண்தேய்த்தாள்;
பொன்னி நிறைவெள்ளம் போலப் புரண்டோங்கும்
கன்னி துயராற்றக் காணும் வகையாதோ?

இரண்டாவது விழாக்கோட் படலம் முற்றிற்று.

3. சூழ்வுப் படலம்

188 அன்பெனும் இளங்கால் ஊழ்த்த
அணிமலர் இரண்டும் கண்ணீர்த்
துன்பெனும் தடத்துள் வைகித்
துடிநிலை முன்னர்ச் சொன்னும்!
முன்பெனும் பெருமை கொண்ட
மூதுணர் வணிகன் முன்பு
'பின்'பெனும் பிழையை நொந்து
பேணிய சூழ்வு சொல்வாம் :

வணிகமணி வருகை

189 மான்பிணை ஈன்ற பிள்ளை
மறப்புலி ஆயிற் றென்றே
ஊன்பிணை உயிர்கு லுங்க
உயங்கிடு மமைச்சர் இல்லுள்,
தேன்பிணை மொழியாள் தேம்புந்
தெருமரல் அகற்ற எண்ணும்
நோன்பிணைச் செல்வன் தேர்ந்து
நுழைந்தனன் நோய்மை யுற்றே!

அமைச்சர் தகவு

190 மடிபடா உளத்தர் பிள்ளை
மனத்தராம் போழ்திற் கூட
அடிபடா உடலர் அன்போ
டறநெறி அன்றி ஒன்றும்
பிடிபடா அமைச்சர் ஈண்டு
பெய்ம்மழைக் கண்ணீர் வார்ந்து
துடிபடா வியல ராகித்
துவள்வது விந்தை! விந்தை !

191 கிழிப்புறும் கால தென்றும்
கிடங்கமை தான தென்றும்
சுழிப்புறும் செவிய தென்றும்
கூளிசா வியல தென்றும்

பழிப்புறும் வாலி தென்றும்
படர்சொரி முதுக தென்றும்
இழிப்புறும் நாயும் தாய்க்கு
ஞியன்பெருஞ் செல்வ மென்ருல்.

192 அற்றவர்க் கேனும் அன்பாம்
அருள்மழை பொழியார்க் கேனும்
கற்றவர்க் கேனும் காதல்
கழிபெற முதிர்ந்த நோன்மை
நற்றவர்க் கேனும் மக்கள்
நலம்விழை யுணர்ச்சி இன்ரே!
பெற்றவர்க் குவகை செய்யும்
பெரும்பொருள் மக்கள் கண்டீர்.

193 அறமொரு பக்கல் வாட்ட
அதற்கெதி ராகு மைந்தன்
திறமொரு பக்கல் வாட்டத்
தெளிபுல அமைச்சர் வேரும்
புறமொரு சிறகு கொண்ட
புரையிலா வெட்டுக் கோலே
யுறுமொரு பொருளோ ஒத்தார்
உலகெலாம் உய்தற் கென்றே.

194 முரசியல் முழங்கு பெற்றி
மூரிவேற் கரிகால் மன்னன்
அரசியல் ஓம்பு மாற்ருன்
அறநெறி நின்ரு ர்; பின்னைப்
பரசியல் மைந்தன் நேயப்
பருவரல் உழக்கும் இல்லாள்
உரசியல் நோக்கி வெண்ணெய்
உருகுமா றுருகும் நீரார்.

195 சென்னெறித் தவறு நோக்கிச்
செருத்துடல் குருதி சோரக்
கன்னெறிக் குருளை வீழ்த்திக்
கடுமுனம் அகன்ற பின்னர்த்
தன்னெறிப் படரைப் பிய்த்துத்
தவிக்குறும் அரிமா வென்ன
நன்னெறி யமைச்சர் நின்ரு ர்
நலமிகு தங்கை யோர்வால்.

196 னமைந்தனை யாக மற்றென்
மனைவியே யாக வன்றி
ஜந்தினை யாளக் கற்ற
யானுமே யாக நேர்மை
வைந்நுனைப் பகழி முன்னர்
வீழ்வதே தக்க தென்ருல்
உய்ந்தனன்'' என்ன நோந்தார்
உழைப்பெரு வணிகன் நோந்தான்.

அமைச்சர் வரவேற்பும் சூழ்வும்

197 ''திருவளர் செல்வ வாழி!
தேர்ந்தநூற் புலவ வாழி!
குருவளர் மணியே வாழி!
குணக்கடல் அமிழ்தே வாழி!
மருவளர் மனைய தாக்கும்
மாமணி வருகை'' என்றே
உருவளர் தவிசி லேற்றி
ஒருங்கிருந் துவகை செய்தே.

198 ''இம்மனை நன்று செய்த
தேந்தலே வந்த தேதோ?''
''நும்மனை யுள்ளீ ரெல்லாம்
நுவல்நலம் உடையீர் தாமோ!''
''பொம்மலால் பொலியும் நீவிர்
புடைபடக் கவன்றீர் போல
விம்மலால் அமைந்த தேதோ?''
''விளங்குமா றுரைக்க'' வென்ருர்.

199 வதியொடு சேறு மல்கு
வழியிடை நடக்கு மெற்குக்
கெதியொடு திறமும் தந்த
கேழ்படா வூற்றுக் கோலை
விதியொடு கள்வன் கொண்டான்;
வீழ்ந்திடா தென்னைக் காத்த
மதியொடு மனமுங் கொண்ட
மலர்க்கொடி அனையச் செய்தே.

200 இடர்க்கடல் ஆழு மாறும்
இயக்கினன் ஒருவன் இன்னே!
படர்க்கடல் புகுதா வண்ணம்
பயில்பெரு நெறிமை காட்டும்

சுடர்க்கடல் அமைச்சும் வேந்தும்
சொல்லுவர் முறைமை என்றே
தொடர்க்கடல் நெறிநூல் ஆய்ந்தீர்!
தொடுத்தனென் ஈங்க ணென்றான்.

201 ''அழித்தனன் ஒருவன் பின்னும்
அடுசெயல் அதுவும் சூழ்ந்தான்
ஒழித்தனன் நெறிமை யாயின்
ஓங்கிய திருவி னுள!
தெழித்தனன் யாவ னென்றே
தேர்ந்ததோர் முடிவும் உண்டோ?
விழித்தனிர் கூறு'' மென்றார்
விளக்கமா யறியும் நீரார்.

202 ''பேசுதற் கொன்று மில்லை
பெரியரே! பிழையைச் செய்தோர்
பேசுநற் குணங்கள் மல்கும்
பெருந்தகை நீரே யென்றால்
வீசுநீர் உலகிற் பின்னை
விலக்குவார் உளரோ?'' என்று
வீசிஞன் வணிகன் கேட்டு
வெருண்டனர் அமைச்ச ராங்கே.

203 வாணிக மணியீர் கேண்மின்
வகுத்துள குற்றம் அந்தோ!
மாணிக வருவ செய்யேன்;
மயக்கற மொழிக'' என்றார்;
''காணிக'' என்று கொண்டு,
காளனைக் கண்ட வாறும்
ஊணிக ஒழித்த வாறும்
ஒவ்வுமா றுரைத்து மேலும்,

204 ''பையலாய் இருக்கும் போதே
பழிவழி யேகா வண்ணம்
ஐயனே செய்தல் இல்லீர்;
அரசியல் கடமை ஒன்றே
செய்தலாம் செய்கை என்று
செலுத்தினீர் முறைமைத் தண்டம்;
உய்யலாம் வழியும் உண்டோ?
ஒருவரே இருமை ஏற்றல்?

205 ''தந்தையின் கடனை நீத்துத்
தனையனைத் தண்டித் தற்காம்
விந்தைசேர் தந்தை யாரை
வேறிடத் தறிந்த தில்லை;
சிந்தையில் வேதல் வேண்டா
சிறியனேன் உரையும் ஏற்று
முந்தையோய் முடிக்க வென்று
மொழிந்தனன் வணிகன் பின்னும்,

206 ''துறைபல போய வாற்றல்
தூநெறி அமைச்சு வல்லீர்!
குறைபல புரிவ ரேனும்
கூடிய இடமும் வாழ்வும்
உறைபல குழுவும் போழ்தும்
உலைவற ஆய்ந்து கொள்ளும்
நிறைபல கொள்ளல் அன்றே
நீதியின் கோயிற் கேற்கும்?

207 ''அருள்வழி உரைத்துக் காட்டி
அறம்பிறழ் கொடுமை காட்டி
தெருள்வழிப் பிழைப்புங் காட்டித்
தேரிடா ஒருவற் கன்றே
பொருள்வழித் தண்டத் தோடு
புறஞ்செலாத் தடுப்புக் காவல்
இருள்வழிக் கொலையின் தண்டம்
இயற்றலாம் மறுத்த லுண்டோ?

208 ''விடுதலை தருவ தொன்றே
விதிப்படி உரிய தாகும்
தடுதலை செய்வ தாயின்
தவற்றினைத் திருத்தும் நெஞ்சைத்
தடுதலை செய்வ தாகும்;
தனிப்புகழ் மேதை! தண்டக்
கெடுதலை யாக்கா தென்றும்
கிளர்குணம்'' எனவ மைச்சர்,

209 ''கூறலாம் ஒவ்வு மாறு;
கொண்டதை நிறுவு மாற்ருல்
வேறலாம்; நன்று தீது
விரித்திடும் உரைக ளாலே

மாறலாம்; இருந்த போதும்
மனமதே இடித்துத் தாக்கிக்
கோறலாம்; மாற்ற முண்டோ?
கூறுதிர் அமைதி'' என்றார்.

210 சொல்வலி கொண்டு வெல்லும்
சூழ்ச்சியும் பயின்றே னல்லேன்
வில்வலி காட்டி வேண்டும்
விதத்தினில் முடிப்பே னல்லேன்
நல்வலி யாவ தெல்லாம்
நாடொலாம் ஏற்கு மாறு
செல்வலி கோரல் ஒன்றே
செய்யுமின் தெளிவு கூர்ந்தே.

கொலைத் தண்டத்தின் குறைபாடு

211 தீயது செய்த மாந்தர்
திரிந்தது முன்னு முண்டால்
ஏயது செய்யு மாறும்
எரியகல் ஏற்று மாறும்
தூயது தவழும் பூங்காத
தொகையொடு கோயில் கூவல்
ஆயவை சமைக்கு மாறும்
அன்னவர் விதித்த துண்டால்.

212 கொடுந்தொழிற் கொலையின் மாக்கள்
கோணெறிச் சான்று கண்டும்
கெடுந்தொழில் கருதா ராகிக்
கிட்டுவ தவர்நேர் பொன்னேல்
விடுந்தொழில், முறைமை யாளும்
விரிநிலச் சோழ நாட்டில்,
'அடுந்தொழில் உண்டு கா'ணென்
றறியவே யயர்ந்தேன் ஐயா!

213 கொலைத்தொழில் விருப்ப னென்று
கூறுவர் என்ன நோவேன்
புலைத்தொழில் அதுவே என்று
புகன்றிடச் சான்று வேண்டா!
கொலைத்தொழில் செய்த மாக்கள்
கொன்றிடப் பட்டால் அன்னோர்
கொலைத்தொழில் அகன்ற வாழ்வைக்
குறித்திடச் சான்று முண்டோ?

214 குறைவினைப் போக்கு மாறு
கொடுப்பதோர் ஒறுப்பு வேண்டும்
நிறைவினைப் புகுத்து மாறு
நிற்பதாம் ஒறுப்பு வேண்டும்
முறைவினைப் படுத்து மாறு
முதிர்வதோர் ஒறுப்பு வேண்டும்
கறைவினை வாழ்வு தாகக்
காட்டுமோர் ஒறுப்பும் ஏனை?

215 திருந்திடச் செய்வ தன்றித்
தீர்ப்பதே சட்டம் என்றுல்
பொருந்திய தாக மாட்டா!
புகல்வதை ஐய கேட்க!
மருந்தியல் தேர்ந்தோர் நோக்கம்
மாய்ந்திடா வகைமை காட்டி
இருந்திடச் செய்த லன்றே!
இறந்திடச் செய்த லாமோ?

216 மும்மையாம் காலம் தேரும்
முதிர்புல அமைச்சர் முன்னர்ச்
செம்மையாய் எடுத்துக் கூறும்
சிறப்பியல் பெற்றே னல்லேன்
எம்மையாள் நோக்க மெல்லாம்,
'எரியினுல் எரிவை மாய்த்தல்
கொம்மையாய்! இயலா' தென்றே
கூறுவேன் உண்மை காண்க.

217 குடைநிழல் அடியின் கீழே
குலமெலாம் நிறுத்த வீரன்,
படைநிழல் நினைத்த போதே
பகையினம் அஞ்சு மேனும்,
கொடைநிழல் வாழ்வின் கண்ணே
கொலைப்படு தண்டம் பெற்றோர்
உடையரோ அண்ணல் என்ன
உலைந்திடாக் கொள்கை யாளர்.

218 என்னதான் மொழிந்தீ ரேனும்
என்னியல் மாற மாட்டா ;
மன்னவன் முன்னர்ச் சென்று
மனக்கருத் துரைத்து மேலே

நன்னயம் ஆவ தேனும்
நடுங்குற ஆவ தேனும்
அன்னவா ருழுகல் நன்றும்
அனேவர்க்கும் நல்ல வென்றார்.

219 ''பெண்ணினேப் பெற்ற தாலோ,
பேறெனும் நினேவி னேடு
கண்ணினேக் காத்தல் போலக்
காத்ததன் விளேவி னுலோ
உண்ணிலாம் துயரம்'' என்றே
உளேந்தனன் வணிகன்; வேந்தன்
விண்ணிலாம் மாடம் புக்கு
விளம்புவான் காலந் தேர்ந்தே

வேந்தனும் வணிகமணியும்

(வேறு)

220 ''வெம்புலி விளேயாடும் விரிகொடி விறல்வாழ்க!
அம்புலிக் கொளியூட்டும் அருக்களின் குடிவாழ்க!
கம்புலி கரிகாலன் நலமுறு புகழ்வாழ்க!
அம்புவி யுறைவோரின் அகமெலாம் மகிழ்வாழ்க!

221 ''யாழிசைச் சுரும்பார்க்கும் அருங்கடி மலர்மார்ப!
ஏழிசை யழுதோர்ந்த எழில்மனே யகமொன்றில்
சூழிசை யவலப்பண் சுருதியோ டிணேவாக
மூழிசை தடுப்போமால் முறைவழி யதுவென்றான்.

222 ''எற்பொழு திதுவென்றும் எரிகதிர் அகன்ரேடும்
அற்பொழு திதுவென்றும் அயர்வற அறியாமல்
நற்பொழு தெனவாக்கும் நகுவிளக் கெழிலூடே,
தற்பொழு தகநொந்து தளர்பவ ருள''ரென்றான்.

223 ''செப்புவ தெதுவோதான் சிதைந்திட வழியேதோ
ஒப்புவ துளதென்றல் ஒருகணந் தவிர்ப்பேனல்
இப்பணிக் கெனத்தானே இறையென இருப்பேன்காண்
அப்பணி தலேயேற்றேன் அறை''கென மணிசொல்வான்:

(வேறு)

224 ''பூவேந்தர் குடைநிழலில் பொழிகருணேப்
பொருள்நாடிப் புதைத்து நிற்கும்
கோவேந்த! குலவமைச்சர் தங்காதல்
கொழுமைந்தன் காளன் தன்னேக்

காவேந்து சிறைக்கண்ணே புகவைத்தோம்
கடைக்கணித்து விடுக்க நேரின்
தாவேந்து குடியின்னே தளிபெற்று
நலமெய்தும் அண்ணல்'' என்ருன்.

225 ''கொலைக்கயமை புரிந்துள்ளான் கொடுங்காளன்
குடைகாவல் முறைமை யாய்ந்தால்
துலைச்சமனுய் அமைந்ததனைத் துணிவதுவே
சான்ருேரின் கடமை யாகும்
நிலைத்திறனுல் அறங்கூறும் அவையத்தே
நெறியாய்வோம்'' என்று வேந்தன்
தலைத்தொழிலோர் தமைஏவத் தனிக்கூடம்
சார்ந்தங்கே அவையம் கூடும்.

அறக்களத்து ஆய்வு

226 உடல்பலவாய் உணர்வொன்ருய் ஒருங்கிருந்த
அறவோர்கள், மக்கட் கென்று
கடலளவாம் பேரறிவைக் கண்டவர்போல்
பெரிதாய்ந்து வழக்கு மூலம்
தொடலென்றும் வழிவழியே வளர்வென்றும்
தொடுத்திருந்த இனத்த தென்றும்
அடலொன்று பொழுதோடு சூழலெல்லாம்
அறிந்தாய்ந்து முறைமை கண்டார்.

227 ''தலைக் குறைப்பே தருதற்குத் தக்கதேனும்
முதல்வழக்காய் நிற்கு மாற்ருல்
நிலைத்திருக்க விடுத்துள்ளோம்; தன்னுடலின்
நிறைப்பொன்னும் எண்பத் தொன்று
மலைக்களிறும் அறப்பொருளாய் வரவேண்டும்;
மறுநாளே விடுக்க லாகும்;
குலைப்பான செயல்பின்னும் குறிக்கொள்ளின்
உய்வில்லை'' என்று தீர்த்தார்.

(வேறு)

228 ஆய்ந்தவர் கூற்றினை அரசன் கேட்டலும்
'ஏய்ந்ததோர் பொன்னிறை இறுக்க ஏயினீர்,
சார்ந்ததாம் தொன்னெறி உளதேல் சொன்''மெனத்
தீந்தமிழ்ப் பாவ்லர் திருவர் கூறுவார்:

229 ''காற்ருெடு தோன்றிய கணிப்பில் தொன்மையர்
கூற்ருெடு போகுயிர்க் கொடுமை நீங்கிநற்

பேற்றெருடு வாழ்ந்திடப் பெருகு நோக்கினுல்
ஏற்றனர் தன்னிறைப் பொலனே நேர்ந்தரோ.

230 பொன்னிறை தந்தவோர் புகரில் மாதினைத்
தன்னிறை வில்லதோர் தகவிற் றன்மையின்
முன்னெரு மன்னவன் முடித்து நின்றனன்;
நன்னகரம் அன்னவன் நலிவு நண்ணினன்.

நயனிலா நன்னன்

231 அவ்வர லாற்றினை அரசன் வேட்பதைச்
செவ்வன றிந்தனர் திருவர் செப்புவார்:
''பவ்வநீர் சேர்ந்திடப் பரவு நீணதி
கவ்வையோ டோடுமோர் கழனி யோரமே.

232 ''தீம்பழம் தேக்கிய திரண்ட காவிடை
மாம்பழம் தாங்கிய மரமொன் றுண்டதில்
ஆம்பழம் ஆருயிர் மருந்தென் றுவதால்
மாம்பழம் என்றிடார் அழுதென் ரேதுவார்.

233 ''கொம்புறு மாங்கனி கொழுமை யாயநாள்
தெம்புறும் ஈர்க்கதும் முரிந்து தீரவே,
வம்புறு நீர்த்தவழ் கழனி வாய்வழி
அம்புறு பாய்வென அலையில் சேர்ந்ததால்.

234 ''நீர்குடை நோக்குடன் நெருங்கு நேரிழை
நேர்வரு மாங்கனி எடுத்து நொய்தென
ஆர்வமாய்க் கொண்டனள் அரும்பு மாவலால்
நேர்வதைத் தேர்ந்திடாள் சுவைக்க லாயினுள்.

235 ''கோடுறு தீம்பழம் குலையிற் காண்கிலார்
ஓடுறு வார்களாய் ஒதுங்கு சூழலில்
தேடுறு வார்களாய்த் திரிய ஆற்றிடை
ஆடுறு வாளதை அருந்தக் காணவே.

236 ''தன்வினை போமெனத் தளர்ந்த காவலன்
பொன்வினைப் பாவையைப் புகுத்திக் கோவிடைத்
துன்வினை கூறினன்; துடித்து நன்னனும்
தன்வினை யாளிடம் தலையைக் கொய்கென,

237 ''பெண்ணிறை யாம்நிறை தருவம் பொன்னெடும்,
ஒண்மணி யானையும் தருவம், ஒன்றெடும்
எண்பதும்' என்றவன் கினைஞர் கூறியும்
உண்ணெகிழ் பில்லவன் உயிரை வாங்கினன்.

238 ''அன்றெருடு தண்டமிழ் அறிஞர் நன்னனும்
புன்றெருடர் வேடனைப் புனைதல் நீத்தனர்;
மின்றெருடு மாலைய நிறத்ததைப் புல்லுதல்
நின்றனர்; நீங்கிலா நிரயம் ஏ'தெனை.

239 ''பெண்கொலைப் பாவியைப் பெரிதும் வைதனர்;
எண்கொலை செய்வதில் இழிமை யாகுமால்
பெண்கொலை செய்வதே; பிறங்க நோக்கினுல்
பெண்கொலை நீங்கினேம் பெரிதும் என்றனர்

240 ' ஏதுநும் கூற்றினை எழுந்த தோருரை ?
யாதுநாம் பெண்கொலை புரிதல் தீர்ந்தனம் ?
ஈதுநீர் கூறுக திருவர்! என்றிட
ஓதினர் வாணிக மணியின் ஓதியை !

241 ''முன்னெறி காத்தனம்; முதிர்வேற் சோழரின்
தொன்னெறி காத்தனம்; துவண்டு சோர்வுறும்
மின்னெறி காத்தனம்; மிலேவம் நன்றெனப்
பொன்னெறி ஆய்ந்தலத் திருவர் போயினர்.

காளன் விடுதலைக் களிப்பு

(வேறு)

242 விடுதலை யுரையொலி வழங்கு வாயினர் ;
விடுதலை முழவொலி முழக்கு கையினர்;
விடுதலை இசையொலி எழுப்பு நாவினர்;
விடுதலை யுடையராய் மணிமுன் எய்தினர்.

243 குடிமுதல் வணிகனைக் குறித்த போதெலாம்
அடிமுதல் முடிவரைப் புகழும் தன்மையர்
படிதலை மறந்தனர் பகரும் வாயொடு
பொடிதலை எழுந்திடப் புகுத லாயினர்.

244 ஒருவரோ டொருவரைப் புகழ லாயினர்;
ஒருவரோ டொருவரை வணங்க லாயினர்;
ஒருவரோ டொருவரைத் தழுவ லாயினர்;
ஒருவரோ டொருவரைச் சுமக்க லாயினர்.

245 மொழிவகை விடுத்தனர்; முறைமை யாகிய
வழிவகை தவிர்ந்தனர்; வளர்ந்து வீங்கிய
கழியுட லுடையராய்க் கவின லாயினர்;
பொழிமழை முகிலெனப் புகுந்த பேர்களே.

246 நிகழ்ந்ததை நிகழ்விளுல் தெளிந்த மாமணி
புகழ்ந்தனன் கொடுத்தனன் பொலனும் போகமும்;
திகழ்ந்தன திருநிலா மனையின் உள்ளென
மகிழ்ந்தனர் மலர்ந்தனர் மடந்தை மாரரோ.

247 தொகைவரு குழுவினர் தொடுக்கு நெஞ்சினர்
நகைவரு மியல்பினர் நடையில் துள்ளுநர்
பகைவரும் இலரெனப் பயிலும் கண்ணினர்
மிகைவரும் உணர்வுற மிடைவ ராயினர்.

248 தொடுத்தனர்; இழுத்தனர்; தெழித்த ஓகையில்
எடுத்தனர்; பதுமினி அளக நீவினர்;
மடுத்தனர் அருகுள மணத்தின் தேறலே;
விடுத்தனர் அடியவர்க் கியன்ற செய்கையே.

249 தெருள்விழி யவரிடைத் தெளிந்த முல்லையும்.
மருள்விழி மயல்கொள அருளும் பெற்றியான்
அருள்வழி விடுதலே அடைதல் கண்களால்
சுருள்குழல் பதுமினி அறியச் சொல்லவே.

250 உவந்தனள்; எழுந்தனள்; உவரி நீரிடைத்
தவழ்ந்தெழும் அலையெனும் அனகம் பின்புறம்
கவிந்திடத் தடவினர்; களிப்பு மேலுலால்
செவிலியை அடியென அழைத்து நாணினர்.

251 மதிநல அமைச்சரின் மனைவி யாகிய
பதிநலம் வயங்கிய பரவை யம்மையும்
விதிநலம் இருந்ததை வியக்கு மாவலில்
துதிநலம் உடையளாய்த் தொழுது கூடினள்.

252 வணிகரின் மணியினை வழுத்திப், பின்னவன்
மணிதரும் மணியினை மருவி மார்பிடை
அணியென அணிதரும் அழகு நோக்கினுல்
அணிமரை கமுகிடை அலர்ந்த தொக்குமால்.

253 அறமுரை அவையினர் அறுதி காட்டிய
முறிதரு பணியினர் முகம நோடுளம்
செறிநல மணியினைப் பணிந்து நீட்டவே,
உறுபொலன் மழைக்கரம் இணைய வாங்கினன்.

254 பொலனெடு களிற்றினம் பொருந்த ஈதலில்
புலனெடு பொறியிடைத் துளக்க மொன்றிலான்.

கலனெறு கலியமை கவினென் றுன்னுவான்
நிலனெறு பெரும்புகழ் நிறுவு பெற்றியான்.

255 உரைத்துள படியவை வருமென் றேதெனக்
கரைத்துள மனனெறு கலனும் ஆடையும்
வரைப்பற வழங்கினன் : வழுத்தி யாங்கவர்
விரைப்புற நெருங்கினர் அமைச்சர் வேளையே !

256 புகழ்ந்தனர் நிகழ்ந்ததைப் புகலும் நோக்கினுல்
திகழ்ந்தவம் முறியினை எடுத்துச் சேர்த்தலும்
மகிழ்ந்ததும் கவன்றதும் அடியர் தேறுமா
றிகழ்ந்ததும் புகழ்ந்ததும் எவையும் இன்றரோ.

257 விடைதர அடியவர் விரைந்து சென்றனர் ;
குடைதரு முளத்தொடுங் குலத்தின் மாசென
மிடைதரு செயலொடும் அமைச்சர் ஏங்குதல்.
உடைதரு படையினன் உயங்க லொவ்வுமால்.

258 "அரியவன் ஒருவனை அருள நேர்ந்திடின்
உரியவென் பொருளொடும் உயிரும் ஈயலாம் ;
புரிவதென் புதல்வனுக் கெனினும், பாவநேர்
திரிவதற் குதவிய திறமென் றுகுமே."

259 எனநினை பொழுதிடை எதிர்ந்த மாமணி
தனதொரு மலரிடை மலரும் மும்மலர் ;
மனமல ரிடையிரு மலர்மு கிழ்த்திடும் ;
நனையெனப் பொலிவுறும் நகையின் காடரோ.

260 தழுவினர் இருவரும் தயங்க நோக்கினர் ;
கழுவினர் இருவரும் கலுழி நீரினுல் ;
பழுவினர் எவரெனத் தெளிய லாவர்போல்,
கெழுவினர் கினையெனும் உரிமை எய்துவார்.

261 "வினைந்துள நலங்களால் விரைய வெய்தினென்
கனைந்தனம் துயர்க்கனை ; களிக்க" என்றவண்,
உனைந்தவன் கலம்வர உவத்தல் போலவே
கினைந்தனன் எழுந்தனன் மனையை நாடியே.

(வேறு)

262 வல்லவன் வனப்பெலாம்
பல்கிய மணிமனை
நல்விழா நடைபெறும்
இல்லெனத் திகழுமே.

263 ஓங்கொலி இடியென
வீங்கலை முழக்கெனத்
தீங்குரல் நரம்பெனப்
பாங்கெழும் மனைக்கணை.

264 பூமழை பொழிவதும்
நாமழை செறிவதும்
ஏமழை சொரிந்திடும்
ஏந்திழை குழுவிலே.

265 அண்டிய மனையவர்
கண்டெனு மொழியினர்
விண்டனர் விழைவொடு
கொண்டனர் குரவையே.

266 நென்மணி சொரிவரே
பொன்மணி பொழிவரே
'என்மணி திகழ்'கென
மன்மணி மனையிலே.

267 வண்ணமும் இடுவரால்
சுண்ணமும் இடிப்பரால்
உண்ணமு தமைப்பரால்
எண்ணமுஞ் சிறந்தரோ.

268 யாழ்வரும் நறைவரும்
தாழ்வரும் குழலவர்
ஏழ்வரும் இசையுற
ஆழ்வரால் பருகியோர்.

269 தீந்தொடை இசையினர்
பூந்தொடை எறிந்தனர்
ஆய்ந்தவன் திகிரியை
ஏய்ந்ததென் றியங்குமே.

270 நீர்க்குழை எடுத்தனர்
ஆர்ப்பொடு தெளித்தனர்
கார்க்களி றெனச்செலச்
சீர்ப்புகை இடுவரே.

271 தண்ணறு நறவென
எண்ணறு குழைநிறை

விண்ணுறு மனக்கலப்
பெண்ணுவர் ; நகைப்பரே.

272 சித்திரப் படநிறை
வித்தக அறையிடை
ஒத்தனர் புகுந்தவர்
பித்தராய்த் திரிவரே.

273 வேகமாய்ப் புகுந்தவர்
ஆகமெய் தளர்ந்திட
நாகமென் றழிவரால்
தோகையர் நகைக்கவே.

274 பைங்கிளி எனநினைந்
தைங்கிளி மடவரல்
செங்கரம் அணைத்திடப்
பொங்குவர் பழங்கொடே.

275 நீரென ஒதுங்கினர்
ஈரமாம் கலியென
வாரிரோ குளிக்கவென்
ருரிமை அழைப்பரே.

276 வீணையின் படத்தினைக்
காணுவோர் நரம்பெழப்
பேணிய வருடுதல்
நாணுதல் தருமரோ.

277 ஓகையில் குலவிய
தாகுநல் லகத்திடை
ஈகையின் இனமுதல்
ஏகுவன் எதிர்கொள.

278 நாளிடைப் படாவணம்
காளமே நிறுப்பதற்
காளிடைப் பொலன்பொதி
மாளிகைக் கனுப்பிரான்.

279 சேட்சென்னி குலமுதல்
தாட்படி படையினர்
சூட்டிய கனித்தினம்
காட்டுதல் அரிதுகாண்.

280 பாடிய பொருநரும
ஆடிய விறலியும்
தேடிய களிற்றினம்
கூடிய தவணரோ.

281 ஊங்கிய கொடைமணிக்
கோங்கிய கறையடி
பாங்குறக் குறுகினர்
தீங்ககல் நெறியரே.

282 விஞ்சிய கரிகளே
எஞ்சலில் களியொடும்
அஞ்சொலள் பதுமினி
நெஞ்சுற வழங்குவே.

283 வேண்டுவ களிற்றெருடும்
ஈண்டிய வணிகனைத்
தூண்டிய விழைவொடு
காண்பவர் மிடையவே.

(வேறு)

284 வில்ல வன்படை வென்றெருரு
வல்ல வன்கவர் யாணைகள்
செல்ல லாயின என்பரே
அல்ல வென்றெதிர் சொல்வரே.

285 குன்று நண்பொடு கூடுமோ ?
துன்று மைம்முகில் நேருமோ ?
ஒன்று மாடமும் ஊருமோ ?
என்று கூறுவர் ஓகையில்.

286 தந்த வாரணம் மீளவும்
வந்த தாகலின் மன்னவன்
சிந்தை கொள்வதே அல்லதே
முந்தை இன்றென ஓதுவார்.

287 வேழ வெங்களி கண்டவர்
தாழு நோக்கிலா வானவர் ;
பூழி மல்கிய போதினில்
சூழு செஞ்சடை மாதவர் ;

288 உற்ற போதகப் பூழியால்
பற்று தீயென வோடியும்
சுற்று காற்றென வாடியும்
முற்று மத்தெருக் கூடுவார்.

289 வெட்டு புல்லிடை ஆன்தொகை
ஒட்டி வந்திடத் தத்தியங்
கெட்டி நின்றுபின் வந்திடும்
விட்டி லொத்தனர் பட்டிகள்.

290 கோதிச் சாய்த்திட முன்வரு
போத கத்தினைக் கையருள்
போதி நாதனுக் கீடெனக்
கோதில் நற்சிரூர் நிற்பரே.

291 யானை சென்னடை காட்டுத
லான கிண்கிணி யாளரைப்
பானை யன்னவ யிற்றினன்
தானு மோடுவன் தாக்கவே.

292 ஆடு பாம்பென லாஞ்சில;
நீடு நீர்க்குழ லாஞ்சில;
கோடு வங்கிய மாஞ்சில;
பீடு யானையின் கைகளே!

293 கையில் நற்றழை கொண்டெதிர்
ஐய னென்றிடுங் கைசில;
மெய்கொள் சைவநற் றேவனின்
மொய்கொள் நீறெனும் மெய்சில;

294 நால்வாய் காத்தருள் நம்பியைப்
பால்வாய்ச் சங்கொளிர் கையனை
வாவா வென்றெலி செய்வபோல்
ஏகா நின்றதவ் வீட்டமே.

295 ஆறு காலொடு மாகடல்
சேறு தன்மையை ஒவ்வுமால்
நாறு மும்மத யானைகள்
வீறு வாரியை எய்துதல்.

காளன் விடுதலை

(வேறு)

296 ''பொன்னிறை தருவ தாயின்
புறஞ்செல விடுப்ப மென்ரூர்;
என்னிலை யறியார் போலும்!
எந்தையோ உதவி செய்வார்?
மன்னவன் அன்றி இல்லை
மற்றெனக்'' கென்று நொந்தான்
முன்னமே அமைந்த காதல்
முதிர்நிலை அறியாக் காளன்.

297 மொய்வலிக் காவ லாளர்
முடங்கிய நிலைய ஞகும்
மெய்வலிக் காளன் முன்பு
மேவினர், ''ஐய வீண்டு
கைவலி யானை யோடு
கணிப்பரும் பொன்னும் நேர்ந்த
தையனே வருக'' வென்ரூர்
அரசனின் ஆணை நின்ரூர்.

298 கைந்நனி சோர்த லாகும்;
கலங்கிய உரையு மாகும்;
மெய்ந்நனி விரித லாகும்;
மிடைமயிர் நிமிர்த லாகும்;
பெய்ந்நனி மகிழ்ச்சி வெள்ளப்
பெருக்கெழக் காளன், ''நல்லீர்,
இந்நனிச் செயலர் யாரென்
றியம்புக'' வென்று மேலும்,

299 ''தக்கதாம் பொழுதிற் செய்த
தவச்சிறு நன்றி கூட
மிக்கதாம் ஞாலத் திற்கும்
மேற்படு தகைமைத் தென்ரூல்,
சிக்கிய கூற்றின் வாயைச்
சிதைத்தெனைத் தந்த நன்றிக்
கொக்குமோ ருவமை காட்ட
வொண்ணுமோ'' வென்று போனான்

300 மதியினை நகுதல் செய்யும்
மான்புறு துலையின் கண்ணே
நிதியினை நகுதல் செய்யும்
நிறைபொலன் குவிக்க வோர்பால்

கதியினை நகுதல் செய்யும்
காளையும் ஏறி யோர்பால்
விதியினை நகுதல் கண்டான்
விளங்கிழை காதல் கொண்டான்.

301 ''கண்ணுழை யகலா மாட்சிக்
காரிகை அணங்கு சீர்த்த
பெண்ணுழைப் பெரிது நோற்றுள்
பிழையிலை; இவரை யன்றி
மண்ணுழை மகளுக் காக
மற்றெவர் செய்வர்'' என்று
வெண்பொனல் நிறுத்துக் கொண்டான்
வேறுமோர் நிறுவை காணுன்.

(வேறு)

302 தூவி யின்மையாற் ருேகை இன்றெனப்
பாவி னின்றுயர் பாவை தந்தையை,
ஆவி தந்தருள் ஆளும் செல்வனைப்
''பாவி யா''னெனப் பணிந்து பற்றினன்.

303 வீழ்ந்து வெய்துயிர் வீர நம்பியைத்
தாழ்ந்து மாமணி தாங்கிப் புல்லுதல்
ஆழ்ந்து மாற்றள வாயக் கட்டனை
சூழ்ந்த பொன்னெனத் தோன்று மாலரோ.

304 மன்னி நின்றுறை பாவ மாலையை
முன்னி நீக்கினன் முட்ட றுத்தனன்
என்ன வார்விழி யோட நின்றவன்
பொன்னின் நன்மலர்ப் போதன் முன்னுளான்.

காளன் புத்தனைப் பரவுதல்

(வேறு)

305 அருளே அறிவே அளியே இலகும்
பொருளே புவியே புகலாம் உளமார்
தெருளே திருவே திறமே பெரியோய்
அருளாய் அருளாய் அடியே னுயவே.

306 முதலே மறையின் முடியே ஒளியே
சிதலா முயிருஞ் சிதையா வகையாய்
இதமாய் வளர்வா னுதவும் எழிலாய்
பதமார் அடிதா அடியே னுயவே!

307 விடமா ருயிர்வாழ் விதமே அறிகேன்
கடமார் அடமா உறைவே தெளிகேன்
இடமார் படியின் வடிவாந் தகையோய்
தடமார் அடிதா அடியே னுயவே!

(வேறு)

308 பயிலற நெறியென எங்கள் புங்கப் பெருமானீ
மயலற உரைமொழி பொங்கிச் செங்கட் கரும்பாகி
அயிரென மறையிடைத் தங்கிச் செங்கைத் தவழ்ந்தாலும்
செயிரறு சுவைபெற நுங்கிச் சங்கத் துறையேனே !

309 குறைநெறி யுறைதரு நஞ்சப் பஞ்சப் படுபாவி,
அறைநெறி நிறையவை நெஞ்சுற் றிஞ்சிப் பயில்பேதை,
மறைநெறி முறைவழிக் கெஞ்சித் துஞ்சிச் செயலோம்பாக்,
கறைநெறி இறையனே அஞ்சொற் றஞ்சத் திருத்தாயோ?

310 புதைகணை அனம்நினைந் தொன்றிக் கன்றித் துவள்வோனே
வதைபடு கொடுநெறி கொன்றக் கன்றுக் கருள்வோனே
பதையுயிர்–வளனுற வென்றிக் கொன்றச் சிதைவோனே
சிதைவற அடியனே மன்றத் தொன்றித் தருள்வாயே !

(வேறு)

311 கூற்றுவாய்க் குய்ந்து நிற்கும்
கொழுவினை வாய்த்த காளன்
தோற்றிய வாறு பன்னித்
துடித்தனன் வணங்கி வீழ்ந்து
மாற்றமொன் றின்றித் தேம்பி
மயர்வுடன் இருந்த போழ்து
போற்றிய சங்கம் பாடிப்
பொழியிசை தவழ்ந்த தாங்கே.

(வேறு)

312 வீங்கோத வேட்கை வெறிக்காட்டில் நின்றுழல்வீர்!
நீங்காத அன்புறுவீர் போதி நியமத்தே;
போதி நியமத்தான் பூங்கழல் போதன்றே
வேத முதலாகி விண்ணின்பம் நல்குவதே.

313 ஐந்தாய பாவ அரங்கிடைக் கூத்திடுவீர்!
மைந்தாய அன்புறுவீர் செவ்வண்ணத் தாமரைக்கே;

செவ்வண்ணத் தாமரையான் சீரடிப் போதன்றே
உய்வண்ணம் ஆகி உயரின்பம் ஈவதுவே.

314 சாக்காட்டுத் துன்பச் சதிராட்டம் செய்திடுவீர்!
போக்காத அன்புறுவர் புத்தன் உலும்பினிக்கே;
புத்தன் உலும்பினியே பூதலம் வாழ்வோர்க்கு
நித்த நிலையுலகம் நேரும் தகைமைத்தே.

மூன்றுவது சூழ்வுப் படலம் முற்றிற்று.

4. கடிமணப் படலம்

315 தொல்பெருந் தொடரொடு தொடர்ந்த காதலால்
கல்பொரும் வலியவன் சிறைநின் றுய்ந்ததாம்
நல்பெருஞ் செயலினே நவிற்றி னேமிவண்
செல்பொரு குழல்மணச் சிறப்புக் கூறுவாம்:

316 எய்திய உவகையர் எடுத்த சொல்லினர்
கொய்மலர்க் குழலினர் குறுத்த தன்மையர்
எய்மழை எனப்பொழி அழகு வில்லியர்
செய்வகை அளவிடச் செய்லும் இன்றரோ.

மகளிர் பூம்பொழிலில் மகிழ்தல்

317 காம்பொழி நறுமலர் களிப்பில் சூடிய
மாம்பழக் கதுப்புடைப் பதுமை முன்செலக்
காம்பொழுக் கெனவமை கலையின் தோளினர்
பூம்பொழி லகஞ்செல நினைந்து போதுவார்.

318 மானென விரைவனர் மலர்ந்த ஆற்றிடை
மீனென மறிவனர் மிடைந்த கொம்பிடைத்
தேனென மொழிவனர் நடையிற் பின்னிடேன்
யானென வருவனர் எழுந்த மாதரே.

319 பண்வகை கிளப்புவர் விரைந்து சோர்ந்ததாய்
எண்வகை தளர்குவர் எடுத்த வேட்கையாய்க்
கண்வகை செலுத்துவர் களிப்பு மேவிய
பெண்வகை இவையெனப் பெரிது நாட்டுவார்.

320 போதுணம் இருளெனப் பொருந்து கூந்தலார்
தாதுணம் புறவென எழுந்து துள்ளுவர்
கோதுணம் எரியெனக் கிளர்ந்த பூவழி
வேதுணம் அரவெனச் சடைகள் வீறுமால்.

321 மின்வகை வளையொடு மிடையு நங்கையர்
மென்கரங் கரத்தொடு புடைப்பக் கோடகை
ஒன்றிய கரத்துளும் அலத்த கக்குழம்
பின்றிவர் நினைத்தனர் என்ன ஓதுவார்.

322 மருகிடை துயல்வர மருகி யோடவின்
பொருகுழை கதுப்பிடைப் பொருந்திச் சேந்தது.
பெருமழைப் பருவமாம் பொழுதிற் றம்பலம்
அருமினர்க் கடுக்கையி னமைந்த தொத்ததே.

323 தூவியந் துகிலெனத் துலங்கு நீர்மைய
வாவியம் மலரென வழங்கு நங்கையர்,
காவியத் தெழுதொணுக் களிப்பின் மேவினர்
ஓவியத் தெழுதொண வுருவப் பூம்பொழில்.

(வேறு)

324 அங்கொடிக் கிணையாகும் அணிமலர்க் கிணைசேரும்
பொங்களி சிலவோடும் பொருவிதழ் சிலநாடும்
தங்கலர் பலவொன்றும் தகுமியல் பலகன்றும்
நங்கையர் பொழிற்கண்ணே நகுதர வொளிந்தாட.

325 பூமிசை நடந்தான்தன் பொருளறத் திறத்தாலே
ஏவிழி செலுத்தாதே எனவுளத் தமைவார்போல்
பூநறுந் துணியாலே புடைவிழி மறைத்தாங்கே
நேரிழை யவரோடி நிலைமறைந் தொளிவாரால்.

326 கண்ணெளி இலரேனும் கருதிய பெரியோராய்
எண்ணெடும் எழுத்தென்னும் இலங்கிய விழிபெற்று
மண்ணிடைப் புகழ்கொண்டோர் மரபினைத்
தெளிப்பார்போல்
கண்புடை மறைத்தாலும் கடிதவர் பிடித்தாரே.

(வேறு)

327 ''போதார் கூந்தல் பொன்மக ளன்னுய் நடையோம்பிப்
போதாய் போதாய்'' என்றுசி லம்பு பரிந்தேங்கத்
தாதார் போதில் தன்மனம் வைத்து நடையிட்டார்
பேதை யுள்ளம் பெட்புரை கேட்டுத் துறைபோமோ?

328 உச்சிக் கொம்பின் ஒண்மலர் கண்ட ஒருபேதை
நச்சித் தாவி எய்திய நாடித் தளர்வோடு
முச்சி யுச்சி கையுறப் பொத்தி உயிர்த்தாளால்
எச்சிற் கைவீ சாக்கொடி யாரிக் கொடியாரே.

329 மென்கைச் சங்கம் ஓலிடத் தாவி மலர்க்கொம்பர்
கின்ன ரம்மென் நன்மகள் பற்ற இணர்க்கொள்ளா

துன்னி வீழ்தல் தோகையர் ஆடல் நலங்கண்ட
மன்னன் சோழன் மாண்கரம் ஒன்றுக் கிணையாமே,

330 பொன்னின் குன்ற மாமென நிற்க வமைந்தாலும்
மன்னு மாசை மாக்கடற் கண்ணே உழல்வார்போல்
பொன்னிற் பூத்த பூங்கொடி மாதர் பொறைதாங்காக்
கன்னிக் கொன்றை நாண்மலர்க் கொள்ளை கவர்ந்தாரால்.

331 பேடை கேட்கப் பெய்குரல் வார்க்கும் மயில்பற்ற
ஆடை வீசி ஆய்வளைத் தோளி அவணிற்றல்
வாடை மஞ்ஞை வள்ளுறை போர்த்துக் கொடைமாண்ட
ஓடை யானை ஒண்கழற் பேகன் இயல்பாமால்.

332 புள்போ லேகும் பூவையர் சில்லோர் விருப்போடு
கள்வார் பூவின் கொள்ளைகள் கொய்து கவித்தோர்பால்
உள்ளங் கொள்ளப் பின்னிய மாலைத் தொகையெல்லாம்
கிள்ளை மாலைக் கீடிலை என்றே பிதிர்ப்பாரால்.

333 பால்போற் காட்டிப் பாருல கத்தோர் மகிழ்தூங்கக்
கால்கோள் காட்டும் வெண்ணிலா வொக்க நகைத்தாலும்
நூல்போல் வல்லி நுண்ணிடை அன்னம் முறுவற்குக்
கால்நேர் வாதல் காண்கிலாய் முல்லைக் கொடியென்றும்,

334 சீரார் பண்கள் செய்தொழில் வல்லார் இசைத்தாலும்
நேரார் எற்கென் றுள்ளகம் நேர்ந்த குயில்வாழி!
பேராப் பெற்றி இன்குரல் அன்னம் உரைசொற்கே
ஓராப் பண்ணுன் சுற்றமே ஒவ்வா தெளிவென்றும்,

335 வெண்கண் நெல்லிக் காயெனப் பேசும் புகழேற்ற
நுண்வெண் பட்டுப் போர்வையின் நீங்கா முயற்பிள்ளாய்;
ஒண்கண் நோக்கம் தந்துள கொண்கன் உனக்குண்டோ ?
உண்கண் மென்றூ சன்னமும் உண்டால் எதிரென்றும்,

336 இன்னே பன்னிக் கன்னியை நீங்கித் தொலைவானேர்
நன்பூம் பந்தர்த் தண்கொடிச் சூழல் நடுவாகி
அன்றே ருடின்றும் ஆயவை சொல்லிக் களித்தாடிப்
பொன்னர் வல்லிப் பூவையர் கூடி இனைப்பாற.

337 மாழை ஒண்கண் மாமகள் அன்னம் பொழிற்கண்ணே
தாழை நாறுந் தண்ணிழற் பாங்கர்த் தனியாகிக்

கூழைக் களுஞ்சில் கொய்மலர் சூட்டும் நினைவாக
வேழ மன்ன வீரரின் வீரன் வரலானன்.

காளனும் அன்னமும்

(வேறு)

338 கற்பொருள் கடந்த தோளான்
காரிகை முகத்தை நோக்கின்
முற்பட நிலத்தை நோக்கும்;
மொய்ம்பினன் நிலத்தை நோக்கின்
நற்பொழு திதுவாம் என்று
நங்கையும் முகத்தை நோக்கும்;
சொற்பொருள் கடக்க வல்லார்
கண்களும் சொல்லும் போலும்.

339 அங்கவர் நோக்க மென்னும்
அளவிடற் கரிய நீத்தம்
பொங்கிய கண்க ளென்னும்
பொய்த்திடா அமுத வாற்றுல்
தங்கிய உள்ளம் என்னும்
தடத்திடை மல்கிப் பின்னர்ச்
செங்குழல் நாடி காலாய்ச்
செய்யுடல் பரவி நிற்க;

340 மின்னலை உருவ மாக்கி
மீனினை விழிக ளாக்கிக்
கன்னலை மொழிக ளாக்கிக்
காரினைக் குழல்க ளாக்கிப்
பொன்னினை நிறமாய்த் தீட்டிப்
போதினை முகமாய்க் காட்டி
அன்னமே நடையாய் நாட்டும்
ஆரணங் கியற்கை வார்ப்பே.

341 பூங்கொடி நடையைக் கற்றுப்
புவியிடை வருவ தாமோ?
வீங்கொளி நிலவும் இந்த
வேலியுள் வருவ தாமோ?
தீங்கவித் தமிழே கூறும்
தேமொழி வடிவ மெய்திப்
பாங்குடன் வருவ தாமோ?
பாவையைச் சொல்வ தென்னே?

342 முத்துடைக் கோவை யாமோ ?
முல்லையை முறையே கோத்த
கொத்துடை மாலை யாமோ ?
கொவ்வையின் இதழ்கள் என்னும்
வித்தகப் போர்வைக் குள்ளே
விண்மதிப் பிறை இ ரண்டை
ஒத்திடச் செய்து வைத்த
ஒப்பனை இதுவோ ஐயம் !

343 மயிலினை அழகுக் காக்கி
மாவினை இனிமைக் காக்கிக்
குயிலினைக் குரலுக் காக்கிக்
கூர்மலர் மணத்திற் காக்கி
முயலினைக் குழைவுக் காக்கும்
முன்னவன் அனைத்தும் சேர்த்துப்
புயலினைச் சுமந்து நிற்கும்
பூங்கொடி யமைத்தான் கூட்டி.

344 மணமெனும் நறிய ஈர்ப்பை
மலரினுக் களித்து மேலும்
உணவெனும் மதுவைத் தேக்கி
உயர்ந்தவன் தீட்டி வைத்த
இணையிலா ஓவு போலும்
இதழ்களில் அழகு காட்டிப்
பிணைத்திடும் இயற்கை யன்னை
பிறைமதிக் கனைத்தும் செய்தாள்.

345 இனமுகில் செறிந்து காணும்
ஈடிலாப் படர்ந்த வானில்
பனிநில விடையி னின்று
பாய்ந்திடுங் கயலோ வென்னத்
தனிப்பெரு விழியி ரண்டும்
தாழ்குழல் தழுவி நிற்கும்
மனங்கவர் அழகு நங்கை
மைவிழிப் பெயரோ என்பான்.

346 கண்களே வடிவ மாகும்
கலைமயில் விழிக ளெல்லாம்
உண்மையாம் விழிக ளாக்கி
உயிர்த்திடப் பொறிக ளாக்கி

மண்ணிடை உலவச் செய்யா
மடையதே இயற்கை என்பான்
கண்களால் அவளைக் கண்டான்
'கலுக்'கெனச் சிரித்துச் கொண்டாள்.

347 மாதரின் மணியே யன்னாய்
மற்றவை தவிர்க இந்தப்
போதரி முல்லை யொன்றே
பொருந்துவ தென்று கொண்டு
காதர வுரைப்பான் போலக்
கருங்குழற் கமைத்து நின்றான்
ஏதரி தாகும் செய்யும்
இயற்படி செய்வ தாயின் ?

348 ஓதியேர் நங்கை யாயம்
ஒருசிறை வருதல் நோக்கி
ஓதிம வொதுக்க மொக்க
ஒதுங்கினள் பெயர்ந்து செல்ல
வேதியா வெதும்பா நின்று
வேட்கையின் எல்லை காணான்
'போதியோ' வென்று நையப்
புறம்புறம் நோக்கிச் சென்றான்.

பிரிந்த மகளிர் வருகையும் நகையும்

(வேறு)

349 ''கானேய் மலராய் சுரும்பாய் அயல் சென்றேரும்
தேனேய் மொழியாய்! திரியா வனக்கொம்பார்
மானே! மருள்வால் அலைந்தே உனைந்தாயோ?
தானே அமையாத் தளர்வேன்? மொழி''யென்பார்.

350 ஆரும் அணுகாப் பொழிலாய் இருந்தாலும்
நீருண் நினைவால் வருவார் உளரன்றே!
தேரும் இசையாய்! நசையாய்த் தெருமந்தோர்
வாரும் தெளிவாய் அமுதென் றுரைத்தாரோ?

351 அஞ்சாங் குழலாள் அறியா வகைசெய்ய,
''நெஞ்சார் நினைவே வெளியாம் அதனுலே
எஞ்சா துரைத்தீர் எனக்குப் புனைவாக;
நஞ்சாம் விழியீர்! அமுதம் அளித்தீரோ ?''

352 என்றேரூர் மொழியை எறிந்தாள்; அதுகேட்டு
நின்றேரூர் ஒழிந்தார் இலையோர் நெடுங்கண்ணூர்

நன்றே நவின்றுய்; நவிலும் உரைகேட்டுப்
பின்றுழ் குழலாய் மொழிவாய் எனச் சொல்வாள் :

353 ''வேனே நிகர்க்கும் அழகன் விறல்வெய்யோன்
பானே தருநீர்ப் பதனுர் மொழியாளன்
காளை நடையன் துவளும் கயற்கண்ணுய்
ஆனே அறிவேன் அறிகோ பெய''ரென்ருள்.

354 அய்யோ அறிந்தாள் நிகழ்வென் றினைந்தாளாய்
மையார் குழலாள் மருகி விழித்தொல்கப்
பையார் அணிப்பைந் தொடியென் றுரைபேராள்
பொய்யா வுரையென் றெடுத்தாள் புகல்வாளால்.

(வேறு)

355 வெள்ளி முளைக்க விறற்சங் கொலிகாட்டச்
சுள்ளி மதுத்தேடிப் புட்கள் சுழன்ருர்க்க
வள்ளி இசைமல்கி வையம் விழிப்பெய்தி
அள்ளிப் பருகக் கனுக்கண்டேன் அம்மேநான்.

356 வெண்சுதை விஞ்சுமோ அன்றிப் பசுந்தாமம்
திண்குலே வாழை கமுகிவை விஞ்சுமோ
கண்கவர் செய்யவி தானங்கள் விஞ்சுமோ
எண்வகை யின்றிக் கனுக்கண்டேன் அம்மேநான்.

357 வேழப் பிடர்வந்த வெண்பொற் குடநீரைச்
சூழ வலங்கொண்டு சுற்றம் மகிழ்தூங்கி
வாழி எனப்பாடி வள்ளல் நறுமெய்யிற்
ருழ விடுப்பக் கனுக்கண்டேன் அம்மேநான்.

358 மங்கல மார்க்கவும் மாலைகள் மாற்றவும்
தங்கலர் தூவவும் தாலஞ் சுழற்றவும்
திங்களும் வெங்கதிர்த் தெய்வமும் ஒன்ருகித்
தங்கிய தாகக் கனுக்கண்டேன் அம்மேநான்.

359 செந்தாள் மடவன்னஞ் சேர்ந்த துணையோடும்
அந்தா மரைப்பொய்கை சுற்றும் அழகேய்ப்பக்
கொந்தார் குழலாளும் கோலப் பிழம்பானும்
செந்தீ வலமாக் கனுக்கண்டேன் அம்மேநான்.

360 மாலை அசைந்தொல்க மாதவன் தாள்பற்றி
மேலைப் பழந்தொண்டர் மெய்மைப் புகழ்பாடிச்

சோலைக் கிளியன்னர் சுந்தரத் தேரேறிக்
கோலங் கொடுக்கக் கனக்கண்டேன் அம்மோநான்.

361 நன்னீர் தெளித்து நகையாடி முற்றத்தே
மென்னீர்க் கரத்தால் மெழுகி மலரிட்டாங்
''கின்னீர் மிகவாக'' என்று புகழ்பாடிச்
சின்னீர் இறைக்கக் கனக்கண்டேன் அம்மோநான்.

362 ''நில்லடி பைந்தொடி நீயறி காட்சியில்
வல்லடி யின்றெனின் வந்தவ ளன்னமோ
சொல்லடி'' என்றணி முல்லைதான் சொல்லவும்,
''சொல்கிலேன்; உண்மையே உன்சொல்''
எனச்சொன்னள்.

363 கன்னி கரும்பற்று காளை எவனேடி?
உன்னி உரைத்திட ஒண்ணுமோ என்றுர்க்குப்
பன்னி யுரையாடேன் பாவை அறிவாளால்
என்ன நகைத்தார்கள் 'ஏடி' எனக்கூவி.

364 பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்றென்றுர் செந்நாவார்
எய்யாமை காட்டிப் புனைந்தீர் எனுமன்னம்
பொய்யாகத் தூற்றிப் புகழ்ந்தாளால் உள்ளத்தே.

365 சோலை விளையாட்டில் சோர்ந்த இளநல்லார்
நீலத் துகிலிடை நித்திலப் பொற்றுவர்க்
கோலங் கொளுவிய கொந்தார் புனல்நங்கைக்
கேல வுறவாட எய்துவார் பூம்பொய்கை.

புனலாட்டு

(வேறு)

366 புறநெறி விலகிப் பின்னர்ப்
புனைகலச் சுமையும் நீங்கி
அறநெறி கண்ட அண்ணல்
அடியுறு தொண்ட ராகித்
துறநெறிப் போவா ரென்னத்
தொலைவிலாக் கலன்க ளென்னும்
உறுபொறை கழற்றி வைத்தார்
குடைந்திடும் விருப்பு வைத்தார்.

367 ஒண்கலன் கழற்றி வையாள்
ஓதியை ஒருசார் நீவிக்
கண்கலந் தொன்று காளை
கனிவொடு சூட்டு பூவாம்

எண்கலந் தொன்று பொன்னே
எடுத்தொரு கலையுள் வைத்தாள்
விண்கலந் தொன்று காதல்
வேட்கையின் விந்தை என்னே!

368 உறுப்பொடும் உவமை காட்டி
ஓதவோ மலரை யென்று
வெறுப்பொடு விரையப் பாய்ந்து
செல்வனர் போலச் சென்று
குறுக்கொடு நெடுக்கு மாகிக்
குடைந்தனர்; திவலை நீரால்
குறிக்கொடு மணப்ப வந்த
அளிப்பெருங் குலமும் துன்னு.

369 மூழ்குவார் மறைந்து போய்ப்பின்
மேலெழுந் தல்லிப் பாங்கர்ச்
சூழ்குவார்; மார்பில் தாக்குஞ்
சுரிவரால் காண இல்லார்;
ஆழ்குவார், எல்லா என்னை
அடித்தனை என்று கொண்டே
தாழ்குவார்; தாழ்ந்தோ மென்று
தாவிய கயலை ஓரார்.

370 கட்டறு வில்லை யொக்கக்
களிப்புறு வரால்கள் தாவும்;
விட்டெழு மம்பை மான
விரைகயல் துள்ளி வீழும்;
பட்டெழு பொரியை நேரப்
பயில்குறு மயிரை ஆர்க்கும்
மட்டெழு குழலி னுர்கள்
மகிழ்குவர் உள்ளம் பூத்தே.

371 வெண்கரு வானில் வண்ணக்
குழம்பெலாம் கொட்டி மாந்தர்
கண்கவர் கலையைக் காட்டக்
கதிரவன் விரும்பு வான்போல்
விண்ணெழு மலையி னின்று
விழுந்தெழும் அலையின் கண்ணை
ஒண்பெருங் கலவை யள்ளி
உயர்கலை எழுதக் கண்டார்.

372 மேற்றிசை வாயிற் செக்கர்
மிகையொளிப் பரிதி சேறப்
போற்றிசை என்ன வண்டு
புறமெலாம் இசைத்துப் பாட
ஈற்றிய மாலை என்ன
நணுகிய வானிற் கொக்கின்
தோற்றிய கூட்டஞ் செல்லத்
தோகையர் வியந்து செல்வார்.

373 ஆடியல் நடையின் வல்லார்
பண்களோ டமைந்த தாகப்
பாடியல் வல்லார் கொல்லிப்
பாவையே என்னும் பொற்புக்
கூடிய இயலார் தங்கள்
குழுவொடும் மனையிற் சேர்ந்தார்
நீடிய அளக்கர் புக்கு
நெடுங்கதிர் அமையு மாபோல்.

374 ஆய்வனை யவர்க ளெல்லாம்
அருமனை யமைய லாணர்
பூவலர் பொதும்பு வேட்கை
புறத்தொரு பக்க மீர்க்கச்
சேவன மறவர் கூட்டச்
செலவொரு பக்கந் தள்ள
யாவதோ வந்த காளன்
அடைந்தனன் தாதை முன்னே.

காளனும் அமைச்சரும்

375 ஐயனே என்று வீழா
அடித்தளிர் பற்றி ஏங்கா
வெய்துயிர்த் தழுது தேம்பா
எய்த்தனன்; விரையத் தூக்கி
மொய்திற லாள! முன்னர்
முன்னிய மறக்க வென்று
மெய்யுறத் தழுவிக் கொண்டார்
எய்தினேன் மைந்த னன்றே.

376 காடெலாம் பரவிச் சென்று
களனெலாம் அரித்துத் தெள்ளி
வீடெலாம் வெதும்பச் செய்த
வெண்டலை நீத்தக் காடு

நீடுலாம் வரம்பி னுள்ளே
நிலீலத்துநற் பயத்த தாகப்
பாடுலாம் மாந்த ரென்னப்
பாய்நல வமைச்சர் முன்னே,

வணிகமணி வருகை

377 முள்ளரை முளரிப் பூவும்
முள்முருக் கிதழ்க ளென்னும்
உள்ளறைக் கதவி னுள்ளே
ஒடுங்கிய முல்லை மொக்கும்
எள்ளினர்க் குவளை வள்ளை
எனுமிவை யமைந்து நெஞ்சை
அள்ளுமோர் கொடியைத் தந்தோன்
ஆர்வமாய் வருகை தந்தான்.

378 பண்ணியப் பொருட்க ளோடு
பருகிடப் பழத்தின் சாறும்
எண்ணிய ஈந்து பல்கால்
எய்திய உவகை மிக்குக்
கண்ணிய நன்றி கூறிக்
கையுறத் தழுவிச் சேர்ந்து
மண்ணிய யாக்கை யென்ன
மணமிறைத் தமைச்சர் சொல்வார்.

379 காவியங் கண்க ளேய்ந்த
கனங்குழை தந்த நல்லீர் !
மேவிய தவற்றை நீக்கி
மிகுபெரு தண்டப் பொன்னுல்
ஆவியும் படைத்துக் காக்கும்
அருணெறி பயின்ற நல்லார்
நீவிரே யன்றி வேறு
யாவரே உள்ளார் ஐயா?

380 மடியிலா வணிக வேந்த!
மற்றிது கருத்திற் கொள்க;
வடிதமிழ்க் கிளியன் னாளும்
வயமுறு புலியன் னானும்
படிபுகழ்ப் பெருமை நங்கள்
பகவனின் அருளி னாலே
கடிமணம் புணர்த்தக் காண்போம்
களிப்பெனப் பிறவு முண்டோ?

381 இன்னன பேசி நேர்வால்
விடையதும் மகிழக் கொண்டு
மின்னவிர் வாயின் மாடு
மேவிய வணிக ணுங்கு.
துன்னிய களிப்பு மிக்குத்
துணைப்புரு விரண்டு விண்ணில்
தன்னருஞ் சிறகர் தட்டித்
தாவுதல் கண்டு சென்ருன்.

திருமண அணிநலம்

382 நாட்கணி தேர்ச்சி யாளர்
நல்லணி வகுக்க வல்லோர்
ஆட்கணித் திருக்கை யாக்கும்
அரும்பணி கைவந் தோர்கள்
வேட்பவை குறிப்பி னுலே
விரைந்தறிந் தியற்ற வல்லார்
நாட்டமாய்க் குழும லானர்
நன்மணக் கடமை யாற்ற.

383 கடிமண வோலை கொண்டு
காவலர் அமைச்சர் மற்றும்
வடிநல அறிவர் வாய்ந்தோர்
வளர்படைத் தலைவ ருற்ருர்
பிடிமன நண்பர் இன்னேர்
பிறர்பிறர் தகுதிக் கேற்ப
அடியுறை வைத்து வாழ்த்தி
அஞ்சொலால் அழைத்துப் பின்னும்,

384 படிநிலம் பயிலு மாந்தர்
அனைவரும் அறியு மாறு,
வடிநிலா முகத்தி னுட்கும்
வளர்திணி தோளி னுற்கும்
கடிமணம் வம்மி னென்று
கருதிய நாளும் போழ்தும்
துடிபெறு முரச மார்க்கத்
தெருத்தொறும் முழங்கச் செய்தார்.

385 பூவிரிந் தொழுகு தீந்தேன்
புனலிடைப் படியு மாற்ருல்
மாவிரி யொழுக்கு மல்கி
மறித்தெழுந் தார்க்கும் நீர்மைக்

காவிரித் துறையி னேடு
கணக்கிலாத் துறைகள் கண்டு
தூவிரி மாந்தர் வாழ்த்தித்
தொழுதனர் நன்னீர் கொண்டார்.

386 மாளிகை அரங்கத் தோர்பால்
மணநிகழ் பந்தர் செய்வான்
சூளிகைப் புறத்தி லெல்லாம்
சுண்ணவெண் கலவை தீற்றித்
தூளிகைப் படல மென்னச்
சுழல்புகை வகைக ளிட்டுச்
சோளிகை வகையும் வைத்தார்
சொல்லரும் நறுமை சூழ.

387 ஒத்திய லளவ தாக
உயர்கலத் திறங்கள் மல்கும்
சித்திரத் திரைகள் கட்டிச்
செவ்வணம் இலங்கச் செய்தார்.
வித்தகக் கரிகால் வேந்தன்
விரும்புமா வடவர் நல்கு
முத்துடைப் பந்த ரென்ன
முடித்தனர் கலையின் வல்லார்.

388 ஒருபெரு வேழக் கைபோல்
உருவவொண் வாழை நட்டார்;
தருகொடைக் கையை யொக்கும்
தாழ்குலத் தெங்கு நட்டார்;
திருவமை தெரிவை பொன்ணண்
கழுத்தெனக் கமுகு நட்டார்;
மருவளர் கொடிக ளோடு
மலர்ப்பெருந் தொங்க லிட்டார்.

389 வெள்ளிவெண் ணூடுக்கு மென்றும்
விரைபல கொடிகள் என்றும்
வள்ளிதழ் மலர்க ளென்றும்
வகைதொடர்த் தொகுதி என்றும்
உள்ளமை புள்ளி சுற்றி
உருப்பெறு சகட மென்றும்
தெள்ளிய அரிசி மாவால்
திகழுமால் கோல முற்றம்.

390 விண்ணியல் தெய்வ மாதர்
விழைவுறு விழவு நோக்கிப்
பண்ணிய தென்னக் காணும்
பயில்நிற வான விற்போல்
புண்ணிய நறுநீர் வார்த்துப்
புறம்புறம் ஒளியும் வைத்துக்
கண்ணிய மணத்தை நோக்கிக்
கண்டனர் வனவு மாதோ.

391 கோழியர் கோமான் வாழ்க;
குடியெலாம் இனிது வாழ்க;
வாழிய தெய்வக் காதல்;
வயங்குக மனையின் மாட்சி;
வாழிய அன்ப ரீட்டம்;
வழிவழிச் சிறக்க வென்று
பாழிய கொடியிற் றீட்டிப்
பாங்கெலாம் திகழ வைத்தார்.

392 அவ்வவர் மனையின் மல்கும்
அணிவிழா என்ன நேர்ந்து
செவ்விய அழகு பேணிச்
செய்தனர் புறத்தில் உள்ளும்
கொவ்வைவாய்க் கொடிச்சி கோலக்
குஞ்சர மைந்த ரெல்லாம்
அவ்வவர் மணமே என்னும்
ஆர்வமே எய்தி நின்றார்.

கேசியைத் துயிலெழுப்பல்

393 ஈங்கிவை அமைவ தாக
என்புடன் உயிரும் நல்கும்
பாங்கியர் நங்கை கேசி
பள்ளிகொள் பளிக்கு மாடத்
தோங்கிய வைகற் போழ்தில்
ஒலியிசை எழுப்பிப் பண்ணூர்
தீங்கவி பொழிய லானூர்
திருவிதழ் திறத்தல் வேட்டே.

(வேறு)

394 இக்கன்ன இன்மொழியாய்! ஈர்ம்பவழச் செவ்விதழாய்!
மொக்கன்ன வெண்ணகையாய்! மோட்டுப் பிறைமுகத்தாய்!
அக்கன்ன பல்வரிசைப் பாவாய்! அணிவனையாய்!
சொக்கன்ன நன்முதுகிற் சோர்ந்த மணிக்குழலீ!

திக்கெங்குந் தும்பித் திருக்கூட்டம் தேனுடிப்
புக்கங்கு சோலைப் புறமெல்லாம் ஆர்ந்தெழும்பிச்
செக்கர்கொள் போழ்துக்குச் சேர்ந்த பெருந்தூதாய்
மிக்கார்தல் கண்டாய்! விழித்தருளாய் எம்பாவாய்!

395 திங்கட் குடையின்கீழ்த் தேர்ந்த அரசோச்சி
அங்கட் புவனம் அளிக்கும் அருள்முகத்தாய்!
பங்கப் பழனம் பயிலா வனப்பிள்ளாய் !
வங்கக் கடலலைபோல் வார்ந்த மணிக்குழலீ !
செங்கட் கதிரோற்குச் சேவல் இசைபாடிப்
பொங்கிக் கரந்தட்டிப் போபோ விருளென்று
கங்குல் கழிப்பிக்கும் காட்சி நிலைகண்டாய்!
நங்கைகக் கணியாய்! விழித்தருளாய் எம்பாவாய்!

396 பச்சைப் பசுங்கிள்ளாய் ! பாவேந்தர் சொற்பொருளாய்!
இச்சைக் கிருப்பாகும் வேட்கைக் குலமுதலாய் ?
அச்சோ எனவெய்க்க ஆடவரைச் செய்விப்போய்!
நச்சோ டமுதம் நனிவிரவ எய்கணையோய்!
கச்சைப் படாம்போர்த்த காரிகையாய்! நல்லோர்கள்
இச்சை மிகப்பாடி வெண்பொற் குடங்கொண்டு
நச்சுந் தடமூழ்கிக் கோல நலங்கண்டார்!
முச்சி மயிலாய்! விழித்தருளாய் எம்பாவாய்!

397 நெஞ்சப் படாத்துறையும் நேயத் திருவுருவாய் !
அஞ்சொற் குயிலாய்! அணிமயிலாய்! ஆரணங்காய்!
கஞ்ச மலரைத் துயில்நீக்கிக் கண்மலர்த்திச்
செஞ்சொல் இசைபாடும் தும்பிக் கொருதுணையாய்!
வஞ்சிக் கொடியாய்! உன் வான்மணத்தைக்
காண்பான்போல்
பிஞ்சுக் கதிரோன் பிறந்தான் குணதிக்கில்
அஞ்சு குழலும் ஒருகுழலாம் ஐங்குழலாய் !
துஞ்சா விழியைத் திறந்தருளாய்! எம்பாவாய்!

398 கொட்டுங் கொடைக்கையாய்க் கூர்த்த வடிவாகி
வெட்டும் விழியழகி! வேளன்ன காளையான்
இட்டு மணம்புரிவான் ஏறுநடை காண்பார்கள்
எட்டுத் திசையும் இடமிரா வென்ருர்க்க

மட்டு மலர்க்கோயில் செல்வான் மணிமார்பன்;
நட்டுந் திரைப்புருவ நல்லிமையை நீகர்த்திச்
சுட்டும் பெருவனப்புச் செய்வான் துயிற்போர்வைப்
பட்டு விலக்காய்! விழித்தருளாய் எம்பாவாய்!

399 கண்ணுக்கு மைதீட்டிக் காரார் குழல்நீவிப்
பெண்ணுக் கணியாய்! பிறைவான் நுதலகத்துப்
பண்ணுந் திறத்தால் பலவாம் குழம்பெழுதி
நண்ணுங் கரந்தோள் நறுந்தொய்யிற் பாங்கெல்லாம்
ஏண்ணுங் கலைசேர் எழுத்தெழுதிக் கைவல்லான்
வண்ணக் குழம்பால் வரையும் இயலேய்ப்ப
மண்ணைத் தலைக்கூடி நின்ரேரும் மடமங்காய்!
எண்ணி யருளாய்! விழித்தருளாய்! எம்பாவாய்!

400 வேதப் பொருளாம் விழுமியோய்! வீரப்பேர்
நாதன் நனிபணிந் தேத்த மிகுவூடற்
போதுந் தணியாய்ாய்க் காட்டப் புகுவாய்போல்
ஏதும் அறியா அடியோமை எய்ப்பிப்பாய்!
யாது மொழிகோம்? அரிவையாய்! ஊமையோ?
காது செவிடோ? கழிமடியோ? இன்றேயும்
ஓது குரல்கேளா தோங்கி யுறங்குதியால்!
வேதை தவிர்ப்பான் விழித்தருளாய் எம்பாவாய்!

(வேறு)

401 வெண்திரை மஞ்ச மீது
விழிப்புடன் உறக்கங் கொண்ட
கண்மணி கேசி ஆயங்
கவியிசை செவியி லேற்று
வெண்முகில் இழிந்து வந்த
விண்மகள் இவளாம் என்னப்
பெண்களுக் குவகை தந்தாள்
பெய்யணை நீங்கி மாதோ!

அழகுக்கழகு செய்தல்

402 கண்ணிய பொழுது தேர்ந்து
கலவையஞ் சேறு சாந்தம்
நண்ணிய நான மப்பி
நுங்கையை வாச நீரால்

பெண்மையைப் பெருமை செய்யும்
பெற்றியார் மண்ண வைத்தார்
எண்ணுமோர் திங்கட் கண்ணும்
இழந்திடா மணத்தில் அம்மா!

403 பாலடை துகிலோ விண்ணின்
பாலடை முகிலோ பாம்பு
மேலடை யுறையோ காம்பு
மெய்புகு சொலித்தோ என்னே
நூலடை பெருமை நங்கை
நுண்ணிடை தவழு மாறு
மாலடை மகளிர் யாத்த
மணஞ்செறி அறுவை யம்மா!

404 பூந்துகி லுடுத்த பின்னர்ப்
புகைவிரை செலுத்தும் நோக்கார்
ஏந்திய நறிய வாசம்
இந்தளக் கனலி லிட்டுத்
தேர்ந்தனர் அளவி னேடு
தெளிபுகை பரப்பும் போது
மாந்தளி ராட்டி வெண்கார்
இடைப்புகு மயிலே ஒத்தாள்.

405 சூடிய பூவு நீத்துச்
சுடர்விடு கலனு நீத்துக்
கூடிய புனைவு நீத்துக்
கூந்தலும் பரவித் தாழ
வாடிய மருங்குல் அன்னம்
வரிதவழ் விழிய ள[illegible]
ஆடியின் முன்னர் நின்ரு[illegible]
அவட்கெதிர் அவளே நின்ருள்.

406 மங்கல முரச மார்ப்ப
மணநிறை நெய்கள் பூசிப்
பொங்கிய புலியை மாய்த்த
போதகக் கொம்புச் சீப்பால்
அங்குழல் நீவி ஐம்பால்
அணிவகை செறியப் பின்னி
மங்கையர் குழுவும் ஆண்மை
மருவுமா றழகு செய்தார்,

407 நிறைமதி துண்ட மாகி
நிற்பதோர் தோற்றம் போலும்
பிறைமதி நெற்றி மீது
பிறழ்ந்திடு பாய்பு முண்டோ ?
கறைநிறை அதுவும் வேரூர்
இருலதின் பகுவாய் ஏற்கும்
முறையதும் உண்டோ என்ன
முச்சியிற் சுட்டி வைத்தார்.

408 காவிசேர் கமலப் போதில்
கண்ணிய அளியும் வெண்மைத்
தூவிசேர் அன்னம் மற்றும்
தூணவரு பறவை யெல்லாம்
ஆவிசோர்ந் தரற்றல் போல
அணியிழை முளரிச் செந்தாள்
மேவிய சிலம்பு மிஞ்சி
பரிபுரத் தொகுதி ஆர்க்கும்.

409 முகிழ்விரல் மொய்க்கும் வண்டார்
முன்கரம் தவழும் மின்னல்
நகுசெவிப் புரளும் சேல்கள்
நல்லரைப் படிந்த பாம்பு
வகுத்திவண் உரைப்ப தாயின்
வளரொளி காலும் ஆழி
மிகுமொளி வளையல் மேன்மைக்
குழையொடும் பட்டி யாமால்.

410 மின்னெளி பரப்பிக் காட்டும்
மேகலை காஞ்சி யிட்டுத்
தன்னெளிச் சலாப மோடு
தகைபெறு பரும மிட்டார்
பொன்னெளி பரப்பு வார்போல்
விரிசிகை புகலச் சேர்த்தி
மன்னெளிப் புலியன் ஞான
மருட்டுமோர் வகைமை கண்டார்.

411 கட்புறம் கருமை தீட்டிக்
கவிரிடைச் செம்மை தீட்டி
நட்புறு பற்கள் மாட்டு
நறுமிள நீலந் தீட்டிக்

கொட்புற வணிய லானர்
கொழுவிய சுணங்கன் நாவோ
டொட்டிய அடியும் வண்ணம்
பட்டதேல் கூற லுண்டோ ?

412 ஒப்புமை காட்ட வொண்ணு
ஒருத்தியை விரும்பு மாற்ருன்
ஒப்பனை செய்வான் எண்ணி
ஒண்திறம் செறிய யாக்க
ஒப்பிலாள் அழகில் யாவும்
உடைந்திடல் கண்டு கண்டு
துப்புறழ் பவழ வாயர்
துடித்தனர் 'மடையம்' என்றே.

413 செம்மனை வகுத்த பின்னைச்
செல்பவர் நோக்கி நோக்கி
இம்மனைக் கிதனைச் செய்தால்
எழில்மிகும் என்னல் போல
அம்மனைக் கேசிப் பாவைக்
கமைவதோர் அழகு காட்டித்
தம்மனத் தகுதி போலத்
தனித்தனி உரைக்க ஊருள்,

ஊரவர் உவகை

414 கரியிடை யூரு வாரும்
கசிந்தெழு விலாளி தள்ளப்
பரியிடைத் தாவு வாரும்
தேரிடைப் பயிலு வாரும்
அரிதமை பொறியி னேறி
அயர்வற எய்து வாரும்
நெரிதலால் வீதி யெங்கும்
நிற்பதற் கிடமு மின்ருல்.

415 வதிவதில் விருப்ப மின்றி
வாழ்வதை வெறுக்கு மிக்க
முதியரும் கிளம்ப லானர்
முடுகிய நடையி னென்ருல்
மதிமுக மடவார் வெள்ளம்
மார்ச்சனை பெருக வோங்கிக்
குதிகொளும் இயல்பு காட்டிக்
குறித்திட இயல்வ தாமோ ?

416 நில்லென நிறுத்து வாரும்
நெரிவுதாள் நொந்து மேலே
செல்லெனச் செலுத்து வாரும்
செயலறச் சிக்கி யோர்க்கு
வல்லென உதவு வாரும்
வழியிடை நின்று நின்று
கல்லெனு மொலியில் மூழ்குங்
கனமணி இல்லஞ் சேர்வார்.

417 படையமைத் தெழுந்த வீரர்
பாணியல் முரச மார்க்க
நடையமைத் தெழுந்த தானைத்
தலைவரு மமைச்சும் நற்றேர்
புடையமைத் தெழுந்து வேந்தன்
பொன்மனை யகன்று செல்வக்
குடையமைத் தெழுந்தோ னில்லங்
குறுகினர் உவகை கொண்டே.

418 கடலென முழக்க மேற்றுக்
கடல்தரு நிதியம் வீங்கிக்
கடலென விரிவு கொண்ட
கடற்புகார் நகரங் கூடிக்
கடல்வள வணிகன் வீட்டில்
கலந்ததை அறியின் வேரோர்
கடலிவண் வந்த தென்று
கழறுவ தன்றி இன்றுல்.

419 திருவிழி மலரு வாரும்
தெருவரை உவந்து சென்றங்
கிருகரம் இணையப் புல்லி
வருகென அழைத்துத் தூய
அரியணை இருத்து வாரும்
அருமணக் கலவை அள்ளி
உரிமையாய்ப் பூசு வாரும்
உவகையர் ஆகி நின்றுர்.

420 உள்ளகம் தூண்டும் அன்பால்
உயர்மணி ஆண்டும் ஈண்டும்
கள்ளவிழ் பூவும் பொன்னும்
கதிர்மணி அறுவை இன்ன

வெள்ளமாய் ஈந்து பின்னும்
விரும்பிய வகையி னெல்லாம்
கொள்ளுமா றுணவு தந்தான்
குறைவிலா உவகை தந்தான்.

421 கண்களைக் கொண்ட பேற்றைக்
கண்டதும் இன்னே என்று
பெண்களும் ஆண்கள் தாமும்
பேசுமா றமைந்த காளன்
பண்ணவன் போதி நாதன்
பைங்கழல் பணிந்து செல்வன்
புண்ணிய மனையிற் போவான்
எழுந்தனன் தோழர் சூழ.

422 ஆயிரங் களிற்றுள் தேர்ந்த
அரும்பெறல் ஒன்றில் ஏறித்
தூயநன் மலர்கள் சிந்தத்
துணைவலார் தொடர்ந்து செல்லப்
போயின காளற் கண்டு
பூம்புகார் மாந்த ரெல்லாம்
ஏயின வண்டு மாளுர்
இசைத்திடும் யாழு மாளுர்.

காளனைக் கண்டோர் களிப்புரை

423 ஆளியல் வேந்தன் வேழ
அணியெருத் தேறி வந்து
நாளுநல் லவனி மாதை
நடுக்கற மணந்த வாபோல்
காளனும் பணைத்தோள் வீரன்
களிற்றெருத் திவர்ந்து தானைச்
சூளிகை பதித்துச் சென்றுன்
சுடரொளிக் கதிரோன் போன்றே.

424 மாடமும் மனையும் வாயில்
மருங்கரும் வீதிப் பாலும்
ஏடவிழ் தாரி னனை
எதிர்கொள நோக்கி நின்ற
ஆடமை தோளின் நல்லார்
அகமெலாம் அழுத்திச் சொல்லால்
''ஆடவர் அழக ரென்பார்''
''அவர்க்குளே அழகன்'' என்பார்.

425 கோடிய புருவக் கூர்வேற்
கூந்தலம் மாத ருள்ளே
''ஏடியோ நீவிர் கண்ட
வெழிலுறுப் பனைத்து மாமோ?
நீடிய அழகன் தோளே
நிறைந்ததென் நெஞ்சத்'' தென்று
நாடிய ஒருத்தி கூற
''நவின்றது தவரும்'' என்று.

426 ஒண்முகம் அழகென் பாரும்
ஒருக்கணித் தீர்க்கும் வன்மைக்
கண்களே அழகென் பாரும்
கால்களே அழகென் பாரும்
எண்ணினர் ஒவ்வொன் ருக
எடுத்ததே கொள்கை என்று
நண்ணிய பொதுமை நோக்கா
நயமிலர் போல அம்மா!

427 மங்கையர் மனமும் ஈர்த்து
மலிர்வளைக் குலமும் வீழ்த்துத்
தங்கிய துகிலும் சோரத்
தம்மகம் கவருங் காளை
நங்கைமீர் நல்ல னல்லன்
நயத்தகு பண்ப னல்லன்
எங்கணுங் காணற் கில்லா
எழிலுடைக் கள்வ னென்ருர்.

428 ஆண்களின் அழகு வெள்ளம்
அடிகளாய்த் திரண்ட தென்பார்;
மாண்புறு மகளில் நோற்ருள்
மங்கைநம் பாவை யென்பார்;
காண்பவர் உறுப்புள் நோன்மை
கண்களுக் கமையு மென்பார்
ஏண்புகார் நகர மொன்றே
எய்திய பேரும் என்பார்.

429 கொம்பியல் கோல யாக்கைக்
கோதையை அமைச்சர் தந்த
நம்பியோ டுள்ளுள் எண்ணி
நன்றென மகிழ்கொண் டாடி

விம்மிய வுள்ளத் தோர்கள்
விரைமணக் கலவை தூவப்
பொம்மலால் பொலியப் போனான்
போதகம் அனைய கானன்.

430 பஞ்சியல் அணையிற் பட்டு
மென்றுகில் மறையப் போர்த்துப்
பிஞ்சிதழ் மலர்க ளோடு
பெடைபுணர் அனத்தின் தூவி
எஞ்சலில் வகையிற் றூவி
எழில்தவழ் விசியின் மீது
மஞ்சனை அமரச் செய்தார்
மார்ச்சனை பெருக மாதோ.

மணவிழா மாட்சி

431 நாட்கணி கடிகை மாந்தர்
நற்பொழு தறியக் காட்ட
வாட்கணுள் உரிமைச் சுற்றம்
வருகென அழைத்துச் செல்வார்
தாட்பட வருத்தங் கொள்வாள்
தரணிமா தென்னு மெண்ணம்
ஆட்பட நடப்பாள் போல
அவளடி வைத்துச் சென்றுள்.

432 பளிக்குநீ ராற்றி னூடு
பாய்ந்தெழும் அலைகள் ஆர்ப்பக்
களிக்குநீர் அடக்கி அன்னம்
கடும்பொடும் செல்வ தேய்ப்பத்
தெளிக்குநீர் மண்ட பத்துத்
திகழ்வளைக் குலங்க ளார்ப்ப
அளிக்குநீர் அன்னத் தோடும்
அரிவையர் நெருங்கிச் சென்றார்.

433 வெம்மையும் தண்மை தானும்
வேண்டுமால் உலகுக் கென்றும்
செம்மையாம் வன்மை மென்மை
சேர்தலே நன்மை என்றும்
இம்மையின் ஆய்வுப் பேற்றுல்
இனிதுணர் பெரியர் ஆங்குக்
கொம்மையின் அமர்ந்தோன் பாகம்
''அம்மையே அமர்க'' என்றார்.

434 மண்ணிடைப் புகழால் வாழும்
விண்ணவர் அன்ன சான்றோர்
அண்ணலும் அவளும் பந்த
ரகத்திடை முறையாய்ச் சேர்த்துப்
பண்ணியம் முழங்கி ஓங்கப்
பாகமாய் வைத்த தோரின்
பெண்ணுரு வொருபால் கொண்ட
பெருந்தகை கோல மாமால்.

435 பாலன மொழியாய் உன்னைப்
பாரிட மறியு மாறு
மாலையால் செறிய யாப்பேன்
என்பனன் போல நங்கை
கோலமார் கழுத்தி லிட்டான்;
குஞ்சர மைந்த வுன்னைச்
சாலவுஞ் செறிய யாப்பேன்
என்பனள் போல யாத்தாள்.

(வேறு)

436 அவ்வழி ஆர்த்தெழ லாயின சங்கம்;
செவ்வனே வங்கியம் தாரையோ டார்த்த;
நவ்வியோய்! வாழ்கென நன்முர சார்த்த;
செவ்வழிப் பண்ணெடுஞ் சேர்ந்தன யாவும்.

437 அங்கைக் கனியென ஆய்ந்தவர் மக்காள்!
இங்குள தன்மையோ டென்றுநீர் வாழ்மின்!
தங்கிய நல்லறம் தாங்குமின்! பொங்கிச்
செங்கரம் பற்றிய செம்மையோ டென்ன.

438 வில்லகம் வெளவு விரலெனச் சேர்மின்!
கல்லெனக் காட்டிய கற்பினைக் காமின்!
நல்லவே செய்யுமின் நாடொறும் யாண்டும்!
இல்லறம் எய்தும் இருவரும் என்ருர்!

439 மங்கல வாழ்த்தொலி மல்கின எங்கும்;
மங்கலப் பண்ணெலி பல்கின எங்கும்;
மங்கல நல்லிசை ஓங்கின எங்கும்;
மங்கல மாநகர் ஆயதவ் வூரே!

(நான்காவது கடிமணப் படலம் முற்றிற்று.)

5. மனையறப் படலம்

440 முருகு விம்முபூங் கோதைகொள் நன்மணம்
பெருகி நின்றதைப் பேசினு முன்னிவண்
பொருவி லாவவள் போற்றிய இல்லறம்
பெருகு மாற்றினைப் பேசுவ தாயினும்.

441 மணஞ்செய் முத்தமிழ் மாலைவேய் மன்னவன்
பிணங்கு செய்கையன் காளனுல் முன்பொருள்
தணந்த யாவரும் தாழ்வறக் கொண்மெனக்
குணஞ்செய் வாணிகன் கூர்பொருள் வீசினுன்.

442 குளிறு வார்முர சார்ப்புறப் பின்னரும்
களிறு கொள்பொருள் கண்ணிய தேர்ந்தறம்
மிளிரு மாறதை யீந்தனன் கார்முகில்
வெளிற லாயது வீங்கிய ஈகையால்.

443 நினைய நீளறம் மன்னவன் நல்கவும்
வனையும் பொன்முடி யொன்றிலா வாணிகன்
புனையும் மங்கலப் பேற்றினர் இன்புற
மனைய றந்தெளி மாந்தரோ டாய்ந்துபின்.

444 மழலை யம்மொழி மென்கிளிக் கீந்தொரு
பழகு பூங்குயிற் பண்ணிசை கொண்டவள்
குழக னேடுயர் இல்லறங் கொள்ளுவான்
அழகு மாளிகை ஆக்கினன் மாமணி.

445 மரத்தை அன்றியும் தன்னினம் வெல்லுவல்
லரத்தை ஒப்பதாம் ஆரணங் காயினுர்
வரத்தி னேர்கொடைப் பத்திரை வாழ்மனைப்
புரத்தி லேயுறப் போக்கினன் அண்ணலே.

446 விழித்த கண்ணிமை மூடுமுன் வேண்டிய
முழுத்துஞ் செய்தணி மூரலாய் நிற்பவர்
பழுத்த நுண்ணிசைப் பண்வலர் பாவலர்
வழுத்து வாரொடுங் கூடுமா ருக்கினுன்.

447 பெருகு மோரையிற் பேர்மனை எய்துவான்
கருது நெஞ்சினன் காஅயின் தாதையோ
ருருகு நீரனுய் உள்ளகம் வெம்பினுன்
அருகி லேபிரி வாகினும் ஆற்றுமோ ?

தனிமனை வாழ்வு

(வேறு)

448 செல்லாடிய உயர்வோடணி செறிவாகிய வனப்பார்
எல்லாடிய வொளியோடுயர் இருளோடிய மனையின்
மல்லாடிய திறலாணெடும் மடமானெனு மியலாள்
சொல்லாடிய உணர்வோடவண் மகிழ்வாடிய சென்ருள்.

449 தஅயோங்கிய தனுவோவெனத் தவழ்ந்தோங்கிய தகைமை
இஅயோங்கிய இருபாங்கரும் திறலோங்கிய யவனக்
கிஅயோங்கிய கிளர்மாமணி மனமாளிகை வஅவில்
கொஅயோங்கிய குழுவார்களின் இயலோங்கிடக்
கண்டார்.

450 வெய்யோணெளி எய்தாவகை செறிவாகிய கொடிகள்
எய்யாவஅ முதலாய்வளர் எழில்மாளிகை முகப்பைச்
செய்யாவனப் பிதுவாமெனச் செல்வோருளம் நினையப்
பெய்யாவகை அமைவாகிய கொடிமாளிகை கண்டார்.

451 நுழைவாயிலின் எதிராயுள இருபாங்கரும் நிறைநீர்க்
குழைவாயிலின் எழுமாறுள பொறிமாணெடு பின்னும்
புழைவாயிலின் வழியாலுள புனல்நீர் செலும் அமைவும்
விழைவாயிலின் நுழைவாரவர் விருப்பாயினர் கண்டார்.

452 முறுக்கேறிய சுழல்வாலொடு முதுதாள்பட விரையும்
உறுக்கேறிய கிளர்வாய்ப்புலி வலிமாய்த்துள எருதின்
இறுக்கேறிய இரண்டாகிய இருங்கொம்புடைத் தலைகள்
அறுக்கேறிய தலையோடுள அருவாயிலைக் கண்டார்.

453 நறுமாமணம் இளங்காலொடு நனிதாய்வரு புழையும்
உறுமாந்தளிர்க் கிணையாயமை உருவோடுள தளமும்
தொறுமாமலர்க் கிணையாமெனும் தொடியாரெடு விளக்கும்
பெறுமாமனை விருந்தோரமர் திருமாளிகை கண்டார்.

454 சிலையார்புரு விமையோடெழச் செவ்வாயிதழ்த் துவள்வும்
கலையார்திரு விழியோடுணர் பொறியாயின அசைவும்

இலையாமுரு வெழிலோவியந் தனைநாடிய கலைஞர்
நிலையாவதும் தனதேசெயும் கலைமாளிகை கண்டார்.

455 வாழுங்குழல் மடவார்மொழி யாழுங்குழல் எனினும்
யாழுங்குழல் இசைமேம்பட நடமோங்குதல் கருதிச்
சூழுஞ்சுவர் புனையோவியஞ் சுடர்வாகவு மொருசார்
வீழுங்கலை யரங்கோடுள இசைமாளிகை கண்டார்.

456 பாடுங்குயில் ஆடும்மயில் தேடுங்கினி யோடும்
காடும்வளர் மேடும்மகன் ரோடுங்கலை கூடித்
தேடுங்கலை நீடும்பொருள் கூடும்மென நாடிப்
பாடுந்தொடி வாழும்எழில் அந்தப்புரங் கண்டார்.

457 புனைமாளிகை உணல்மாளிகை துயில்மாளிகை எனவே
நினைமாளிகை பலவாயுள நிலையோர்ந்தவ ணிருந்தே
நனையார்நிலைப் பசுஞ்சோலையும் நறும்பந்தரும் கடந்து
கனையார்குரல் மிகவாயெழுங் கடிகாவிடங் கண்டார்.

458 செந்தாமரை வெண்டாமரை கழுநீரொடு பானல்
இந்தீவரம் வெண்ணெய்தலும் அரக்காம்பலும் விரவி
வந்தாருளம் கவர்ந்தாடவும் வதிந்தேதகவும் ஊட்டும்
கொந்தார்தடங் குளிர்பூந்தட முவப்போடவர் கண்டார்.

459 மனையோமரப் பொதும்போமலர்த் தடமோமதி நிலமோ
நினையாவகை நமக்காகவே அமைவானதென் றுவப்பார்
முனைவோரறி முதுநூனெறி முறையாலறம் புகுந்தார்
நனையார்நிழல் நறும்போதியி னமர்நாதனை நினைந்தே.

(வேறு)

460 சங்கு தருமுத்தஞ் சான்ற தகையாட்டி
துங்கன் கரம்பற்றிப் போந்த மனைக்கண்ணே
கொங்கு மலரம்பைக் கோலச்சிலைத் தென்றல்
பொங்கி எடுத்தெய்யும் 'போதோ' அதுவம்மா!

461 என்பு முயிரும் இணைவாகி இல்வாழ்வில்
அன்பு நலங்கொண்டோர் ஆட்சி புரிவார்கள்
பின்பு வருவோம் எனவெண்ணிச் செல்வான்போல்
குன்றில் மறைந்தான் குடபால் கதிரோனே.

462 என்மாலை நீயென்னும் ஏரார் தடந்தோளான்
தன்மாலை தானென்று தையல் இனிதிருக்க

என்மாலை ஈதென்றே காட்ட வருவாள்போல்
நன்மாலைப் போழ்து நணுகிற்றுல் அப்போழ்தே.

463 ஆழிக் கடற்றெய்வம் அம்மை மணத்திற்கு
வாழி இசைபாடி வாய்த்த பொற் ருலத்தை
ஊழிப் பொருளாக ஓங்க விடுத்தாள்போல்
பாழி முழுத்திங்கள் பாய்ந்ததால் விண்மீதே.

464 இன்பத்தி னெல்லை இதுவென்று காண்பதே
என்னெஞ்சு காவலர்க் கேற்கு மியல்பென்றே
அன்பொத்த நங்கை அணையப் புறம்புல்லி
முன்பொத்த காளன் முதிர்நலம் சொல்வானுல்.

நலம் புனைந்துரைத்தல்

(வேறு)

465 இனமார் வளையல் இனிதி னுங்கும்
வனமார் மயிலின் வார்ந்த கூந்தல்
வனமார் மயிலின் வார்ந்த கூந்தல்
கனமே யன்று வேறு வேறு.

466 அன்ன நடைபோல் அணியாய் இயலும்
பொன்னின் மயிலைப் பொருந்து மருங்குல்
பொன்னின் மயிலைப் பொருந்து மருங்குல்
மின்னல் அன்று வேறு வேறு.

467 அஞ்செஞ் சிலம்பர் அரற்றுஞ் செய்ய
கஞ்ச முகைசேர் மயிலின் கண்கள்
கஞ்ச முகைசேர் மயிலின் கண்கள்
நஞ்ச மல்ல வேறு வேறு.

(வேறு)

468 தூக்குந் துலையால் பெயர்பெற்றுர் நின்ருதை
நோக்குங் கலையால் பெயர்பெற்று யானீயும்;
வீக்கும் பரும வியன்மார்பே என்னுவி
காக்கும் வகைமை கடைக்கூட்டி வைத்ததுவே.

469 ஓடித் திரட்டும் தெளிவுற்றுர் நின்ருதை
ஆடித் திரட்டும் தெளிவுற்று யானீயும்
நீடித் திகழும் நெறிமார்பே நின்றென்னைக்
கூடித் திகழக் குமைத்ததாம் வெம்மைத்தே.

470 வங்கக் கலத்தால் வளங்கொண்டார் நின்ருதை
அங்கட் புலத்தால் உளங்கொண்டா யானீயும்
பொங்கித் திரண்ட பொலிமார்பே ஈண்டைக்கென்
வெங்கட் சிறைக்கு விடுதலே யாயிற்றே.

(வேறு)

471 எய்யாக் கடல்முத்தம் ஏய்ந்த கழிமுத்தம்
பொய்யாம் வகைசெய்யும் போந்த நினமுத்தம்
பொய்யாம் வகைசெய்யும் போந்த நினமுத்தம்
மெய்யாங் குலமுத்தம் மேதகாய்! கேட்டைக்க.

472 போதார் நறுந்தேனும் போழ்ந்த பழத்தேனும்
தீதாம் வகைசெய்யும் தெய்வ இதழ்த்தேனே
தீதாம் வகைசெய்யும் தெய்வ இதழ்த்தேனே
ஓதா நறுந்தேனுல் ஒண்டொடி! கேட்டைக்க.

473 கண்ணுங் கலேயம்பால் கண்டார் உளந்தாக்கும்
பெண்ணுர் அமுதே பெருந்தகாய் பேசுவாய்
பெண்ணுர் அமுதே பெருந்தகாய் பேசினுல்
விண்ணுர் அமுதாம் விளங்கிழாய்! கேட்டைக்க.

(வேறு)

474 ஆணை இதுதிங்காள் ! ஆயிழைக் கொவ்வாயாய்
நாண மிலிநீதான் நானிலத் தெல்லாரும்
காணும் படியாக நிற்கும் கறைபெற்ருய்
சாணை பிடித்தாலும் சாலாதா லுன்னெளியே!

475 ஏர்நெற்றி ஒப்பதால் ஏந்தல் உனேயொன்ருய்ச்
சீர்நெற்றி வைத்தானுல் ; செம்மாந்து நீநின்ருல்
பேர்பெற்ற வுன்வாழ்வு பேதாய்! பிழைவாழ்வாம்;
நீர்பெற்ற செஞ்சடை மேனிற்பாய் நீயேயோ?

476 வெள்ளே மதியே விரைவதால் ஒன்றில்லே
பிள்ளேப் பெரியள் முகம்போல ஒண்மையாய்
உள்ளங் கவரின் உனக்குண்டால் என்காதல்
அள்ளிப் பொழிவாய் அருளாட்டி நாண்படவே!

477 ஆரம் அணிவித்தார் அந்தோ அறிவில்லார்!
தாரம் அணிவித்தார் தாங்கா இடையென்று

வாரம் மொழிவான்போல் வாய்த்த பொழுதாக்கி
ஆரத் தொடங்கினன் அம்மவோ நல்வாய்ப்பே.

இன்பத் துய்ப்பு

478 வீரக் கலைவல்லான் வேய்த்தோள் அரிவையினைச்
சேரத் தழுவினன்; செவ்வாய் மணிமுறுவல்
கூரச் செறிந்து சுவைவெள்ளத் தாழ்ந்தாடி
ஆரப் புகுந்தார் அவருலகு புத்துலகே!

479 போகப் புதுவாழ்வும் பொன்றுச் சுவையூட்டும்
நாக நனிவாழ்வும் நாடல் எளிதன்றுல்
பாகம் பயிலும் பசுந்தாமச் செய்யாளின்
ஆகஞ் செறிந்தான் அருவாழ்வே வாழ்வாமால்.

480 யாக்கை பொருளிளமை நில்லா எனவின்பம்
நோக்கா வியலாளர் நொய்யரால் என்றுபூஞ்
சேக்கை புகுந்தார் சிறந்தார் சிறையாஅன
'கோக்கோக்' குரலோங்கத் தோள்மேலர் நைந்தாரால்.

481 "துன்ப இருளோட்டும் தூயோன் கொடியாயும்,
இன்ப இரவோட்டும் தீவாய் இழிகுரலே
வன்பு செறிசேவால் வாய்த்ததேன்? வாழிநீ
அன்புப் பகையும் உனக்குண்டோ?" என்பாரால்!

482 காகா எனக்கத்தும் காக்கைத் தொழுதியீர்!
ஓகோ உமைக்காக்க வேண்டும் கதிரென்றுல்
போகாத் துயரெமக்குப் போக்கல் நெறியேயோ?
ஆகா! உமதன்புத் தொண்டே அழகென்பார்!

483 புல்லும் இமைமீண்டும் போமுன்னம் போமல்லே!
கல்லோ உனதுள்ளம்? கண்கேடோ? கையற்றுய்!
சொல்லும் உரைகாதில் வீழாவோ? என்றென்று
நல்லா ருளநைந்து நற்றுயில் நீத்தாரால்.

484 மைக்கண் சிவப்பேறச் செவ்வாய் வெளுப்பாக
உக்க நறுங்கூந்தல் ஊடி நெகிழ்ந்தாடப்
புக்க இயல்சொல்லிப் போதராய் என்பபோல்
நக்க பளிக்கின்முன் நின்றுள் புனைந்தாளால்.

மனையறம் பேணல்

485 எண்ணி இளைத்தாலும் எய்துங்கால் எய்துதலும்
எண்ணுத வொன்று மெளிதாக வெய்துதலும்

புண்ணியா நின்னெண்ண வண்ணமாம் என்றேத்தித்
தண்ணுர மார்பு தரைதீதாய வீழ்ந்தாளால்.

486 நீரார்ந்து பால்பெய்யும் நேய நிரைகன்றைப்
பேராவல் கொண்டூர்க்கும் பெற்றி செவியேற்றுத்
தீராத அன்பால் புறந்தையித் தெய்வமே
பீராரப் பிள்ளை வருமென்று சொன்னுளால்.

487 வல்லி இடையீர்! வனப்பாக நாம்செய்யும்
வல்லி நெடுங்கோலம் வாய்மைக் குடிவந்த
வல்லி யிடையாக வென்று வரைவார்முன்
'வல்லி விழைகின்றீர்' என்று நகைத்தாளால்.

488 அல்லாட்சி பேணி அகமிக்கோர் இவ்வேஎ
இல்லாட்சி காக்கும் எழில்காண வந்தான்போல்
எல்லாட்சி வேந்தன் இருட்படாம் ஈர்த்தெறிந்து
நல்லாட்சி ஏற்றுனுல் கங்குல் நலிந்தோட.

489 நாத்தழும் பேற நவிலாத எங்கட்கும்
பூத்த முகங்காட்டிப் போதரும் அன்னமே
நீர்த்துறை ஆடென் றழைக்கும் மலர்நோக்கம்
பார்த்துளங் கொண்டாள்போற் பாவை குடைந்தாளால்.

490 புங்கன் அடியேத்திப் போய்த்தன் அடியாரை
அங்கங் குளபணிக் காளாக்கிக் கொண்கற்குப்
பொங்க வினைழந்தாள் புகுந்தாளால் உள்ளன்பு
பொங்க வழிகண்ட பொன்னரப் பூங்கொடியே.

491 கேசி யுளங்கொண்டான் தூக்கம் தெளிந்தாங்கே
வாசிப் புறமேறி வையை இளநங்கை
தூசிப் படம்போர்க்கத் தூண்டிக் கயமூழ்கிப்
பூசித் தெழுந்தான் புனிதன் மணித்தாளே.

492 மான்றேர் மிசைநின்று மாற்ருர் புறங்காணும்
தேன்றேர் தெரியலான் சங்கத் தடிபோற்றி
ஆன்ருேர் அருள்வாக்கும் ஆய்ந்தோர் அறவாக்கும்
சான்ருேர் சமைவாக்கும் சாலத் தெளிந்தேகி.

493 ஒன்றே அறமென்றும் ஓதும் அறமெல்லாம்
பொன்ரு திருப்பதற் காமென்றும் இல்வாழ்வைத்
துன்றேர் வனப்பான் துவர்வாய்க் கனியோர்டு
நின்ருன் தொடங்கினுன் நேயம் பெருகிற்ருல்.

494 சென்ற விருந்தோம்பிச் சேர வருவிருந்தும்
நின்று வரவேற்று நேய உரையாடி
'இன்றுபோல் என்றும் வரவாக' என்ருரால்
நின்ற புகழ்க்கொரு நீளெல்லே ஆயோரே.

495 ஆற்றல் மிகப்பெற்றும் ஆர வழியற்ருர்
நோற்ற துறவோர்கள் நோயர் நனிநொய்யர்
ஏற்ற குறைமெய்யர் இன்னேர் வருகென்று
சாற்றி யுணவூட்டிச் சார்ந்து மிசைந்தாரால்.

496 ஏந்தும் அழகும் இளவன்ன மென்னேக்கும்
சாந்து செறிமார்பும் சந்துப் பெரும்பண்பும்
போந்து நலமாக்கும் போகாத நல்லன்பும்
காந்தப் பொருளாகிக் காளனைக் காத்தனவே.

497 பேடைப் பெருவண்டு தும்பி யுடனுகி
ஆடிச் சிறகார்க்க வந்த மணக்காற்றும்
கோடைக் கொடுமைக்குக் கூற்றும் குளிர்காற்றும்
நீடி யகனிழ்சூழும் நீராழி மண்டபத்தே.

498 மாலே இளம்போதில் மாந்தர்க் கணியாயோர்
வாலேப் பருவத்தர் வாய்த்த நடநோக்கி
ஆலக் கரும்பாம் இசைகேட்டுக் கண்ணேக்கால்
ஓலே விடுத்தார்கள் உய்யானம் போதற்கே.

499 மஞ்சள் இறைப்பான்போல் வெய்யோன் ஒளிவீசிக்
கஞ்ச முதலம்பால் காமன் கணைவீச
அஞ்செஞ் சிலம்பார்க்கும் அன்னம் திருநோக்கில்
தஞ்சம் புகுந்தோன் தளிர்க்கரம் கைக்கொண்டான்.

500 வெண்பட் டுடுத்த விரிசெல்வப் பூமங்கை
எண்பட் டிளமஞ்சள் மெல்லாடை போர்த்துப்பின்
கண்பட் டகலாத நீலக் கலைமாற்றித்
தண்பட் டிருந்தாள் தகையோர் மதிதோன்ற.

501 திங்கட் பெருமீன் திருமீன் உடனுகி
வங்கப் பெருவான் சிறுமீன் தொகையெல்லாம்
பொங்கி முகங்காட்டப் போகும் இயலொப்பத்
தூங்க மலர்ச்காட்டில் தோழ்மையர் செல்வாரால்.

502 இன்பஞ் செறிவாழ்வும் ஈதற் பொருள்வாழ்வும்
துன்பு மகற்றுவாழ் தூய அறவாழ்வே

கன்னர் வளர்த்தோம்பும் நல்வாழ்வாம் என்றுய்ந்த
அன்பர் மனைக்கேகி ஆள்மை நலங்கொண்டே.

503 ஏவல் இனியர் இடஞ்சாரப் போக்கிப்பின்
ஆவல் பெருக உரையாடி இன்புற்றார்
காவற் பெரியன் கருணைத் திறம்வாழ்த்தி
மேவல் மிகுந்தார் இளமென்சீர் அன்போரே.

504 ஆன்றோர் வரலா றறிந்தாய்ந்த பேற்றுளர்
சான்றோர் திருவர் ஒருகாம் பிணைப்போதாம்
மான்றேர் விழியாளை மாண்பானைக் கண்ணுற்றுத்
தோன்றுத் துறைதோற்ற வந்தார் மொழிவாரால்,

திருவர் அறிவுரை

505 அன்பு விதையிட்டால் அன்பே விளைவாகும்
அன்புப் பெருஞ்செல்வம் ஆக்கா நலனில்லை
அன்பு மொழிபோல ஆக்கும் உறவில்லை
அன்பு வழியொன்றே ஆட்கொள்வீர்! அன்பீரே!

506 துக்கம் எனச்சொல்வார் வாழ்வை அதுவன்றே
மிக்க வுளத்தோடு மேலாம் அறிவெய்திப்
புக்க அறத்திற்கே ஆள்வினை போக்கிலுல்
உக்க கனிவுக்கு வேருன் றுளதாமோ?

507 உள்ள இளமைகாண் நல்லினமை; என்றென்றும்
கொள்ளா உடலினமை கொன்னே நிலைமாறும்;
உள்ள முதிர்ச்சி உவப்பாம்; உடல்முதிர்ச்சி;
வில்லா அவலப் பெருக்காதல் தேரீரோ?

508 உள்ளம் தெளிவுற்ற நல்லார் உறவாகிக்
கள்ளம் கழிபேதை யின்றிக் களிப்புற்றுப்
பிள்ளாய்! பெரியோன் உடனுகி நன்ருற்றில்
கொள்ளா நரைக்கோலம் கூறுகேன் சான்றென்றே.

பிசிராந்தையார் பேறு

(வேறு)

509 ''திங்கட் டெளிவூற் றெழுந்துதிகழ்
பளிக்குத் தலத்துப் பறையார்த்துப்
பொங்கர்ப் புகுந்து பழச்சாறும்
பொய்யா வாச முணக்கூட்டும்

நுங்கித் தவழ்ந்து நுரைபோர்த்து
நுவலா வளஞ்செய் தண்பொருந்த
ஙங்கை வனப்பு மீக்கூரும்
நற்றென் பாண்டி நாட்டகத்தே.

510 வாரித் தரங்க அலையார்த்து
வரைசேர் கண்டற் கழிதாவி
மூரி எழும்பி முத்திறைக்கும்
பிசிர்ப்பே ரூரொன் றுளதாங்கே
ஆரி வேந்தற் குயிராளர்
ஆந்தை என்னும் பெயராளர்
பாரில் உறவுக் கொருதாமாம்
பான்மை பெற்று வதிந்தாரால்.

511 நல்லார் எனலும் நயமற்ற
பொல்லார் எனலும் பொருளில்லை
எல்லாம் நலமே எனக்கொண்டார்
எவரும் உறவே எனக்கண்டார்
சொல்லாப் பெருமை மனையறமே
சுற்றம் உலகம் சிறப்பெய்த
வல்லாங் கமைந்த வளமையதாம்
என்றுய் பெரியர் அவர்கண்டீர்.

512 தோற்றும் பிறவி துணைக்கென்றே
தூய மணங்கொள் மனையாட்டி
ஆற்றும் பணியால் உயர்வுற்றுள்
அறிவால் செறியத் தனைக்காத்து
போற்றும் அன்பால் அவர்ப்பேணி
புகழ்ச்சொல் நிலைக்கும் முறைநாடி
ஏற்ற செயலில் மடியின்றி
எய்தாப் பெருமை எய்தினரால்.

513 நேயம் விளக்காய் அருள்நெய்யாய்
நீண்ட பெருமைக் கொடைக்கையே
ஏய அகலாய் இன்றீஞ்சொற்
றிரியாய்த் தூய்மை சுடர்க்கோலாய்ப்
போய அறவர் மனையகத்துப்
பொருந்தும் திறம்பாச் சுடரொளியில்
நேயங் கொண்டோர் கணக்கிலரால்
நெஞ்சம் பிணைந்தோர் அளவிலரால்.

514 உணர்ச்சிப் பழக்கப் பிசிராந்தை
ஒருநாட் பொன்னி வளநாடன்
புணர்ச்சிப் பழக்க விருப்பாகிப்
புகுந்தார் அதுகால் அவணின்றூர்
வணர்த்துச் செறிந்த இருங்குஞ்சி
முதியீர்! வடித்த நரையற்றீர்
உணர்த்த விழைந்தோம் எனவேண்ட
உரவோர் தெளித்த உரைகேண்மின்.

515 யாண்டு பலவா நரையற்றீர்
வேண்டு மதன்கா ரணமென்றீர்!
மாண்ட கிழத்தி எனக்காளுள்
மைந்தர் அறிவான் நிறைவாளுர்
வேண்டல், குறிப்பால் அறிந்தாற்றும்
இளையர் உளரால் விழைவேந்தன்
பூண்ட அறத்தால் உயர்சான்றூர்
பூத்தார் நரையின் றெனக்''கென்றூர்.

516 ஆய்ந்தோர் உரையை உமக்குரைத்தேன்
ஆய்ந்து தெளிவீர் எனச்சொல்லி
வாய்ந்த திருவர் வழிக்கொண்டார்
வணங்கு மிடையாள் அண்ணலொடும்
ஏய்ந்த வணக்கம் இனிதாக்கி
ஏந்தல் மார்பில் முகம்பதித்துச்
சாய்ந்தாள் செப்பின் புணர்வென்னும்
செஞ்சொல் ஒன்றே சால்வம்மா.

ஐந்தாவது மணையறப்படலம் முற்றிற்று.

6. களிப்புறு படலம்

517 புனலும் புனலும் கலந்தாற்போல்
பொருந்தும் அன்பால் கலப்புற்ரூர்
மனமும் மனமும் பிணைப்பாகி
மனைக்கண் அறந்தேர் நிலைசொன்னும்
வனமும் புனமும் குளிர்தடமும்
வாய்ப்ப அணுகிக் களிப்பெய்தித்
தினமும் நுகரும் இசைவாழ்வைத்
தெருட்டும் வகைமை இவணேற்ரும்.

518 தேடக் கிடையா வளம்பெற்ரூர்
தினைக்கும் இன்ப விருப்பாகி
மாட மனிகை மனைநீங்கி
மருவும் இளையர் அயலாகப்
பாடித் திரியும் ஞிமிறென்னப்
பயிலும் இயற்கை யிடமெல்லாம்
நாடிப் புகுந்தார் நலங்கண்டார்
நவிலாச் சுவைக்குத் துணையென்றே.

519 பூங்கா வுரிமை எவர்க்கேனும்
பொழுதும் உழைத்தோர் எவரேனும்
நீங்கா துறைவோர் பலரேனும்
நிலைத்த வுரிமை அவர்க்காமோ?
வீங்கா உளத்தால் உறவாகி
விருந்தாய் நுகர்ந்து புலனென்றி
ஓங்கா நிலையர் எவரவரே
உரிமை உடையர் ஆவாரால்.

(வேறு)

520 கண்டதே கண்டா ரேனும்
கருத்திடை மாற்ற மின்றிக்
கண்டதோர் புதிய தென்னுங்
கவின்மிகு சோலைக் கண்ணே

பண்டையோர் தந்த செஞ்சொல்
பனுவலி னுகர்வார் போலக்
கொண்டதோர் உயிர்க்கு யாக்கை
இரண்டென நின்றுர் செல்வார்.

521 பொன்மலி நடக்கு மாலோ?
புடைபெறப் பொற்பு மஞ்ஞை
தன்கலித் தோகை விஞ்சத்
தளிரடி பரப்பு மாலோ?
இன்னகை பொங்க லாலே
இவற்றிடை இசையின் வெள்ளம்
துன்னுமோ என்ன நோக்கத்
துணைமையர் இயலிச் செல்வார்.

522 அஞ்சிறை விசிறல் நீத்த
அணிக்குரல் எடுத்தல் நீத்த
பிஞ்சடி பரப்பல் நீத்த
பிள்ளைகொள் களியும் நீத்த
கஞ்சமே அடியாக் கொண்ட
கனங்குழை காள னுெடு
பஞ்சடி வைத்த போது
பறவையின் குழும மம்மா!

523 மான்கணம் மதர்த்து நோக்கும்
மயிலினம் வெறித்து நோக்கும்
தேன்கணம் செறிந்து வீழும்
திருமலர் அடிக்கண் தாழும்
வான்கணம் மருவு மாறு
வளர்ந்துள காவி னுள்ளே
ஆன்கணம் அமைந்த கொம்பென்
றமைந்தவர் புகுந்த போதே.

524 பார்த்தலே இன்ப மேனும்
பருகல்போல் இல்லை யென்று
சீர்த்தவோர் அழகுப் பூவைச்
செங்கரஞ் சிவக்கக் கொய்து
நீர்த்திரைக் கூந்தல் நங்கை
நெகிழ்விழி பாய்ச்சித் தந்தாள்
ஆர்த்தனன் உவகை கொண்டான்
அசையிடை தழுவிக் கொண்டான்.

525 ஐம்புலன் வளர்க்கும் செவ்வி
அமைந்ததிக் காவென் ருலும்
அம்பன கண்ணுய் சொல்க!
அதற்குறு நன்மை யுண்டோ?
சும்மைநீர்த் தவழ்ந்த முத்தால்
சுரிவளே நன்மை கொண்மோ?
இம்மையில் இன்பம் என்போல்
எய்தினுர் எவரே என்ருன்.

526 பிறர்நலம் கருதும் பெற்றிப்
பெரியவர் தம்மை யெண்ணுர்;
இறுவது நேரு மேனும்
இவ்வுல கின்ப மெய்தப்
பெறுவதே விழைவர் அன்பீர்!
பெய்குளிர் தவழுஞ் சோலே
உறுவெயில் தாக்கத் தாங்கி
உளநிலே காண்மின் என்ருள்.

527 இன்னறுஞ் சுனேயின் நீரும்
ஈரமென் தென்றற் காலும்
நன்னறுங் கனியும் தந்தோன்
நல்லனுல் என்று பாவை
மென்னறு மொழியிற் கூற,
மேதகாய்! இதனின் நல்லன்
பொன்னறும் பொற்பு யாக்கைப்
பூவைநிற் படைத்தோன் என்ருன்.

528 கலேவளர் அறுவை யாளர்
கதிர்மணிக் கோவைப் பூணர்
பலபடக் கலவை யப்பும்
பைந்துணர்க் கோதை யாளர்
இலகுவர் செயற்கை யாலே;
இறைமுகிழ் கலேயின் பேற்ருல்
நிலவிய வனப்பி னுவார்
ஆண்களே நினேமின் என்ருள்.

529 நம்பியாய் நின்ரு ரேனும்
நற்குணக் குதிரை ஏறி
இம்பரால் புகழு மாறும்
இனிதெனத் தொடரு மாறும்

தெம்புடன் திகழும் நங்கைத்
திருவுறின் அன்றி இல்லை
உம்பரும் விரும்பும் நீர்மை
பெண்மையே என்று பின்னும்.

530 பொன்னுறு சுணங்கு மாதே!
போதருங் காத லாலே
தன்னருங் குஞ்சை நாடும்
தாய்ப்புரு வுணர்வு நோக்காய்;
இன்னரும் உணர்வி னேடே
இயல்மிகும் அன்பும் ஊட்டும்
நன்னயங் காணாய் என்று
நளிர்கிளை காட்டி நின்றான்.

531 நீர்வளர் தவளைப் பாய்த்தால்
நெஞ்சழிந் தயர்ச்சி எய்திச்
சீர்வளர் புதைக்குட் செல்லச்
செயலறும் இரலை காணாய்!
ஏர்வளர் பெரிய! இன்பால்
இளமட மானைக் காத்துக்
கூர்வளர் கோட்டுப் பைம்மான்
கொழும்புறம் தழுவல் காணாய்.

532 செவ்வடிச் சிறுகால் அன்னம்,
செறிவரால் எழுப்பும் நீரால்
தெவ்வென நினைவு கூர்ந்து
தெருமரல் அண்ணல் காணாய்;
அவ்விடைக் குறிபபி னேர்ந்த
ஆணனம் விரைந்து காக்கும்
செவ்வியும் காணாய் என்னுள்
செயலெலாம் இன்பம் என்பாள்.

533 இன்னறுந் தீந்தேன் நச்சி
எண்ணரும் பூக்கள் தாவும்
இன்னரம் பிணையும் தும்பி
இயம்புவ கேட்க அம்மா!
என்னருந் தலைவர் செந்நா
எடுத்திறை தமிழின் தேன்போல்
உன்னரும் முயற்சி யாலே
ஓல்லுமோ ஓத வென்பாள்.

534 பச்சிளஞ் சுரையின் யாக்கை
பவழவாய் பளிக்குக் கண்கள்
அச்சமில் வில்லுக் கண்டம்
அழகமை விசிறிச் சீர்வால்
எச்சமாம் மழலைத் தீந்தேன்
இன்னன செறிந்த கிள்ளை
இச்சையாய்ப் பிணைந்து வாழும்
இன்பியல் மனிதர்க் குண்டோ?

535 மகிழ்வொடு பறத்தல் மற்றும்
மனங்கவர் இடத்துச் சேறல்
நெகிழ்விடைக் களங்க மின்மை
நெஞ்சிடைக் கவற்சி யின்மை
பகிர்ந்துணும் வாழ்க்கை ஐயா
பாரிடை மக்கட் குண்டோ?
முகில்தவழ் பறவை காண்பாம்
மூண்டெனச் சுட்டி நின்றுள்.

536 பச்சைமென் புல்லிற் சாய்வர்
பனிமலர் பரப்பிச் சாய்வர்
இச்சையின் எழுந்து செல்வர்
இலைச்செறி விடையிற் சாய்வர்
விச்சைகொள் வெண்பட் டாடை
விரித்தவண் மகிழ்ந்து சாய்வர்
நிச்சயம் இவைக ளெல்லாம்
நெடும்பொழு தமைக்கத் தேற்று.

537 ஓடுவர் காவி னூடே
ஒளிந்துபோய் மறிந்து வந்து
தேடுவர் வழியிற் றப்பித்
திகைப்புற மறைத்துக் கொள்வர்
பாடுவர் குறியை நேர்ந்து
பதுங்கியே சென்று பற்றிக்
கூடுவர் மீண்டும் தப்பிக்
கொள்வனர் விரைவர் ஆண்டே.

538 தூரிடை மறைய லாவர்
தொடுத்தவண் வந்த காலே
நீரிடைப் பாய்த லாவர்
நிகர்மலர்ப் பொதும்புள் ஆவர்

காரிடைச் செறிய யாத்து
நகுவனர் பெயர்த லாவர்
ஊரிடைக் காணு வின்பம்
உண்ணுவான் பெயர்ந்தோர் அம்மா!

539 சோலைசூழ் மரத்தின் பாங்கர்ச்
சுவையொடு பாடிச் செல்லும்
கோலமார் சுரும்பு நல்லாய்!
குவலயம் படைத்த தேவன்
சீலமார் முன்பு தேர்ந்து
திருச்செவி சேர்க்க என்றே
ஏலமார் குழலின் நல்ல
ஏந்தலும் அவளும் சொல்வார்.

தும்பிக்குத் தூதுரை—அவனும் அவளும்

(வேறு)

540 கொல்லாப் பெருநோன்புக் கோதில் குணக்குன்றின்
எல்லார் திருக்கோயில் என்றும் வலமாகும்
நல்லாய்! நயமில்லேன் கல்லாப் பிழைநீங்கச்
செல்லார் கரத்தாற்குச் சென்றூதாய் கோத்தும்பீ!

541 பொல்லார் புடைநின்றும் போகா அறங்கண்டு
கல்லார் நடுவாகி நிற்கும் நயத்தோனே
அல்லார் பொழிற்சூழல் கண்டேன் அடியென்றே
செல்லார் கரத்தாற்குச் சென்றூதாய் கோத்தும்பீ!

542 பித்தன் பெரும்பேயன் பேதை பெருங்காவில்
கொத்து மலர்நாடுங் கோட்பா டுடையானே
அத்த! அருளாள! கண்டேன் அருளென்றே
நித்தன் நிமலற்குச் சென்றூதாய கோத்தும்பீ!

543 பித்து மிகக்கொண்டு பேணுந் திருக்கழற்கே
கொத்து மலர்தேடுங் கோடபா டுடையாரோர்
கத்து பெருங்குணத்து நல்லார் தமைக்கண்டேன்
அத்த! அருளென்று சென்றூதாய் கோத்தும்பீ !

544 வன்னெஞ்சப் போக்கில் வழிக்கொள்ளா வண்ணமாய்
என்னெஞ்சை ஆட்படுத்தி ஏக்கம் தடுத்தாண்ட
கன்னெஞ்சத் தேவர்க்கு நாடும் இசைபாடி
இன்னெஞ்சத் தாழ்திறக்கச் சென்றூதாய் கோத்தும்பீ!

545 அன்னைநீ அத்தன்நீ ஆம்பொருள்நீ அம்மானே
முன்னைநீ மூதறநீ மூலநீ முட்டறுக்கும்
பின்னைநீ பேறுநீ என்றென் றினிதேத்தி
மின்னைநேர் அண்ணற்குச் சென்றூதாய் கோத்தும்பீ!

(வேறு)

546 நாதற்குத் தூது செல்லும்
நற்சூண வண்டே உற்குத்
தீதறு வாழ்வு சேர்க
தினந்தொறும் மகிழ்வு சேர்க
கோதறு பூக்கள் மல்கிக்
குலமெலாம் பருக ஈக
ஏதமொன் றின்றி வாழ்க
இயற்கையாய் என்று வாழ்த்தி.

547 பூந்தடங் குறுகி அன்பர்
புனிதனின் கழலுக் காக
ஏந்தெழிற் பவழப் பையுள்
இணைந்துள முத்த மென்ன
வேய்ந்தநன் முறுவல் மல்க
விருப்பொடு பாட லானூர்
ஆய்ந்தவண் மலர்ந்த அல்லி
அணிமலர் பறித்துக் கொண்டே.

பூவல்லி கொய்தல்

(வேறு)

548 அல்லல் வினையகற்றி ஆட்கொள்ளும் எம்மம்மான்
தொல்லைப் பழமைக்கும் தொல்பழமைப் பேற்றுளன்
எல்லாப் பொருளுக்கும் தோற்றமோ டூறுய
வல்லான் வனைகழற்குக் கொய்யாமோ பூவல்லி.

549 பேரா இயல்பெற்ற பேரரசு பெற்றிருந்தும்,
நேராத் தனியினபம் என்று நினையாமல்
ஆரா இயற்கை அவாநீத்த அம்மானின்
சீரார் புகழ்பாடிக் கொய்யாமோ பூவல்லி.

550 கள்ளம் அறியாக் கலைமாய்க்க வில்வனைத்த
விள்ளாக் கொடியனைக் கையமைத்த வீறுளமும்

நள்ளார் புறங்காணும் நல்லுரமும் தன்னகத்தே
கொள்ளும் திறம்பேசிக் கொய்யாமோ பூவல்லி.

551 ஒன்ருய் இரண்டாய்த் தொழில்மூன்ருய்க் கையேற்று
நன்ரும் நெறிநான்காய் ஐந்தாய்ப் பொருளெல்லாம்
சென்ருய் பகையாறேழ் கைத்தோங்கி எண்குணத்தின்
குன்ருய் அமைந்தோற்குக் கொய்யாமோ பூவல்லி.

552 தோற்றும் இறைக்கெல்லாம் தொன்மை இறையாகி
ஏற்ற நினைவாலே எவ்வுயிருங் கூத்தாட்டிப்
பாற்றுப் பணிசெய்யப் பாணித்து நிற்கின்ற
கூற்றங் கடந்தாற்குக் கொய்யாமோ பூவல்லி.

553 ஏமென் கணைநீக்கி இன்ப வழிகாணப்
பூமென் மலரேறிப் போய பெரியோற்கு
நாமென் இசைபாட நற்பூங் கொடிதேடித்
தூமென் கரமல்லக் கொய்யாமோ பூவல்லி.

(வேறு)

554 அல்லியம் போது கொய்தோர்
அணிநிழல் அமர்ந்து தங்கள்
வெல்லும்வல் கலையி னுலே
விருப்புடன் தொடுக்குங் காலை
வல்லியம் வெருட்டு மான்போல்
உயிர்த்தனள் வழிந்த கண்ணீர்
புல்லிய மாலை சேரப்
புகைந்தனள் அன்னம் சோர்ந்தே.

555 என்னெனும் நிலைமை தேரான்
ஏதமொன் றின்றி அன்னம்
இன்னவா வருந்தல் என்னே?
இயம்பிய சொல்லில் யாதும்
துன்பமும் உண்டோ என்று
துடிப்புடன் தழுவிக் கொண்டான்
முன்னதோர் நிகழ்ச்சி யின்னே
மூட்டிய துயர மென்ருள்.

556 விம்மலை அம்ம! முன்பு
விளைந்ததை விளம்பு கென்று,
வெம்மலை வகற்றுங் காளன்
விழுதுளி துடைத்து நின்ருன்;

செம்மலைத் துளிகொள் நீலச்
சுரிமலர் அருகில் நின்ற
கொம்மலைக் கமலப் பூவால்
தைவரு தகைமை நாண.

(வேறு)

சொல்லால் நேர்ந்த அல்லல்

557 ''எந்தாய் துயரோ டெழுநாள் அழவும்
பந்தா டினையோர் பகையாய்ச் செலவும்
சிந்தை வருத்துஞ் செயலைப் புரிந்தேன்
அந்தோ அதுவென் இளமைத் தவறே.

558 முல்லைக் கொடிமேல் முதிரன் பினெனுய்க்
கொல்லைப் புறத்தே குழைவாய் வளர்த்தேன்
தொல்லைக் கொருமா மருந்தாய் வளர்ந்து
பல்லை நிகர்வாய்ப் பயிலும் அரும்பே.

559 ''கற்புக் குரியார் கணின்முல் லையின்மேல்
அற்புக் கொளுவார் அழகன் பெறவே
நிற்புக் குளநீர் நெறிநல் லது''வென்
றற்புக் குரியர் நகநான் நகைத்தே.

560 பாரா தொருநாட் பகலுங் கழியேன்
ஆரா விருப்பால் குடங்கொண் டினோத்தே
நீரால் நிறைக்க இனைதாய் தடுத்தும்
பேரா நிலைநின் றதைப்பே ணினெனுல்

561 கோட்டெங் குளகா வொருநா ளணுகி
மீட்டங் கிருந்து திரும்பா முனரே
நாட்டங் கலங்கி அழுமா றுளதால்
வாட்டங் கெழுமி வனமுல் லையுமே.

562 என்னு ருயிர்நேர் எழில்முல் லையளே
உன்னுர் சிதைத்தார் உரையாய்! கொடியர்
அன்னை அறியா தழிமோ? இதனுல்
துன்னும் நலமொன் றுளதோ எனவே.

563 ஆழ்ந்தேன் அழுதேன் அடர்வெஞ் சினத்தால்
சூழ்ந்தேன் சுடர்மா மனைக்கட் டரையில்

வீழ்ந்தேன் புரண்டேன் விரைவா யணுகித்
தாழ்ந்தார் குழலா ளொருமா தெடுத்தே.

564 ''ஏயே துயர்நீ விடுகொல் லேயிடைப்
போயே திரும்பிப் பொருமல் தெளிந்தேன்;
ஆயா தெவரோ அழித்தா ரிலேமான்
தாயே சிதைத்த தவரும் அறிவாய்.''

565 என்றே யவளும் இசைத்த மொழிகேட்
டன்றே வெறுத்தேன் அணியும் களியும்;
மின்ருழ் பொலிவீர்! மிடைகா ரணத்தை
நன்ருய் உணரா தழிதாய் அழைத்தே.

566 இன்ரு டெழுநா ளகன்று முரையாய்
நன்ரு விதுவோ ரனிநா யகமே;
பின்ருழ் குழலாய் இதற்கோ உனைநான்
பொன்ருப் பொருளாய் நினைந்தே பொலிந்தேன்.

567 ''அன்னை அழுமா றவல மிழைக்கும்
முன்னைப் பொருளே முறையோ மகப்பே
றின்னைத் துயரந் தருமே லெழிலாம்
என்னை விலையே'' எனவேங் கினளால்.

568 இவ்வா றுரைக்க எரியாஞ் சினத்தால்
''அவ்வை! கொடியை! அழித்தாய் இதுவுன்
செவ்வைக் குணனே செழும்பே ரறிவோ
எவ்வந் தருவாய் அழுவாய் பிறகே.

569 ''வாட்டும் துயரம் வளர்தாய் தரவோ
நாட்ட முறுவாள்'' எனநான் நவில
வீட்டங் கலறி விளைவாம் நிகழ்வை
மீட்டும் வினவி மறுத்தாள் கவன்றே.

570 ''புள்ளிப் பிணைமான் புறஞ்செல் பொழுதில்
துள்ளிச் சிதைத்த துயருக் கெனையே
கொள்ளி நெருப்பாய்க் குமைத்தாய்! அறிவால்
உள்ளித் தெளியார் ஒழியார் பழியே.

571 ''உண்டாஞ் சிதைவை ஒழித்தேன் அதற்கென்
றுண்டாஞ் சிறப்பை யுணர்ந்தேன் அடி! கேள்

கண்டார் உளரோ? கதைபே சினையோ?
விண்டார் உளரோ விளம்''பென் றிடவே.

572 ''யானென் செவிவாய் அறிந்தேன்; இவளே
தானென் னிடத்தே யுரையா டினளால்;
ஏனென் பழியோ'' எனநான் அவளும்
''மானென்ன றவண்தாய் அலைசெய் ததையே

573 சொன்னேன்; பிறிதோர் பொருள்கொண் டனையோ?
அன்னுய் இதுவென் தவறன் றறிநீ''
என்றே மொழிந்தாள்; ''இதுவென் தவறென்
றுன்னிக் கவன்றேன் உலைந்தேன்'' எனவே.

574 செவ்வாய் விளர்த்துச் செறிமுத் துறைக்க
ஒவ்வா நிகழ்வென் றுளைவா ளகத்தே
கொவ்வை யிதழாய் கொடுங்கூற் றுரையென்
றெவ்வா றறியாய்? அதுநீ அறிகே.

575 ஆண்பா லவர்க்கென் றமைவாம் வயிரம்
பூண்டாய் பொருந்தும் அழகோ? அனமே!
தூண்டா ஒழுக்கத் துடியே ரிடையே!
வேண்டா அவலம் எனவாண் டெழுந்தே.

576 இன்பம் பெறுவான் இவணெய் தினமோர்
துன்ப முறவும் விதிநின் றதுவோ?
பொன்செய் வளையாய்! எழுவாய் புகுவோம்
துன்னும் மனைக்கென் றெழுந்தார் தொடர்ந்தே.

(வேறு)

577 சொல்லலாக் களிப்பு மேவிச்
சுவைத்திடும் இயல ரேனும்
அல்லலாம் சூர்ப்பேய் அண்மி
அலைத்திடக் காண்டு மன்ரே!
மல்லலாம் வாழ்க்கை என்றும்
மடிமிடி வாழ்க்கை என்றும்
இல்லையால் களிப்புக் கையா
இயைவது மனத்தின் பாங்கே.

578 புள்ளிமான் அழகு காண்பான்
புலிவர மருளல் போல
அள்ளுதேன் பிழிந்து நின்ரோன்
அளித்தொகைக் குளோதல் போலக்
கள்ளவிழ் மலரி னுளும்
காளனும் களிப்ப ஏகி
உள்ளகம் வெதும்பச் செய்யும்
உணர்வினுல் இல்லஞ் சேர்ந்தார்.

ஆருவது களிப்புறு படலம் முற்றிற்று.

7. களம்புகு படலம்

579 களியுறு காத லாளர்
காவொடு சோலை பொய்கை
ஒளியுறச் சூழ்ந்து சென்ற
ஒருநிலை முன்னர்ச் சொன்னும்;
தெளியுறு பரவை யொப்பத்
திசைகெடுத் தாண்ட சோழன்
தொளியுறு களப்போர் வெண்ணி
தொடர்வது சொல்வ தானும்

காளன் வீரத்திறம்

580 தகாயிற வருளைச் செய்த
தனிமுதல் வேந்தன் மாட்டு
வினைபெரு மன்பி னுலே
வீரவேற் காளன் சார்ந்து
கினைஞருள் கினைஞ னுயும்
கிளர்திறல் வீர னுயும்
இனைஞருள் இனைஞ னுயும்
இருந்தனன் பெருமை யோடே.

581 தோள்வலிச் சிறப்பி னுலும்
தொடுத்தவர் படைகள் சாய்க்கும்
வாள்வலித் தகுதி யாலும்
வளர்மன ஆக்கம் காட்டும்
ஆள்வலித் திறலி னுலும்
'அபயனும்' விரும்பி யேற்றுக்
கேளெனக் கொள்ள லானன்
கிடைப்பதற் கரிய னென்றே.

582 தீவழிச் சென்ரு னேனும்
திருந்திய உள்ளம் பெற்ருல்
ஆவதாம் நன்மை யெண்ணி
அணைப்பதே தக்க தென்று

வாழ்வகை அறிந்த சான்ரோர்
வகுத்தது தெளிந்த வேந்தன்
தாழ்வறத் தழுவிக் கொண்டான்
தக்கவே விழையு நீரான்.

583 வாரணம் ஏறிச் செல்லல்
வயப்பரி தாவிச் சேறல்
சீரணிச் செலவு நேர்தல்
செருவிடத் திருக்கை யார்தல்
போரணி வகுத்துக் காட்டல்
பொருவகை முடித்துக் காட்டல்
காரணம் கதுவ நாட்டல்
இவையெலாம் கணித்த வேந்தன்.

584 கஞ்சுகர் பணியி னேடு
களப்பணித் துணைவ னுக்கி
எஞ்சலில் உரிமை தந்தான்
ஏற்றவோர் கடமை என்று
நெஞ்சிடை எண்ணு காளன்
நேயமும் கடனும் உந்தத்
துஞ்சுதல் மடிமை நீத்தான்
தொழிலிடை யூற்றம் வைத்தே.

585 வெள்ளமாய்ப் பெருகி யோடி
விளைவயல் அழித்த ஆற்றை
வள்ளிய அணையிற் றேக்கி
வளமுறுப் பார்கள் போலக்
கள்வனும் என்னைக் காவற்
கடமையன் திருந்தச் செய்தான்
வில்வனே பெரியர் மேன்மை
வியப்பெனை உழைக்குங் காலை.

586 தன்குறைக் குணத்திற் பட்டுத்
தவித்தவர் உய்யு மாறு
பொன்பொருள் ஈந்த தோடு
புகலரு நலமு மாற்றி
என்கடன் பணியொன் றென்றே
இருந்தவேளர் காளற் கன்பால்
பின்னிய பெரிய சுற்றம்
பேறெனப் பெருகிற் றம்மா.

587 தீயவர் குழுமம் தேர்ந்து
திருத்துதல் வலிய நம்பி
தூயவர் வருந்தா வண்ணம்
தொகைபெறு நலங்கள் கண்டான்
ஏயவர் உள்ள மெல்லாம்
எழிற்கரி கால னேடு
தேயமும் நினையு மாறு
திருப்பணி புரிந்து நின்றான்.

588 துண்ணென நடுக்கு வாரும்
தொலைந்தனம் என்று சோர்ந்தார்
விண்ணென இடிக்கு மோரும்
வெருண்டனர் ; உரத்தி னுண்டான்
கண்ணெனக் காக்கும் வல்ல
படைத்தலைக் கடமை யாளன்
திண்ணிய கணைய னேடு
திசையெலாம் இசைக்க நின்றான்.

589 இன்னவோர் தன்மை மல்க
இறைமகன் இருந்த சூழல்
ஒன்னலர் தொகுதி வாட்டி
உறுத்தடர் வீர வொற்றன்
மன்னவ அடிக ளேற்றேன்
மற்றிது கேட்க வென்று
பன்னினன் செவியின் மாட்டே
படுமணி அலறிற் றுங்கே.

590 ஒற்றனே செல்க வென்றான்;
ஒன்றிய ஒருவற் ''கின்னே
நற்றவ வமைச்சைத் தானைத்
தலைவரை நண்ணு மாறு
கொற்றவன் ஆணை'' என்று
கூறுதி விரைவி னென்றான்
உற்றது தெளியான் ஓடி
உரைத்தனன் கடிதி னெய்த.

591 மந்திர மனைக்கண் புக்கு
மருவலர்க் கமைந்த சீயன்
தந்தனப் பாட லோடு
தளிரடி யாட லின்றிச்

சந்ததம் யோகு காக்கும்
சடையனே என்ன வாகி
வந்ததை அமையச் சொன்னன்
வருவதைத் தெளிதல் வல்லான்.

அமைச்சரோடு அரசன் சூழ்வு

592 தென்னனே ஆக மற்றும்
திறல்மிகு சேர னுக
பொன்னெடு புலங்கள் நீண்ட
புகரிலான் எவனு மாக
என்னையிங் கெள்ளி நின்ருல்
இலையிலை உய்தி யில்லை;
மன்னவோ? மகிழ்வு கொண்டு
துன்னவோ? மடவர் கெட்டார்.

593 பரிதியஞ் செல்வன் முன்னுப்
பார்நிலை நிறுத்த மன்னர்
வரிசையின் யானு மானேன்
வாய்நலீர் நுங்க ளாலே
விரிநில வேந்த ரெல்லாம்
வெஃகுமா வளனும் வாழ்வும்
உரிமையின் நின்ற தென்ருல்
உம்புகழ் கூறற் பாற்ரே!

594 மதிவழி காட்டிச் சென்று
மாணுற வாக்கல் வல்லீர்!
விதிவழி யலைத்த லாலே
வீரமார் சேர னெடு
பதிவளப் பாண்டி வேந்தும்
பகையெனப் பொரும லானர்
எதுவழி செய்வ தென்றே
ஓரை ஏற்று நின்றேன்.

595 தன்னுயிர்க் கினிய தன்றித்
தரணியாள் முறைமை நோக்கி
என்னுயிர்க் கினிது நாடும்
எண்குணச் சிறப்பு மிக்கீர்!
மன்னுயிர் நலத்தை வேண்டி
மறைந்தறி யொற்றன் சொல்லப்
பின்னுமோர் ஒற்ருல் ஒற்றிப்
பிறிதுமோர்ந் தறிந்த தோர்வீர்.

596 இனையனும் அரசி னுற்றல்
இலாதவர் நெருங்கிச் சூழும்
கினையனும் களத்துப் புக்குக்
கினர்ந்தெழல் இலனும் நன்னெஞ்
வினையனே என்று போந்தை
வேந்தனூர் புகலப் பாண்டி
வனையனும் நகைச்சொல் லாடி
வளர்த்தனர் பகைமை கண்டீர்.

597 போர்வெறி யுற்ற போதும்
பொறுப்பதே கடனென் றுனேன்
நேர்நெறி யற்றேர் எள்ளி
நெகிடினர் உளத்துக் கந்தோ !
சீர்நெறி யாமோ என்னைச்
செறிந்தவர் இயலைத் தூற்றிக்
கூர்மதி யில்லார் நிற்கக்
கொள்கையின் றமைதல் ஐயா !

598 எனக்குறு மிழுக்கொன் றுண்டேல்
எதிரிடேன் உண்மை யாலுல்
மனக்குநன் னுட்டைத் தூற்றும்
மதியிலி எவனே யானும்
தனக்குறும் பழியத் தாக்கித்
தரையிடை வீழ்த்திச் செங்கீர்ப்
புனத்திடைத் தவழு மாறு
புரிவது தவிர மாட்டேன்.

599 தாயினைப் பழித்த லேற்கும்
தனயனும் உளனே நாணம் !
பேயினைப் பெறுவ ளேனும்
பிறந்திடும் மானம் உண்டாம் !
நோயினை ஆக்கும் நொய்யர்
தொடிப்பொழு தளவில் வீழப்
போயினை மைந்த வென்று
புகலுமா றமைவென் இன்னே.

600 காப்பது மானம் ஒன்றே
கன்மனத் தவரால் ஆவி
நீப்பது நேரு மேனும்
நெகிழ்ந்திடேன் மும்மை சான்றீர் !

ஆர்ப்பதும் கொழுத்துச் சாய்ந்து
வேர்ப்பதும் ஆக்கை பேணிப்
பார்ப்பதும் வாழ்க்கை என்ருல்
படுகவென் பாழும் வாழ்வே.

601 தக்கவோர் முறைமை காட்டித்
தனிப்புகழ் தாரீர் என்ருன்
ஒக்கவோர் உளத்த ராகி,
''ஒண்கழல் வேந்த கேட்டி!
நக்கவோர் வேந்தற் காக
நாடுறை மக்கள் எல்லாம்
புக்கழிந் திறக்க லாமோ?
பொருந்துவ செய்க வென்றே.

602 கரந்தறி யொற்றன் வாக்கைக்
களத்திடைப் போகு முன்னர்த்
தெரிந்தறி வதற்கோர் தூது
தேர்ந்தனம் விடுத்தல் நேர்மை
அரந்தையொன் றில்லை ஐயா
ஆய்வதில் என்று கூறி
நரந்தைநன் ஞகன் சேறல்
நல்லதென் றுறுதி செய்தார்.

நாகன் தூது

603 காற்றெனக் கடிது சென்ற
காவலன் தூதன் கொட்புக்
கூற்றெனப் புகுந்து கொள்கை
குறியெலாம் குறித்து நின்றும்
கீற்றென நகைத்துச் சேரன்
கிளறினன் போரை மீண்டும்
ஊற்றென இவற்கொன் றில்லை
ஒழிவனர் என்ன எண்ணி;

604 கொய்யுளைப் புறத்தி லேறிக்
கோக்கரி திருமுன் சென்று
செய்தியைக் கூற அன்ஞன்
சினந்தனன் பிறந்த சீற்றம்
ஒய்யெனக் கண்ணிற் ருேற்ற
ஓங்கிய குரலில் ஆய்ந்தோர்
எய்துவான் உரைக்கு மாறங்
கேயினன் வரவு தந்தார்.

605 திண்டிறல் உணரான் மாட்டுத்
தேர்ந்தனம் தூது போக்கிக்
கண்டனம் இழுக்க மாங்குக்
கழறிய மேலாஞ் சொல்லே
விண்டிடு நாக வென்ன
விளக்கமாய்த் தெரியச் சொல்வான்
தொண்டிவன் வேந்தன் சீறித்
தொடுத்ததைத் தொடுக்க லாஞன்.

(வேறு)

606 நாடு தூதுவ நல்லுரை கேட்குதி
ஏடு கொண்டொரு மாற்றுரை சொல்கிலேன்
கோடு கொண்டெம யானைகள் தீட்டுமோர்
பீடு சாலெழுத் தேற்றிடச் சாற்றுதி.

607 கண்ணி கொண்டெழுங் காரெனத் தோற்றுமா
வெண்ணி யொண்கள நண்ணுமென் தின்படை
எண்ணி அண்ணலும் கண்ணிய வீரனேல்
மண்ணி நீந்துக மாறெனும் வெள்ளமே.

608 சொல்லில் வல்லமை காட்டினன் சொத்தையன்
வில்லில் வல்லமை காட்டுமோர் வல்லவற்
கில்ல தம்முறை ; எம்முறை தேர்ந்துரை ;
கல்லின் வல்லமை காட்டுமோ வாயுரை ?

609 கூறு கூற்றினைக் கூறுமா றென்முனே
வீறு நின்கொடு வாயினைப் பற்றியான்
கீறு மாற்றலன் என்னினும் விட்டனன்
பேறு தந்தவன் என்பதாம் பெற்றியால்.

610 வீர ரானவர் வீங்கிய தோளராய்ச்
சோர லாயினர் சோறுணல் நீத்தனர்
நேர லாமொரு போரெனக் கேட்டிடின்
சீரங் கொள்நரும் சேரவிங் கெய்துவார்.

611 இன்னும் என்னென கூறுவ தேகுதி
துன்னு தானையோ டெய்துமா ரேதுதி
மன்னு மாற்றலைக் காணுதி கண்களால்
என்ன வோதினன் மன்னவ ! கொங்கனே.

612 தூது சென்றவன் போரிடல் குற்றமென்
றோது வாரென வுற்றனன் கேள்வியோ
டேது மெண்ணவும் இன்றினிப் போர்க்களம்
போது மாறருள் செய்கெனக் கூறினன்.

கரிகாலன் வஞ்சினம்

613 சொல்லு முன்னரே கல்லுருள் வெண்கலம்
புல்லு மோசையிற் பேரிடி செய்தவன்
செல்லில் வல்லிடி யாயினன் நின்றவர்
பல்லும் விம்மின பான்மையும் விம்மவே.

614 மானந் தேய்ந்தது மாற்றரு மாற்றலும்
ஈன முற்றது வேந்தெனும் போதும்
ஊன முற்றது தூதனின் வாயுரை
ஆன வாறுநீர் ஆய்ந்திரோ என்னினி?

615 மாற்ற மொன்றிலை மண்டிய போரிடை
ஆற்றல் காட்டிட மாட்டனேல் மும்மையாய்ப்
போற்று செந்தமிழ் தூற்றவும் கேட்டிடும்
நாற்ற யாக்கையன் போலயான் நண்ணவே.

616 கண்ணின் முற்பட நின்றெரு காமுகன்
பெண்ணின் நல்லவென் பெய்குழல் மாதினைக்
கண்ணுங் கேட்டினைக் காண்பதோர் தீநிலை
நண்ணு மாகுக நானவண் தோற்பனேல்.

617 கொல்லு வெஞ்சின யானையின் மேற்பயில்
வெல்லு மாமுர சார்த்திடு வீரனே!
புல்லு நல்வினை யுண்டெனும் பூப்பினேய்!
சொல்லு வாயமர் உண்டென ஊர்க்கரோ.

618 வீரங் கொண்டவர் எய்தவும் ஏனையர்
வார மாந்தராய் வாழவுஞ் சாற்றுக
ஆரங் கண்ணியன் ஆக்குவ தொன்றிலை
ஈரஞ் செய்குவன் என்றுரை சாற்றுகே.

619 தானை வல்லுந தாட்படு சுற்றமோ
டானை முன்னராம் வன்படை ஏவுதி;
சோனை மாரிகள் வான்முகில் பெய்குவான்
போன வாறெனச் செங்களம் போக்குதி.

620 காள மேகமென் பேருறு மாளியே!
நீளு நின்திறன் காட்டுவான் போரணி
ஆள லாகுக ஆட்படை தங்குவான்
பாளி செய்குக பற்றலர் வெள்கவே.

621 கோறு வெம்படைக் கொட்டிலின் காவல!
வீறு கொண்டவர் வேண்டிய கொள்வதற்
கூறு செய்திடேல் ஒல்லுவ தேறவும்
மாறு செய்திடேல் வாரியின் காவல!

622 மற்று மற்றுள வேலைகள் செய்வதற்
குற்ற பெற்றியர் மூத்தவ மைச்சரே
கொற்ற மெய்துதல் தம்கடன்; எற்கெனே
உற்ற செய்கெனு ஓதினன் வேந்தனே.

படையெழுச்சி

623 பேரி கையொலி பெற்றனர் விம்மினர்
யாரி தெய்தினர் என்றனர் பொங்கினர்
நேரி வேந்தனுர் வீரரின் நெஞ்சுரம்
பாரி ரோவெனப் பாய்ந்தனர் சாடுவார்.

624 கொட்டு கையினர் கோளரி நோக்கினர்
தட்டு தோளினர் தாய்வரு வேங்கையர்
கட்டு மொண்கழற் காலினர் கண்ணியர்
கிட்டு பேறெனக் கேளொடு மார்ப்பரே.

625 ஓடை ஒண்புகர் யானையை ஒப்பனர்
வேடை தீர்ப்பதற் காமென மேற்றுகில்
ஆடை வீசினர் ஆர்த்தனர் பற்றினர்
தாடை விம்மிய புல்லணற் காளையர்.

626 முத்த மீந்தனர் முன்னவர் தேடிய
சொத்து மீந்தனர் அன்பெனுந் தாய்தரு
பித்து மீந்தனர் பேசுதற் கென்னென
மொத்த இன்பமும் மூண்டெழு வீரரே.

627 சக்க ரச்சுழல் வாமென ஓகையில்
மிக்க மள்ளருஞ் சுற்றினர் உள்ளகம்
புக்க பேருணர் வோங்கிட வாயினுல்
கொக்க ரித்தனர் கூறுவர் கூடியே.

628 வீணில் ஓயுமிவ் வேட்டமில் யாக்கையைப்
பூணு நற்புகழ்க் கொள்கலம் ஆமெனப்
பேணி ஈந்தவன் பெற்றியை என்சொல
கோணல் வாழ்க்கையுங் கொண்டது பேறரோ.

629 செக்கர் நன்னில நீரெனுஞ் சோரியுள்
புக்க ஒன்னலர் வெம்படைக் காடெலாம்
உக்க நாய்நரி ஓர்புறம் பற்றுவான்
சிக்கு போரினை வாழ்த்துகம் வீரரே.

630 கூவி யாட்படை சேர்ப்பதற் கொன்றிலை
தாவி வந்தெழுந் தண்டினர் தங்களைப்
போவி ரீண்டெனப் புண்படுத் தாவணம்
தூவி வேண்டுவம் தொள்ளாயம் அல்லமே.

631 தேரல் விம்மலால் தேக்கெறி காவல !
ஊர வெம்பரி குந்தமோ டூந்திடின்
வீர மல்கிய எங்குடி மாண்பினைச்
சேர நாட்டுவன் செய்வது வல்லியோ?

632 உண்டி ஒண்பொருள் ஓங்குவெஞ் செல்வமும்
கொண்டு வாழுக என்றருள் தாயினை,
மிண்டர் ஏசவும் ஏற்றிவண் நிற்பது
கண்ட பேய்மகன் காணலம் நாட்டிலே.

633 நாட்டு மக்களின் நல்லுயிர் தானெனக்
காட்டு செய்கைய காவலன் வேண்டியும்
வீட்டு ணின்றிடும் வீணனும் யாவனே?
பூட்டி வைப்பினும் நிற்கிலர் போதுவார்.

634 வெள்ளம் காத்திட ஆள்வரற் கல்கினும்
துள்ளு போர்முகம் செல்வதற் கல்கிலார்;
வள்ள மல்கிட வாக்கிய தீந்தெளி
கொள்ளு வாரிலர் கொள்கையி னின்றரோ.

635 பிஞ்சு மென்மொழிச் செஞ்சொலர் வாயினுல்
கொஞ்சு நன்மொழி அஞ்செவிக் கேட்பனர்
தஞ்சம் தாவெனத் தாள்பட வென்றபின்
தஞ்ச மாகுவென் உன்னடி என்பரால்.

636 ''கூற்ற மாமுருக் கொண்டியல் கண்வலாய்!
ஏற்ற வுன்னுரு வுண்மையின் மாற்றவர்,

காற்றில் பஞ்சென ஆகுவர் கா''ணெனப்
போற்றி எய்துவர் பூங்குழற் கன்பரே.

637 ஆடி நின்றவோர் பாலனே ஆயணைத்
தேட! ஓடுதி போர்க்களம் நங்குடிப்
பீடு நம்பியர் பெற்றுள பேற்றினை
நாடு தேறுமா ருக்குதி என்பரால்.

638 ஆடிப் பாவையென் றண்ணலே ஆக்கிய
ஊடல் மங்கையர் போர்ப்பறை ஓங்கிட
நாட லாயினர் நல்லிசை பாடியே
கூட லாயினர் கொஞ்சுதல் விஞ்சவே.

639 கையில் வந்தன கொண்டனர் போரெனும்
செய்யிற் சூரெனப் பாய்வதற் கோடினர்
மெய்யில் யாக்கையை மெய்யெனக் கூறிய
மெய்யர் தங்களே மெய்யரென் ருக்கவே.

640 போந்த புன்சொலாற் போர்வரக் கேட்டவர்
சேந்த கண்ணராய் மாறினர்; செந்தமிழ்
மாந்து சொல்லியர் மைந்தரைக் காணினும்
தீர்ந்த பாடலே கண்சிவப் பம்மவோ.

641 உற்ற நன்முர சார்த்தது கேட்டியோ?
வெற்றி வெற்றியெம் அண்ணலும் வெற்றியன்
பற்று வெந்தலைப் பாவையும் வெற்றியள்
கொற்ற வீரரும் வெற்றியர் என்பதே.

642 உண்டி கொள்கெனத் தன்னுடன் வைத்துணும்
அண்டர் தேவனுக் காருயிர் ஆயிரம்
கொண்ட தில்லையாம் கொள்கடன் தீர்ப்பதற்
குண்டு காணெரு நல்லுயிர் என்பரே.

643 வாய்மை யாலுல காண்டிடும் வன்றிறல்
தாய்மை யாளியை ஆழ்துயர் வீழ்த்திய
பேய்மை யாளனின் பேழ்வகிர் வாயினை
நோய்மை யற்றிட நோக்கினென் கீளவே.

644 என்னை முன்னெரு நாளிடை ஏசிய
பொன்னன் வன்தலை போழ்பனங் காயெனக்

கன்றி வீழ்ந்திடக் காண்பதோர் நல்வினை
மன்னன் தந்தனன் மன்னுக நீடரோ.

645 பாச வல்வினை பற்றவும் உற்றவர்
பாச வல்கறி வாயுற நீர்க்கடன்
தேசி லெய்துவர் திண்ணமாய் என்கணை
வீசி நிற்பனேல் என்பனேர் வீரனே.

646 அம்பு வண்புழை தந்தருள் சோரியாம்
வெம்பு நீரினுல் வெங்கொடுங் காலனின்
பம்பு வாயினைப் பாற்றுவன் காண்மெனத்
தும்பு மாட்டுவர் தூக்கிய வில்வலார்.

647 வாளில் வல்லவர் ஆயினும் வாய்ப்புடை
நாளில் சேறலே நற்பயன் என்றருங்
கோளில் வல்லுநன் கொண்டவோர் போழ்தினை
ஆளி மொய்ம்பணி நாட்கொளல் ஆயதே.

648 வீர மங்கையின் நாவெனும் வாட்படை
ஆர ணங்கவள் ஒண்முக மாங்குடை
கார கில்மணம் கண்ணிக ளேற்றணி
சேர லாயின செங்களஞ் சேறவே.

649 கொம்பு வங்கியம் முற்படக் காளமும்
நம்பி போரணி பிற்பட நால்கரத்
தும்பி வெம்பரி வையமென் ருயன
அம்பு லிக்கொடி யோடெழு லாயவே.

650 யானை யேறிய சீயமென் ருேதுவான்
போன வேந்தனைப் போற்றினர் வெற்றியாம்
மான மங்கையும் தோள்புகக் காணுதற்
கான வாய்ப்பென ஆர்த்தனர் விம்மவே.

651 கோடைப் பேரிடிக் குன்றெனச செல்வதோர்
ஓடை ஒள்ளணி ஓங்கலின் மேலுள
ஆடற் சீர்க்கணை யற்கயர்ந் தாங்கவர்
தேடு கூற்றம்வே றின்றெனத் தேறினர்.

652 பாண்டு மைந்தரைக் காத்திடு பான்மையால்
தூண்டு தேர்வல கண்ணனுக் கொப்பென

நீண்ட வாழ்த்தொலி எங்கணும் கேர்ந்தெழ
ஆண்ட நற்குண நல்லமைச் சேதுவார்.

653 மாதர் நின்றனர்; மண்டிய நோயொடு
போத வெண்ணினர் நின்றனர்; பேடியென்
ரேது பாலினர் நின்றனர்; ஆணென
யாது நின்றதாம் ஓவியம் அன்றியே.

654 உந்து மாக்கடல் ஓதையென் றையுற
ரந்து தானைகள் நற்களம் ஏயின
முந்து போர்ப்பசி மூண்டுள வானவன்
சிந்து பாடினன் செங்களம் சேரவே.

வீரர் ஆர்ப்பு

(வேறு)

655 முன்னுற வொருவரை யொருவர் மோதினர்
கொன்னுற வொருவரை யொருவர் கோதினர்
என்னுரம் அறிகென எழுந்த வீரரை
மன்னவன் மகிழ்வுற வழுத்தி விம்மினன்.

656 அள்ளுமின் பொருள்வகை ஆவல் இ.:தென
விள்ளுமின் வினயமாய் ஆளும் போர்ப்படை
கொள்ளுமின் கொணாபடை ஓட்டி வென்றியை
நள்ளுமின் நமக்கிது வாய்ப்பென் ரேதினன்.

657 தீயெனக் கதுவிய திருந்து வெம்மையால்
தீயெனு நிறமுறு விழிய ராயினோர்
தீபுகு கழையென வெடிக்கப் போயினர்
தீதரு புகையெனப் புழுதி மல்கவே.

658 ராவெனவி எழுந்தது நம்பன் வாழ்கெனும்
பாவெனவி எழுந்தது பாவை மார்தரும்
மாவெனவி எழுந்தது மாசி னூர்திகள்
பூவெனவி எழுந்தது புக்க போழ்திலே.

659 பத்தொடு மொருவராம் வேளிர் பாங்குறக்
கொத்தலர் நினபுன தென்னர் கோனுற
ஒத்தவர் இல்லெனுஞ் சேர னாதனும்
மத்தகப் பிடர்மிசை மான வேறினன்.

படைவகுப்பு

660 வில்லவன் விஜேவலன் வீரன் வேலவன்
கொல்லியன் குணபரன் கொற்றச் செங்கணன்
மல்லவன் மதிவலன் மாறன் இன்னராம்
வல்லவர் படையணி வாண ராயினர்.

661 கீழ்த்திசைக் கடலினைக் கெடுத்துத் தூர்க்கவோர்
காழ்படு நினைவொடு கதிக்குங் கற்குலம்
வீழ்நடை யுற்றென விரைந்த யானைகள்
தாழ்முகில் பகையெனத் தருக்கி நோக்குமால்.

662 எய்திய அணிவகுப் பிருபத் தொன்றென
மெய்வலி யுடையவர் முறையிற் பாத்தலால்
உய்யுமா றிலையென உறுதி செய்தனர்
ஐயனுஞ் சேரலன் ஆற்றல் தேறியோர்.

663 வஞ்சியர் கோமகன் வகுத்த கோட்படி
செஞ்சர வில்லவன் செருக்கு மீக்கொள
வெஞ்சின வரவென விளக்கும் பான்மையில்
எஞ்சலில் வலிப்படை நிறுவிக் காட்டினன்.

664 பார்த்திபர் இருவரும் படையின் பின்வரச்
சூர்த்திற விஜேவலன் வீரன் சூழுற
ஆர்த்திடு சிறைகளில் மாறன் கொல்லியன்
சீர்த்திட மதிவலன் செலுத்தி யேவுவான்.

665 பாந்தளம் படைபட நிற்ப தாயினும்
கூர்ந்தொரு நோக்கினுல் குமைக்கும் கலுழனென்
றேர்ந்துணை ரொண்படைக் காள நம்பியன்
தேர்ந்தனன் நெடும்படை யவ்வ தாகவே.

ஏழாவது களம்புகு படலம் முற்றிற்று.

8. களப்போர்ப் படலம்

666 தார்ப்படை கார்ப்பொடு போர்க்கு மோர்புறம்;
கார்க்களி ரூர்புறம் கலித்துப் போரிடும்:
தேர்ப்படை யோர்புறம் தெளித்து நேர்ந்திடும்;
தூர்த்திடும் ஒலிபடத் துரக மார்க்கவே.

667 காரொடு காரெனக் கரிகள் தாக்கின;
நீரொடு நீரெனப் பரிகள் மோதின;
பாரொடு பாரெனத் தேர்கள் சாடின;
சூரொடு சூரென வீரர் நேரவே.

668 ஆலநல் லுருவமும் அமுதப் பற்களும்
ஏலும்வல் கரிப்படை எதிர்க்கு நோக்கொடு
வேல்வலர் சூழுற ஏகி ஞன்கரி
காலனும் பெயரினைக் காட்டு மாறரோ.

யானைப்போர்

(வேறு)

669 முட்டி ரூர்புறம் மோதினூர் மத்தகம் சினந்து
வெட்டி ரூர்கரம் வீட்டுண வாழையின் குலைபோல்
நெட்டி ரூரடி சோர்ந்தயல் போய்விழ உவந்து
கொட்டி ரூர்கரம் கொண்டிருங் கொண்மிடி யெனவே.

670 பற்றி யேறினர் பால்மதி என்றுள நகிலிற்
சுற்றி யீர்த்தனர் சூறையை நேர்ம்மென நவிலக்
குற்றி யாமெனுங் கால்களைச் சிக்கெனப் பிணைத்து
வெற்றி காண்ம்மென எ:கெறிந் தார்த்தனர் பெரிதே.

671 துள்ரு வெள்ளமாய்ப் பாய்ந்தெழுந் தோடிய கரிதன்
வெள்ளி வெண்ணகில் இற்றிடத் தாக்கிடும் எதிர்ந்த
புள்ளி ஒண்முகப் போதகம் மையென விரிந்து
வெள்ள வெண்ணுரை போல்நினைச் சேறெழ விழுமால்.

672 தூங்க லொன்றெடு மொன்றெதிர் தூண்டிய வெறியால்
வீங்கு கையொடு கைபிடித் தெந்திரத் திரிகை

யாங்கொ லென்றிடச் சுற்றுமா லாங்கொரு களபம்
ஊங்கு கைபிணைத் தோகையிற் றெங்குமால் சுழன்றே.

673 முட்டி மோதலும் மொய்த்தெதிர் தாக்கலும் முயன்று
வெட்டி யீர்த்தலும் வீறிடப் போழலும் குயவன்
சட்டி யாமென வெற்றலும் சாடலும் கருதி
எட்டு மட்டிலும் காரிடி ஒன்றிலே இருந்தே.

(வேறு)

674 வீரிய் மல்கு வேழமொன் றுற்ற தெடுவேலைப்
பேரிருங் கையால் பிடித்துள காட்சி கலிவல்லான்
தூரிகை பற்றித் தோய்தரு வண்ணக் குழம்பூட்டிச்
சீரிய ஓவு தீட்டுதற் குற்ற செயலாமால்.

675 பந்தெனத் தூக்கிப் பாகரை வீசி வெறியோடும்
கொந்தளக் கோலக் குடுமிகள் கொண்டு பறிப்பாரும்;
சிந்துரப் பொட்டு, செங்கள மங்கைக் கணியாக
முந்துறச் செய்ய முனைப்பொடு குத்தும் முறைதேடும்.

676 இற்றுள கொம்பைப் பற்றிவன் கையால் எடுத்தோச்சிச்
சுற்றுள வீரச் சூழலி வீழ்த்தும் திறங்கண்டோர்,
உற்றுள ஆண்மை அற்றவ ராகி வனிகொம்பு
பெற்றுள பேர்க்கும் உலைந்தனர் ஓடி மறைவானர்.

677 விட்புலந் தாக்கும் வேட்கைய தென்னக் கரந்தூக்கும்
மட்புலந் தாக்கும் மையல தென்னத் தரைநோக்கும்
புட்குலம் வாழ்த்தப் பொங்கிய தென்னப் புரள்வாகும்
கட்புலம் நோகக் கரிக்குலம் போர்த்த கனத்தம்மா.

678 முத்துடைக் கொம்பால் மூழ்திடப் பாய்ச்சி உழுமென்பார்;
மத்தகக் கும்பல் மாய்ந்தொருங் காய கரையென்பார்;
குத்தெழு சோரி கூர்ந்திட வோங்கும் வயலென்பார்;
வித்தக வேளாண் நன்மகன் சால்புக் கிணையென்பார்.

679 மந்திரஞ் சொல்லும் மைம்மலி என்பார்; மறித்தாங்கே
சிந்துரங் கொட்டுஞ் செம்மலி என்பார்; நிலமாகும்
சுந்தரப் போர்வை சூழ்மலி என்பார்; பறைகொட்ட
முந்தெழு வீரக் களிம்மலி என்பார், முறைகண்டோர்.

680 கன்மலி நாட கரிக்குலம் இன்னும் மிகவுண்டோ?
பன்மலி நீந்தும் பாணிய தேனும் படுபோரில்

என்மலை யாற்றல் இன்றென வேலால் கரிகாலன்
மன்மலைக் காடும் மதமலைக் காடும் மடித்தானுல்.

681 முத்தலை என்றும் இருதலை என்றும் ஒருதானும்
வைத்தலை யென்றும் வாட்படை என்றும் இவையெல்லாம்
எத்திறம் ஏற்ருன் எத்திறம் எய்தான் இமைமுன்னே
எத்துணை யாவி நீக்கினன் என்ன எவர்தேர்ந்தார்?

682 வேற்படை வேளோ இந்திரன் என்னும் விறல்வேளோ?
ஏற்றெருருங் குற்ற ஐங்கணை வேளாம் மதவேளோ?
போற்றுமோர் ஆற்றல் பெற்றுளான் போரைத்
தனதாக்கிக்
கூற்றுவன் தொண்டுக் காந்துணை யானென் எனநின்ருன்.

683 சேரரின் வேந்தன் யானையின் ஏறிக் கரிகாலன்
வீரியம் மாய்க்க ஏவுவான் போல வெளிவந்து
கூரிய வேலும் ஈட்டியும் கொண்டு கடிதோச்சிப்
போரிய லெல்லாம் பொற்புறக் காட்டிப் பொரலானுன்.

684 ஓய்ந்தவர் எல்லாம் ஓங்கினர் விஞ்சித் தெளிவானுர்
மாய்ந்தனம் என்று மதித்தவர்கூட மறம்விஞ்சிப்
பாய்ந்தனர் வந்தார் பல்லியம் மல்கப் பழிவாங்க
வாய்ந்தநற் காலம் வந்ததென் ருய நினைவானுர்.

685 பொன்னியஞ் செல்வன் போதகம் வீழ வொருவேலை
இன்னறும் போந்தின் மன்னவன் வீசி விறல்கண்டான்;
புன்னுழை வாகும் பூவிதழ் என்ன நுழைந்தோடி
இன்னெரு காதில் நண்ணிய தென்னின் திறமென்னே!

686 வெவ்வமர்ச் சாவே வீரரின் வெற்றி யெனவந்தோர்
தெவ்வுறு மாண்மை வேல்வலி கண்டும் அயராராய்
அவ்வவர் கொண்ட யானையில் ஏறிப் பழிவாங்கல்
எவ்வகை என்ன எண்ணினர் சூழ்ந்தார் எதிர்வானேர்.

687 நெஞ்சுரங் கொண்டு நேடிய வேலால் செவிபோழ்ந்து
குஞ்சரம் வீழ்த்து கொற்றவன் நெஞ்சம் முனைக்கண்ணே
செஞ்சவி வேலால் உட்டுளை செய்யத் தவறேனுல்!
எஞ்சலில் காகம் பாற்றினம் வாழ்க எனச்சொல்லி,

688 வெங்கதிர் தந்த தண்கதிர் என்னும் மதியொன்று
மங்குலின் மீது தோன்றிய மாண்பர் இதுவென்னப்

பொங்கொளி மோலி பொலிவுற வேழப் பிடரேறி
அங்கவி வாணர்க் கருங்கல மாணென் விரைவாணன்.

(வேறு)

689 வேலவன் செலுத்திய வெதும்பு வாம்பரி
காலொடு காலிடைப் படுத்து வீரரை
ஆலியிற் கரும்பென அகைக்குங் காலையில்
ஓலமிட் டரற்றியங் கொதுங்கல் நோக்கினன்.

690 சென்னியர் கோமகன் செயிர்த்த கண்ணனுய்
மன்னிய மாசெனக் கெய்து மாறிவர்
பின்னடி யிட்டனர் பிறழ நோக்கினர்
இன்னது காணவோ இருந்த வாறென.

691 ஆற்றலைப் பழித்தவர் அமரில் வென்றெனைத்
தோற்றிடச் செய்திட இருத்த லொல்லுமோ?
கூற்றமே யாயினும் குமைக்கு மாற்றலர்
வீற்றெருடு வீற்றுற விழுதல் யாவதோ?

692 பற்றிய தீயிடை அமைந்த பார்ப்பினம்
பற்றெலாம் விட்டுயிர் பாற்றும் பான்மைபோல்
வெற்றியை எண்ணிலர் வீர வேள்வியங்
கற்றவ, ராம்படி அலைதல் காணவோ?

693 கரிப்படை எதிர்ப்பதை ஏன்று கொண்டனன்
பரிப்படை எதிர்ப்பதைப் பயின்ற காளனும்;
அரிப்படை எனக்கொதித் துடற்று மாட்படைக்
கெரிப்படைக் கணையனும் எதிர்க வென்னவே.

குதிரைப் போர்

(வேறு)

694 தேசிகன் ஆணை ஏற்றுத்
திருவளர் காள ரம்பி
வாசியிற் பறந்த போது
வண்கள வயவ ரெல்லாம்
தூசியே யென்ருர்; உற்றுத்
துரகதத் தாளைக் கண்டு
தூசியே என்ருர்; அன்னேர்
தூசியிற் றூசி யானர்.

695 எற்றுதல் மோதல் தாக்கி
இடறுதல் இடித்தல் தள்ளல்
பற்றுதல் எறிதல் பாய்தல்
பற்களால் குதப்பித் தள்ளல்
சுற்றுதல் சுழலல் ஓடிச்
சூழலைக் கலக்கல் என்றோர்
பற்றுதல் இல்லை யாகப்
படுத்துமால் நம்பி மாவே.

696 எரியிடை வீழ்வ தென்றும்
புரிசடைக் கற்றை சூழ
வுரியுடை யுடுத்துக் கானம்
ஓடுவ தென்றும் வெம்போர்
நெரிவதன் முன்னர் நின்றோர்
நெஞ்சிடை யுவப்பா ராகிப்
பரியென அடர்த்து வந்து
பரிபவப் பட்டுப் போனார்.

697 பிள்ளையன் வலிமை தேறுன்
பேணிய உடலம் இல்லான்
வள்ளிய படைக ளின்றி
வாட்படைத் தலைவ னுகிக்
கிள்ளியின் ஆணை யேற்றுக்
கிளர்ந்தனன் உடலந் தாங்கும்
கிள்ளையென் றணுகி வந்தோர்
கீச்சென அலற லானார்.

698 வந்தனன் தடுமின் வாளால்
வாட்டுமின் உடலுட் பாய்ச்சிப்
பொந்தெனத் தோற்று மாறு
போக்குமின் வேல்க ளென்று
சந்தணி மார்பு மள்ளர்
சாற்றினர் ஒருங்கு கூடிக்
கந்துகம் என்று நேர்ந்தார்
கந்துகம் ஆகி நொந்தார்.

699 மல்லினுல் சாய்ப்பன் காலால்
மாட்டுவன் கையி னுலே
புல்லியே அடக்கி மீள்வன்
புறத்திடை ஏறித் தாவி

வல்லமை தெய்ப்பன் காண்பீர்
வயவரே என்று மாவின்
புல்லுளைக் குடுமி காண்போர்
போயின குடுமி காணர்.

700 ஆடைகள் வரிந்து கட்டி
ஆவதாம் வெற்றி யென்னும்
பீடியல் புறத்தை உந்தப்
பெரும்படை கையிற் ருங்கி
வேடையில் நொந்து வந்தோர்
வெவ்வழல் செய்த லில்லாக்
கோடையென் றெண்ணிப் பாய்ந்து
கோடையிற் கோடைப் பட்டார்.

701 அரதன மாலை சூடும்
ஆளிய மொய்ம்பு மார்பன்
பரணிகொள் வதற்காம் ஆக்கம்
பாற்றுதல் கடனென் ருேடி
முரணிய பகையை வீழ்த்தி
முறைவரு படைகள் நோக்கும்
துரகதம் அடக்க வந்தோர்
பரகதிக் கடங்கி விட்டார்.

702 ஏடவிழ் தாரின் வீர!
என்திறம் கேட்டி! முன்னர்த்
தோடமை படைஞர் சூழ்ந்து
தொடுத்தெனை மறிக்க மூங்கிற்
காடெனப் புகைத்தேன் ஈங்கண்
களத்திடை எதிர்க்க இந்தப்
பாடலம் ஒன்ரே என்போன்
பாடலை ஞகி வீழ்ந்தான்.

703 பக்கரை அறுத்துத் தள்ளிப்
படைகளைச் சிதைக்கும் தீய
சொக்கனை வெட்டி வீழ்த்திச்
சுரியுளை வயங்கு யாக்கை
குக்கலோ டோரி கங்கக்
குணவெனச் செய்வான் தேடிக்
கொக்கென வந்தோர் அந்தோ!
கூற்றுவாய்ப் பட்ட தானர்.

704 கோவென அலறு வோரும்
குற்றுயிர் பட்டுச் சோர்ந்து
காவெனக் கதறு வோரும்
கருணையொன் றின்றி மேலே
ஏவெனச் செலுத்து வோரும்
இரைந்தனர் நின்ற ராக
மாவென எதிர்க்க லாளேர்
மாவெனத் துவைத லானர்.

705 வாளென நம்மைக் கூறின்
வாளரம் இவனே வாய்மை;
நாளெனல் நங்கட் காயின்
நாட்கதிர் இவனே காண்மின்;
பூஞாநம் உரவோர் என்றுல்
பொருவளி இவனே ஆவன்;
கானஞும் பெயரை மாற்றிக்
காலனென் றுரைத்து மென்ருர்.

706 காற்றென விரைத லாலும்
களத்திடை அதரிக் கோறும்
கூற்றெனத் திரித லானும்
கொற்றவன் வெற்றித் தூணுக்
கேற்றவோர் இயைபி னலும்
எழுச்சியால் கால னென்று
போற்றுமோர் பெயரை இட்டார்
போர்க்களத் துற்ற பாட்டால்.

707 வெற்றிவாட் டடக்கை நம்பி
ஏவிய இவுளி யாற்றும்
பெற்றிமை இன்ன தாகப்
பிறர்பிறர் புரவி யெல்லாம்
முற்றவும் வெற்றி காணும்
முயற்சியில் முனைந்து தாக்க
உற்றவக் களத்தின் காட்சி
உளத்தினைத் தின்னு மம்மா.

708 ஊடலில் தோல்வி கண்டாள்
உறுபொழு துவப்பக் கூடும்
கூடலில் வெற்றி காணும
கொள்கையைத் தெளித்தல் போல

ஆடலில் இல்லை நன்மை
அமைவதே தக்க தென்று
பாடலம் படியிற் சாய்ந்து
பற்றறத் தீகழு மாமால்.

709 நோய்முகங் கூர்ந்த போது
நோமன முடைய ராகி
வாய்முகந் தமுதச் சொற்கள்
வாரிநன் கிறைத்து முத்தம்
சேய்முகந் தவழு மாறு
செயுநனி நீர்மை மல்கும்
தாய்முகந் தழுவல் போலத்
தரைமுகந் தழுவு மாதோ.

710 ஏவிய பகழி நோவும்
இடித்துள வேலின் நோவும்
நீவிய வாளின் நோவும்
நெட்டடி தடிந்த நோவும்
பாவிய சோரி நீங்கிப்
படுத்திய நோவும் ஏற்ற
மாவினைத் தழுவி யோர்மா
மறுவிலா வுறவு கொள்ளும்.

711 ஆர்முடி சூடுந் தானை
அமரிடை வீழ வேந்தர்
சீர்குடி முதல்வன் எம்மான்
செம்முடி யணியு மாறு
போரிட வல்லேன் என்று
பொருகளந் துழாவி எய்த்து
நீர்குடி நிலைமை காட்டும்
நிலத்திடைச் சாய்ந்த மாவே.

712 அருத்தியின் அளவு விஞ்சி
ஆவியும் உடலும் எல்லாம்
திருத்தியல் மாந்தர்க் காகத்
தேர்ந்தளி பெரியர் போல
உருத்தெழுந் துடற்றி மன்னன்
ஒண்புகழ் நிறுத்தி வீழ்ந்து
துருத்தியின் நிலைமை மானத்
துரகதம் உயிர்ப்புக் கொள்ளும்.

713 கைத்தலம் கட்கம் கொண்டு
களனெலாம் உழக்கிக் காளன்
பைத்தலை துமியு மாறு
படுத்திய புரவிச் சென்னி
இரத்தவன் சேற்றுள் ஊன்றி
ஏர்பெறத் தோன்றுந் தன்மை
முத்தலை வேல்கள் விஞ்சும்
முதியவள் இருக்கை போன்ற.

714 வந்தன இறந்த வாறும்
வருவன உளையு மாறும்
நொந்தன துறக்கு மாறும்
நோவன துவளு மாறும்
சந்தணி வயத்தோ ளண்ணல்
சடுதியில் மாய்க்கு மாறும்
முந்துமுந் தமைய வீரர்
முனைகளப் பாடு காண்பாம்.

களப்பாடு

(வேறு)

715 வேலெடுத்த வெய்யவர்கள் வேள்விநிலை யோர்பால்
கோலெடுத்த கொள்கைவல கூற்றுவர்க ளோர்பால்
ஓலெடுத்த சூலமுறும் ஒண்டிறல ரோர்பால்
தாலடுத்த வாளெடுத்த தாள்வலிய ரோர்பால்.

716 ஏற்றெருடுமே ருற்றலொடு போர்த்ததென வோர்பால்
கூற்றெருடுமோர் கூற்றமெனக் கொண்டலைத்த லோர்பால்
ஏற்றெடுத்த மேகமென எய்கணைகள் ஓர்பால்
நூற்றுவர்க்கோர் ஐவரென ஆயதுவாங் காட்சி.

717 ஒத்தபடை உற்றவரை விட்டொருவர்த் தாக்கேன்;
ஒத்தவுணர் வுற்றவரை அற்றெருருவர்ப் போரேன்;
ஒத்ததிறல் பெற்றவரை விட்டொருவர்ப் பேணேன்;
இத்தகையர் முன்வருக வென்னருகே வென்ரு.

718 வெற்றிமகள் கைப்பிடிக்கும் வேட்கைமிக லாலே
அற்றவர்கள் ஆண்மையிலர் மற்றிளையர் ஆய
பெற்றியுளர் பைந்தலைகள் பேர்த்தெறிய மாட்டேன்
எற்றிறத்தர் முன்வருக என்றலைவர் தேடி.

719 கைத்தலங்கள் எத்தனையோ? காலுமொரு காலோ?
மெய்த்தலங்கள் எப்படிப்போ? மேருவென லாமோ?
இத்தலத்தைச் சோரிகொடு மாட்டவென நோன்போ?
பித்தலது யாதுமிலை என்றுசிலர் சொல்வார்.

720 வெட்டுதலை வேலெடுத்த வேட்டமிகு மாட்டும்
பட்டவுடல் சோர்குடலைப் பாய்ந்துடற்றும் ஆட்டும்
நெட்டநெடு வெற்பரென யாக்கையவி யள்ளி
நட்டவொரு சூலமுடைக் கொற்றவைக்கு நேர்வார்.

721 வாட்படையின் வெட்டகழ வல்லெலும்பும் போழ்ந்து
தோட்படையின் தொங்குநிலை கண்டயரா வீரன்
ஆட்படைகள் ஆட்டுவதை நோக்கமெனக் கொண்டு
தாட்படைக்கீழ்க் கையமைத்து நேர்நிமிர்ந்து வப்பான்.

722 இற்றுவிழு கையெடுத்துக் காலையர்மேல் ஏவி
வெற்றிபெறு வீரர்முனர் அற்றுவிழு காலைச்
சுற்றியெடுத் தாய்ந்தெறியும் சூர்வயவர் மாண்பும்
ஒற்றையுறு காலினெற்றும் ஒண்டிறலும் விஞ்சும்.

723 தாக்கியுள அம்புநிரை வேலினிரை யாவும்
நோக்கியொரு புன்முறுவல் காட்டுவரால் வீரர்;
ஊக்கமுறத் தாக்கநினை போழ்திலிவை யாவும்
ஆக்கமென வுண்ணினைவர் ஆசைமிக லாலே.

724 வன்மையெலாம் கூட்டியொரு வாறமைத்துத் தாக்கி
என்னைவதை செய்தருக; தோற்பனெனின் போரின்
நின்னருகு துன்னுகிலன் தோற்றியெனின் நீயும்
என்னருகு துன்னுகிலை என்றுபிணை செய்வார்.

725 விட்டவொரு கட்கமுயர் யாக்கையினைப் போழ்ந்து
பட்டவொரு புண்கிழித்து வெற்றிமகள் முத்தம்
இட்டவொரு பேறதென உண்ணெகிழ்ந்து பாடி
நட்டநடஞ் செய்பவனைத் தூக்கிமிக வார்ப்பார்.

726 சென்னிபட நின்றவுடல் செய்யுமொரு கூத்தும்
தன்னுறவு தேடியலை தாய்க்குலத்தர் நோக்கும்.
மன்னுகண வன்முடியத் தான்முடியும் பெண்டும்
பொன்னிவள நாடன்புகழ் மீட்டுமுயர் பண்ணும்.

727 ஆடுநமக் கென்றெழுச்சி யாலெழுந்த ஆர்ப்பும்,
வீடுநமக் கென்றெழுந்த வீரர்களின் மாண்பும்,
பீடுநமக் கென்றெழுந்த கூத்துவளர் பெட்பும்,
ஏடுநமக கென்றமைந்த செங்களத்துச் சால்பே.

728 தார்ப்படைகள் போரினிலே இத்தகைய வாக
ஆர்ப்படலே யோடுமுயர் வாகைபுனைந் தோங்கும்
சீர்த்தியுற வெண்ணுகரி கால்வளவன் செய்யும்
போர்த்திறனைக் காணுங்கில் ஓவுங்கி லாமால்.

கரிகாலன்—சேரலாதன் போர்

(வேறு)

729 இறைமுடி பொடியுறப் பண்ணு
இணையிணை அடிகளால் எற்று
கறைபுகு பொருளென நையா
களங்கொளுங் கறையடி கண்டோர்
இறைமுறை எனமுறை செய்தே
இனியுறை வதுமுறை யென்பார்
பிறையென இலகிய கொம்பால்
பிறழ்ந்திடு முளத்தொடுஞ் செல்வார்.

730 மலையனை அழித்திட முன்னே
மதகரி நடவிய சோழன்
தலைதரை விழுந்திட எண்ணித்
தன்தையொளிக் கதைசெல விட்டான்
கிலைவல பொறையனங் கன்னே
கிதறினன் கணைமழை தொட்டே
நிலைகுலைத் தயர்வுறுஞ் சோழன்
நெறியுறக் களப்படை கொண்டான்.

731 கணைமழை சொரிதரும் வள்ளால்
கடலிய பரிசினைக் காணூய்
இணைபெறத் தருவதே எம்மோர்
இடுவென அறிந்திடு வென்றே
துணையறக் கதழ்படை ஏவித்
துடிபடப் பொடிபட விட்டான்
பணையுறு மழுஞ்லல் துண்டம்
படுவதை அறிந்தனன் எய்த்தான்.

732 மழுப்படை அழித்ததை உன்னி
மறுமுறை கறுத்தனன் ஒண்டார்
கழுப்படை உறுத்தெறி முன்னே
கதுவிய விழியொடும் வில்லோன்
எழுப்படை எடுத்தனன் பட்டே
இலையெனச் சிதைபடச் செய்தான்
விழுப்படைக் குடியிறை கண்டே
வியர்த்தனன் வெடித்தனன் நின்றான்.

733 வெகுளியின் புகையெழ அங்கே
விரைந்திடும் உடம்பிடி ஒன்றை
நகையொடுஞ் சிலைக்கொடி வல்லோன்
நடத்தினன் புலிக்கொடி நட்டோன்
தகுபடை இதுவெனத் தொட்டே
தனிவலிச் சிதைவிலா ஒள்வேல்
அகமுறப் புகுகென எய்தே
அவனியில் நிலைபுகழ் கண்டான்.

734 பயில்கொடை யுடையவன் உள்ளப்
பரிசிது வெனவுணர் நோக்கால்
அயில்புகுந் தயற்புறம் சென்றே
அறிவரின் புதையலை மென்கால்
மயிலியற் குயிற்பெடை அன்னார்
மகிழ்ஷறத் தருமுகில் ஒன்றைச்
செயிரறு வயமுறச் செய்தே
செழுங்கள வயந்தரக் கண்டார்.

(வேறு)

735 தெரிசுடர் எஃகம் பொழ்ந்த
திருமரு மார்பிற் செந்நீர்
புரிசடைக் கற்றை போலப்
புறப்படக் கண்டு வெய்யோன்
எரிகதிர் ஒடுக்கிச் சோரி
இறைப்பனன் போல வானில்
சொரிந்தனன் வெம்மை நொந்து
சோர்ந்தனன் குடபால் புக்கான்.

736 அறத்துறை அகலா வாறே
அடர்த்தனென் நெடுவேல் பாய்ந்து
நிறத்திடைப் புகுந்து பேறு
நிலைத்திடச் செய்த தேனும்

புறத்திடை உருவல் தேற்றுப்
புலனுணர் வற்ற மாக்கள்
அறக்குறை மொழிவர் அந்தோ
அழிவழி வென்று நோவா.

737 வண்மையால் வளர்ந்த கையன்
வளர்புகழ்ச் சேர நம்பி
திண்மையே நினைவோன் ஆகித்
திருக்கரம் புறத்துச் சேர்த்து
மண்ணிடை வாழ கில்லேன்
மாய்வதே தக்க தென்னு
எண்ணினன் வடக்கி ருந்தான்
இணையற ஏட்டில் நிற்பான்.

738 விட்டவேல் விரைந்த வாறும்
வியலகம் துளைத்த வாறும்
கட்டிளம் பொன்னிக் காளை
கண்டுளம் அழுங்கிப் பின்னர்
ஓட்டிய தானை சூழ
உற்றவோர் தன்மை நோக்கி
மட்டிலா அவலங் கொண்டான்
மண்ணிடை வீழ்ந்து நொந்தே.

739 வீழ்ந்தவன் எழுந்து தேரு
வெகுளியைக் கொன்று நேயத்
தாழ்ந்தவன் ஆகிச் சேரன்
அருநிறந் தழுவிக் கொண்டே
ஊழ்த்தனன் கண்ணீர் மாரி
உளைந்தனன் உயங்கித் தோல்வி
வாழ்க்கையே என்ன தென்றான்
வயக்கொடி உயர்த்தி நின்றான்.

740 வையகம் அறிய கில்லா
வழக்கிது தெளிக அண்ணல்
மொய்கொளும் போருள் எங்கும்
ஒருவரே தோற்பர் வெல்வர்
எய்திய போருள் நங்கள்
இருவரும் வென்ற தன்றி
உய்வகை உனக்கே முன்னர்
உற்றதால் காணி என்றான்.

741 இணையென நிற்கும் வீரன்
இருந்தனன் அழிந்தான் அந்தோ!
பணையுறு தோளும் தாளும்
பயில்படைக் குலமும் வன்கார்
கிணையொடுஞ் சுமையே அன்றிக்
கிடைப்பதாம் கன்மை இல்லை
தணியுமோ அவலம் அன்னாய்!
தரணியுள் ளவரும் என்றான்.

புலவர் பாடும் புகழ்

742 வெண்ணியங் களத்து நின்ற
வியன்புலக் குயத்தி வெண்ணி
அண்ணலே! நாவா யோட்டி
அலைகடல் ஆண்டோர் தோன்றல்!
ஒண்மணி இரட்டும் வேழத்
துறுபெருஞ் செல்வத் தோயே!
திண்மையைத் தெளிக்கு மாறு
களத்திடை வென்றி கண்டாய்.

743 கின்னினும் நல்ல னென்னும்
நிலைத்தவோர் புகழுக் காணுன்
துன்னிய புறப்புண் நாணித்
துண்ணென வடக்கி ருக்கும்
மன்னவன் சேர லாதன்
மற்றிது விந்தை யென்று
பன்னினுன் பணைகளை வாழ்த்திப்
பார்த்திபன் உரனுஞ் சொன்னுன்.

744 கழாத்தலைப் புலவர் சேரன்
கையறு நிலைமை கண்டு
முழாப்பறை மன்னன் மாய
யாழிசை முதிர்ச்சி மாய
விழாத்தலை மயங்கு பேரூர்
இழுதமை குழிசி மாய
குழாத்தொடுக் சுற்ற முண்ணும்
கொழுஞரு மாய எங்கும்.

745 உழுபவர் ஓதை மாய
விழுவளி ஒழிந்து மாய
அழலவிர் கதிரும் திங்கள்
அளிநிறை கதிரும் நிற்கும்

கிழமையாம் உவவு நாளில்
கெழுகதிர் மலைக்குட் செல்ல
நிழற்றிய திங்க ளாட்சி
நீர்மையை நிறுத்தல் போன்றே,

746 தனக்கினை வேந்தன் முன்பு
குறித்தெறி தனிவேல் ஏற்று
மனக்குறு நாணம் விஞ்சப்
புறப்புணர்ப் மதித்திட் டந்தோ
நினைப்பெலாம் நிறுத்தி வாள்கொண்
டிருந்தனன் வடக்கி லம்மா!
எனக்கொரு பகலு முண்டோ?
தனியனேன்; கழியா வென்றார்.

747 இன்னவா புலவர் பல்லோர்
இரங்கிய மொழிய ராகச்
சொன்னன முடித்த சோழன்
சொல்லுவான், ''அழிக வன்சொல்;
கொன்முனைக் காட்சி அந்தோ
கொல்லனின் களமாய்க் காணும்
மனனவன பகைவ னுனல
மக்களோ மடிதல் வேண்டும்?

748 ஆக்கவோர் ஆற்ற லற்றேன்
அழிப்பதில் முனைந்து நின்றேன்
தீக்குவைப் பட்ட புண்ணும்
தீர்ந்தபின் நினைவின் நீங்கும்
வாக்கது சுட்ட புண்ணே
வடுவென மொழிந்த சான்றோர்
தேக்கிய புலமை தேர்ந்தேன்
தெளிவரோ பகைவர்'' என்றான்.

749 வென்றியங் களத்தை வீரர்
வெறுங்கள மாக்கி வைத்தே
ஒன்றிய சிறகர் ஓரிக்
குடைப்பெரு மாட்சி தந்து
மன்றலம் மாலை விஞ்ச
மனையிடை விரும்பி நிற்கும்
பொன்றுவள் தோளி னூர்க்குப்
புதுவிருந் தமைக்கப் போவார்.

எட்டாவது களப்போர்ப் படலம் முற்றிற்று.

9. மீட்சிப் படலம்

750 ஒளியெலாம் ஒடுக்கிப் பேழ்வாய்
உள்ளுறப் போட்ட கங்குல்
அளிகரத் தள்ளிக் கொள்ள
ஆமென இருண்டு, யானும்
களிமகிழ் வுலக மெய்தக்
காப்பது கொண்டேன் என்ன
அளிகொடு வளைந்தாள் போல
அவனியை வளைந்து கொண்டாள்.

751 ஆவலோர் புறத்துத் துள்ள
அதற்கெதிர் தடுக்கக் கங்குல்
போவது தவிர்ந்தா ராகிப்
புடைவிரி சூழ லொன்றில்
யாவரும் பாடி கொண்டார்;
ஆரிருட் பொழுதை நொந்து
வேவதாம் புகையால் மேலும்
இருள்வளோ கங்குற் பெண்ணே.

752 ஒள்ளிலை வேலின் வேந்தன்
ஓவியத் திரைகள் மாட்டிக்
கள்ளுலாந் தொங்கல் சூழும்
கவின்மணிப் பாடி சேர
உள்ளவர் தகுதிக் கேற்ப
உறைவிடம் தேர்ந்த போழ்து
கொள்ளியங் கண்க ளென்னக்
கொளுத்திய பந்தம் நட்டார்.

753 இன்பமே துன்ப மாயும்
துன்பமும் இன்ப மாயும்
அன்புரை வன்ப தாயும்
வன்புரை அன்ப தாயும்

நன்னெறி தீய தாயும்
நண்ணிடக் காணல் போலத்
துன்னிய இன்பக் கங்குல்
துன்பமே விதைக்கக் கண்டார்.

பாடியிலுள்ளார் பருவரல்

754 ''உலகெலாம் கலக்கி வென்ற
உருவிலி உன்னை எங்கை
இலகிய வாளிற் சாய்க்க
எண்ணியும் பொறுத்தோம்; பெண்மைக்
குலமெனும் எண்ணத் தாலே;
கொல்வரேல் நன்றி யொன்றை,
நிலவிய இன்பங் கொள்ளார்;
நினைத்திலை பழமை'' என்றார்.

755 நல்லது செய்தல் மாட்டாய்!
அல்லது செய்த லேனும்
இல்லவாம் நோன்பு கொள்க;
என்பவர் வேட்கை விஞ்சக்
கொல்புலி முழக்கம் கேட்டும்
குமைந்திடார் ஒடுங்கிச் சோர்ந்து
நல்லணைப் புரண்டு கைகள்
நாட்டிநற் றுடை வைப்பார்.

756 பஞ்சணைப் படுத்து நைவோர்
பருவரல் அடங்கா ராகிப்
பிஞ்சிளம் மதியந் தோன்றப்
பேரமு தருந்த வெண்ணி
வெஞ்சின அரவச் சூழல்
விரிபடம் தாக்கத் தாங்கி
அஞ்சினர் என்ன வானர்
ஆருயிர்க் கமைதி காணார்.

757 விள்ளரும் உரனை யெல்லாம்
வீரரே காட்டு மென்று
வெள்ளிவெண் கயிற்றி னூலே
இறுக்குவான் போலத் திங்கள்
பிள்ளைகள் ஆட்டங் காட்டிப்
பெய்தனன் நிலவை யள்ளி
உள்ளகம் வெதும்பு வீரர்
உரையிலும் வெதும்பிச் சோர்வார்.

(வேறு)

758 கழியாய் இரவே கழியாய்
இரவே கழியாய் கழியாய்
அழியாய் விரைவாய் அழியாய்
விரைவாய் அழியாய் அழியாய்
ஒழியாய் உடனே ஒழியாய்
உடனே ஒழியாய் ஒழியாய்
விழியார் விழியார் பொழிவார்
வருவார் வருவார் எனவே.

759 இகலே கருதிப் பிரியா
இனியர் பிரிந்தா ரறிகோ
பகலே யலவோ பயில்கூந்
தலையோர் பெறயாம் வருடித்
தகவே நிறுவி விடையோ
டிவணெய் தினநீ அறிகோ
மிகவே கொடியாய் கொடியாய்
கொடியர் மெலிவர் கொடியாய்.

760 உடலிற் கரியாய் உளமுங்
கரியாய் உதவாய் உதவாய்
மடலிற் றுளியா வழுதம்
பொழியும் மடவார் துயிலார்
அடலே றனையார் வருவார்
எனநேர் நினைவால் இளங்கால்
படவும் எழுவார் கதவந்
திறப்பார் அயர்வார் அறிகோ?

761 திருகித் திருகிக் கதவம்
அடைத்தும் திறந்தும் இழையர்
உருகி உருகி விழிநீர்க்
குளநின் றெழுநீர் கதுப்பில்
பெருகிப் பெருகித் தடமார்
பெனுங்கால் வழியே வழியக்
கருகிக் கருகித் திசைநோக்
குவரால் கருணை யிலையோ?

762 துணையோ டிணையாய் விரையும்
இளநா ரையரே நினையாத்
துணைவர் வதியும் கொடும்போர்க்
களம்போய்ச் சிறுபோ துறைவீர்

மணவாய் மறிபஞ் செனயாம்
துவளும் பொழுதில் எமக்காம்
புணநீ எனவெம் பழிதூற்
றுவதற் கமைநீ ஒழியாய்.

763 உடன்தோ ழியர்கள் ஒருவா
றயரத் தனிப்போ யமர்ந்தே
கடலங் கரைவாழ் மடலங்
குடம்பை இனிதாம் எனவும்
திடங்கொள் அகன்றிற் பிரியாப்
பிணையே அழகாம் எனவும்
அடங்கி யொருபேச் சுரையார்
துயிலார் விடியாய் இரவே.

764 உண்ணுர் பருகார் உவவார்
கவலைப் பிழம்பாய் இருந்தே
விண்ணுர் நெடுமா னிகையின்
வளிவாய் விழிபாய்ச் சுவரால்
பண்ணை பயில்தாய் நகர்கா
வலர்கள் வயநாய் பொழுதோர்
கிண்ணக் கணிவர் உறங்கும்
பொழுதும் உறங்கார் இரங்காய்!

765 ஓரோர் நொடியும் முடமாம்
கிழவா மையென நகர்ந்தே
ஓரா யிரமாண் டெனவவ்
விரவொன் றரிதே ஒழியச்
சீரார் தெளிவால் நாளோர்
வாளென் றுரைத்தா ரெனினும்
ஓரா யிரவாள் பிரிவுற்
றிருக்கும் இரவென் றுணர்ந்தார்.

766 எல்லார் துயரும் ஒருகூ
றமைய வொருகூ றமைந்தோன்
மல்லார் தலைவன் மணங்கூ
ரலங்கல் மகிழுங் காளன்
புல்லா விமையோ டிருந்தான்
புலர்வை கறையை எழுப்பச்
செல்வான் எனமான் விரைதேர்
மிசையே றினனுல் நகர்க்கே.

அருளால் உருளும் அணிதேர்

(வேறு)

767 அருள்கொண்டு பரிதூண்டும் அணியகலத் தேர்வலவ!
பொருள்கொண்டு குறியெதிர்ப்புச் செயற்கொல்காப்
புகழடைந்தோய்!
மருள்கின்ற மடமுயலைக் கண்டேனும் அன்பாள!
உருள்கின்ற படிசெலுத்த உனைவேண்டிக் கொள்வேனுல்.

768 வானகத்துப் பறந்தேக வாய்த்திட்டால் நல்லதென
நானகத்துக் கொண்டாலும் நயம்வல்ல தேர்வலவ!
கானகத்துக் காதலராய்க் கலந்துறையும் இளங்கீரி
ஊனகத்துக் கொள்வதொரு நடுக்கங்கண் டயர்வேனுல்.

769 வண்டாடு பூம்போது வழிநெடுகக் கீழ்வீழ்ந்து
துண்டாடு நிலையென்னைத் துயருறுத்தும் தேர்வலவ!
கொண்டாடும் இலங்கிழைமுன் நிற்பதுதான் குறிப்பேனும்
திண்டாடும் பருவரலுக் காளாக்கத் திகைப்பேனுல்.

770 தேர்விரையும் ஒலிகேட்டுத் தெருமரலால் முன்னிசைத்த
சீரிசையைச் செய்யாமல் சிதைந்தோடுந் தவளையினை
வாரசைய நேரியலும் தேர்வலவ! நினைத்தன்றே
பாரதிரா வாறருளப் பலகாலும் வேண்டுவனுல்.

771 பரிவாக விரைந்தோட்டும் பணிமாண்ட தேர்வலவ!
வரிவாளை புரள்கண்ணுள் வனப்பணியத் தருமேனும்
பரிவாயிற் கடிவாளம் கொடிதன்ப படுகொடிது
நரிவாயில் முயல்முட்டி நலிவெய்தச் செய்ததுவே.

772 வளியூட்டித் தேர்நடவும் வகைகண்டாய் என்பதுவோ?
களியூட்டும் மனம்பூண்ட தேர்கண்டாய் என்பதுவோ?
ஒளியூட்டும் மின்னல்தான் உன்பரியோ? அறியேனுல்;
கிளியூட்டுந் தேரென்று கிளக்கின்றுய் விந்தையிதே!

773 உள்ளார்ந்த உயர்தொண்டன் தேர்வலவ! நீயாவாய்
கள்ளார்ந்த நறும்போது கனிவாகக் குழல்சூட்டி
அள்ளார்ந்த சுவைகாண அருள்தந்த உன்வாழ்க்கை
புள்ளாராப் புதுத்தேன்போல் பொலிவாக எனவாழ்த்தி.

774 தடுப்பான்போல் விரைவாக்கித் தன்னெண்ணம்
முடித்தானைத்
தடுப்பார்போல் முன்னின்ருர் வாழ்த்தெடுத்து மஞ்சனநீ

எடுத்தேற்ருர் தோள்வளைகள் ஆர்ப்பெடுக்க முன்னின்ற
மடுத்தகலாப் புதுத்தேனே மருங்கணைத்துக் கொண்டானுல்.

(வேறு)

775 வெற்றி விம்மின விம்மின பேரொலி
முற்றி விம்மின விம்மினர் மூரலர்
சுற்றி விம்மின விம்மின பாலிகை
எற்றி விம்மின விம்மின மாலையே.

776 வேந்தன் வாழிய வாழிய வீரர்கள்
மாந்தர் வாழிய வாழிய மாணெறி
ஏய்ந்து வாழிய வாழிய வென்றிகள்
வாய்ந்து வாழிய வாழிய பொன்னியே.

777 வன்மை பல்குக பல்குக வாழ்வளம்
நன்மை பல்குக பல்குக நாளெலாம்
புன்மை அல்குக அல்குக பொய்மையே
இன்மை அல்குக அல்குக எங்குமே.

778 என்னும் வாழ்த்துரை எங்கணும் மல்கிட
வென்றி மாலைய வேந்தரின் வேந்தனே
மன்று ளாடுநன் மாமணி நேயனே
ஒன்றி யாடினர் பாடினர் ஓர்ந்தரோ.

779 ஆற்றல் மிக்கவர் ஆய்களங் கூடினர்
ஊற்ற மிக்கவர் மற்களம் தேடினர்
போற்று பண்வலர் இசையரங் கெய்தினர்
ஏற்ற வாறெலாம் எய்தினர் இன்பமே.

ஒன்பதாவது மீட்சிப் படலம் முற்றிற்று.

10. ஊழ்வலிப் படலம்

780 வெற்றி எய்திய வெங்கள மீட்சியைப்
பற்றி முற்படப் பன்னிமேனும்; இவ்விடைக்
குற்ற மொன்றிலாள் கொண்டுரை கூற்றினுல்
உற்ற ஊழ்வலி கூறுவ தாயினும்.

781 இன்ப மன்னியோ ராண்டுருண் டோடிடப்
பன்னு வாழ்வினுக் கொன்றிய சான்றென
நின்று மேம்பட லாயவந் நேரிலார்
அன்பு நீரிடை மீனென ஆவரால்.

782 நள்ளி ருட்பொழு தாயினும் வைகறை
பள்ளி போம்பொழு தாயினும் பண்பினுல்
உள்ளி ஒன்றென வேறற நின்றவர்
கள்ளு லாம்மொழிக் கலியென ஆவரால்.

783 பாடு பாணியும் பார்ப்பவர் இல்லெனக்
கூடு பாணியும் கொண்டகொண் டுவப்பினுல்
நீடு பாணியும் நேர்ந்துறை பெற்றியர்
மோடு வானிடைப் புள்ளென நேர்வரால்.

784 ஊட லின்பமும் உற்றபின் எய்திய
கூட லின்பமும் கோதறக் கொண்டவர்
பாடு மன்பிடை நாணிய அன்றில்கள்
கூடு தேடிடா கூம்புத லாகியே.

785 மண்ணின் மேன்மையை மாக்களுக் குணர்த்திடும்
வண்ண வொண்மலர் வார்மது தேர்ந்ததை
உண்ணு மோருயிர் ஒண்சிறைத் தும்பிபோல்
எண்ணு மாறவர் இன்புற லாயினர்.

(வேறு)

786 வீழ்பெரும் அறிவும் அன்பும்
விஞ்சைசேர் மருங்க ராகக்
காழ்அமை கற்பு பொற்புக்
கம்பமும் இதையு மாகத்

தாழ்விலாச் செல்வம் சுற்றம்
தகைவளி பொறிக ளாக
வாழ்வெனும் வங்கஞ் செல்வார்
வையகம் புகழ மாதோ.

787 நெட்டலை புரள வார்க்க
நெடுங்கடற் சென்ற வங்கம்
பட்டொரு பாறை தாக்கப்
பருவரல் எய்து மாப்போல்
கட்டுரை யொன்று தாக்கிக்
கருத்தினைச் சிதைத்து நெஞ்சத்
துட்டனை ஏவி வாட்டும்
தொடர்நிலை கூற லாணும்.

காவிரிப் பெருக்கு

788 உலகெலாம் மகவாய் ஊட்டும்
உடைப்பெருஞ் செல்வப் பொன்னி
கலகலத் துதிர்ந்த முத்துக்
காட்டினை ஒருங்கு கூட்டி
நிலமிசை யுவகை மல்க
நேயமும் பெருகிப் பல்க
அலகிலா ஆடல் காண்பான்
எழுந்தனள் பெருகி அம்மா.

789 நாமுகந் தருளு பாக்கள்
நனிமுகந் தமைந்தா ளேனும்
ஏமுகங் கொண்ட நீரார்
எழில்முகந் தழுவு நோக்கால்
காமுகன் போல வந்தாள்
காவிரிப் படப்பை சூழப்
பூமுகம் அன்றி யென்றும்
புலர்முகங் காட்டாப் பொன்னி.

790 ஆடுதல் தேரா ளாகி
அலைக்கழித் துழல்வள் எங்கும்
பாடுதல் தெளியா ளாகிப்
பண்கெட வொலித்து நீள்வள்
ஊடுதல் அறியா ளாகி
உயரணை உடைத்துச் செல்வள்
வாடுதல் இல்லாப் பொன்னி
வாழ்க்கையே மடைய தாமால்.

791 பஞ்செனப் பரந்த மேகம்
தேனடைக் கொப்ப மாறி
அஞ்சன மலையிற் கூடி
அதிர்குரல் செய்த காலை
வெஞ்சினம் விஞ்சக் கம்பம்
வெறித்திழுத் தசைத்து நின்று
குஞ்சரம் பிளிறி யோங்கும்
விழவணி கொள்வ மென்றே.

792 காடுகள் சிதைத்து நன்செய்க்
கழனியிற் பரப்பி மீண்டும்
மேடுகள் அழியப் பள்ளம்
மேடென நிறுவும் ஆறு
கோடுகொண் டெழுந்த போழ்தே
கொளற்கரும் உவப்பில் மூழ்கி
நாடெலாம் நதியிற் கூடும்
நகரதும் புதிது தோன்றும்.

793 சந்தன வகைகள் தேக்கிச்
சாலொடு குழைகள் தாங்கி
இந்தனப் பொருளும் நீருக்
கியைவதாம் துகிலும் ஏற்று
முந்துமுந் தெழுந்து செல்வார்
முதுபெருங் கன்னி யாகிச்
சந்ததம் காப்ப வட்குச்
சால்புற ஈவர் போன்றே.

794 இற்சிறைப் பட்ட காதல்
இளையருக் கின்பத் தோணி;
பொற்புறு புதும ணத்தர்க்
கெனவமை புதையற் கொள்கை;
அற்பினை வளர்க்கும் ஊடல்
அரிவையர்க் கரங்க மேடை;
வெற்பிடை எழுந்து வீறும்
பொன்னியின் வெள்ளம் மாதோ.

795 ஏழ்மையர் செல்வர் என்னும்
வேற்றுமை இல்லை; தோற்றக்
கீழ்மையும் உயர்வும் இல்லை;
கிடைத்ததோர் பதவிக் கஞ்சிச்

சூழ்நரும் இல்லை; சொல்லும்
உரிமையை நிகரக் கொள்வார்;
தாழ்குலைக் கழனி விஞ்சும்
தண்ணளிப் பாவை முன்னே.

796 காவிரி விழவு கொள்ளக்
களிப்புறு காளன் எண்ணி
ஏவலர் நெருங்கிச் சூழ
எய்துவான் எழுந்த போது
தூவியந் தோகை யாட்டி
துய்ந்நனை செறியச் சூடி
ஓவியம் வரைத லேய்ப்ப
உயர்குழம் பெழுதிக் கொண்டாள்.

797 வாசநெய் புழுகு சாந்தம்
வரிவளை சிலம்பு மிஞ்சி
ஏசலில் வடங்கள் இன்ன
எழில்தவழ் கலன்கள் ஏந்தித்
தூசுலாம் மின்ன லென்னத்
துடியிடை யியலி யாங்குப்
பூசனைப் பொருள்கள் கொண்டாள்
புதுவளம் பெருக வென்றே.

நகையும் பகையும்

798 மங்கையர்க் கொருத்தி யான
மாதவத் தன்னம் பின்னும்
குங்குமம் வைக்கு மாறு
குழைச்சிமிழ் எடுத்துக் கொண்டே
அங்குள பளிக்கு நோக்க
அண்ணலும் நெருங்கிப் பின்னே
அங்கதுப் பணையப் புல்லி
''அணியிழாய்! கேட்டி'' என்பான்.

799 ''பவழமென் சுளையி னுள்ளே
பாலொளி முத்த மல்கித்
துவளுநற் கொடியே! இந்தத்
தொகைபெறும் ஆடி யெல்லாம்
தவளவாழ் ஒளியிற் றேனும்
தவச்சிறி தேனும் உன்னேர்
நவிலுமா றில்லை இல்லை
நன்கிதைத் தெளிவென்'' என்றான்.

800 மஞ்சனின் உரைக்கு நாணி
மலர்விழி முகிழ்த்துக் கொண்டே
பிஞ்சணில் முறுவல் காட்டிப்
பின்னுற மறைந்து மீள
அஞ்சிமிழ்த் திலகச் செப்பங்
ககன்றது தெரியா ளாகி
அஞ்சனங் கரைந்து செல்ல
ஆங்கவள் தேட லானுள்.

801 தேடியங் கெடுத்த லில்லாள்
திகைப்பொடும் வெறுப்புக் கொண்டே,
'ஏடியோ தோழி' என்றுள்:
ஏந்தலும், 'அழையேல்' என்று,
நாடியோர் புறத்து வைத்த
நற்சிமிழ் எடுத்துத் தந்தான்;
கூடிய உவகை உந்தக்
'கள்வரே நீவிர்' என்றுள்.

802 கள்வனென் றுரைக்கக் காளன்
கடுகடுப் புடைய னுகி
'எள்ளினள் பழமை' யென்றே
எண்ணினன், சிறையின் வாழ்க்கை;
கள்ளவிழ் கூந்த லாளின்
கருத்திது வாயின் னன்றே;
'கொள்வது குறித்தேன்' என்று
கொண்டனன் கறுவொன் றந்தோ.

803 நகைச்சொலென் றுரைத்து நக்கு,
நடுங்கினுள் முகத்தை நோக்கி;
''பகைச்சொலோ அறியேன் அம்மா
பணிந்தனென் அடிகள் நும்மை
மிகைத்தவ ருவ தேனும்
பொறுத்தருள் செய்யு'' மென்றுள்:
பகைப்பற விட்டான் போலப்
பாவையைத் தழுவிக் கொண்டான்.

804 மற்றிதை மறக்க வென்று
மனத்திடைத் தெளிவு காட்டிக்
கற்றையங் கமல மாது
காசினிக் கிவளே என்னப்

பெற்றவக் கேசி தன்னைப்
பிறபிற யுகழ்ந்து கொண்டே
உற்றனன் ஆற்றின் பக்கல்,
உள்ளகம் வெதும்பு நீரான்.

805 ''ஐயனே அடியாள் கூற்றில்
அமைந்ததோர் குற்ற முண்டேல்
உய்கென விடுக்க வேண்டும்;
உணர்ந்தனென் என்னிற் கூறி
மெய்யனே துயரஞ் செய்யேன் ;
மேலவர், அறியார் செய்த
வெய்யதும் பொறுப்ப ரன்றே ;
வேண்டினேன்'' என்றுள் ; காளன் ;

806 ''ஐயகோ பெரிது கெட்டாய் ;
அதனையேன் பொழுதும் எண்ணி
நைந்தனை ; மறக்க ; இன்பம்
நண்ணுமோர் விழவு காண
எய்திணேம்; இரங்க லாமோ?
என்னுளப் பாங்கை ஓரா
தெய்தினை அவலம்'' என்றுன்
இதமுறப் பேச வல்லான்.

807 பொன்னுரை பொருவ நின்ற
பொருப்பிடை எழுந்த நீத்தம்
இன்னுரை பெருக ஏகி
இடமெலாம் குடைந்து சேர்த்த
மென்னுரை யாடை கண்டோர்
மிகுவிருப் புடைய ராகித்
தன்னுரை யாடை யோடு
தாவுதல் காண்ப தாணும்.

காவிரிப் புனலாட்டு

(வேறு)

808 தெள்ளமுதம் கொள்ளுமிளம் தெய்வமதி மீது
எள்ளுமிளம் கந்தருவக் காதலர்கள் ஏய்ப்பத்
துள்ளுமிசை வெள்ளமிசை உள்வளைவு நெட்டி
வள்ளமிசை உள்ளமிசை காதலர்கள் போவார்.

809 காவையரின் கைப்பிணையாம் நல்வளைவுள் நாடிப்
பாவையிளம் பாகுமொழிப் பாவையர்கள் பாய்ந்து

வானெயெனச் சேல்களென வுட்டுழவிப் போத
வேனிநிகர் பொற்புடையர் வேட்கை மிக ஆர்ப்பர்.

810 வானழுவு மின்னலெனக் காதலன்கை நீங்கித்
தேனெழுகு பூங்குழலி நீர்த்துறையுள் மூழ்க
மானதென மீனதென ஆங்குழன்றும் காணுன்
போனதொரு பொற்புதையல் தேடுபவன் போல்வான்.

811 உட்டுளைய குப்பிநிறை நீரிறைத்து மைந்தர்
மட்டவிழு மாண்மலரை மையலுடன் வீசல்
வட்டமலர் வாழணங்கை வாழ்த்தியுயர் வேழம்
புட்கரத்தால் நீரிறைத்துப் பூவெறிதல் போலாம்.

812 ஆறமைத்த ஆம்பலினை அங்கழுத்தில் சேர்த்துப்
பேறமைத்த தண்பவழ வாயிரண்டென் ருவார்
வீறமைத்த காவிமலர் காதுகளில் வைத்துச்
சாறமைத்த சீர்விழிகள் ஈரிரண்டென் ருவார்.

813 தாமரையின் தண்டிரண்டு செவ்விதழில் கொண்டு
பூமருவு நீரிழுத்துக் கீழ்ச்செலுத்தும் மாதர்,
ஏமமிகு கொம்பிரண்டு கொண்டவிளஞ் செவ்வி
ஓமெனுமோர் தோற்றமுறும் ஓங்கலினை நேர்வர்.

814 தேரமைவு கொண்டவணி நீர்மிதப்பில் செல்லும்
நாரமைந்த நங்கையரை நம்பியரைக் கண்டோர்
தாரணிந்த மாரனுமத் தையலுமென் ருேதி
வாரமைந்த விற்பகழி காண்கிலராய்ப் பேசார்.

815 கோர்ந்தகடன் தீர்வதற்கு விட்டெறிந்த பொன்மீன்
ஆர்வமுடன் மீன்குழுமம் கௌவிவரப் போதல்
சீர்பெருகு கன்னியினைக் காந்தனிடம் சேர்க்கப்
பேர்பெருகு சுற்றஞ்செலும் பெட்புநிலை காட்டும்.

ஊடலும் கூடலும்

(வேறு)

816 முளிதயிர் சுவைதர உவளக வழுதம்
துளியள விடுபவர் இயலினை நிகரக்,
களிகொள நதிவிழ, வயர்பவர் புலவி
அளிவளம் பருகுவர் அயர்குவர் திகழ்வார்.

817 மதிமுக மடவளின் கரமலர் தழுவி
நதிவிழ வழுகென நவிலுநற் பொழுதில்

பொதியலர் இதுவெனப் பொலியிளம் பொதுவில்
வதிவது கருதினிர் அழகென வகைவாள்.

818 அலையிடை உளைதரு குவளையை எடுத்துத்
தலையிடை அணியுமோர் தலைவனைத் தலைவி
'கலையெனக் கருதுதற் கிலையிது புதுமீன்
வலையெனல் தெளி'வெனப் புலவியை வளர்ப்பாள்.

819 வளிபுக இடமற மருவிய இளையன்
களிகொளக் 'கடந்தநீர் விழவிலித் துறையில்
தொளிபடத் துழவினம்' எனவவள் சினவா
'எளியளுக் கொருமுனும் உள'னெனப் புலந்தாள்.

820 இசைவளம் பருகிய தலைவ'னுன் இசைபோல்
இசைபெறும் இசையினை அறிகிலேன்' எனவும்
'பசையுடன் பலரொடு பயின்றுறைந் ததனுல்
வசையற வுணர்ந்துளீர்' எனவவள் புகல்வாள்.

821 'அணியிழை இசைநலம் அழ'கென அவளும்
'பிணிமுகம் தெரிதரப் பெரியனே எவளின்
அணிகிளர் திருநடம் அழ'கென அறைந்தீர்
துணிகிலன் எனச்சொலிப் பிரிதரத் துவள்வான்.

822 விழியொரு புறமுறச் செலுத்தினும் சினக்கும்;
விழிபுதைத் திருப்பினும் மிகைபட முதிரும்;
மொழிவது கருதிடின் முனிவொடு மெதிரும்;
மொழியிலை எனுநிலை அமையினும் அயிர்க்கும்.

823 புலவியின் இனிதென உலகிடை உரைக்க
நிலவிய பொருளெதும் இலையெனும் தெளிவால்
கலவியாம் ஒருநிலை மறந்திடத் தயங்கார்,
புலவியாம் அருநிலை பொருந்துவ தெனினே.

(வேறு)

824 நீடும் ஊடலில் நேயமாம் மென்பயிர்
வாடு மாற்றினை ஆய்ந்தவர் ஆயினும்,
ஊடல் தீர்த்திட முன்வர நாணினர்
கூடுந் தோல்வியைக் கொண்டிடா வாறரோ.

825 வெற்றி தோல்விகள் கண்டிடா வாறெதிர்
கொற்ற வர்தமுள் சந்துசெய், கொள்கையின்

நிற்ப ராயினும் முற்பட நாணியே
உற்ற வாய்ப்பினை உள்ளுதல் ஒவ்வுமால்.

826 வீழு மன்பொடும் ஊடிய வெம்மையள்
தோழன் கையினை விட்டனள் போர்ந்திட
ஆழ நீர்ச்சுழி ஆக்குமால் கையகம்
வாழு நேயமும் முத்தமும் வாய்க்கவே.

827 சேறு பட்டடி சேணுற வீழ்பவன்
வீறு மூடலாள் காலடி மேல்விழ
மாறு பாடற மஞ்சனைக் கொஞ்சினுள்
ஊறு பாடதும் ஊழ்வழி ஓடுமால்.

828 கட்டு பூந்துகில் கலங்கலுள் சென்றிட
விட்ட வோர்மகள் வீரனைக் கண்ணிமை
வெட்டி யேவவும் ஊடலை வீழ்த்திடக்
கிட்டு வாய்ப்பெனக் கீண்டினி தேகுவான்.

829 வேட்ட போழ்தெலாம் தேட்டமாய் ஊடுவோள்
சூட்டு மாலையைச் சூழ்பட வீசவும்
ஈட்டு மன்பினன் அங்கழுத் தேற்றவள்
வாட்டந் தீர்க்குவன் வாரினன் முத்தியே.

830 சீற்ற மிக்கொரு வட்டினை ஏவவும்
ஏற்று வீழ்பவன் ஏற்பந டித்திடும்
ஊற்ற மிக்கவக் காளையை ஒண்ணுதல்
ஆற்றல் யாவையும் ஆக்கினள் தூக்குவாள்.

831 வாடும் உள்ளகம் வாய்விட நாணுவோன்
பாடும் பண்ணிசை துன்பமாய்க் காட்டவும்
ஊடு மங்கையின் உள்ளடி பற்றலின்
ஆடு மாய்மயில் ஆயினள் ஆறியே.

832 தோற்று மாறெலாம் தோற்றிய ஊடலை
ஏற்ற வாறெலாம் போக்கினர்; யாவையும்
சாற்று மாறிலை சாலவும் நீளுமால்
நோற்ற பேர்களும் போற்றுமக் காட்சியே.

(வேறு)

833 விழவணி இனநிலை விளைந்திடச் சுருளும்
குழலணி அரிவையும் குழகனும் முறையாய்த்

தொழலணி சுழலணி குழலணி எனவாம்
அழகணி வகையெலாம் அறியினும் தினையார்.

834 மருளுடை மனமொரு புறத்திடை மயங்க
இருளுடை மனமொரு புறத்திடை இரங்க
சுருளுடை நதிவிழா ஒருபுறம் சுருங்க
உருளிலாச் சகடென இருந்தனர் ஒருபால்.

835 நொடியிடை மடிதரு புலவியை வளர்த்துக்
கொடிபடப் புனலொடும் உரமெலாம் கொடுத்து
வெடிபடு முளத்தொடு மிருப்பவர் வெதும்பித்
துடிநிலை உரைதரத் தொடர்ந்தனம் இனியே.

அன்னம் அவலம்

(வேறு)

836 களிப்புற உரைத்த சொல்லும்
காலனுய் அமையு மென்னும்
தெளிப்பிலாள் எண்ணு வாளால்
தெருப்பொடி அள்ளித் தூவிக்
குளித்திடுங் களிற்றைப் போலக்
கொடுநெறிப் பட்டேன் துன்பம்
விளைப்பதே கரும மான
விதிவழிப் போவென் போலும்.

837 நகைமுகம் காட்டிக் கொண்டே
நாவிடை நறுமை தோன்ற
வகைபெறு வனப்புத் தோள்கள்
வரிந்தனென் தழுவி அன்பால்
பகையறச் சொன்ன சொல்லும்
பழியென ஆவ தானுல்
அகையழல் ஊழின் ஆற்றல்
அளவிடற் கரிய தன்றே.

838 கள்வராய்க் கைகள் யாத்துக்
காவலர் கடிதி னுய்க்க
எள்ளுமாச் சென்ற போழ்தில்
ஏற்றனென் அவரை யானே ;
உள்ளகம் வெதுப்பத் தீச்சொல்
உரைத்திட உன்னு வேனே ?
வெள்ளமே பெரிதென் றெண்ணுர்
வெருள்வரோ சிறுகால் கண்டே.

839 வன்மனம் கதுவிச் செல்ல
வளர்மொழி யுடையெ னுயின்
என்பிழை பொறுக்க வேண்டி
ஏந்தலின் அடியிற் ருழும்
முன்பெவன் வருத லாகும் ?
மூளுமால் உள்ளத் தீயென்
றுன்னினான் உரைத்தே னுகில்
உறுதுயர் மேலு மாக.

840 மாதருக் குரிய நாணம்
மனக்கொளா நிலையிற் கூறித்
தாதரும் நகைக்க நின்று
தன்மணம் அமைத்துக் கொண்டோள்
பேதைமை பெருகப் பேசிப்
பிழைபடத் துவள்வள் போலும் !
காதலால் கனியி ருப்பக்
காயினைக் கவர்த லுண்டோ ?

841 தாயிலி என்ன வன்றே
தந்தையென் கருத்திற் சிக்கி
ஏயது செய்து நின்ருர்
தும்பியைத் தேடிச் செல்லும்
வாயவிழ் மலரை எங்கும்
வாழ்விடைக் காண்ப துண்டோ ?
நாயனேன் பொருட்டா லெந்தை
நாடிய செயலும் ஒன்ருே.

842 கொடிசிதை நிகழ்ச்சி கேட்டுக்
குமைந்ததோர் பொழுதில், ''அன்னம்
கடியதாம் வைரம் கொள்ளல்,
காளையர்க் கேற்கும்; ஏற்கா
தொடியுலாம் மகளிர்க்'' கென்றே ;
தொடுத்தது குறிப்புச் சொல்லோ ?
முடிவிலாத் துயரம் இன்று
மூட்டுதல் நினைவின் கேடே.

843 தன்னுளே வளர்ந்த ஐயம்
தாவியென் சொல்லைப் போர்த்து
முன்னுள குங்கு மஞ்சேர்
மஞ்சிகை அரங்க மாகப்

பொன்னியின் விழவுப் போது
பொருந்திய திரைய தாக
முன்னிய கூத்துக் காட்டும்
முழுவலிக் கூத்த னுமால்.

844 ஐயமே அறிவு போக்கும்
அளவற விரிந்து செல்லும்
ஐயமே நினைவை மாற்றும்
அடிப்பட முதிர்ந்து தோன்றும்
ஐயமே உறவு நீக்கும்
உறுவதாம் உரிமை கொல்லும்
ஐயமே அழிக்கும் யாவும்
அழிபடா திருப்ப தேதோ ?

845 ஆவதே ஆகும் அன்றி
அடுத்தடுத் தெறிந்த போதும்
போவதே போகும் ஈது
பொறியமை வண்ண மென்பார் ;
சாவதே விதிப்ப தாயின்
சஞ்சலப் பட்டால் போமோ ?
ஆவதே நன்மை என்ன
அமைவதே கடமை யாமால்.

846 தீயினுல் தீயைத் தீர்க்கத்
தீயவர் விரும்பி னுலும்
தீயது வளர்த்த லன்றித்
தீர்வது காணற் கில்லார் ;
தீயது நினைத்த பேர்கள்
தீயிடை நின்ற தன்றித்
தீயதால் மற்றோர் தீயத்
தெளிந்ததாம் சான்று முண்டோ?

847 தன்னையும் பேணித் தன்னின்,
கணவனைத் தீய தேதும்
பின்னுதல் இன்றிக் காத்தல்
பெண்மையின கடப்பா டென்றே
என்னையுங் காத்துத் தேம்பும்
என்னையும் காத்து நிற்கும்
நன்மையும் நினைவிற் கொண்டேன்
நண்ணுவ நண்ணு மாக.

848 வேதமுங் கடந்த வேதன்
விக்தகன் வீரன் புத்தன்
கீதமுங் கடந்து தோன்றும்
நாதமும் விந்து மானேன்
பூதமும் பொறியும் ஆகிப்
புவியினை ஆட்டு விப்போன்
போதுகள் காக்க வென்றே
பூவையள் நினையக் காளன் :

காளன் கவல்வு

(வேறு)

849 இன்னலேயுறும் மண்ணவர்க்கொரு
நன்னயந்தரக் கானிடைத்
துன்னுமாமணித் தூயனேஅரு
ளாளியேமலர் நாயகா!
பின்னமேபுரி புன்மையர்பினர்
நல்லராம்நிலை எய்தினும்
முன்னதேயுரைத் தேசுபாதகர்
மூத்தநல்லறி வாளரோ?

850 கள்வனேபெரும் பொய்யனேகொடுங்
கொலைஞனேஎனக் காணினும்
தள்ளிடாதருள் மாரியால்தினம்
காத்திடும்மலர்த் தாளினேய்
பிள்ளையாடலைப் பேசிவீண்பழி
செய்யுமாதினைப் பேணியே
உள்ளதாம்மனை உய்யுமோநலம்
பெய்யுமோஉரை மெய்யனே.

851 மாணலங்கனி பேறினுல்பொருள்
வீறினுல்புகழ் மாலினுல்
ஆணவங்கனிந் தாரழல்மொழி
ஆய்வளையொடும் வாழ்வது
நீணரகிடை நேர்வதிற்பெருந்
தீதிதுசின வாளராப்
பூணெனவணிந் தாடவும்உடன்
போதவும்எனக் காயதே.

852 உற்றதைஅறி யாமலேபிழை
பாட்டினுல்மனம் ஓடியே
பெற்றவள்தனைப் பேயெனநினை
பேதையைச்சிறு கூளியை

முற்றவும் இனி நம்பிநான்மொழி
யாடவும்மகிழ் கூடவும்
பெற்றதேஇலை பேதமேவ்ரும்
வேகுமேயுளம் வெம்பியே.

853 ஆண்டையாய்உனை வேண்டினேன்இது
மீண்டுமெம்மனை வாழ்விலே
காண்டுமோவளம் காண்கிலேன்தெளி
வாகலாலெனை ஏசிய
தூண்டுவாயனைத் தூற்றிடேன்உயிர்
ஓட்டுதல்கடன் ஆகவே
பூண்டுளேன்அறம் அன்றெனமனம்
போயினும்எனை உந்துமே.

854 நாயகன்எனை நம்பிஞன்;பதம்
நல்கிஞன்;குடி யாவையும்
நேயமாய்எனை வாழ்த்திஞர்;புகழ்
ஆழ்த்திஞர்;அனை தந்தையர்
தூயஞைனைத் தோன்றலாய் இணைத்
தின்பிஞல்களி எய்திஞர்;
ஏயதிவ்வித மாகவும்பழி
பேசுவாளொடும் வாழுவோ?

855 அற்பமாமுயிர் கொல்வதேமிகு
பாவமாமென ஓதிய
நற்றவனுரை யானறிந்துள
ஞயினுமதைக் கொள்கிலேன்;
முற்றவெஞ்சினம் மாறிடும்படி
யானநாள்வரு மாயினுல்,
குற்றமேயுரை கோதையாள்படக்
கொல்வதோர்பொழு தாகுமே.

856 வெண்ணிறப்புயல் ஆர்கலிதரும்
நீரினுல்கறுப் பேறியே
நண்ணரும்மலை நண்ணியேஉறு
மேற்றெடுத்திடி செய்தல்போல்
எண்ணுமோர்கறை இன்றெனநடித்
தோர்பொழுதிடைக் கோறலே
திண்ணிதால்என எண்ணினுன்குறிப்
போர்ந்தறிந்திடாக் காளனே.

857 தீயுமிழ்ந்தெரி தீமலிமிசை
வாழுயிர்த்தொகை, கக்குமுன்
நோயிலாவினை யாட்டிடைத்தினை
தன்மைபோல்வெகுள் காளனும்
ஆய்திறத்திணல் வேமுளத்தினை
ஆர்த்துளேமுகத் தன்பருள்
தாய்வருநறும் இன்சொலும்பொலிந்
தார்த்திடநகைத் தண்மிளுன்.

இசையா கிசை

(வேறு)

858 படையிறை யயர்வுறும் பதுமை நீகவல்
வடைதர வடைதர வழகு விஞ்சுமால்;
பெடையனம் நடைநலம் பயில்வ தென்னினும்
அடைகில முகநலம் அணுவும் இன்றரோ.

859 தோற்றமும் ஒடுக்கமும் தொடரும் பருவமும்
ஏற்றமும் எழிலுமாம் மலரின் பேறுபோல்
மாற்றமும் மையலும் மறுத்த சொற்களும்
போற்றுதல் வாழ்க்கையென் றறிக பொற்பினேய்.

860 வீழ்நல இன்பினில் இரட்டி காணுதி
ஆழ்துயர்ப் பட்டபின் அமரும் இன்பமே
காழ்வெயிற் காட்படு பவருக் கல்லவோ
ஊழ்நிழற் பேறறி யுணர்வு வீறுமால்.

861 நல்லதே நமக்கெனக் கருதி ஏந்திழாய்
செல்வதே வாழ்க்கையென் றறிய வேண்டிநீ
சொல்லிய சொல்லிடைச் சோர்வு காட்டினேன்
இல்லையால் வேறெதும் எழுகென் றேத்தியே.

862 ஆனையொன் ருர்வமாய் அணைத்துக் கையினல்
மானினைத் தூக்கிடும் மாண்பு நேரவே
கூனலம் பிறைமுகம் குழையக் கேசியை
வேனிலான் என்றுள காளன் தூக்கினன்.

863 காழெடுத் தணைதருங் கரிசு நோக்கினன்
யாழெடுத் திசைவளம் பழுந மீட்டவும்
தோழியர் தொகையற வமைந்த நல்லவள்
ஏழிசை யமுதினை இனிதில் வாக்கினள்.

864 உருவொடு நிழலெனப் பொருந்து பண்ணிடை
வருமொரு வாய்ச்சொலே விழுங்கித் தேம்பிஞள்
அருமறை முதல்வனே வழுத்து பாடலில்
மருகுதற் காவதென் னுரைத்தி யென்னவும்.

865 யானிசை பாடலெப் பாடு பாவ்லன்
தேனிசை யாமெனத் தெளிந்து சொல்லினும்
யானிடர் எய்துமா றிசைத்த சொல்லுள
தானதால் தயங்கினேன் என்று கூறிஞள்.

866 பாடுபா டென்னவும் பாவை பதைப்பொடு
பாடுபாட் டிடைப்படப் பரிந்து நின்றனள்
பாடுகேன் ஈதுநீ கேட்டி யாலெனப்
பாடுவான் பத்திரை விடுத்த பாடலே.

(வேறு)

867 அவவெள்ள வழியேகி அலையாழித் துரும்பென்னப்
பவவெள்ளத் தாழ்ந்தேனைப் பரிவோடு கரைசேர்த்துத்
தவவெள்ளத் தனியின்பம் தடையின்றித் தந்துள்ளங்
கவர்கள்வா! கருணையங் கடலேயுன் அடைக்கலமே.

(வேறு)

868 புக்கதாம் தன்மையைப் பொருந்தச் சொல்லிய
இக்கவி வருந்துமா றிசைத்த தென்னென
சிக்கலாஞ் சொல்லெனச் சேர்ந்த தீற்றடிச்
சிக்கிய முதலெனச் செப்பி ஞளரோ!

869 மற்றது மறக்கெனத் தேற்றி மையிலாய்
சுற்றமும் சூழலும் யாவும் சேறுமா
றுற்றனர் தொன்னகர் எழுவம் நாமெனுக்
கற்றையங் குழலிஞள் கலந்து போயினள்.

பத்தாவது ஊழ்வலிப் படலம் முற்றிற்று.

11. வழிக்கொள் படலம்

870 ஆற்றின் விளையாட்டும் அயர்வோர் களியாட்டும்
தோற்று விதியாட்டும் முன்னே தொடுத்திட்டாம் ;
நேற்றிங் கிருந்திட்டான் இறந்திட் டனனென்னும்
கூற்று விளையாட்டுக் கூற வெழுந்திட்டாம்.

871 ஆடிக் களிப்பெய்தும் ஆற்று விளையாட்டைக்
கோடித் தொலைகாளன் கொடுமை நிலைமாற்றப்
பாடிக் களிசெய்தான் பரவிக் களிசெய்தான்
கூடிக் களிசெய்தான் கொள்ளை விருப்பென்றே.

872 குளிர்ப்ப உரையாடிக் குழலோ டுடலெங்கும்
தளிர்ப்ப நனிபுல்லித் தையால் நீயன்றே
அளிப்போன் திறம்நாட்டும் அமுதம் ஒருயானே
களிப்பால் சுவைதேவன் கண்டு தெளியென்பான்.

873 இன்னல் நுகர்ந்தார்க்கே இன்பம் மிகுமென்று
முன்னர் மொழிகாளன் உரையில் முழுவாய்மை
பின்னி யுளதாகப் பெரிதுந் தெளிந்தாளால்
கன்னல் இசைகேட்கும் அசுணம் நிகரன்னம்.

874 இல்லத் தறங்காக்கும் இளையர் புதுவாழ்வில்
செல்லத் தகாதென்னும் சிறந்த இயல்கொண்ட
செல்வப் பெரியோர்கள் செழிப்பாய் உளங்காத்துப்
புல்லும் பொருளீந்து புறமாய் உறைந்தாரால்.

875 ஏய வளனெல்லாம் இணைய மிகத்தேக்கி
ஆய வியலாத அரிய விருந்தென்னத்
தூய நெறிமிக்க பெற்றோர் வருவாரால்
நேயம் மிகுமென்னும் நெஞ்சப் பெருக்காலே.

876 பொருளால் நிலமாண்டு போதம் தடுத்தாள
அருளால் உலகாளும் அமலன் பெருவாழ்வே
மருளால் அலைவோர்க்கு மாயப் பிறப்போட்டும்
பொருளாம் பொருளென்று வணிக மணியோர்ந்தே.

வணிகமணி துறவு

877 அறத்தால் பொருள்தேடி அறத்திற் கதுவாக்கல்
அறத்தோர் கடனென்னும் அறவோன் மொழிபேணிப்
புறத்தே பொலிவாகும் பொருளால் அகச்செல்வத்
திறத்தை வளமாக்கும் துறவு மனக்கொண்டான்.

878 கல்விக் கொருகூறும் கடினைக் கொருகூறும்
செல்விக் கொருகூறும் சீராய்ப் பகுத்துப்பின்
செல்லும் நெடுஞ்சாலை சேரும் பிணிச்சாலை
செல்வன் அடிப்பீடம் இவைகட் களித்தானால்.

879 பற்றென் றிலனெகிப் பகவன் அருள்தேட
உற்றங் கெழுநிற்கும் மணிதன் உயிரனைய
பொற்றங் கொளியாளைப் பூவை இயலாளைப்
பெற்றங் கொருசெய்தி பேச எழுந்தானால்.

880 புல்லும் பொலிவாகப் பூதம் தொழில்மாயக்
கல்லும் கரைந்தோடக் கனிவாய் இசைபாடும்
நல்லள் நளிர்கோதை வதியும் மனைக்கண்ணே
செல்லு மணிதேம்பிச் சிந்தை இழந்தானால்.

881 மகவன் றிவளின்னே மடந்தை எனத்தேறி,
'மகனை மனையாளை ஆளும் பெரியானைப்
புகலாய் அமைந்தாரை இருளில் துறந்தேகி
நகரந் துறத்தானே' எண்ணி நடையிட்டான்.

882 தந்தை வரக்கண்ட தனையை எழுந்தோடிச்
சிந்தை ஒருங்காகிச் செந்தாள் உறப்பற்றி
எந்தை வருகென்றே இனிய உரைபொழிந்தாள்
முந்தை மறைசொல்லுந் துறவு மொழிதேராள்.

883 இனையர் தொடர்ந்தேக எங்கோன் இதுபோழ்து
வளவன் திருக்கோயில் விரைந்தார் ; அருட்டந்தாய்
அளியள் எனைப்பன்னாள் அயர்த்தீர் ; இன்றேதான்
எளியள் நினைவானேன் ; என்றுள் இளவன்னம்.

884 மங்கை மனப்பாங்கு மதித்த மணியீண்டுத்
தங்கோள் உரையாடல் சாலத் தடையென்றே
துங்கன் தவவாழ்க்கை போலத் துவர்வாய்நான்
எங்கே மறந்திட்டேன் இயம்பு கெனவன்னம்.

885 ஞாலப் பெருவாழ்வே நாடுங் கடனென்று
சாலத் தெளிந்தாய்ந்த சான்றோன் துறவேய்ப்பக்

காலத் தொடுதேர்ந்த கடமை பிறிதுண்டோ ?
ஆலத் திணையாக அமுதோ எனச்சொன்னள்.

886 கடமை மறந்தேனைக் கடிதல் தகுமம்மா
மடமை யுடையேனுய் மறந்தேன் இனிவாழ்வில்
கொடுமை விடமுண்ணேன் அமுதே நனியுண்பேன்
திடமே இதுகண்டாய் தெளிந்தேன் எனச்சொன்னன்.

887 விருந்திற் சுவைகாணுன் விழையும் அன்பெல்லாம்
அருந்த நினைவான்போல் அன்னம் முகநோக்கி
இருந்தான் ஒருவாருய் எழுந்தான் செயல்மாட்டுப்
பொருந்தா நிலைகண்டாள் அவனும் விடைகொண்டான்.

888 அன்னம் வருகின்றேன் வாழி நெடிதென்னுப்
பன்னிப் புறப்பட்டான் பாவை அதுகண்டு
முன்னர்ப் பிரியுங்கால் முதிரும் கவலைக்கும்
இன்னே நிலைமைக்கும் இருக்கும் உறழ்வுன்னி,

889 துறந்தார் உளமொப்பக் கூடிப் பிரிதற்கண்
திறம்பா வலுவுற்றார் ; திரும்பா தவர்சென்றார் ;
புறம்போய் வழிநோக்கும் பொருமல் தவிர்வானுர் ;
அறமோ நடமாடும் படமோ இவரென்றுள்.

890 பலவா றயிர்ப்புற்றுப் பதுமை இருந்தாளாய்ப்
புலனுர் மதமோட்டிப் புவிக்காம் நலமூட்டி
இலகும் பெருமானின் இணையார் அடியெண்ணி
உலவாப் பொருளாளன் உளதாம் பொருளாய்ந்தே.

891 கானம் புகலாணன் கண்டோர் மிகநொந்தார்
தானப் பொருளாளன் தருதற் குணத்தாளன்
ஊனச் செயலில்லான் உறுவான் தவமென்றுல்
யானிங் கிருப்பேனே என்றே பலர்சொல்வார்.

892 ஓடும் பொருள்வெள்ளம் உறைய அணையிட்டோன்
நாடும் துறவென்றுல் நமக்கோர் நலமுண்டோ ?
ஏடு விரிதாரின் முனைவன் மொழிகாத்தால்
நாடு நலமெய்தும் என்று பலர்சொல்வார்.

893 கண்ணீர் கனன்றுருய் ஒழுக இருந்தோரும்
புண்ணீர் உளத்தோடு புலம்பித் துடிப்போரும்
உண்ணீர் உறுத்தோட்டத் துறவு விழைந்தோரும்
மண்ணீர் உடலோரும் மயங்கிப் பலராவார்.

894 சொற்ற நிலையுற்றார் அயலோர் எனிலன்னம்
உற்ற அவலத்தை உரைக்க உரையுண்டோ?
கற்றைப் புகையுற்ற ஆடிக் கிணையாளுள்
சுற்றத் தொடரற்றுச் சுழலும் உளத்தாளே.

895 முடிக்கு மலரின்றி முறுவற் குலமின்றி
வடிக்கும் விழியாகி வாயிற் புறநோக்கித்
துடிக்க இருந்தாட்குத் துறவு நிலையென்னும்
கடிக்கு மரவத்தைக் கடுக விடுத்தாரால்.

896 கொடிய அழல்மண்டிக் குமைத்த இடர்நீங்கி
இடியின் தாக்கேற்றுப் புரளும் மயிலொப்பப்
படியிற் புரண்டேங்கிப் பதைக்க இருந்தாளால்
தடித்த இரவெல்லாம் தனிமைத் துயர்கண்டாள்.

897 வார்த்த சிலையில்லை வரிசூழ் கொடியில்லை
தூர்த்த மணியில்லை துளைத்த குழலில்லை
நீர்த்த விழியாளே நிலத்தல் எனக்காண
வேர்த்த அவலச்சொல் வெளிப்பட் டுலவிற்றுல்.

பிரிவுப் பெருந்துயர்

(வேறு)

898 முக்குற்றங் கடிந்தோனே முன்னவனே முதல்வானான்
எக்குற்றஞ் செய்துள்ளேன் இடரெல்லாம் எனக்காக்கித்
திக்கற்றுத் திரிதற்கு விதித்திட்டாய் தெளிவில்லேன்
மிக்குற்று வாழ்தற்கு வழியொன்றும் இன்றேயோ?

899 உற்றாரும் எனக்கில்லை உடனேரும் பிறரில்லை
மற்றாரும் துணையில்லை மறிதுயரே மிகவுண்டு
கற்றாவின் மனம்போலக் கசிந்துருகு மம்மானே
பெற்றாரும் உற்றாரும் நீயன்றே அருள்கண்டாய்!

900 துன்பத்தை ஒழித்தற்குத் தூண்டியதாம் உள்ளத்தால்
இன்பத்தை விறகாக்கி எரிப்பதுவோ முறைகண்டாய்?
என்பத்தை எரிக்கின்ற தையாவோ ஐயாவோ!
அன்பற்றுக் கொடுந்துறவுக் காட்பட்ட நுஞ்செயலே.

901 ஆசைக்கு மருந்தாக அருந்துறவை ஏற்றுலவ்
வாசைக்கு மருந்தாக ஒன்றுண்டோ ஐயாவோ!
பூசைக்குத் தமைத்தந்தோர் பொய்யுரைத்தல் தக்கதுவோ
பேசித்தங் கருத்துரைக்க மாட்டாமல் பெயர்ந்தீரால்.

902 காட்டுக்குத் துயர்தீர்க்கப் புகுமுன்னர் நடுக்குற்ற
ஆட்டுக்கும் அருள்செய்தோன் அறங்காக்க விழைவாலுல்,
கூட்டுக்கும் வெளிக்குமென மூச்செறியும் உம்மகளின்
கேட்டுக்குத் துணையாதல் முறையேயோ? முறையேயோ?

(வேறு)

903 தன்னெஞ்சங் கலங்கி விம்மித்
தாங்கருந் துயர முந்த
அன்னஞ்சொல் அவலங் கேட்டான்
ஆர்வலர் நெருங்கிச் சூழ
வன்னெஞ்சக் கதவஞ் சார்த்தி
வருவதாம் உணர்வுங் கொன்று
கன்னெஞ்சங் கதுவக் கங்குற்
பொழுதெலாம் கழித்த காளன்.

904 அணைவிட்ட வெள்ள மென்ன
அருகாகி அன்னம் என்னே
மணைபட்ட பஞ்சு நேர
மறுகுற்றுய் என்னக் கூர்மைக்
கணைபட்ட மயிலே ஒப்பாள்
கலக்கத்தை உரைக்கக் கேட்டுத்
துணைபட்ட துயரின் விஞ்சத்
துடிப்புற்றுன் நடித்தல் வல்லான்.

905 சற்றுப்பின் காளன் சொல்வான்
சஞ்சலம் நமக்கே கண்டாய்
பற்றற்றுச் சென்ற நல்லோர்
பருவரல் கொள்ளற் கில்லை
பொற்றுப்புப் பொருந்து யாக்கைப்
பொற்பினேய் அயரேல் என்று
கற்றைப்பஞ் சணையில் ஏற்றிக்
கவலையை மாற்ற நேர்ந்தான்.

கருணைவேள் துறவு

(வேறு)

906 மணிசெய் துறவு மனக்கொண்டு
மறையின் குறிப்பும் நினைவாகிப்
பிணிதங் குலகம் நலமெய்தப்
பெருமான் துறந்த செயலுன்னித்

தணிய வியலா வொருமாற்றம்
தயங்கி ஒளிரக் கருணைவேள்
அணையிற் படுத்தார் அயர்வுற்றார்
அயரா அயர்வு பெருகிற்றால்.

907 நெஞ்சம் உருக்கும் முகத்தானை
நெகிழ்ச்சி விளைக்கும் நகையானைக்
குஞ்சி மழித்த தலையானைக்
கொள்ளும் அமுதக் கலத்தானை
மஞ்சள் அறுவை அசைத்தானை
மறுகி நடக்கும் நடையானைத்
தஞ்சம் அருளும் அடியானைத்
தனிப்பே ரின்பம் உறுவானை,

908 அஞ்சும் பகைகள் அழித்தானை
அவலக் கவலை ஒழித்தானை
வஞ்சங் கடந்த மொழியானை
வரைசூழ்ந் தியங்கும் வழியானைக்
கஞ்ச மலர்த்தாள் நினைவானை
உலகக் கவலைக் கினைவானை
விஞ்சும் ஒளியே வடிவானைக்
கனவிற் கண்டு விழிப்புற்றான்.

(வேறு)

909 முதிரக் கனிந்த கனிமீது
விதிருங் காக்கை விழைந்தேற
உதிரும் இயல்போல் துறவாட்சி
எதிர நினைந்தார் கனவாலே.

910 கண்ட கனவில் உளந்தந்து
கொண்ட பணியும் உடன்மாற்றி
அண்டை அயலோர் அறியாமல்
தொண்டர் நினைவே நினைவானார்.

911 திருக்கூட் டத்தே புகலானார்
அருட்போ தடியே அடைவானார்
பொருட்பே ரறமே உயிரானார்
மருட்பா லறுத்த மறைவல்லார்.

912 காமற் கடந்தோன் அருளாலே
நாமப் பகைநீங் குணர்வுற்றே

ஏமச் சீலம் ஒருபத்தும்
தாமுற் றடையும் தகைபெற்றார்.

(வேறு)

913 நற்பணி யாற்றி நாடு
நகரெலாம் புகழால் கொண்ட
கற்றவர் மணியாம் காமற்
கடந்தநல் லமைச்சர் தம்மைச்
சிற்சபை புகுதக் கண்டோர்
சிந்தையின் மறுக்கங் கூறேன்
சிற்றிளங் குழவி யேங்கித்
துடிப்பினும் தாலாட் டின்றுல்.

914 எம்மையும் இன்ப மூன்றும்
எழில்நகர்க் கவலஞ் சூழ்ந்து
சும்மைசால் முரச மூன்றும்
சோம்பிய கிடக்கை யாகப்
பொய்ம்மையாய் வருந்தி யுள்ளம்
மெய்ம்மையாய் மகிழ்வு கொள்ளும்
கொம்மையன் ஒருவன் என்னிற்
கொற்றவேற் காளன் அன்னன்.

வஞ்ச நெஞ்சம்

915 காடெலாம் சிதைத்த வேழக்
கன்றினைப் பிடித்துத் தீய
ஆடலை அகற்றித் தூய
அறநெறிப் படுத்த காலை
ஊடொரு காலக் கேட்டால்
உள்ளகம் சிதைந்து பண்டைப்
பாடெலாம் செய்தல் போலப்
படிப்படி காளன் கெட்டான்.

916 மாதமோர் ஆறு சென்றும்
மனத்துறு துயரம் மாருள்
போதனை புரிந்து தேற்றும்
புலனெறி கொள்ளாக் காளன்
கோதையைத் தவிர்ந்து நாளும்
கொண்டதே கோல மானன்
யாதரோ கொள்வர் உந்தும்
உணர்ச்சியின் போக்கிற் செல்வோர்.

917 தன்குறை நோக்க கில்லான்
தாங்கரும் வெகுளி கொண்டு
முன்னுள வாழ்வும் இன்பம்
முதிர்ந்ததோர் நெகிழ்ச்சிப் பேறும்
பின்னுள வாகா வென்று
பேதமை பிடரை உந்தத்
தன்னுளக் கறுவை மீண்டும்
தூண்டினுன் எண்ணெய் விட்டே.

918 முல்லையங் கொல்லை மூரல்!
மூண்டுள துயரி னுள்ளே
எல்லியும் இரவும் வைகின்
எத்திறத் துய்தி யம்மா!
பல்லியும் இசைத்தல் கேளாய்
பருவரல் அகல வேண்டின்
சொல்லுவென் ஒன்று கேட்டி
சொற்றவா றமைதல் காண்டி.

919 மனத்திடை உறுத்து மொன்றை
மருவினுல் அன்றித் தீரா
தெனத்தெளி வுடையர் சொல்வார்
தேர்ந்தனென் அதனை அன்னுய்
வனத்திடை வதிந்து வையப்
புகழினை அடைய நீத்த
மனத்தராம் நுந்தை யாரைக்
காட்டுகேன் கவலேல் என்று,

920 அருணெறி சுரக்குஞ் செல்வன்
அடியினை பட்ட குன்றம்
இருணெறி தொலைக்கும் என்னும்
துணிவினுல் இயங்கி இந்நாள்
குருணெறிக் கோதை நல்லாய்
கொல்லியங் குன்றச் சாரற்
சுருணெறி அலைவ தாகச்
சொற்றனர் சிலபேர் கேட்டி.

921 வண்டிசைப் பண்ணும் கானம்
வாழ்பவர் குரவைப் பாட்டும்
தெண்டிரை அருவி யாகும்
திறன்மிகு முழவு மோங்கும்

மண்டலத் துயர்ந்த கொல்லி
மலைவளம் பெரிதால் அம்மா!
கண்டவர் மீள லில்லார்
காண்குவாய் உண்மை யம்மா!

922 வழியிடைக் காணற் குள்ள
வனப்பினை எண்ணி எண்ணி
மொழியிடை வடித்தற் காற்றேன்
முறைபெறக் கண்டு கண்டு
கொழிவளக் கொல்லி வெற்பில்
நுந்தையைக் காண லாயின்
அழியுமால் அவலம் அன்பே!
ஆவன செய்க என்றான்.

கொல்லிமலைச் செலவு

(வேறு)

923 சிந்தை விரைவொப்பச் செயலும் விரைவாகித்
தந்தை தமைப்பார்க்கக் கங்குல் விடியாமுன்
கொந்தார் மணங்காதம் கொண்டு வளிசிந்தும்
நந்தா வளக்கொல்லி நடப்பம் எனநின்றுள்.

924 நடக்க வியலாது நங்காய் பரிவையம்
சுடர்க்கண் திறவாமுன் இயலும் ஒருயாமத்
தொடக்கத் திவ[illegible]ய்தும் துடியேர் இடைநல்லாய்
குடக்குத் திசையாகும் கொல்லி மலையென்றான்.

925 வையம் பகல்கொள்ள உளதோர் யாமத்தில்
செய்ய கமலத்தில் வதியாச் செழுமன்னம்
வைய மிசையேறி அமர்ந்தாள் அடுத்தாங்கே
ஐயன் இடங்கொண்டான் வையம் நடந்ததுவே.

926 யாரோ செயும் பாவம் எவரோ சுமந்தேங்க
ஓரோ ரமையத்து நிகழும் நிகழ்வொப்பச்
சீரோர் துளியின்றிச் சிந்தை கெடுத்துள்ளோன்
தேராப் பழியேற்க வருமால் பரித்தேரே.

927 மைசூழ் மலையொப்பத் திகழும் மதில்கண்டோள்
எய்யா வளைச்சங்க எழிலார் கரம்நீட்டிப்
பொய்யா வளக்குன்றம் இதுவோ எனக்காளன்
ஐயோர் விழிநல்லாய் அணித்தே எனச்சொன்னான்.

(வேறு)

928 தலைசிறி தசையத் தாரும்
சிறிதசை வெய்தப் போகும்
கலைநடைப் பரிகொள் வையம்
கடுகலும் தணிவும் அற்றுச்
சிலையறச் செல்லுங் காலைச்
சீயமாம் உருவக் காளன்
அலைகுழல் அன்னம் கேட்க
அறைந்தனன் வழியின் காட்சி.

வழிவனப்பு

(வேறு

929 கண்டின் மொழியினுய் கண்டாய்
காணும் பெருந்தலம் ஈதோ
விண்டின் வழிதிரி தொண்டர்
கொண்ட அறநெறி கூற
அண்டர் தலைவனுல் பண்டே
கண்ட நிருமிதக் கோயில்
பண்ணற் கருவியால் கையால்
பண்ணைச் செழுந்தலம் பாராய்.

930 விண்ணோப் பொருந்திய வெற்பர்
வீழப் பெருகிய யாறு
மண்ணிற் பரவுதல் போல
மாணும் பெருந்தெரு காணுய்
எண்ணில் புவியுறை மாந்தர்
ஈண்டித் திரியினும் ஏற்கும்
கண்ணுர் இடைகழி காணுய்
காவுங் கழனியுங் காணுய்.

931 தூமக் கலனணி பொன்னே
தூண்டும் பரிகளும் வேட்கும்
காமன் பொழிலணி காணுய்
காவின் இடையுள வாவித்
தூமென் குளுமையிற் ரேயாய்
வேந்தன் உரிமையர் வாழும்
ஏமப் பொழிலெனத் தேர்ந்தோய்
ஈதில வந்திகை யாமால்.

(வேறு)

932 பாவின் சுவைதேர் பழம்பொன்னி
பாங்கிற் செறிந்த மலரள்ளித்
தூவிக் கழங்கு விளையாடித்
துவளும் கொடிபோல் வரக்கண்டாம்
பூவும் புகையும் நறுஞ்சாந்தும்
பொன்னும் பொருளும் மிகவேற்கும்
தேவத் துறையை அடுத்தோமால்
திளைநீர் விழவு நினைவுண்டோ ?

933 மையேர் கண்ணி மடமங்காய்
மழலைத் தும்பி மலர்நாடிச்
செய்யேர் பூட்டி உழுமுன்னே
செஞ்சால் முகிழ்த்த நீலத்தின்
எய்யா நறுந்தேன் பெடையோடும்
பருக எழுந்த பதங்காணுய்
செய்யோன் வரவை இனிதேத்தும்
சிறகர்த் தொகையின் ஒலிகேளாய்.

934 ஆலைக் கரும்பின் சுவைச்செல்லாய்
ஆங்கண் தெரியும் பெருஞ்சோலை
மேலைத் தவத்தர் செறிவென்ன
மிடையும் அமணப் பெருஞ்சோலை
பாலைப் பொழியும் மதியொன்றே
பரிதிக் கதிரும் நுழைக்காமல்
சோலைக் குயிலுக் கிடந்தந்து
சொந்தங் காட்டும் அருள்கண்டாய்.

935 தங்கக் குழம்பால் படந்தீட்டித்
தனித்த உருக்காம் வெண்குழம்பை
வங்கக் கடலில் இறைத்தள்ளி
வாழும் உயிர்கள் விழிக்கெல்லாம்
பொங்கும் ஒளியைப் பரிந்தூட்டிப்
புவனம் களிக்க வழிகாட்டும்
செங்கட் பரிதி பிறந்ததுவால்
செய்யும் இயற்கை நடனங்காண்.

936 மின்னல் ஒசிவின் இடைநல்லாய்
மேற்கே செல்லும் இப்பாதை
பொன்னிக் கரையின் வடபாலே
போகும் இன்றே அரங்கத்தைத்

துன்னக் கூடும் துயரில்லை
தூண்டும் வலவ மெதுவாக்கி
மன்னும் மருத வளங்காண
மனக்கொண் டிடுக வெனச்சொன்னன்.

(வேறு)

937 உழவொலி ஒருபுறமே உழுவது சிறக்கெனவேர்
விழவொலி ஒருபுறமே நுரையொடு மெழுதருநீர்
முழவொலி ஒருபுறமே முளிவயல் நடவிடுவோர்
குழுவொலி ஒருபுறமே குரவையும் ஒருபுறமே.

938 வளையொலி மிகவெழவே களைகளைக் களைகுவரே
கொளையொலி மிகைபடவே கதிர்வர மகிழ்துவரே
கிளையொலி நரம்பெனவே வளிபொர நடமிடுமே
துளையொலி வெலவலவாய்த் துடியிடை நடுபயிரே.

939 முதிர்வரி அரிகுவரே களந்தர விரைகுவரே
அதிர்வுற அறைகுவரே கடாவிட அதருவரே
விதிமுறை வருநெலையே வறியரும் இசைஞருமே
வதிமுதல் உழைத்தவரோ டகமுற முகக்குவரே.

(வேறு)

940 வெள்ளிய தந்த மேய்ப்ப
வெளிவரும் முளைகள், மஞ்ஞை
வள்விரித் தோகை யொப்ப
வயங்குநற் ரூகை; பாம்புப்
புள்ளிகொள் படத்தை ஒப்பப்
பொலிவுறும் பீள்கள்; நாணம்
கொள்ளுநன் முகத்தை ஒப்பக்
குனிகதிர் கொள்ளும் சாலி.

941 கால்பொர நிவந்து தாழ்ந்து
களிறென அசையும் வாழை
மேல்துவள் இலைகள் யானைச்
செவியெனும் தோற்றம் மானும்
சால்புடைப் பூவின் காட்சி
சாற்றிய வேழக் கையாம்
ஓல்மிகு வாழைத் தோப்பே
ஒருத்தலின் கான மாமால்.

942 கார்க்குலம் செய்த நன்றி
கருதிய மலர்ச்சி போலப்
போர்த்தணி பொதுளும் பந்தர்;
புவிவழிப் பெற்ற நீர்க்குப்
பேர்த்தெழு நன்றி போலப்
பிலிற்றிநீர் வீழுந் தீந்தேன்
சீர்த்தியின் செம்மல் நேரச்
சேர்ந்தவர்க் கருளுஞ் சோலை.

943 பளிக்கெனத் தோன்று மாறும்
பாம்பெனக் காணுங் காலும்
விளர்ப்புறு போர்வை போல
விளங்கிடும் பசிய செய்யும்
நெளிப்புறு நத்தை போல
நென்மிகக் கொண்டு சேறும்
தெளிப்புறு சகடும் காணும்
திசையெலாம் தோன்று மாதோ.

944 போர்க்களம் என்னு மாறு
பொருந்திய சும்மை விஞ்சும்
ஏர்க்களம் என்னு மாறு
இரவலர் பெரிது கொள்வர்
கார்க்களம் என்னு மாறு
கவரிகள் செறிய நிற்கும்
ஊர்க்களம் என்னும் பேரால்
உலகினை வளர்க்கும் வைப்பே.

945 வரப்பிடை மணியின் கொள்ளை
வயலிடைச் சங்கின் வெள்ளம்
துரப்பிடைத் தோகை மஞ்ஞை
தொளியிடை அன்னப் பிள்ளை
உரப்பிடை ஓகை பொங்கும்
உறுவெயில் ஊதை விம்மும்
நிரப்பிடைக் காணு மேனும்
நெறிமுறை அன்றி இன்றால்.

946 மாங்கனி உதிரக் காண்பர்
மரத்தினை வளைக்கும் வாழைத்
தீங்கனி முதிரக் காண்பர்
திசைதொறும் நறுமை யூட்டித்

தூங்கிய வருக்கை காண்பர்
துண்ணென வீழுந் தீங்காய்
ஊங்கிய தெங்கு காண்பர்
உழையெலாம் பொதும்பு காண்பர்.

947 கரும்புசூழ் கழனி காண்பர்
கட்டிசெய் ஆலை காண்பர்
சுரும்புசூழ் கிடக்கை காண்பர்
சொரிதரும் சுவைத்தேன் காண்பர்
அரும்புசூழ் முறுவல் காட்டி
அழகென நகைத்துக் கொள்ளும்
விரும்புசூழ் நிலைகள் காண்பர்
வியப்பொடு நிறுத்திக் காண்பர்

948 காய்செறி கமுகு காண்பர்
களிப்புறு நறவம் ஈயும்
வீசெறி பெண்ணை காண்பர்
விரிபணை பெருகி ஓங்கும்
பூஞ்சினை மருதங் காண்பர்
புகலரு நீத்த மல்கித்
தாய்வரு காட்சி காண்பர்
தமக்குளே மகிழ்வு காண்பர்.

949 கூடுதல் செறிதல் நிற்றல்
குறிக்கொடு விரைதல் கூவல்
தேடுதல் தெளிதல் பாய்தல்
திருமணம் கொள்ளல் வாழ்த்துப்
பாடுதல் ஓங்கும் கானப்
பறவையும் நீர்வாழ் புள்ளும்
நீடுமெச் சிறையும் செல்வோர்
நெஞ்சினை ஆட்சி கொள்ளும்.

950 நெல்லொடு கரும்பு பாக்கு
நெரிகுலை வாழை தெங்கு
மல்லலம் பலவு தேமா
மலையெனக் குவித்த கொள்ளை
கல்லொடுங் கடலி னெல்லை
சேர்த்திடக் கரைந்து வண்டி
செல்வதால் நெளியும் பாதை
சேறெலாம் தூசி யாகும்.

951 கொடுவெயிற் பொழுதை வெய்யோன்
குறிப்பதை அன்றி வேறு
கடுநிலை காட்டு மொன்று
காணரும் மருதத் தூடு
விடுநடைப் புரவித் தேரில்
விளங்குவோர் கமலப் பூவுள்
உடனுறை தும்பி யூசல்
கொள்வதை ஒப்ப ராவர்.

952 இடையிடை அமைந்து தங்கி
இனிதுறச் செல்வோர் புட்கள்
படையமைத் தெழுந்த தொப்பப்
பறந்தெழும் மாலைப் போழ்தில்
தொடையமை தீந்தேன் வீழ்ந்து
தொளியிடைப் பரவிச் செந்நெல்
புடைபெறும் அரங்கங் கண்டார்
பொலிவுறு முவகை கொண்டார்.

953 பெறலரும் தந்தை யன்பு
பெருகிய களிப்பும் முன்னும்
கறுவினை முடிக்கக் கொண்ட
கயமையும் உந்தித் தள்ள
செறியெயிற் றன்னம் செங்கட்
சீயமாம் கொடிய காளன்
பொறிபுலன் பெருகி நின்றூர்
வருவதை அறிவார் யாரே ?

பதினென்றுவது வழிக்கொள் படலம் முற்றிற்று.

12. வஞ்சப் படலம்

954 தேரணிந்த திருவையம்
திருவரங்கப் பெருநகரின்
நேரணிந்த நெடுவீதி
முறைகடந்து நெடியோனின்
சீரணிந்த செழுமாடத்
திருக்கோயிற் குணபாலாம்
பேரணிந்த பொழில்சூடும்
பெருமாடம் தனைச்சேர,

955 ஐந்தவித்தான் தோற்றம்போல்
அமைவாகும் இவ்விடமே
தந்தையரின் தவவிடமோ
எனவெண்ணிச் சுரிகுழலாள்
முந்துநடை பயின்றோடி
உட்சென்று முதுபோதி
அந்தணனின் பொற்சிலைகண்
டடிதாழ்ந்து வீழ்ந்தெழுந்தாள்.

956 வெம்புலியின் விறலடக்கும்
வியன்காளன் அருகாகி
அம்பவழ வாய்துடிக்க
நிற்குமெழில் அன்னத்தைக்
கொம்பனையாய்! நுந்தையாம்
கொடைக்கையர் தமைநாளை
வம்புலவு கொல்லியிடைக்
காண்போமால் எனச்சொன்னன்.

957 நாளைக்கோ எனனைய
நடுவாகும் இரவொன்றே
பாளைத்தேன் மொழிநல்லாய்
பகையாகும் விடிவானல்
பூளைப்பூப் பறத்தல்போல்
போயொழியும் துயரென்றே
காளைக்கோர் நிகரானென்
கலக்கத்தைத் தவிர்ப்பானல்.

958 கட்டாரும் யாக்கைக்காம்
கடனெல்லாம் கடிதாற்றி
மட்டாரும் பூம்போதி
மன்னன்தாள் மலர்சூடி
வட்டாரும் தோளானும்
வார்குழலும் அமைவாகிப்
பட்டாரும் பாயறகண
கண்வளர விழைவானூர்.

959 நெடுநேரம் துயிலாமல்
நேரிழையாள் பின்துயிலக்
கெடுநேரம் அணித்தென்று
கணித்துள்ள கிளர்காளன்
நடுநேரம் நள்ளென்றும்
இமைகொள்ளான் நன்னெஞ்சம்
விடுமாருன் றில்லாமல்
விதவிதமாய்க் கூறிற்றுல்.

காளன் மனப்போர்

960 தந்தையரும் இரங்காத
தாழ்நிலையில் இமைப்போதில்
சிந்தைதனில் அரும்பியதாம்
செறிகாதல் உரத்தாலே
வெந்துயரம் மாற்றினளே
வீழ்த்துவதும் அறமேயோ ?
இந்நெறியே தக்கதெனில்
நீளய்தல் எக்கேடோ ?

961 உள்ளத்தாற் பிணைந்தோர்கள்
உயர்வாழ்வு கொள்வரென்று
கொள்ளத்தான் துறவுற்றுன்
வணிகமணி கொடுங்காள !
கள்ளத்தைக் கொண்டோர்கள்
கைவந்த நல்வாழ்க்கை
வெள்ளத்தில் திளைத்ததில்லை
என்பதனை அறிவாயோ ?

962 சீலத்தின் முதலான
செந்தண்மை கண்டுணர்ந்தும்
காலத்தின் மாற்றத்தால்
கடும்பாம்பு போலாதி

ஆலத்தைப் புகுத்தற்கு
நினைக்கின்ற காளாகேள் !
சீலத்தில் ஒன்றேயோ
செய்ந்நன்றி கொன்றுடல் ?

963 உயிர்காத்த செல்விக்குத்
துயர்செய்தல் உன்கடனே ?
செயிர்காத்துச் சினங்காத்துச்
சிதைத்தற்கு நெறிபார்த்துக்
கயிர்காக்கும் காளாநீ !
கடுப்புற்றுல் உனக்குற்ற
உயிர்சாய்த்தல் ஒன்றன்றே
உரித்தாகும் உணர்வாயோ ?

964 தீயனென்று சொன்னலும்
அதைமாற்றித் திகழ்வதனல்
தூயனென்று காட்டுதலே
உன்கடனும் ; உளக்கறுவால்
பேயனென்று பேர்பெற்றே
அப்பழியை மாற்றுதியோ
மாயமொன்று மண்ணுலகுக்
கமைந்ததுவும் மாண்பம்மா !

965 வஞ்சத்து வழிச்சென்று
வதிவோர்க்கு வையத்தில்
நெஞ்சத்துக் கிணையான
நேர்பகைமை ஒன்றில்லை
நெஞ்சத்து நெறிகடந்து
நிற்போர்க்கு நிலையாக
நெஞ்சத்தே வாளுண்டு
வேலுண்டு யாவுமுண்டே.

966 நன்னெஞ்சப் பொன்மொழிக்கண்
நாரின்மை காண்காளன்
புன்னெஞ்சப் போக்கிற்குச்
செவிசாய்க்க முன்னின்றுன்
மென்னெஞ்சம் மிடைந்தார்க்கே
மிகுகூத்துச் செயும்வஞ்சம்
வன்னெஞ்சம் உடையாரை
வாட்டாமல் நின்றிடுமோ ?

967 வில்லம்பு தைத்தாலும்
வீரற்குப் பேறுண்டாம்
சொல்லம்பு பெற்றாற்குச்
சுகமுண்டோ? வடுவுண்டு ;
நல்லம்பு நிகர்கண்ணாள்
நல்லளெனக் கொண்டமையால்
கொல்லம்பு கொண்டேனுல்
கோடாது தைத்தற்கே.

968 உடம்பாடு கொள்ளாதார்
வாழ்வெல்லாம் பாம்போடு
குடங்கருளே உறைவதெனக்
குறித்திடுவர் நுண்ணறிவர்
கிடங்குறையும் முதலிலையெனில்
கேடில்லை ! பாம்பெனினும்
விடங்கொண்ட வெம்மொழிகள்
விளம்பாதால் உள்வைத்தே.

969 அழிதக்க செல்வத்தை
அளித்ததனை உளங்கொண்டென்
அழிவற்ற மானத்தை
அழிப்பதுவோ அம்மம்மா !
அழிமுள்ளிற் செல்லாமல்
தடுத்தமைத்த நன்மைக்குக்
கழிமுள்ளாம் கொடுவேலால்
காழ்கொண்டு குத்துவதோ ?

970 வேனகுமேர் விழியாளாம்
என்றுணர்வு நனியுந்த
நானகுவான் நின்றேனுல்
நம்பியதால் மிகக்கெட்டேன்
தேனகுசீர் மொழிகேட்டு
நின்னுரைத் தீமொழியால்
ஊனடுங்க ஊடறுத்தே
உலைத்தீயில் போடுவதோ?

971 தன்துயரம் தன்துயரம்
ஆகாது தலைவற்கும்
மன்துயரந் தருவதனை
நன்கறிந்தும் மடமையினுல்

என்புருகி எந்நாளும்
தந்தையரின் நினைவாகி
நின்றவளால் நீளின்பம்
யானெய்த வகையுண்டோ ?

972 அணையொன்றும் கட்டாமல்
அகன்றமைந்த ஏரிக்கும்
பிணையொன்றும் செய்யாமல்
விடுவாரேல் பெய்மழைநீர்
பணையென்றும் நகரென்றும்
பாராமல் அழிக்காதோ?
துணையென்று கருதாஅத்
தொடர்வதுவும் ஈதன்றே !

973 அருங்காவல் அரணுக்குள்
உறைந்தாலும் நாற்படையாம்
பெருங்காவற் சூழற்குள்
வதிந்தாலும் பெயராதே
இருவேருய் எழுந்தோதும்
இகல்நெஞ்சம் காளற்குள்
பொருதார்க்கப் புன்னெஞ்சே
விறல்கண்டு விடிந்ததுவே.

(வேறு)

974 புள்வாய்ப் பறையார்க்கப் பூமென் முகநோக்க
வள்வாய் வளர்சேவல் வாழ்த்தெடுக்கச் செங்கதிரோன்
நள்ளார் புறங்கண்ட நல்வேந்தன் தோற்றம்போல்
கொள்ளாச் சிவப்பேற் றெழுந்தான் குணபாலே!

975 சீலக் குணத்தாளின் செம்மை யுளமோரான்
காலக் கொடுமையினுல் காந்தும் இயல்போலச்
சாலச் சிவப்பானுன் சாற்று கதிரோனும்
நீலக் கடல்வானின் நெற்றிக் குறிபோன்றே !

முல்லைவளம்

(வேறு)

976 நீல மாமுகில் மின்னெடு வில்வளைத்
தோல மாகிய ஒள்ளொளி காட்டிய
மாலின் மாநகர் நீங்கிவ டக்கிலே
கோல வாம்பரி செலவுகு றித்ததே.

977 உற்ற காவதம் நான்குள கொல்லியை
முற்று வெங்கதிர் கூருமுன் எய்துவான்
எற்றி யோட்டினன் ஈண்டிய கானிடைச்
சுற்று மாண்பெலாம் சொல்லுமா றின்றரோ

978 குல்லை மாலைய கோவலர் ஆனிரை
ஒல்லை ஓகையின் தூட்படாம் தாங்கிய
கல்லை யண்மிய கானெனும் காரிகை
முல்லை மூரலை மூழ்த்தகம் காட்டினள்.

979 பாடு வாயினன் பானையன் தோலுடை
கூடு மாய்மகன் வாய்மடி வீளையின்
ஆடு நேடொலி ஆய்நரி தாக்கிட
ஊடு பாய்ந்தவண் காடுதேர்ந் தோடுமே.

980 காலெ னுங்கலை யாளனேர் கானகத்
தோலு தாவரக் கும்பலாம் பண்ணிடை
நாலு பூங்கிளை நங்கையர் நன்னடம்
கால வைப்பனுல் கல்லலைப் போரமே.

981 கோழு டைக்கதிர்க் கூர்வர குண்டுயர்
தாழு டைக்கொடித் தண்ணிழற் கண்துயின்
றூழு டைச்சிறு பாடியிற் சாலடி
சூழு நீருணும் கான்முயற் சுற்றமே.

(வேறு)

982 மரக்கிளை வழுக்கிய மழவீ பாம்பெனும்
அரக்கிழைப் பட்டுடை அழகன் மீதமர்ந்
துரக்கிளை மலரிடை யுவந்து சேறுதல்
மரப்புணை அமர்சிறை மணிப்புள் மானுமால்.

983 சூழ்பண அரவினம் சுரிந்து நீங்கிடக்
கூழ்உண ஒதுக்கிய குருந்தின் கொம்பிடைக்
காழ்வணக் களிமயில் அகவல் காரிகை
தாழ்வனக் கிளிகடி தகைமை யாகுமே.

984 பேடியல் உருவினன் பிறங்க ஆடுகைக்
கீடியல் மருப்புடை எருமை ஏறிய
ஆடியல் சிறுவரைத் துறுகல் மந்தியாய்க்
கோடிய விழியராம் குலுங்கு தோப்பிலே

985 தொறுநடை மணலிடைக் குறுத்த தாள்படத்
துறுநடை பயின்றெழும் புறவின் தொண்டிஞல்
குறுநடைக் குழவியர்ப் பயிற்றும் நங்கையர்
வெறுநடை யாளராய் விளங்கு வாரரோ.

986 கொன்றையம் பூவுதிர் குழியைச் செல்வரின்
பொன்றிகழ் பேழையாய்ப் புகல லாமரோ
துன்றிய தம்பலம் கரிய பூவிடை
ஒன்றுதல் மணிமிடை பவழ மொவ்வுமால்.

குறிஞ்சிவளம்

(வேறு)

987 வல்லியம் எண்கு வேழம்
வயவரி ஆய சூழும்
கொல்லியஞ் சார லெய்தக்
குறுகிய வழிய தாகப்
பல்லுளப் பரிகொள் தேரைப்
பாகனே நிறுத்து கென்று
மல்லலம் யாக்கை வீரன்
மந்திரம் அமைத்துச் சொல்வான்.

988 தேர்வல அன்ப கேட்டி
தெய்வமால் வரையை யுற்றுப்
பேர்பெறு பெரியர்க் கண்டு
பிறபிற வெல்லாம் ஆர்ந்து
நீர்மிகு குணத்த னோடு
நேயமாய் மீண்டு நங்கள்
ஊர்வர நாட்க ளாகும்
ஊர்தியைத் திருப்பு கென்ருன்.

989 'தீவிலங் குள்ள குன்றம்
திருவினைக் காக்க' வென்ன
'நீவலங் கற்க அன்ப,
யானுளேன்' என்று தேற்றி
ஆவலங் குந்த நிற்கும்
அணங்கொடு செலவு தந்து
சேவகம் வல்ல காளன்
செல்வதே கருமு மாணன்.

990 ''இக்கொடுங் குன்றந் தானே
எந்தையர்க் குறையு ளாகும்?
பக்கலும் இல்லை; பாழ்வாய்ப்
பருவிலங் கெங்குங் காணும்;
திக்கெலாம் வேடர் அன்றித்
திருவருள் உடைய ரில்லை;
துக்கமிங் ககற்ற வேண்டின்
தொடர்மலை அன்றி இன்றே.

991 ''மலைவளம் பெருகிற் றேனும்
மனத்திடை அச்சந் தோற்றி
அலைத்திடும் வகைமை கண்டீர்;
அயர்ந்துள தழிக்க வல்ல
கொலைவளக் குன்றம் நேர்ந்த
தந்தையும் நல்லர்'' என்றுள்;
'கொலையதும் கலையென் றுகும்
கொள்கையால் நிகழின்' என்பான்.

992 குறிஞ்சியே மக்கள் தோன்றிக்
குடியொடும் வாழ்ந்த இல்லம்;
குறிஞ்சியே நிலத்துக் கெல்லாம்
கொழுமையை அளிக்கும் தாயர்;
குறிஞ்சியே கலையின் மாண்பு
கெழுமிய இடமென் றுய்ந்து
குறிஞ்சியைத் துறவுக் கேற்றுர்
கூறுகேன் குறிஞ்சிப் பேறே.

993 ''ஈன்பிடிக் குளகு கொய்யும்
இருள்துணி ஒருத்தல் நச்சி
ஊன்தடி உழுவை மூங்கில்
உறுபுதர்க் கரந்து நிற்கக்
கான்பொடி பரத்துங் காற்றுக்
கழைச்செறி வலைத்துக் காட்டி
வான்படர் நீக்கும் வாழ்க்கை
வயங்கிய குறிஞ்சி வாழ்க்கை

994 கறிப்புதைப் புணர்ச்சி கொண்டு
கடுவனை அகன்ற மந்தி
குறிப்பதைச் சுற்றங் காணுக்
குறிக்கொடு வேங்கை ஏறி

நெறிப்புதைச் சுனைப்ப ளிங்கில்
நெகிழ்ந்துள மயிரை நீவி
வெறிப்பதை அகற்றுங் காதல்
வியன்மிகு குறிஞ்சிக் காதல்.

995 கானமர் கணைக்கண் தப்பிக்
கதஞ்செறி கடிநாய் மாற்றி
ஊனமர் விலங்கும் மீறி
உடன்பிணை பிள்ளை யோடு
வானமர் வழிக்கண் செல்ல
வலமிடம் பார்க்குங் கேழல்
தானமர் அன்பு வீரம்
தயங்கொளிக் குறிஞ்சி வீரம்.

996 கழைபயில் கூத்த ரென்னக்
களிமயில் கிளைக்கண் ஆடும்
உழைபயில் ஊகம் நின்று
முட்கனி முழவ மார்க்கும்
தழைபயில் மந்தி யீட்டம்
தகைபெற மருண்டு நோக்கும்
மழைபயில் குறிஞ்சிக் காட்சி
மனங்கவர் கலையின் மாட்சி.

997 கொன்முனைக் கூடம் பட்டுக்
கொழும்பிதிர் பறத்த லென்ன
மின்மினி ஏழும்ப எண்கர்
ஈயலை நாடிப் புற்றுள்
கன்முனைக் கையை நீட்டிக்
கரந்துறை பாம்பை மாய்த்துத்
தன்முனைப் பகற்றும் வாய்ப்பு
தவப்பெருங் குறிஞ்சி வாய்ப்பே.

998 சுனைப்பழம் குரங்கு தாங்கிச்
சுரிமயிர் மந்திக் கூட்டும்
கிளைப்பழு மாவைக் கிள்ளை
கிளர்பெடைக் கருத்தி நிற்கும்
புனைக்கழை பிடிக்கை தந்து
முதுகினை வருடும் கைம்மா
தினைத்தெழு பண்புச் செல்வம்
திகழ்வளக் குறிஞ்சிச் செல்வம்.

999 கரியுரி என்னத் தோற்றிக்
கலிவலவ ஓரி பாயச்
சரிவரைக் காந்தள் நீழல்
சந்துரல் தினையும் கூனல்
பொரியரை முடக்கால் ஊமன்
புலர்கரத் தகமும் தீந்தேன்
முரிநிரை ஒழுக்கும் வண்மை
முதிர்பெருங் குறிஞ்சி வண்மை.

1000 பணைப்புறு தந்தம் பாய்ச்சிப்
பதிபொலன் நாடும் வேடன்
பிணைப்புறு மணியும் பொன்னும்
பிறங்கிட உள்ளம் பூப்பான்
இணைப்புரு முத்தக் கொள்ளே
இறுபடைத் தந்தம் கக்க
இணைப்புரு அன்னள் முத்தும்
இயல்மிகும் குறிஞ்சி முற்றம்.

1001 துய்ந்நனே செறிப்பக் காட்டித்
தொடரிசை பயில வூட்டி
அய்ங்கனி சுவைக்க நீட்டி
அருமணத் தொகுதி கூட்டிப்
பைங்கலைப் போர்வை தாங்கிப்
பார்ப்பவர் உளத்துள் ஒங்கி
ஐம்புலன் வளர்க்கும் பாவை
அணிமிகு குறிஞ்சிப் பாவை.

1002 இன்னணம் புகன்று காளன்
இடைஇடைச் சுட்டிக் காட்டிப்
பொன்னனுள் அயரா வாறு
பொருப்பிடை ஏற்றிச் செல்வான்
மின்னலின் ஒசிவே போல
மெல்லியல் தளர நேரின்
தன்னிருங் கையால் பற்றித்
தாங்கியும் உயர்த்திச் செல்வான்.

1003 பைபய நடந்து செல்லும்
பாவையை விரையத் தூண்டி
ஐயரைக் காண வேண்டின்
அமைவதோ எளிதில் என்று

கைகளால் ஈர்த்துக் கொண்டு
கடுகியும் விரைய ஏவி
மொய்குழல் சோர்ந்து வீழ
முகட்டிடைச் சேரப் போனான்.

வஞ்சநெஞ்சம்

1004 வஞ்சனை யுடைய காளன்
வன்மனம் கதுவித் தள்ள
அஞ்சனக் குன்றி லேறி
அலமரும் அன்னம் அன்னாள்
பஞ்சன அடிகள் வெய்ய
பரலிடைப் பட்டுப் பட்டு
மஞ்சணி மலைக்குப் பஞ்சுக்
குழம்பினைத் தீட்டிச் செல்லும்.

1005 தந்தையர் உறைவும் உண்டோ
தாழ்ந்தனென் கேட்டேன் என்று
சந்தணி தோளைப் பற்றிச்
சஞ்சலத் தோடு கேட்டாள்
கொந்தணி கோதாய்! காளன்
கூறிய உரையில் பொய்மை
வந்ததோ என்று கூறி
வாளெயி றிலங்க நக்கான்.

1006 கள்வனுய் இருந்த காளன்
கைவிலங் ககற்றி அன்னம்
உள்ளகம் கவர்ந்த அன்பை
மறந்திலான் அன்றிப் பொன்னி
வெள்ளமும் விழவும் குங்கு
மச்சிமிழ் விரும்பித் தந்த
கள்வனும் மாண்பும் என்றும்
காளனுல் மறத்தற் காமோ ?

1007 அன்னமே! அன்புக் காளன்
அழிந்தனன் முன்னே ஈண்டு
முன்னிய காளன் கள்வன்
பொய்யனே இல்லை தீய
புன்னெறி மட்டும் போகான்
பொறுக்கெனக் கொலையும் செய்வான்
என்னினை கின்றுய் தந்தை
எய்துவார் தடுக்க வென்றே.

1008 மண்ணுளார் ஒக்கக் கூடி
மாற்றுதல் குறித்தா ரேனும்
விண்ணுளார் ஆகக் காண்டி
வீரவேற் காளன் முன்பு
கண்ணிய வொன்று தப்பல்
காலனுக் கெனினும் இல்லை
பெண்ணெனின் இரங்கும் பேயும்
என்பதும் அழியக் காண்டி.

1009 ஏற்றணி இடித்துக் கொட்டி
எழிலுறு மருவி யாகித்
தோற்றிய அழகு காணும்
தோகையே இந்தப் பாறை
ஆற்றிய பேறு நன்ருல்
ஆண்டிருந் துருட்டத் தின்னும்
கூற்றுறழ் பேழ்வாய் காணாய்
கொடுமுடி யுயரங் காணாய்.

1010 மாற்றமும் சொல்லே மற்றோர்
மனத்திடை அனலே வித்தும்
கூற்றமும் சொல்லே பேதாய்!
குறிக்கொளா துரைத்துக் கெட்டாய்
ஆற்றவும் அறிந்தா ரேனும்
அளவிட வுரையா ரென்னில்
மாற்றுவ தரிய தாகும்
மறிதுயர் எய்த லென்ருன்.

1011 இவ்விடம் வருக தீயோய்!
என்மனே யான வொன்ருல்
இவ்வுரை யொன்று கேட்பல்;
ஏதொரு கருத்து முண்டேல்
செவ்விதில் உரைக்க இங்ஙன்
சாவதன் முன்னர் என்ருன்
வெவ்விலங் கனைத்தும் கூடி
ஒருரு வெய்து காளன்.

1012 பேறென ஒன்று முண்டோ
பெட்புறுங் காதல் தெய்வம்
கோறலைக் குறித்து நிற்கக்
கொடுப்பதென் னுயிரே யாயின்

வேறெனக் கிந்த வாழ்வில்
எய்துதற் கரிய துண்டோ ?
ஊறெனக் கொன்று மின்றுல்
உம்மதே உயிராம் என்பாள்.

1013 காதலால் கண்ட நாளும்
கடுவரை ஏறி வந்து
சாதலே குறித்த நாளும்
சமனிலை யுற்ற நாளாம்
வீதலுக் கஞ்சேன் ஐயா
வினைவழி செல்லும் யானென்
மாதவத் தெய்வ நுந்தாள்
வலம்வர வேண்டும் என்றுள்.

1014 அற்பரின் சினத்தை ஒப்ப
அழிபடர் செய்யா தென்று
புற்றரை கடந்து மேலோர்
பொருள்பெறு வெகுளிக் கொப்பாம்
வெற்பிடைத் தள்ள எண்ணும்
வெம்மையை நினைவில் கொண்டான்
நிற்பது கருதா ளாகி
நேயனைச் சுற்ற லானுள்.

கெடுவான்கேடு

1015 தன்னையே தெய்வ மாக்கித்
தாழ்ந்தடி வணங்கி நின்று
முன்னிய தவற்றை யெல்லாம்
முட்டற மறத்திர் என்று
மென்னகை யரும்பச் செல்லும்
மேனிலை கருதிக் காளன்
தன்னுணர் வற்றுப் போனன்
தாங்கருஞ் சிறப்பே யன்றே.

1016 மும்முறை வருவான் எண்ணி
இருமுறை சுற்றி விட்டேன்
இம்முறை ஒன்றே என்றன்
வாழ்க்கையின் இறுதி என்று
வெம்மையால் எண்ணி வஞ்சம்
வென்றிடற் குதவ மாட்டேன்
இம்முறை கொல்வென் என்றே
உந்தினுள் புறத்து நின்றே.

(வேறு)

1017 அஞ்சு மென்மையள் ஆணவம் ஒன்றிலள் அழிக்கும்
வஞ்சஞ் சூதிலள் வன்பகை தானிலள் உலகம்
நஞ்ச மூட்டவும் நாவெழ நண்ணுதீ வினையில்
தஞ்ச மாயினள் மாநிலம் கொடிதினும் கொடிதே.

(வேறு)

1018 ''புத்தா அடியேன் புனிதா அடியேன்
அத்தா அடியேன் அருளா அடியேன்
இத்தா ரணியில் இகலே புரிந்தேன்
பித்தா லழிந்தேன் பெரியோய் அடியேன்.''

1019 எனவே யுளநொந் திரும்பா றிடையே
கனவே எனவாழ் வினையே முடித்தான்;
அனமோ எனைமுற் கொலைசெய் வதையான்
முனமே கொலைசெய் தனனென் றெழுந்தே.

1020 வெறியே குறியாய் நகையா டினளவ்
வெறியே தொடர வளைய லிலங்கக்
குறவை யயருங் கொடிவள் ளியர்போல்
பறவைச் சிறைபோல் பயின்ருர்த் திடவே

இரங்கல் மாலை

1021 நின்ருள் சிறுபோ தமைவா யுளத்தில்
கொன்ருய் கொடியாய் எவனே அலையுன்
மின்ருழ் கழுத்தில் மிலைந்தான் இலையோ
நன்ருஞ் செயலோ நனிநீ கொடியாய்!

1022 இறந்தான் கணவன் எனிலவ் வுடலோ
டிறந்தா ருளரே இருந்தா ரெனினும்
துறந்தே யிருந்தா ருனைப்போ லெவரே
அறந்தேர் கிலராய் அழிவே புரிந்தார்?

1023 உயர்கேள் வனையுன் னுயிராய்க் கருதின்
அயர்வாம் பொழுதில் அழியச் செயுமோ?
செயிரே புரிவான் எனலால் அவற்குச்
செயிரே புரிந்தாய் இதுவோ அறமே!

1024 பேதாய் பிழையே பெரும்பா தகமே
ஓதாய் ஓதாய் ஒழியா துயரே

வேதை பெருகி வெதும்பி இனிநீ
யாதோ பெறுவாய் அறியாய் உரையாய்.

1025 கொண்டான் ஒருவன் இலையேல் ஒருநீ
உண்டே உடுத்தே உறைந்தே இனிமை
விண்டே விழைந்தே உயிர்வாழ் குவையோ
பண்டே மறந்தாய் பயனும் உளதோ ?

(வேறு)

1026 பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுநனைக் கொன்று களிப்புறும்
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கண்டது மின்றரோ காசினி எங்குமே.

1027 மாதரு முண்டுகொல் மாதரு முண்டுகொல்
காதல் கொழுநனைக் கொன்று களிப்புறும்
மாதரு முண்டுகொல் மாதரு முண்டுகொல்
ஓதிடக் கேட்டிலேன் மேதினி எங்குமே.

1028 மங்கையும் உண்டுகொல் மங்கையும் உண்டுகொல்
தங்கண வன்படத் தள்ளி மகிழ்ந்திடும்
மங்கையும் உண்டுகொல் மங்கையும் உண்டுகொல்
எங்கணும் இன்றரோ எங்கணும் இன்றரோ.

(வேறு)

1029 நறையுற நிறைமலர் அணியுயர் தலைவனை
வெறியுற அறையிடை மடிபட விழுத்திய
நெறிமுறை தவறிய சுரிகுழல் வதிதியோ ?
கறையுற வுறைவதே கவினென நினைதியோ ?

1030 வழிபட வலம்வரு பொழுதிடை அழிவுறக்
குழியிடை இழிபட விழுவிய அழலினேய்
பழிபட அழிபட அவனியில் உறைதியோ ?
மழவிடை யனையனைத் தழுவுத லெழிலரோ.

1031 அடுபகை யுடையரும் கடிமுர சறைவதே
நெடுமுறை நெறிமுறைப் பொருநெறி; கணவனைக்
கொடுமுடி மலையிடை வலம்வரு பொழுதிடைத்
துடிபட மடிபட நெகிடுதல் அழகிதால் !

(வேறு)

1032 உள்ளம் இவையே மொழிய அயர்வாள்
கள்வன் அலையென் கணவ னவனைத்
தள்ளுந் தவறுக் கிவ்ணுன் விழலே
கொள்ளுங் கடனென் றுளங்கொண் டினங்தே.

1033 போதித் தலைவன் பொருள்சேர் புகழே
சாதற் பொழுதும் உரைத்தார் அதுவே
ஓதும் மொழியாம் உரிமைப் பொருளாம்
தீதில் அறமாம் எனுமோர் தெளிவால்,

1034 தொழுவான் விழுந்தாள் உருளத் துடிப்பால்
எழுமுன் ஒருவேட் டுவப்பெண் விரைந்தே
இழியா வகையா லிறுகப் பிணைத்தே
அழிபா றையினை விடுத்தே கினளாள்.

வேட்டுவி காட்டருள்

(வேறு)

1035 எற்றி வீழ்ந்திட வீக்கினள் கைகளால்
தெற்றி மார்பிடை மோதினள் கீழ்வர
அற்றம் நோக்கினள் ஆயினும் வல்லியள்
சற்றும் நோவில ளாயெடுத் தேகினுள்.

1036 காட்டில் கைவரு புள்ளிமான் மீளவும்
ஓட்டங் கொண்டெழ வோரையை நோக்கல்போல்
வீட்டு ளெய்திய பின்னரும் வீழ்குழல்
நாட்டம் யாவையும் பாறையி னின்றதே.

1037 முட்டி மோதினள் வல்லியின் கையினை
வெட்டி யீர்த்தனள் வேமனத் தூண்டலால்
திட்டி நொந்தனள் தீயெனக் கான்றனள்
பெட்டிப் பாம்பெனச் சீறினள் அன்னமே.

1038 தூய செய்கையாம் என்றெனைத் தூக்கிய
நேய பாதகி நீசெயுந் தீமையை
ஆய நேர்ந்திலை அன்பரைக் கொன்றுள
பேயள் வாழ்வது தக்கதோ பேசுவாய்.

1039 போழும் வாளென நெஞ்சம் அறுத்திட
வாழும் நாளென ஒன்றிலை குன்றிலே

வீழும் பேறுகெ டுத்தனே வெவ்வியோய்!
சூழுந் தீயரைச் சூழ்வது தீதரோ.

1040 விஞ்சு பேய்மனம் தூண்டிய வெம்மையால்
கொஞ்சு காதலிக் கொன்றனென் மண்ணிலே
நஞ்சு போன்றவள் நாணிலி வாழுவோ?
தஞ்ச முன்னடி தாழ்ந்தனென் விட்டிடாய்.

1041 குன்றில் வீழ்ந்துயிர் போக்குமுன் கூற்றமே
ஒன்றி நீயென ஓருரு உற்றதோ?
துன்று காதலர் வீழ்ந்திடு முன்னரே
நின்று காத்தியோ நின்செயல் நன்றரோ.

1042 தீது செய்ததாய்த் தேர்ந்தபின் னுவது
கோது தீருமோர் கொள்கையில் நிற்பது
பேது தீர்ந்தவர் பேண்கடன் அம்மனுய்
வாது செய்திடேல் என்னவும் வல்லியும்.

1043 அம்மை யுன்னுரை அறத்தெளி வாயினும்
வெம்மை யாலொரு வெம்மையைத் தீர்த்திடச்
செம்மை சான்றவர் செப்பிடக் கேட்டிலேன்
மும்மை தேர்கினும் தற்கொலை தீயதே.

1044 தூண்டு காரணம் ஆயிரம் ஆயினும்
மாண்டு போவது மாந்தர் வயத்தில
தீண்டுன் காதலன் வாழ்வது நன்றெனில்
ஆண்டு வீழ்ந்திடான் ஆய்ந்திது கேட்டியால்.

1045 உன்னைக் காத்திவண் ஒல்லையில் சேர்த்திட
என்னைத் தூண்டினர் யார்கொலோ? காதலன்
தன்னைத் தள்ளுவான் ஏவினர் யார்கொலோ?
முன்னை யூழ்வினை என்றிதை யுன்னுவாய்.

1046 செல்வ நன்மகள் போன்றுளாய் செம்பொருட்
கல்வி கைவரு மேன்மையும் கண்டுளாய்
சொல்வ தொன்றிலை என்பவள் ஞாயிறு
கல்லின் மேற்புறம் வீழ்வது காட்டினுள்.

வேடன் வருகை

1047 கடைந்த காலினன் கல்லெனுந் தோளினன்
படர்ந்த நெற்றியன் பார்வையில் கூர்மையன்
அடர்ந்த குஞ்சியன் ஆரிடி ஆளியும்
அடங்கப் பாய்ந்திடும் ஆண்மையின் தோன்றலான்.

1048 அசைத்த கச்சினன் ஆடிய மாலையன்
விசைத்த வில்லினன் வேடுவர் கோமகன்
இசைத்த வாய்மொழி வல்லியின் காதலன்
தசைத்த மாஞெடுந் தன்மனை எய்தினன்.

1049 மங்கை ஊற்றமும் வல்லியின் மாற்றமும்
பொங்கி மேற்செலும் புண்படு சொற்களும்
தங்கி நின்றவண் கேட்டனன் தாங்கிய
வெங்கண் ஏறனன் வெய்துயிர்த் தேகினன்.

1050 உற்ற வாறெலாம் ஓதென ஓதவும்
கற்றை யங்குழால்! தன்வினை தற்சுடப்
பெற்ற தாகலின் வீழ்ந்தனன் நீசெயப்
பெற்ற தொன்றிலை பிழையென நோவுறேல்.

1051 குன்றக் காவலன் ஆதலின் காப்பதே
என்றும் என்கடன் என்மகள் ஆதலின்
பொன்று மாறிவண் போக்குமோ பேதையாய்
கொன்று வாழ்நரும் கொள்வரோ தற்கொலை!

1052 இந்த நன்மொழி கானவன் இயம்பியும்
சிந்தை எய்திய மாற்றமொன் றில்லவள்
நொந்து துன்பமே ஓருரு வாயினள்
வந்த தீவினை வாழ்வினை எண்ணுவாள்.

1053 ஈங்கு தீயவர் தீமையை எய்துகேம்
ஊங்கு கானிடை ஓர்பழி இன்றியே
ஓங்கு மிக்கலை ஏனுயிர் நீத்ததோ
மூங்கை யும்மொழி தீச்சொலும் உண்டுகொல்?

பாவையின் பழ நினைவு

1054 பண்டு நான்வளர் பால்மண மான்கணம்
கண்டு நீள்மகிழ் வெய்திய காலமும்,
கொண்ட இன்னுயிர் கூர்ங்கணை தின்றிடப்
பிண்ட மாயமான் காண்குறும் காலமும்,

1055 மாடம் நீடிய மாளிகை மீதிருந்
தாட வர்க்கழ காயரைக் கண்டதும்,
கோடு பாறையிற் கோடிய நெஞ்சினேன்
வீட வுந்தியவ் வாக்கையைக் காண்பதும்,

1056 காதல் விஞ்சிடக் காண்பதே வாழ்க்கையாய்த்
தீதில் இன்பமே தேடிய காலமும்,

சாதல் அன்றியோர் சார்துணை இன்றென
வீதல் நோக்கிய வெங்கொடுங் காலமும்,

1057 தேரில் என்றுணை யோடிருந் தியற்கையைச்
சேரு மேனிலை கண்டுணர் செம்மையும்,
யாரு மின்மையின் யான்றனி யாளியாய்
வீரி போலிவண் மீண்டதாம் வெம்மையும்,

1058 பேதை ஆயமுன் பெய்குழல் சீர்செயல்
கோதை நன்கிலை என்றவர் செய்ததும்,
ஊதை வீக்கவும் கான்செடி ஈர்க்கவும்
ஓதி காடென ஓதிட வாய்த்ததும்,

1059 அருளுக் கோர்முதல் ஆயவள் என்றெனைத்
தெருளு பாங்கியர் கூறிய தேர்ச்சியும்,
மருளுக் கோரொரு பாவியாய் மஞ்சனை
உருள ஏவிய புன்மையின் ஒண்மையும்,

1060 வெய்ய வெஞ்சிறை புக்கதாம் போழ்திலே
ஐயன் வீடுறு மாறெழு வைரமும்,
ஒய்ய தாயுனைக் கொல்லுவ னென்னவும்
பொய்ய தாமுளம் போக்கிய வைரமும்,

1061 முல்லை சீர்கெடப் பார்த்ததும் மூண்டதாம்
தொல்லை யாற்பல நாடளாய் நைந்ததும்,
புல்லு நன்மணம் போக்கற நல்கிய
நல்லர் வீழ்ந்திட நான்களித் தார்த்ததும்,

1062 நன்று நன்றென நலிவொடு மெண்ணியே
குன்று மோதிய குருவியாய் நைந்தனள்
தின்று தீர்ப்பதோர் கூற்றுவன் எய்துதல்
என்று தானென ஏங்கினள் இமைப்பிலாள்.

1063 எண்ணம் யாவையும் எங்கணுந் தாக்கலால்
பெண்மை நீங்கினள் பேயொலி யாகவே
பண்ணு மார்ப்பொலி பாங்கெழக் கேட்டனள்
திண்ண மாயினள் தீர்ந்திடல் முன்னியே.

1064 வஞ்ச நெஞ்சினள் வாழ்வது நீதமோ
நஞ்ச முண்ணுக நாலுக விலங்கிடைத்
தஞ்ச மாகுக பாறையில் வீழுக
உஞ்சு போதலு மொல்லுமோ எண்ணுவாய்.

1065 செத்துப் போய்விடு செத்திவண் போய்விடு
பித்த நெஞ்சினே ! பேணுக சாவென
ஒத்துப் பாடின ஓங்கொலி யோடுறும்
குத்துப் பாறையும் உள்ளமும் யாவுமே.

1066 வேவ தாகிய நெஞ்சராய்ப் பத்திரை
நோவு நீக்குவான் வல்லியும் கேள்வனும்
ஆவ தாகியும் ஆறுதல் இன்மையால்
யாவ தோவினி என்றவர் கூறுவார்.

1067 கால நல்லியல் கண்டறி பொற்பினே !
சால மெய்யுணர் வுற்றவோர் சாக்கியச்
சீலர் ஈண்டுளர் செல்குவம் ஆண்டெனக்
காலே யாகிய கோலமும் காணுமால்.

1068 சாக்கி யத்துற வோருளர் என்னவும்
நோக்கம் யாவையும் தாதையாய் நிற்றலின்
பார்க்க நொந்தினித் தப்பியங் கோடலே
ஆக்க மென்றெணி ணுள்பினும் கேட்பளால்.

1069 துறவி வாழ்விடம் அண்மையோ தூவிலாய் !
அறவர் பேரெதோ ? ஊரெதோ ? என்னவும்
செறியு மாதவத் தாட்டியள் செம்மையால்
அறைவர் தாயென என்னவும ஒப்பினுள்.

1070 அங்கம் வீழலும் ஆழ்பிலத் தேகலும்
புங்கன் பொன்னடி போற்றலு மாகவே
எங்குங் காட்சியும் ஓலமும் மோதலால்
திங்கள் நூறெனத் தீர்ந்தது கங்குலே.

பன்னிரண்டாவது வஞ்சப் படலம் முற்றிற்று.

13. அறநிலைப் படலம்

1071 ஏயநன் மருந்து தேடி
இளைப்பவர் போலக் குன்றின்
சேயதாம் ஆயர் மன்றுட்
சேர்ந்தனர் காண லாலுர்;
சேய்துயர் அறிந்து மாற்றும்
தாயெனத் திகழும் அம்மை
வாய்நலாய்! நோய நெஞ்சம்
வந்ததை உரைக்க என்றுள்.

1072 கந்துகம் தந்த காதல்
கடிமணம் மனையின் வாழ்க்கை
செந்துவர்த் திலகம் செய்த
செம்மையிற் கறுப்பு காழ்ப்பு
தங்தையர் துறவு பற்றின்
தாங்கரும் இயல்பு கொல்லி
வந்தது நேர்ந்த வெல்லாம்
வரன்முறை அமையச் சொல்லுள்.

(வேறு)

1073 நீர்த்த விழியாகி நெஞ்சம் வழிந்தோட
வேர்த்த மொழிகூறும் பாவை தனைத்தேற்றத்
தீர்த்தன் அருள்மல்கு தெய்வத் திருவாட்டி
சீர்த்த மதியோடு செப்ப முனைந்தாளால்.

தாயின் தகவுரை

(வேறு)

1074 குண்டலக் கூந்தல் நல்லாய்
கூறிய வாற்றுல் ஊழின்
திண்டிறல் அறிது மன்றே;
தீயிடை வீழ்ந்த பேரும்
கண்டதாம் நன்மை யில்லை
கலங்கலை அம்ம என்று
தொண்டுகள் புரிந்த பேரே
தொல்புவிக் கருளு மோரே.

1075 மாய்வதிங் கெளிய தம்மா !
மண்ணவர் நன்மை எய்தத்
தூய்மையாம் வழியிற் சென்று
தொண்டராய் நிற்ப தொன்றே
ஆயவும் அரிய தம்மா!
அரும்பிய உயிரொன் ருலே
ஏயதாம் உயிர்கள் கூடி
இன்புறச் செய்தல் நன்ருல்.

1076 ஆக்குதற் கரிய யாக்கைக்
கருளிய உயிரை நாமே
போக்குதல் மடமை அம்மா!
பூரணன் கோயில் கொண்டு
நீக்கற நிற்கும் கூட்டை
நீதுணிந் தழிக்க நேரின்
மாக்களிற் கடைய தாவாய்!
மாய்கலாப் பழியும் கொள்வாய்.

1077 ஈங்கொரு நிகழ்ச்சி கூற
எண்ணினென் தெளியக் கேட்டி!
வீங்கிய உளத்தின் போக்கு
வேடத்தில் நடிப்பான் போல
ஓங்கவும் தாழ வும்பின்
நீங்கவும் செய்யுங் கண்டாய்!
வாங்கிய உளத்திற் கேற்ப
வாழ்வதோ அறிவின் மாண்பு?

1078 தீதுதீர் சோலை சென்று
திரும்புக என்று நின்ற
கோதமை போத ஏவிக்
கொள்வதாம் செறிவு காட்டிக்
கோதையைத் தேற்று மாறு
குறித்ததோர் கதையுஞ் சொல்வாள்
வேதனே மாற்று மாற்றல்
வேதனைக் கன்றே யுண்டால்.

கெண்டை விழி கொண்ட கதை

(வேறு)

1079 வண்டுவளர் தண்டலைசூழ் கொண்டுவளி சிந்தி
ஏண்டிசையும் மண்டிமணம் காதமுறப் பண்ணும்

மண்டலத்து விண்டலமாம் காஞ்சிநகர் வந்த
பெண்டகையள் கெண்டைவிழி கொண்டகதை
சொல்வேன்.

1080 கல்விவளம் செல்வநலம் மல்குமனை ஒன்றில்
அல்கலிலா நல்லளியர் செல்வியெனும் பேற்றுல்
மல்கியெழும் தொல்மதியம் போலவவள் வாழ்ந்தே
ஒல்குமொரு வல்லியெனும் ஒண்பருவ முற்றுள்.

1081 பூநிறைந்த பொன்னிநதி மேவுவட பாங்கர்
மாநிறைய மண்ணியெழு மாண்துறையூர் வாழ்ந்த
சீர்நிறைந்த செல்வனெனும் செஞ்சொலனைப் பற்றி
ஏர்நிறைந்த அன்புமணம் கெண்டைவிழி கொண்டாள்.

1082 கொண்டபினர்க் கண்டவர்கள் காதலுற வாழ்த்த
மண்டுதுறை யூரில்மனை மாட்சியறம் ஓச்சிப்
பண்டமைந்த பண்பனைத்தும் பாருலகம் கண்டு
விண்டுவரத் தொண்டுபல செய்பவராய் நின்றுர்.

1083 ஆண்டுபல நீண்டுசெல ஆயிழையின் தாயர்
மூண்டுவளர் நோயிடையில் மூழ்கினராய் நைந்து
காண்டகுமோர் ஆவலினுல் கெண்டைவிழி காஞ்சிக்
கீண்டிவர வேண்டியொரு செய்திவிட லானுள்.

1084 அன்றிலினை ஒன்றியுறை மகன்றிலன மாது
மன்றலனை வேண்டினளாய்ச் சென்றுவர நேர்ந்து
பின்றையுறுந் துன்புநிலை ஓர்கிலளாய்ச் சென்றுள்
கன்றியெழ நின்றநெறி ஆயபல நீத்தே.

1085 பெற்றவட்குப் பற்றியெழு நோயகலக் கண்டாள்
உற்றவொரு பொற்குவையாய் உள்ளுவகை எய்தி
நற்றுறையூர் மற்றைநாளில் செல்வதென நிற்கக்
குற்றுயிராய்ப் பட்டுழல வந்ததொரு கூற்றே.

1086 சோலைவழி மாலையிளங் கால்பருகிக் கன்னல்
ஆலைமிகு சூழல்வழிச் செஞ்சொலனூர் மீளக்
காலிலொரு நீலநிற ஆலவெறி ஏறிக்
கோலமிகு மாலுடலை வீழ்த்தியது கேட்டாள்.

1087 ஓரிகளும் சேரவர அச்சமிகு கானில்
காரியுணுங் காதலனின் அன்பினெடு சென்றுள்

மாரியென வாரியிறை நீரினளாய் வீழ்ந்து
நாரியவள் வீரியெனச் சூரியென லானுள்.

1088 காந்தனிலே சாந்துயரம் ஈந்திடவே ஓடி
மாந்தளிரின் மேனியினுள் மாண்டிடுமா றெண்ணிப்
பாந்தமயர் பாழிருளில் ஓர்தனியாய்ப் போந்தே
ஏந்துநிலே மாந்தன்புதை காட்டிடத்தை யுற்றுள்.

1089 பூழ்திபட வீழ்ந்தழுது கேள்வனையான் சேர்வேன்
பாழ்ங்கிணறும் பக்கலுள வென்றெழுந்து செல்வாள்
ஆழ்வதற்கு நேர்ந்துவரு கேணியரு கான
சூழ்நிலைய மண்டபத்தி லோருருவங் கண்டாள்.

1090 கண்டவுரு தண்டுகொடு காலிடறிச் செல்லக்
கண்குருடாக் கண்டலறிப் பாழ்ங்கிணற்றில் வீழில்
எண்ணிகொடுமை நேருமென எண்ணினளாய் ஓடித்
திண்ணிதவற் பற்றிவிழல் தீர்த்துமடம் சேர்த்தாள்.

1091 சீரணிகள் ஆர்ப்பதனுல் காரிகையென் ரேர்ந்து
நாரமைந்த பேருரைகள் நாட்டமுறக் கூறிப் -
பாருலகில் நீடுநிலை வாழியெனச் சொன்னுன்;
நீரருவி கையகத்துச் சோர்ந்துவிழல் தேர்ந்தான்.

1092 ஏனழுவீர் இவ்விரவில் வந்ததென அம்மா!
நானிறவா வாறருளிக் காத்தபெரு நல்லீர்!
மேனிலத்தும் நானிலத்தும் மேம்படவே வாழ்த்தி
யானிருப்பேன் நும்மவலம் யாதருள்வீர் என்றுன்.

1093 என்னவவள் தன்னிலையைச் சொல்கிலளாய் நைய
அன்னையெனக் காயவருட் பின்னையென நின்ரேய்
இன்னலுறும் நின்னிலைமை கண்ணிழந்த என்னை
மன்னிமிகத் துன்புறுத்தும் பன்னுகெனச் சொன்னுன்.

1094 உற்றதனைக் கெண்டைவிழி சொல்லுதலும் அன்னுன்
நற்றலைவன் மாண்டதற்கு நான்மடிவேன் என்று
சற்றுமுனர் மாண்டிருந்தால் சாவுநிலை என்னைப்
பற்றுதற்கோர் ஐயமிலை மெய்மையிது பாராய்.

1095 சாவதனுல் எவ்வுயிர்க்கும் சால்புநிலை இல்லை.
ஓவறவே நற்கடமை ஓர்ந்தியற்றி ஞாலக்
கோயிலிலே தன்னலனைக் கொன்றறிவுப் பூசை
ஆவலுறச் செய்வதுவே ஆகுநெறி கண்டாய்.

1096 செத்தபினர்ச் செய்வதொரு நன்மையிலை அம்மா
இத்தரையில் உள்ளவரை நல்லறத்து நின்று
கத்துகடல் சூழுலகுக் காகவுயிர் வாழ்தல்
ஒத்தநிலை யாவதென உள்ளுணர்வு கொண்டாள்.

1097 கண்ணிலனின் உண்மையுரை உற்றறிந்த அப்பெண்
திண்ணியளாய் நண்ணுமுயிர் நானிலத்துக் கீந்து
புண்ணியனின் பொன்னடிகள் தஞ்சமென வாகி
எண்ணரிய நல்வினைகள் ஏற்றருளால் நின்றுள்.

1098 யாக்கையினுல் நற்பணிகள் செய்கலாது மாண்டு
காக்கவென எண்ணுபவர் புல்லறிவர் காணுய்
நீக்கமற நின்றவுமி நீங்கியபின் வித்தி
ஆக்குமொரு நற்பயிரும் ஆம்பயனும் உண்டோ?

1099 வீட்டளவில் நின்றவறம் நீணிலத்தும் மல்கக்
கூட்டுமொரு வாய்ப்பதெனக் கொண்டினிது வாழ்க!
ஈட்டுதுயர் மூட்டியுனை வாட்டுதலால் உன்னை
வேட்டவற்கு நன்மையெதும் வாய்த்திடுமோ அம்மா!

1100 மங்கையினி யங்கணுல கெங்குமளி கூரப்
புங்கனடிப் போதுகளே நின்புணையாய் வா
பொங்குநதி ஒன்றுகடற் றெண்டுநிலை நின்று
தங்குதுயர் போக்குகெனத் தாயருளிச் செய்தே.

1101 சொன்னகதைக் குற்றவளும் யாவளென வேட்பாய்
முன்னிருந்து யானுரைக்கச் சோலைசெலப் போக்கு
கன்னியனம் என்னவரு கோதமையே அன்னுள்
என்னவினி எண்ணுகின்றுய் பன்னுகென்றுள் தாயே.

(வேறு)

1102 மொழிவது தேரான் கொண்ட
முகத்திடை மாற்றங் கண்டு
கழிமகிழ் வெய்து தாயர்
கானவ நன்று செய்தாய்!
பழியறு கிழத்தி யோடு
வாழுக பல்கால் என்று
பொழிமதுக் குன்றம் போத
அன்பினுல் செல்வு தந்தான்.

1103 மாக்களைக் கொன்று வாழ்வேம்
மங்கையைக் காத்தேம் என்று
வீக்கிய எண்ண முந்த
விரைவளி நறவங் காலும்
நோக்கருங் குன்றஞ் சென்று
நுண்ணிதின் நினைந்து பின்னை
ஆக்கரும் உயிரை நாங்கள்
போக்கிடோம் என்று வாழ்ந்தார்

1104 புதியநற் பிறவி கொண்ட
பூவைக்குப் பொருந்து மாறு
மதிவளம் வாய்த்த தாயர்
மலர்மிசைத் தேவன் தந்த
முதுமொழி வாழ்க்கை மூட்டும்
படிப்பினை இவற்றைக் கூற
விதிமுறைப் படிவ நோன்பி
இயலொடும் வேட்பக் கேட்டாள்.

தொண்டின் துலக்கம்

1105 கைவரு நூல்கள் கற்றுக்
கணக்கற நிறுத்தி னுலும்
உய்வென ஒன்று மில்லை
உரையினுல் நுகர்வ தாமோ
நெய்மணம் ? உணர்வு வல்லான்
நேருமோர் துடிப்பி னுலும்
மெய்யறி வுறுதல் உண்டு
மேதகாய் கேட்க என்பாள்.

1106 பொறிபுலன் அடக்க கில்லான்
புறத்திலே கோலங் காட்டி
அறிவுரை வழங்கி வாழ்தல்
அம்மனுய் ! மடமை யாகும் !
மறிதுயர்ப் பட்டுச் சோரும்
மாந்தரைக் காவான் கொள்ளும்
அறநெறி ஒன்றும் இன்ருல்
ஆய்ந்திதைத் தெளியக் காண்டி.

1107 பசித்தவர் குறையர் நோயர்
படுதுயர் மாற்றி இன்பம்
புசித்திட வைத்துக் காணும்
பொருள்மிகும் இன்பம் போல

இசைப்படும் இன்பம் உண்டோ?
இயலறம் உண்டோ? தத்தம்
பசைப்பற விடுத்தோ ரெல்லாம்
பயின்றதிவ் வுயர்ந்த வாழ்வே.

1108 அறநிலை இதுவாம் என்றே
அண்டிய உயிரைக் கொல்லும்
மறநிலைக் களமாம் வேள்வி
மாந்தருக் குரிய தன்றும்
பிறவியந் தொடரை மாய்க்கப்
பிறவுயிர் மடித்தல் போல
வெறிமுறை இல்லை சேற்றில்
விழுவது குளித்த லாமோ?

1109 தனக்குறுந் துயரந் தாங்கிப்
பிறவுயிர்க் கின்பஞ் செய்து
மனக்குறு பிணிகள் மாய்த்து
மாநிலக் கடன்க ளாற்றி
னினைக்குறும் பயனை நோக்கான்
நெறியறி துறவி யாவான்
முனைத்தெழும் புகழும் நோக்கான்
முனைவனின் அடிகள் கண்டான்.

1110 அனலினுல் அனலை மாய்க்க
அறிந்தவர் இல்லை யாண்டும்
புனலினுல் புனலைக் காக்கப்
போயவர் இல்லை ஈங்கண்
இனமுறு பொறியின் ஆசை
இடம்பட வளர்த்துப் பின்னர்
னினைவினுல் அழித்து மென்று
நேர்வது வியப்பே அம்மா.

1111 கோட்டையும் படையும் வென்று
கொழுங்கிலம் ஒருங்கு சேர்க்கும்
ஆட்சியன் எனினும் உள்ளம்
ஆறுவ தரிய தம்மா
கூட்டிய பகைவர் கோடி
என்னினும் உய்தி உண்டாம்
மூட்டிய உள்ளத் தீயன்
முதிர்பகை கடத்தல் யாண்டோ?

1112 நாவுளோன் மற்றோர் சொல்லும்
நடுக்குரை பொறுத்தல் வேண்டும்
சாவுளோன் உயிரைக் கொல்லச்
சாடுதல் தவிர்க்க வேண்டும்
நோவுளோன் பிறரின் நோவை
அறிகிலான் என்னின் யாரே
மேவுவார்; இவற்றை ஆயின்
மேலறம் ஒன்றும் இன்றுல்.

1113 அரும்பொடு மொக்குள் போது
மலர்அலர்த் தோற்றம் போல
அருந்தமிழ்க் குழவி பிள்ளை
குமரனே காளை மூத்தோன்
பொருந்துற வமையும் நங்காய்
பொழுதெலாம் சாவும் வாழ்வைத்
திருந்திய பணியால் நிற்கத்
தேர்வதே சால்பு கேட்டி.

1114 தோற்றமெங் குளதோ ஆங்குத்
தொலைவதும் உறுதி கண்டாய்;
மாற்றமென் றமைவ தெல்லாம்
மறலியின் கூத்தே யாகும்;
ஏற்றதிவ் வொன்பான் வாயில்
எழிலுடல் நகர்ச்சி யாவும்
கூற்றத்தின் கோயில் நண்ணக்
கொண்டதோர் செலவு கண்டாய்.

1115 விருந்தினுல் பொலிந்த இல்லம்
விதவித மாகச் செய்த
மருந்தினுல் நிறைப்பக் காணும்;
மறுவறக் களித்த மாடம்
பெருங்கவல் வாட்டத் தேம்பும்
பேறுகள் இயற்கை யம்மா!
வருந்துதற் கில்லை பாவாய்!
வையகத் தன்மை தேர்க.

1116 நிலையிலா உலகை நச்சி
நிலைப்பதாம் அறத்தை நீக்கி
அலகையாய் வாழ்வர் அந்தோ!
ஆசையுட் பட்டு நிற்போர்

வலையிடைச் சிலந்தி யாவர்;
வாய்த்துள செல்வத் திற்கே
நிலையுறும் பிறவி என்று
நினைவதே கரும மானர்.

1117 நல்லறம் நிற்பான் ஓரோர்
நச்சறம் கொள்வ ரையின்
வல்லிரும் பமைத்த மாசால்
வழிவழி அழிதல் போல
அல்லொடு பகலும் தேய்வான்
அச்சமும் பெரிது கொள்வான்
புல்லியர் வாழ்வு நன்ருல்
பொறிபுலக் கவலை இன்ருல்.

1118 உடுப்பதாம் உடையைப் போலும்
மடுப்பதாம் தேறல் போலும்
எடுப்பதாம் பிறவி என்பார்;
ஏற்பதாம் உறக்கம் போலத்
தொடுப்பதே இறப்பும் பின்னர்
எழுவதே பிறப்பும் என்பார்
அடுப்பதே அடுக்கு மென்ன
அமைவதே அறிவு கண்டாய்.

1119 இனையன தெளிதி நல்லாய்!
எய்திய ஐய முண்டேல்
துனியறக் கேட்டி என்ருள்;
துறவறம் புகுவல் அன்னாய்
பனியற விடுத்தேன் தக்க
படிவனோன் புரையாய் என்னக்
கனிமொழித் தாயர் பின்னும்
காலத்தால் கருதிச் சொல்வாள்.

1120 புத்தனும் அறமும் சங்கப்
புனிதரும் அடைவென் ருகி
நித்தமும் வாழல் வேண்டும்
நிலையிலா உலகப் பற்றைச்
சத்தியம் என்று நோக்காச்
சால்பியல் வேண்டும் இற்றே
தத்துவ முதன்மை பாவாய்
தாங்குக இவற்றை என்று.

1121 மன்பதைத் துன்ப மூலத்
தீவினை மரத்தைச் சாய்த்து
நன்னெறி வழியிற் சென்றே
ஒருமையில் மனத்தை நாட்டிப்
பின்னிய விருப்புக் காழ்ப்புப்
பேதமை நீக்கி இன்ப
துன்பமொன் றணுகாச் சால்பே
ஞானமாம் தெளியக் கேட்டி.

1122 ஞானத்தைப் பெற்ற பின்னர்
நண்ணிய தெளிந்த வுள்ளம்
போனதாம் பிறப்பை யெல்லாம்
பொருளுறத் தெளியப் பண்ணும்
ஞானநன் மனமும் மாய்ந்து
மனமற நிற்கும் தூய்மை
வானநிர் வாணம் பாவாய்!
வழிவழி உணர்ந்து காண்பாய்.

1123 யாக்கையைத் துறவால் வாட்டிச்
செயலறச் செய்தல், ஆசை
வீக்கிடப் போக வாழ்வாம்
வேட்டையிற் றிரிதல், கீழ்மை
நோக்கிய செயல்க ளாகும்;
நொடிதொறும் உலகுக் காக
ஆக்கிய வாழ்க்கை ஒண்மை
அறநிலை வாழ்க்கை ஆமால்.

1124 சார்புகள் அறுத லாயின்
சார்தர மாட்டா தோற்றம்;
சார்புகள் அறுக்க வல்லோர்
சார்தரும் இன்பங் கண்டார்;
சார்புகள் அறுகுகும ஆணைம
சார்தர வாய்மை நான்கே;
சார்குவை இவற்றை என்று
சார்தர விளக்கி மேலும்,

1125 பிக்குணி நோன்பு கொள்வார்
பிறங்கிய சீலம் பத்தும்
சிக்கெனக் கோடல் வேண்டும்
சிந்தையில் காமம் பற்று

துக்கமென் றுரைப்ப வான
தொடர்களை முரிக்க வேண்டும்
இக்கணம் முதலே தூய்மை
இடமுற வேண்டும் என்றுள்.

1126 ன்றெனக் கொண்டு புத்தப்
படிவநோன் புடைய ளாகி
ஒன்றிய உணர்வி னோடே
உறுத்தெழு சூறை யூடும்
சூன்றென நிமிர்ந்து நின்று
கொள்கையே உயிரென் றுணர்
அன்றருள் நிலையந் தந்த
ஆவியாள் வாழ்ந்த கேசி.

1127 துறவியாய்ப் போய பின்னர்
ஊரெது மில்லை உற்ற
உறவெதும் இல்லை யாதும்
ஊரென உணர்ந்து வாழ்ந்தாள்
திறமிகு செய்கை யாலே
தீந்தமிழ் உலகு போற்றி
அறநிலை கூரு மாறே
அமைந்தனள் பெருக்கு முற்றே

படலம், பாடல், ஆக்கியோன், காலம்

சொற்பகை காட்டும் தீங்கு
சொல்வதாம் கேசி காதை
முற்படு தொடக்கத் தோடு
மூன்றெடு பத்துச் சேர்ந்து
நிற்பதாம் படலம்; பாடல்
ஆயிரங் கடந்த நூறும்
உற்றதாம் இருபான் ஏழும்
விருப்பமாய் எழுந்த தன்றே.

வழவையம் ஊரில் பொன்ரு
வாய்மையே உயிராய் நின்ற
உழவராம் படிக்க ராமர்
உயிரிளங் குமரன் தந்தான்
கிழமைவள் ளுவனுர் ஆண்டோர்
ஆயிரங் கடந்த தொண்டு
கெழுமிய எண்பத் தொன்பான்
கார்த்திகை இருபான் ஒன்றே.

பிழையும் திருத்தமும்

பாடல்	அடி	பிழை	திருத்தம்
54	2	கொடியென்	கொடியொன்
177	4	சேர்ந்தே	சேந்தே
556	3	செம்மலத்	சொம்மலத்
666	2	கார்க்களினேர்	கார்க்களிரேர்
774	2	மஞ்சனீ	மஞ்சனீர்
858		இசையாகிசை	இசையா இசை
999	1	கலிவலவ	கலிவல
1072	3	தங்கையர்	தந்தையர்

செய்யுள் முதனிலைப்படி

[எண் : செய்யுளெண்]

அக்காலை 64
அகரத்தை 2
அங்கம் 1070
அங்கவர் 339
அங்கைக் 437
அங்கொடிக் 324
அசைத்த 1048
அஞ்சாங் 351
அஞ்சிறை 522
அஞ்சும் 1017
அஞ்சும்பகை 908
அஞ்செஞ் 467
அடுபகை 1031
அண்டிய 265
அணியிழை 821
அணையொன்று 972
அணைவிட்ட 904
அப்பனைய 35
அம்பவத்தை 80
அம்பு 646
அம்மை 1043
அய்யோ 354
அயிலிடைப் 104
அரசவை 119
அரதன 701
அரியவன் 258
அருங்காவல் 973
அருணெறி 920
அருத்தியின் 712
அரும்பொடு 1113
அருள்கொண்டு 767
அருள்வழி 207
அருளுக் 1059
அருளே 305
அல்லல் 548
அல்லாட்சி 488
அல்லியம் 554
அலையிடை 818
அவ்வர 231
அவ்வவர் 392
அவ்வழி 436
அவவெள்ள 867
அழித்தனன் 201
அழிதக்க 969
அள்ளுமின் 656
அற்பமாம் 855
அற்பரின் 1014
அற்றவர்க் 192
அறத்தால் 877
அறத்துறை 736
அறநிலை 1108
அறநெறி 162
அறமுறை 253
அறமொரு 193
அன்புருவாய் 33
அன்புவிளைத 505
அன்பெனும் 188
அன்றிலினை 1084
அன்றிருடு 238
அன்னத்தின் 84
அன்னகடை 465
அன்னப் 178

அன்னம் 888
அன்னமே 1007
அன்னவற்கு 32
அன்னூர் 11
அன்னிய 140
அன்னே 567
அன்னேநீ 545
அன்னேமீர் 67
அனலிளுல் 1110
ஆக்கவோர் 748
ஆக்குதற் 1076
ஆசைக்கு 901
ஆடலொடும் 28
ஆடி 637
ஆடிக்களிப் 871
ஆடிப்பாவை 638
ஆடியல் 373
ஆடுகள 169
ஆடுதல் 790
ஆடுநமக் 727
ஆடுபாம் 292
ஆடைகள் 700
ஆண்களின் 428
ஆண்டகைமை 36
ஆண்டுபல 1083
ஆண்டையாய் 853
ஆண்பா 575
ஆணை 474
ஆய்ந்தவர் 228
ஆய்ந்தோர் 516
ஆய்வனே 374
ஆய்வுரை 113
ஆயிரங் 422
ஆர்முடி 711
ஆரம் 477
ஆரூல 147
ஆரும் 350
ஆலநல் 668
ஆலக் 934
ஆவதே 845
ஆவலோர் 751
ஆழ்ந்தேன் 563
ஆழிக் 463
ஆளியல் 423
ஆற்றல் மிக் 779
ஆற்றல் மிக 495
ஆற்றலெப் 691
ஆற்றின் 870
ஆற்றெருழுக் 151
ஆறமைத்த 812
ஆறு 295
ஆன்ரோர் 504
ஆனையொன் 862
இக்கன்ன 394
இக்கொடுங் 990
இகலே 759
இசைவளம் 820
இடர்க்கடல் 200
இடையிடை 952
இணையென 741
இத்தகைய 31
இந்த நன் 1052
இம்மனே 198
இல்லத் 873
இவ்வர் 12
இவ்வா 568
இவ்விடம் 1011
இளையர் 883
இளையனும் 596
இற்சிறை 794
இற்பா 13
இற்றுவிழு 722
இற்றுள 676
இறந்தான் 1022
இறைமுடி 129
இன்கரும்பு 121

இன்ப 781
இன்பஞ் 502
இன்பத்தி 464
இன்பம் 576
இன்பமே 753
இன்புற 59
இன்றே 566
இன்னணம் 1002
இன்ன தன்மை 154
இன்னபல 77
இன்னல் 872
இன்னலே 849
இன்னவா 747
இன்னவோர் 589
இன்னறுஞ் 527
இன்னறுந் 533
இன்னன 381
இன்னும் 611
இன்னே 336
இனமார் 465
இனமுகில் 345
ஈங்கிவை 393
ஈங்குதீய 1053
ஈங்கொரு 1077
ஈன்பிடிக் 993
உச்சிக் 328
உட்டுனைய 811
உடம்பாடு 968
உடல்பல 226
உடலில் 760
உடன்தோ 763
உடுப்பதாம் 1118
உண்டாஞ் 571
உண்டிஒண் 632
உண்டிகொள் 642
உண்டிடுவோம் 42
உண்ணுநர் 764
உணர்ச்சி 514
உந்து 654
உயர்கேள் 1023
உயிர் காத்த 963
உருவொடு 864
உரைத்துள 255
உலகெலாம் கல 754
உலகெலாம் மக 788
உவந்தனன் 250
உழவொலி 937
உழுபவர் 745
உள்ள இளமை 507
உள்ளகம் 420
உள்ளத்தால் 961
உள்ளத்தை 81
உள்ளம் இலை 1032
உள்ளம் தெளி 508
உள்ளார்ந்த 773
உற்ற 641
உற்றகாலை 977
உற்றதனை 1094
உற்றதை 852
உற்றபோ 288
உற்றவர் 163
உற்றவா 1050
உற்றுருரும் 899
உறுப்பொடும் 368
உன்னைக் 1045
ஊங்கிய 281
ஊடலில் 708
ஊடலின்பமும் 784
எண்ணம் 1063
எண்ணி 485
எந்தாய் 557
எம்மையும் 914
எய்திய அணி 662
எய்திய உவ 316
எய்யாக் 471
எரியிடை 696

எல்லார் 766
எவ்வமெதும் 66
எற்பொழு 222
எற்றி 1035
எற்றுதல் 695
என்பு முயி 461
என்மாலே 462
என்றின்ன 65
என்றும் 778
என்றுமணி 180
என்றே புக 102
என்றே யவ 565
என்ரோர் 352
என்னதான் 218
என்னவவர் 1093
என்னுருயிர் 562
என்னெனும் 555
என்னே 644
எனக்குறு 598
எனநினை 259
எனவே 1019
ஏடவிழ் 702
ஏடிநீ 55
ஏதுறும் 240
ஏந்துபுகழ் 181
ஏந்தும் 496
ஏமென் 553
ஏயநன் 1071
ஏயவள 875
ஏயே 564
ஏர்நெற்றி 475
ஏவல் 503
ஏவிய 710
ஏழ்மையர் 795
ஏற்றணி 1009
ஏற்றெருடு 716
ஏனழுவீர் 1092
ஐந்தவித் 956
ஐந்தாய 313
ஐம்புலன் 525
ஐயகோ 806
ஐயமே 844
ஐயனே 805
ஒண்கலன் 367
ஒண்முகம் 426
ஒத்தபடை 717
ஒத்திய 387
ஒப்புமை 412
ஒருபெரு 388
ஒருவரை 56
ஒருவரோ 244
ஒள்ளிலை 752
ஒளியெலாம் 750
ஒற்றனே 590
ஒறுத்திருந் 71
ஒன்றுய் 531
ஒன்றே 493
ஒங்கொலி 263
ஓசையில் 277
ஓடித்திரட்டும் 469
ஓடும் 892
ஓடுவர் 537
ஓடை 625
ஓதியோர் 348
ஓதும் 126
ஓய்ந்தவர் 684
ஓரிகளும் 1087
ஓரோர் 765
கச்சணிந்த 30
கச்சிக் 170
கஞ்சுகர் 584
கட்டறு 370
கட்டாரும் 958
கட்டுபூந் 828
கட்புறம் 411
கடமை 886

கடலென 418
கடிமண 383
கடைந்த 1047
கண்களே 346
கண்களைக் 421
கண்டகன 910
கண்டதே 420
கண்டவுரு 1090
கண்டின் 929
கண்ணற்ற 16
கண்ணுங் 473
கண்ணினிண 139
கண்ணி 607
கண்ணிய 402
கண்ணிலா 1097
கண்ணின் 616
கண்ணீர் 893
கண்ணுக்கு 399
கண்ணுழை 301
கண்பெறு 52
கண்மணி 143
கணைமழை 731
கந்துகம் 1072
கப்பல் 100
கயல்புடை 158
கரந்தறி 602
கரிப்படை 693
கரியிடை 414
கரியுரி 999
கரும்புசூழ் 947
கல்விக் 878
கல்விநலம் 1080
கலங்கின்ன் 167
கலிவளர் 528
கழாத்தலை 744
கழியாய் 758
கழைபயில் 996
கள்ளம் 550
கள்வராய் 838
கள்வனுய் 1006
கள்வனின் 802
கள்வனே 850
களிப்புற 836
களியுறு 579
கற்புக் 559
கற்பொருள் 338
கற்றுய்ந்த 68
கறிப்புதைப் 994
கன்மலை 680
கன்னல் 96
கன்னி 363
காகா 482
காட்டில் 1036
காடுகள் 792
காடெலாம் சிதைத் 915
காடெலாம்பரவி 376
காதல் 1056
காதலால் 1013
காந்தனிலை 1088
காப்பது 600
காம்பொழி 317
காமரம் 145
காமற் 912
காய்செறி 948
கார்க்குலம் 942
கார்மழை 159
காரிடை 136
காரொடு 667
கால்பொர 941
காலநல் 1067
காலமெலாம் 26
காலெனும் 980
காலை 172
காவலர் 103
காவிசேர் 408
காவியங் 379

காஞ்சிரி 796
காழெடுத் 863
காளநின் 118
காளமேக 620
காஞ்ஞாயிரின் 809
காற்றென 706
காற்றெனக் 603
காற்றெடும் 229
கானம் 891
கானமர் 995
காணேய் 349
கிழிப்புறும் 191
கீழ்த்திசை 661
குடிமுதல் 243
குடைநிழல் 217
குண்டலக் 1074
குண்டலகேசி 44
குல்லை 978
குவளைக் 128
குளிர்ப்ப 872
குளிறு 442
குற்றத்தை 72
குறிஞ்சியே 992
குறைநெறி 310
குறைவினை 214
குன்றக் 1051
குன்றங் 1041
குன்று 285
கூடார் 130
கூடிய 144
கூடுதல் 949
கூவி 630
கூற்ற 636
கூற்றுவாய் 311
கூறு 609
கேசி 491
கேசியின் 50
கைத்தலங்கள் 719
கைத்தலம் 713
கைந்நனி 298
கையில்நற் 293
கையில்வந் 639
கைவரு 1105
கொஞ்சுமிளம் 41
கொட்டு 624
கொட்டும் 398
கொடிசிதை 842
கொடிய 896
கொடுந்தொழில் 212
கொண்டபினர் 1082
கொண்டான் 1025
கொம்பனைய 29
கொம்பியல் 429
கொம்பு 649
கொம்புறு 233
கொய்யுளைப் 604
கொல்லாப் 540
கொல்லி 22
கொல்லு 617
கொலைக் கயமை 225
கொலைகள 155
கொலை செய்து 75
கொலைத் தொழிற் 213
கொற்றவர்க் 115
கொற்றவேந்து 91
கொன்முனை 997
கொன்ருற்றும் 69
கொன்றையம் 986
கோட்டெங் 561
கோட்டை 99
கோட்டையும் 1111
கோடிய 425
கோடுறு 235
கோடை 651
கோதிச் 290
கோதைக் 179

கோயிலேகுறு 152
கோவெனை 704
கோழரை 142
கோழியர் 391
கோழுடைக் 981
கோறு 621
சக்கரச் 627
சங்குதரு 460
சந்தன 793
சற்றுப்பின் 905
சாக்காட்டு 314
சாக்கிய 1068
சார்புகள் 1124
சாவதனுல் 1095
சாற்றுவிர் 106
சிங்கஞ் 88
சித்திரப் 272
சிந்தை 923
சிலேயார் 454
சிலேயுதை 156
சிறையினில் 49
சிறைவதை 165
சீரணிகள் 1091
சீரார் 334
சீலக் 975
சீலத்தின் 962
சீலமென்மை 90
சீற்றங்கொள் 74
சீற்றமிக் 830
சுஜைப்பழம் 998
சூடிய 405
சூழ்ந்துள 51
சூழ்பண 983
சூழநீளும் 86
செக்கர் 629
செங்கட் 1
செத்தபினர் 1096
செத்துப் 1065
செந்தாமரை 458
செந்தார் 359
செந்நெல் 95
செப்புவ 223
செம்மஜை 413
செம்மைமுறை 94
செல்லாடிய 449
செல்வ 1046
செல்வப் 8
செவ்வடி 532
செவ்வாய் 574
சென்ற 494
சென்னிபட 726
சென்னியர் 690
சென்னெறித் 195
சேட்செனி 279
சேரரின் 683
சேரன் 18
சேறுபட 827
சொல்லாக் 577
சொல்லில் 608
சொல்லுமுன் 613
சொல்லெனும் 62
சொல்வலி 210
சொற்ற 894
சொன்னகதை 1101
சோஜை 365
சோஜைசூழ் 539
சோஜைமலர் 27
சோஜைவழி 1086
சோழவள 25
ஞாலப் 885
ஞானத்தை 1122
தக்கதாம் 299
தக்கவோர் 601
தங்கக் 935
தடுப்பான் 774
தண்கதிர் 153

தண்ணறு 271
தந்துவாரணம் 286
தந்தையர் 1005
தந்தையரும் 960
தந்தையின் 205
தந்தைவர 882
தயிருடை 116
தலைக்குறை 227
தலைசிறி 928
தழுவினர் 260
தளையிற 580
தளையோங்கிய 443
தன்குறை 917
தன்குறைக் 586
தன்துயரம் 971
தன்வினை 236
தன்னுயிர் 595
தன்னுளே 843
தன்னெஞ்சங் 903
தன்னையும் 847
தன்னையே 1015
தனக்கினை 746
தனக்குறுங் 1109
தாக்கியுள 723
தாமரையின் 813
தாயர் 130
தாயிலி 841
தாயின்றி 82
தாயினைப் 599
தார்ப்படை 666
தார்ப்படைகள் 728
தாளால் 20
தானை 619
திகைத்தனர் 60
திங்கட்குடை 395
திங்கட்டெளி 509
திங்கட்பெரு 501
திண்டிறல் 605
திருக்கூட்ட 911
திருகித் 761
திருந்திட 215
திருவளர் 197
திருவிழி 419
தீதுசெய்த 1042
தீதுதீர் 1078
தீந்தொடை 269
தீம்பழம் 232
தீயது 211
தீயவர் 587
தீயனென்று 964
தீயிலுல் 846
தீயுமிழ்ந் 857
தீயெனக் 657
தீயோரின் 70
தீவழிச் 582
தீவிலங் 989
துக்கம் 506
துண்ணென் 588
துணையோ 762
துய்ந்நை 1000
துள்ளு 671
துள்ளும் 173
துறந்தார் 889
துறவியாய்ப் 1127
துறவிவாழ் 1069
துறைபல 206
துன்ப 481
துன்பஇருள் 182
துன்பத்தை 900
தூக்குங் 468
தூங்க 672
தூண்டு 1044
தூது 612
தூமக் 931
தூயசெய்கை 1038
தூரிடை 538

தூவியங் 323
தூவியின்மை 302
தெரிசுடர் 735
தெருவிடை 133
தெருள்விழி 249
தெள்ளமுதம் 808
தென்னவன் 93
தென்னனே 592
தேசிகன் 694
தேடக் 518
தேடியங் 801
தேர்வல 988
தேர்விரை 770
தேரணிந்த 954
தேரமைவு 814
தேரல் 631
தேரில் 1057
தொகைவரு 247
தொடுத்தனர் 248
தொல்பெருங் 315
தொழுவான் 1034
தொள்ளா 1765
தொறுநடை 985
தோழிநீர் 183
தோள்வலி 581
தோற்றமும் 859
தோற்றமெங் 1114
தோற்றும் 552
தோற்றும்பிற 512
தோற்றுமா 832
நகைச்சொலென் 803
நகைமுகம் 837
நடக்க 924
நண்ணுங் 7
நம்பியாய் 529
நல்லது 755
நல்லதே 861
நல்லறம் 1117
நல்லார் 511
நள்ளிருட் 782
நற்பணி 913
நற்பா 6
நறுமாமணம் 453
நறையுற 1029
நன்று சூழும் 89
நன்றுநன் 1062
நன்றென 1126
நன்னடை 135
நன்னயமாய் 40
நன்னீர் 361
நன்னெஞ்ச 966
நாட்கணி 431
நாட்கணி தேர்ச்சி 382
நாட்டுக்கு 902
நாட்டு மக்களின் 633
நாடு தூது 606
நாடு புகழ் 24
நாணமதால் 43
நாணெலி 658
நாத்தழும் 489
நாதற்கு 546
நாமுகங் 789
நாயகன் 854
நால்வாய் 294
நாவுளோன் 1112
நாளிடை 278
நாளொக்கோ 957
நிகழ்ந்ததை 246
நில்லடி 362
நில்லென 416
நிலையில 1116
நிறைமதி 407
நின்ருள் 1021
நின்னினும் 743
நினைய 443
நீடும் 824

நீத்தடித் 141
நீதிநெறி 93
நீர்க்குழை 270
நீர் குடை 234
நீர்த்த 1073
நீர்வளர் 531
நீராயுருகி 15
நீரார்ந்து 486
நீரென 275
நீலமா 976
நுழைவாயிலின் 451
நூனெறி 105
நெஞ்சப் 397
நெஞ்சம் 907
நெஞ்சுரங் 687
நெட்டலை 787
நெடு நேரம் 959
நெல்லொடு 950
நெற்றிப் 97
நென்மணி 266
நேயம் 513
நேர்ந்த 815
நொடியிடை 835
நோய்முகங் 709
பக்கலில் 703
பங்கயத்து 39
பச்சிளஞ் 534
பச்சைப் 396
பச்சைமென் 536
பசித்தவர் 1107
பஞ்சனைய 756
பஞ்சியல் 430
பஞ்சென 791
பட்டினப் 101
படிநிலம் 384
படையமை 417
படையிறை 858
பண்டு 1054
பண்ணியப் 378
பண்பலர் 58
பண்வகை 319
பணைப்புறு 1000
பத்திரை 61
பத்தொடு 659
பந்தாட்டம் 63
பந்துவீழ் 46
பந்தென 675
பயில்கொடை 734
பயிலற 308
பரிதியஞ் 593
பரிவாக 771
பலவா 890
பவழமென் 793
பளிக்குநீர் 432
பளிக்கென 943
பற்றி 670
பற்றிய 692
பற்றென் 879
பன்னி 187
பாகுத்தேன் 4
பாங்கியரை 34
பாசவல் 645
பாடிய 280
பாடுங்குயில் 456
பாடுபாடென 866
பாடுபாணி 783
பாடுவாயி 979
பாண்டு 652
பாந்தனம் 665
பார்த்தலே 524
பார்த்தவர் 184
பார்த்திபர் 664
பாராதொரு 560
பால்போற் 333
பாலடை 403
பாலன 435

பாவின் 932
பிக்குணி 1125
பிஞ்சு 635
பித்தன் 542
பித்து 543
பிள்ளாக் 168
பிள்ளாயன் 697
பிறந்தாள் 112
பிறர் நலம் 526
புக்கதாம் 868
புகழ்ந்தனர் 256
புகைக்குழு 54
புங்கன் அடி 490
புங்கன்புனி 23
புண்ணிய 83
புத்தனும் 1120
புத்தா 1018
புதியற் 104
புதைகணை 310
புல்லும்இமை 483
புல்லும்பொலி 880
புலவியின் 823
புள்போல் 332
புள்ளிப் பிணை 570
புள்ளிப் புற 123
புள்ளிமான் 578
புள்வாய் 974
புறநெறி 366
புனலும் 517
பூங்கா 519
பூங்கொடி 341
பூட்டிய 137
பூந்தடங் 547
பூந்துகில் 404
பூநிறைந் 1081
பூமழை 264
பூமிசை 325
பூவிரிந் 385
பூவேந்தர் 224
பூழ்திபட 1089
பெண்கொலை 239
பெண்டிரும் 1026
பெண்ணிடை 148
பெண்ணிறைக் 53
பெண்ணிறையாம் 237
பெண்ணினை 219
பெருகு 447
பெற்றவட்கு 1085
பெறலரும் 953
பேசுதற் 202
பேடியல் 984
பேடை 331
பேடைப் 497
பேதாய் 1024
பேதை 1058
பேரா 549
பேரிசை 623
பேறென 1012
பைங்கிளி 274
பைந்தா 9
பைபய 1003
பையலாய் 204
பொய்கை 177
பொய்ச்சிறை 47
பொய்யாமை 364
பொய்யொடு 114
பொருளால் 876
பொல்லார் 541
பொலனெடு 254
பொறிபுலன் 1106
பொன்மலை 521
பொன்னியஞ் 685
பொன்னிறை 230
பொன்னிறை தரு 296
பொன்னின் 330
பொன்னுரை 807

பொன்னுறு 530
போகப் 479
போகும் 185
போதக 146
போதார்கூந் 327
போதார்நறுந் 472
போதித் 1033
போதிநாத 78
போதுணம் 320
போந்த 640
போர்க்களம் 944
போர்வெறி 597
போழும் 1039
மகவன் 881
மகனென 166
மகிழ்வொடு 535
மங்கலம் 111
மங்கலமார்க் 358
மங்கலமுரச 406
மங்கலவாழ்த் 439
மங்கை 884
மங்கையர்க் 798
மங்கையர்மன 427
மங்கையினி 1100
மங்கையும் 1028
மங்கையூற் 1049
மஞ்சள் 499
மஞ்சனின் 800
மஞ்சு 38
மடிபடா 190
மடியிலா 380
மண்காவல் 73
மண்ணிடை 434
மண்ணின் 785
மண்பக 5
மணஞ்செய் 441
மணமெனும் 344
மணிசெய் 906
மதமிகு 157
மதிமுக 817
மதிநல 251
மதியினை 300
மதிவழி 594
மந்திர 591
மந்திரஞ் 679
மயிலினை 343
மரக்கினை 982
மரத்தை 445
மருகிடை 322
மருளுடை 834
மல்லிறல் 699
மலையனை 730
மலையும் 3
மலைவளம் 991
மழலை 444
மழுப்படை 732
மற்றது 869
மற்றிதை 804
மற்றுமற் 622
மன்பதை 1121
மன்றல் 174
மன்னர் 17
மன்னவன் 108
மன்னி 304
மனத்திடை 919
மனையோ 459
மாக்கனை 1103
மாங்கனி 946
மாகடல் 149
மாடம் 1055
மாடமும் 424
மாடிமேல் 57
மாணலங் 851
மாதமோர் 916
மாதர் 653
மாதரின் 347

மாதரு 1027
மாதருக் 840
மாமயில் 138
மாய்வதிங் 1075
மாலை 360
மாலைஇளம் 498
மாலையோ 171
மாழை 337
மாளிகை 386
மாற்ற 615
மாற்றமும் 1010
மான்கணம் 523
மான்தேர் 492
மானங் 614
மான்பிணை 189
மானுடர் 117
மானென 318
மின்வனீர 321
மின்னல் 936
மின்னலை 340
மின்னெளி 410
மீண்டுமோர் 45
முக்குற்றம் 898
முகிழ்விரல் 409
மூட்டி 1037
மூட்டிமோத 673
மூட்டினர் 669
முட்பழம் 164
முடிக்கு 895
முத்த 626
முத்தலை 681
முத்து 131
முத்துடை 342
முத்துடைக் 678
முதலே 306
முதிர் வரி 939
முதிரக் 909
முந்தை 21
மும்முறை 1016
மும்மையாம் 216
முரசியல் 194
முருகு 440
முல்லைக் 558
முல்லைசீர் 1061
முல்லை முகை 125
முல்லையங் 918
முள்ளரை 377
முளிதயிர் 816
முறுக்கேறிய 452
முன்னுற 655
முன்னெறி 241
மூழ்குவாய் 369
மென்கைச் 329
மென்சிலம்பு 120
மேகபந்தி 85
மேல்விழு 48
மேற்றிசை 372
மைக்கண் 484
மைசூழ் 927
மைந்தனே 196
மையல் 14
மையோர் 933
மொய்வலி 297
மொழிவகை 245
மொழிவது 1102
யாக்கை 480
யாக்கையிலுல் 1098
யாக்கையைத் 1123
யாண்டு 515
யாரோ 926
யாழ்வரும் 268
யாழ்வரை 221
யானிசை 865
யானென் 572
யானை 650
யானைசென் 291

வங்கக் 470
வஞ்சக் 1064
வஞ்சத்து 965
வஞ்சனை 1004
வஞ்சியர் 663
வண்டாடு 769
வண்டிசை 921
வண்டுவளர் 1079
வண்ணமும் 267
வண்மையால் 737
வணிகரின் 252
வல்லவன் 262
வல்லி 487
வல்லியம் 987
வதியொடு 199
வதிவதில் 415
வந்தன 714
வந்தனன் 698
வரப்பிடை 945
வழிபட 1030
வழியிடை 922
வளிபுக 819
வளிபூட்டி 772
வளையொலி 938
வன்மனம் 839
வன்மை 777
வன்மையெலாம 724
வன்னெஞ்சப் 544
வாக்கொடு 109
வாக்கொன்றே 76
வாசநெய் 797
வாட்டும் 569
வாட்படை 721
வாடும் 831
வாணிக 203
வாய்மை 643
வார்குழலை 37
வார்த்த 897
வாரணம் 583
வாரித் 510
வாழ்வினை 161
வாழுங்குழல் 455
வாளில் 647
வாளென 705
வாளை 92
வானத்து 768
விஞ்சிய 282
விஞ்சு 1040
விட்புலந் 677
விட்டவேல் 738
விட்டவொரு 725
விடமாருயிர் 307
விடுதலை தருவ 208
விடுதலையுரை 242
விடைதர 257
விண்ணியல் 390
விண்ணைப் 930
விம்மலை 556
விருந்திற் 887
விருந்தினுல் 1115
விரைபெறு 132
வில்லகம் 438
வில்லம்பு 967
வில்லவன்படை 284
வில்லவன்வினை 660
விழவணி 823
விழித்த 446
விழியொடு 822
விள்ளரும் 757
விளைந்துள 261
வீங்கோத 312
வீட்டளவில் 1099
வீணில் 628
வீணையின் 276
வீரக் 478
வீரங் 618

வீரமங்கை 648
வீரரானவர் 610
வீரிய 674
வீழ்ந்தவள் 739
வீழ்ந்து 303
வீழ்நய 860
வீழ்பெரும் 786
வீழுமன்பொடும் 826
வெகுளியின் 733
வெங்கதிர் 688
வெட்டுதலே 720
வெட்டுபுல் 289
வெண்கண் 335
வெண்கரு 371
வெண்சுதை 356
வெண்ணியம் 742
வெண்ணிற 856
வெண்திரை 401
வெண்பட் 500
வெண்பளிங் 150
வெம்புலியின் 956
வெம்புலிவிலே 220
வெம்மையும் 433
வெய்ய 1060
வெய்யோளெனி 450
வெவ்வமர் 686
வெள்ளம் 634
வெள்ளமாய் 585
வெள்ளி 355
வெள்ளிப் 10
வெள்ளிய 940
வெள்ளிவெண் 389
வெள்ளே 476
வெள்ளேக் 127
வெற்போ 87
வெற்றி 775
வெற்றிஎய் 780
வெற்றிதோல்வி 825
வெற்றிமகள் 718
வெற்றிவாட் 707
வெறியே 1020
வென்றியங் 749
வேகமாய் 273
வேங்கைப் 124
வேட்டபோழ் 829
வேண்டுவ 283
வேதத்தின் 79
வேதப் 400
வேதமும் 848
வேந்தன் 776
வேந்தனின் 110
வேலவன் 689
வேலன் 107
வேலெடுத்த 715
வேலி 186
வேவ 1066
வேழப்பிடர் 357
வேழவெங் 287
வேளாநிகர் 353
வேற்படை 882
வேனகு 970
வையகம் 740
வையம் 925

கிடைக்குமிடம் :

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்,

தலைமை நிலையம் :

79. பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை - 108.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6

மதுரை-1 கோயமுத்தூர்-1.

கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி 2.

அப்பர் அச்சகம், சென்னை-108.